# தமிழரசு

திங்கள் இருமுறை .1972 ஏப் 16. 35 காசு



# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு - வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர் 2] [இதழ் 20

16-4-1972


இந்த இதழில்


தோளில் தொங்கும் துண்டு

கல்வி வெள்ளம்

நான்காண்டுகளில் நற

நல்வாழ்வுப் பாதையில் நாம்

செங்கைச் சிறப்பு

கோத்தித் திரியும் கோழி

தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே !

முட்டைகூ

காட்டினிலே வரும் செல்வம்

'அரக்கோணத்தில் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை

சின்னன் பெற்ற பரிசு !

ஆராய்ச்சி மணி

மைய-மாநில உறவு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் கூறுவது என்ன ?

அரிய ஆத்திசூடி









பொருளாதாரத் வெளிநாடுகளைப் ...ற்றம் பெறவில்லை ... அதற்குக் காரணம் இங்கே நீண்ட காலம் ...க்கக் கூடிய பொருள் ...வாக்குகிறோம் என்பது

...ளிநாடுகளில் உருவாக்கப் ...டும் பொருட்கள், நீண்ட நாள் இல்லாத அளவுக்கு ஆயுளைக் குறைத்து உற்பத்தி செய்யப்படுகின்றன. அப்படி விரைவில் கெட்டுவிடக் கூடிய, உடைந்துவிடக் கூடிய, இற்றுவிடக் கூடிய பொருட்களைத் தயாரித்து விற்பதன் மூலம் தான் புதிய புதிய உத்திகளைத் தோற்றுவிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

ஆனால், நம் நாட்டில் எதைச் செய்தாலும் நன்றாகக் கெட்டியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணம் கைத்தறித் துணியிலே இல்லாமலிருந்தால் அடிக்கடி வாங்க வேண்டியிருக்கும். நான் இப்படிச் சொல்வதன் மூலம், நீங்கள் அப்படி அடுத்த ஆண்டில் செய்யுங்கள் என்று ... இப்படி

நீண்ட நாள் உழைக்கக் கூடியதாக இருப்பதால் இன்னொன்று வாங்குவதற்கு அதிகக் காலம் ஆகி, உற்பத்திப் பொருளில் மந்த நிலை ஏற்பட்டுத் தேக்கம் ஏற்படுகின்ற நிலை உருவாகிறது என்பதைச் சுட்டிக் காட்டவே இதை எடுத்துச் சொன்னேன்.

நாம் இன்னும் கண்காட்சி நடத்தித்தான் விற்பனையைப் பெருக்கவேண்டியிருக்கிறது; ரிபேட் கொடுத்துத் தான் வளர்க்கவேண்டியிருக்கிறது என்ற அளவுக்குக் கைத்தறியாளர்கள் நிலை இருக்கிறது என்கிற வருத்தத்தோடுதான் இதைக் குறிப்பிட்டேன்.

மாநில அரசின் சார்பில் இவ்வாறு கைத்தறிக்காகச் செய்யப்படும் சலுகைகளில் மத்திய அரசு எந்த அளவுக்கு ஒத்துழைப்பாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி இங்கு அமைச்சர் மாதவன் அவர்கள் சொன்னார்கள்.

மாநில அரசோடு ஒத்துழைப்புத்தேவை என்கிற போது, மத்திய அரசிடமிருந்து ஒத்துழைப்பது போல் எப்படிஉத்தரவு வருகிறது, அது கைத்தறியாளர்களிடம் எப்படி மேலும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது என்பதையும், இங்கே உத்தரவை அமல் நடத்தும் போது வேறுபல மாநிலங்களிலிருந்து எப்படிப் போட்டியாக அந்தத் தொழிலிலே குறுக்கீடுகள்

வருகின்றன என்பதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இப்படி எல்லாம் ஏற்படாமல் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து நல்ல ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது.

இங்குக் கைத்தறியாளர்களுக்கு எந்தவித அரசியல் மாச்சரியங்களும் இல்லாமல் நிறைந்த ஆதரவு இருக்கிறது. ஆனால், நாம் பழம் புகழைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கைத்தறியைப் பற்றி, இலக்கிய ஆராய்ச்சிகள் கூட நடத்தலாம்; 'அரவுரி அன்ன ஆடை' என்றெல்லாம் வருகிறது; பாம்பின் சட்டையைப் போன்ற ஆடைகளையெல்லாம் அந்தக் காலத்தில் நெய்தார்கள் என்றெல்லாம் சொல்லலாம். அதன் பெருமையைக் கவிஞர்களும், காவியம் பயின்றோரும் கேட்போருக்கு இனிக்க இனிக்கப் பேசலாம். ஆனால், அத்தகைய பெருமை பெற்ற கைத்தறியாளர்களின் நிலை என்ன? இவர்கள் வாழ்வில் நிரந்தரமாக நல்லொளி பாய்ந்திடப் பரிசீலனை செய்வதற்கான செயற்குறிப்புகளை அண்மையில் நாம் சட்ட மன்ற மேலவை, பேரவையில் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

நெசவாளிக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டாக வேண்டும் என்பதில் இந்த அரசு நல்ல முனைப்புக் காட்டி வருகிறது.

நெசவாளர்கள் வாழ்வு பாதுகாத்துத் தீர வேண்டிய ஒன்று.

நல்ல வண்ணங்களைக் குழைத்து வண்ண ஓவியம் ஒன்றினைத் தீட்டுவதற்கும், அப்படி எந்தவிதச் சிரமமும் இல்லாமல் கண்களைக் கவரும் வண்ணம் புதிய புதிய கருவிகளைக் கொண்டு அதனைத் தயாரிப்பதற்கும் உள்ள வேறுபாடு போல், கையிலே இருக்கின்ற உளியால் தன் உள்ளத்தின் உணர்வுகளை உளியில் தேக்கி உருவத்தைச் செதுக்கி உயிரோட்டம் நிறைந்தசிற்பமாகச்செய்வதற்கும்பள்ளம் பதித்து—இதுதான்உருவம் என்ற அளவில் ஈயத்தை—



பொன்னைக் காய்ச்சி ஊற்றி வார்த்து, அப்படி யப்படியே எடுத்து வைக்கின்ற படிவங்களுக்கும் வேறு வேறு வகையான வேற்றுமை உண்டு. இந்த வார்ப்படப் படிவங்களின் விலை குறைவாகத்தான் இருக்கும். ஆனால், சிற்பி ஒரு சிலையைச் செதுக்கி உருவாக்கினால் அதன் மதிப்பே வேறுதான் · அது போலத்தான் கைத்தறியாளர்கள் ஒவ்வொருவரும் சிற்பிகளைப் போல் இருக்கிறார்கள். 20 இலட்சம் பேர் இன்றைக்குத் தமிழ் நாட்டில் இத்தகைய சிற்பிகளாக விளங்குகிறார்கள்.

இந்தச் சிற்பிகளின் கலைத் திறனை—கை வண்ணத்தைப் பாராட்டுகிறோம். இதுமட்டும் அவர்களுக்கு நல்லொளியைத் தந்து விடுமா? தராது. அதற்கு மேல் அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையைப் பரிசீலித்து ஆக வேண்டும். எனவே தான் அரசுச் சார்பில் நெசவாளிகளுக்குக் குறைந்த கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்கிற மு காட்டப் பட்டிருக்கிறது.

நெசவாளர்கள் உ செய்யும் துணிகள் நா தேங்கிப் போய்விட்டால் பின்னர் அவர்களைக் கா அரசால் மட்டுமல்ல - னாலும் முடியாது. அவர்கள் பால் அக் கைத்தறி ஆ உபயோகிப்பது ரையை மேற்

பேரறி இந்தக் முற்று-நெ பட்ட நேர நிலையைப் நாடெங்கும் கொண்டாடச் க இளைஞர்களோடு அண்ணா அவர்களும் இந்தக் கைத்தறித் துணியைத் தலையிலும், முதுகிலும் சுமந்து சென்று தெருத் தெருவாகக் ''கைத்தறி வாங்கலையோ'' என்று கூவி விற்று, ஒரே நாளில் ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட விற்பனையைச் செய்து காட்டினார்கள்.

அதனால்தான் அவர் வழி வந்தவர்களான நாங்கள் ஒவ்வொருவரும் சூளுரை மேற்கொண்டு பின்பற்றி வருகிறோம். பின்பற்றி வருகி என்று சொல்லும்போது நான 'கூடுமான வரையில்' என்று கூறுகிற அளவுக்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்திடாமல், அனைவரும் இந்தச் சூளுரையை மேற்கொள்வோம்.

(நம் தோளில் தொங்கிக் கொண்டிருக்கும் துண்டு நம்மையும் அறியாமல் ஒரு நெசவாளியின் கண்ணீரைத் துடைக்கிறது) என்கின்ற உணர்வுடன் நாம் இந்தச் சூளுரையை மேற்கொள்வோம்.

## முதல்வர் டாக்டர் கலைஞர்

[2—4—72-ல் சென்னையில் 18-வது இந்தியக் கைத்தறி இருவார விழாக் கண்காட்சியைத் திறந்து வைத்துத் தமிழகமுதல்வர் டாக்டர் கலைஞர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]









# அரக்கோணத்தில் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை





தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ( TIDCO ) அரக்கோணத்தில் அமைத்துள்ள தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை— தமிழ்நாட்டிலேயே முதலாவது தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை மட்டுமல்ல—தென்னிந்தியாவிலேயே முதல் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலையும் ஆகும்.

மகாராஷ்டிர மாநிலத்தில், தாணு மாவட்டத்தில் 'முகுந்த்' என்ற இடத்தில் தனியார் துறையில் ஓர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை உள்ளது. இத் தொழிற் சாலையில் ஒரே சமயத்தில் ஒரே ஒரு தொடர் வார்ப்படத்தையே உருவாக்க முடியும்.

ஆனுல், அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை இந்தியாவிலேயே பொதுத் துறையில் அமைந்துள்ள முதல் தொழிற் சாலையாகும். இங்கு ஒரே சமயத்தில் நான்கு தொடர் உருக்கு வார்ப்படங்களை உருவாக்க முடியும்.







தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) அமைத்துள்ள தமிழ்நாடு சிமிட்டித் தொழிற் சாலைக்கு மூலதனம் 6·77 கோடி ரூபாய் ஆகும். அதை விட அதிகமாக—ஏறத்தாழ





முத்து




பொருளாதாரத்
வெளிநாடுகளைப்
...ற்றம் பெறவில்லை
... அதற்குக் காரணம்
இங்கே நீண்ட காலம்
...க்கக் கூடிய பொருள்
...வாக்குகிறோம் என்பது

...ரிநாடுகளில் உருவாக்கப்படும் பொருட்கள், நீண்ட நாள் இல்லாத அளவுக்கு ஆயுளைக் குறைத்து உற்பத்தி செய்யப்படுகின்றன. அப்படி விரைவில் கெட்டுவிடக் கூடிய, உடைந்துவிடக் கூடிய, இற்றுவிடக் கூடிய பொருட்களைத் தயாரித்து விற்பதன் மூலம் தான் புதிய புதிய உத்திகளைத் தோற்றுவிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

ஆனால், நம் நாட்டில் எதைச் செய்தாலும் நன்றாகக் கெட்டியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணம் கைத்தறித் துணியிலே இல்லாமலிருந்தால் அடிக்கடி வாங்க வேண்டியிருக்கும். நான் இப்படிச் சொல்வதன் மூலம், நீங்கள் அப்படி அடுத்த ஆண்டில் செய்யுங்கள் என்று ...

நீண்ட நாள் உழைக்கக் கூடியதாக இருப்பதால் இன்னொன்று வாங்குவதற்கு அதிகக் காலம் ஆகி, உற்பத்திப் பொருளில் மந்த நிலை ஏற்பட்டுத் தேக்கம் ஏற்படுகின்ற நிலை உருவாகிறது என்பதைச் சுட்டிக் காட்டவே இதை எடுத்துச் சொன்னேன்.

நாம் இன்னும் கண்காட்சி நடத்தித்தான் விற்பனையைப் பெருக்கவேண்டியிருக்கிறது; ரிபேட் கொடுத்துத்தான் வளர்க்கவேண்டியிருக்கிறது என்ற அளவுக்குக் கைத்தறியாளர்கள் நிலை இருக்கிறது என்கிற வருத்தத்தோடுதான் இதைக் குறிப்பிட்டேன்.

மாநில அரசின் சார்பில் இவ்வாறு கைத்தறிக்காகச் செய்யப்படும் சலுகைகளில் மத்திய அரசு எந்த அளவுக்கு ஒத்துழைப்பாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி இங்கு அமைச்சர் மாதவன் அவர்கள் சொன்னார்கள்.

மாநில அரசோடு ஒத்துழைப்புத்தேவை என்கிற போது, மத்திய அரசிடமிருந்து ஒத்துழைப்பது போல் எப்படிஉத்தரவு வருகிறது, அது கைத்தறியாளர்களிடம் எப்படி மேலும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது என்பதையும், இங்கே உத்தரவை அமல் நடத்தும் போது வேறுபல மாநிலங்களிலிருந்து எப்படிப் போட்டியாக அந்தத் தொழிலிலே குறுக்கீடுகள்

ஏழரைக் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப் படத் தொழிற்சாலைக்கு! இந்தத் தொழிற்சாலை வளர்ச்சி அடைய அடைய மேலும் முதலீடு அதிகமாகலாம். எனவே தமிழ் நாட்டில் குறிப்பிடத்தக்க பெருந் தொழில்களில் ஒன்றா கிறது அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற் சாலை.

சோவியத் நாட்டின் தொழில் நுட்ப உதவியுடன் துவங்கப் பட்டுள்ள இத்தொழிற்சாலை அரக்கோணத்திலிருந்து திரு வள்ளூர் செல்லும் சாலையில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலைக்காக 648·57 ஏக்கர் வாங்கப்பட்டுள்ளது. இப்பொழுது உருக்கு ஆலை 118 ஏக்கரில் கட்டப்பட்டுள்ளது. ஆலைக்கு அருகில் எஃகுநகர் என்ற பெயரில் 92 ஏக்கர் [illegible]ப்பளவில் குடியிருப்புகள் [illegible]ப்பட்டு வருகின்றன.

[illegible]ந்தத் தொழிற்சாலைக்காக [illegible]கிருந்து பன்னிரண்டு மைல் [illegible]ாலைவில் உள்ள தக்கோலத் திற்கு அருகிலுள்ள கல்லாற்றி லிருந்து தண்ணீர் கொண்டுவரப் படுகிறது. கல்லாற்றிலிருந்து கொண்டு வரப்படும் தண்ணீர் அரக்கோணம் நகராட்சி மூலம் மக்களுக்குக் குடி நீராகவும் பயன் படுகிறது. ஆகவே, கல்லாற் றிலிருந்து வரும் தண்ணீர் இரண்டு வழிகளில் பயன் படுத்தப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலை அரக் கோணத்தில் அமைக்கப்படு வதற்குக் காரணம் சென்னைக்கு அருகில் இருப்பது—மின்சார வசதி—போக்குவரத்து வசதிகள் முதலியன அமைந்திருப்பது.

அரக்கோணம் ரயில்வே சந் திப்பு இத் தொழிற்சாலைக்கு அரு கிலுள்ளது. அங்கிருந்து தொழிற் சாலை உள்ளே வரை 4 கிலோ மீட்டர் தொலைவுக்கு இருப்புப் பாதை போடப் பட்டுள்ளது. இதில் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருப்புப் பாதை தொழிற்சாலை யின் உட்புறம் உள்ளது.

இப்போது சோவியத் நாட் டைச் சேர்ந்த பதினெட்டு நிபுணர்கள் இங்கு பணிபுரிந்து வருகிறார்கள். தமிழ்நாட்டி லிருந்து பதினைந்து பேர்கள் சோவியத் நாட்டுக்குச் சென்று பயிற்சி பெற்றுத் திரும்பியுள் ளார்கள்.

கழிவு இரும்பிலிருந்து தொடர் உருக்கு வார்ப்படங்கள் அமைக்க மூலப் பொருளான கழிவு இரும்புத் துண்டுகள் பெரம்பூர் இணைப்புப் பெட் டித் தொழிற்சாலையிலிருந்தும் அம்பத்தூர் டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையிலிருந்தும் பெறப் படுகின்றன. மற்றும் பல இடங்களிலிருந்தும் கழிவு இரும்புத் துண்டுகள் பெறப் படுகின்றன. இவைகள் போத வில்லை என்ற நிலை ஏற்பட்டால் கச்சா இரும்பிலிருந்து தொடர் உருக்கு வார்ப்படங்களைத் தயா ரிக்கலாம்.

ஒரு நாளைக்கு 150 டன் கழிவு இரும்புகளை இத்தொழிற்சாலை பயன்படுத்தும்.

இந்த உருக்குத் தொழிற் சாலையின் உரிமம் பெற்ற உற் பத்தித் திறனளவு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் உருக்கு வார்ப்படங்களாகும். இப்பொழுது இத்தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு ஐம்பதாயிரம் டன் உருக்கு வார்ப்படங்களை உருவாக்கும்.



இந்த இரும்புத் தொழிற்சாலை யில் அமைக்கப்பட்டுள்ள பிரம் மாண்டமான கிரேன்களே இத் தொழிற்சாலையில் நடைபெறும் பணிகளுக்கு எடுத்துக் காட்டு களாகும். ஐம்பது டன் பளு தூக்கும் கிரேன்கள் இரண்டும் பதினைந்து டன் எடையைத் தூக் கும் கிரேன் ஒன்றும், பத்து டன் எடையைத் தூக்கும் கிரேன் இரண்டும் இத்தொழிற் சாலையின் உள்ளே அமைக்கப் பட்டுள்ளன. அரக்கோணம் உருக்கு வார்ப்படத் தொழிற் சாலையின் உள்ளே பல பகுதிகள் மின்சார இயக்கங்களினாலேயே இயங்குகின்றன. இத்தொழிற் சாலையின் இயக்க அறையில் டெலிவிஷன் உள்ளது. அதன் மூலம் தொழிற்சாலையின் உள்ளே நடைபெறும் பணிகளை அறிய லாம்.

இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சியால் தமிழகம் மேலும் வலுவான தொழில் வளர்ச்சியை அடைவது உறுதி!

இத் தொழிற்சாலையை மாண்பு மிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 14—4—1972 மாலை அரக்கோ ணத்தில் திறந்து வைத்தார்கள். விழாவுக்கு மாண்புமிகு தொழி லமைச்சர் செ. மாதவன் அவர் கள் தலைமை வகித்தார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

அரக்கோணம் உருக்காலை தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்கும் அரிய பணியைப் பெருமையுடன் தொடங்கி விட்டது.

# தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!













வெம்மைகொள் மக்களைச் செம்மை புரிந்திட மேதினியில் தோன்றிய மேதக்க சான்றோருள், அருளாளர் ஏசுநாதரும் ஒருவர்; அவர் தம் போதனைகளின் நடுநாயகமாக—மையப் புள்ளியாக விளங்கியது மனித குல ஒருமைப்பாடேயாகும்: ஆம். 'மக்கள் யாவரும் சமம்'— 'யாவரும் உடன்பிறந்தோரே,' என்கிற ஏசுவின் தெள்ளமுத வெள்ளம், மனித குல ஒருமைப் பாடென்னும் மையப் புள்ளியைச் சுற்றிச் சுழன்றோடிப் பயன் விளைப்பதை நாம் உணரலாம்.

ஏசுவின் இந்தத் தெள்ளமுத வெள்ளத்தினை — தீஞ்சுவைப் பிழம்பை வையகமெங்கும் பாய்ச்சிப் பயன் விளைக்க—ஏசுவின் வாழ்நாளிலேயே தோன்றிய குறிப்பிடத் தக்க பன்னிரண்டு திருத் தொண்டர்களில், ஏசுவின் நற்செய்தியைச் சுமந்து சென்ற பன்னிரு திருத் தூதுவர்களில் குறிப்பிடத் தக்கவர்,

இன்று புனித தோமையா
என்று போற்றிப் பாராட்ட
பெறுகிற செயின்ட் தாமஸ்.

ஏசுநாதரின் நற்செய்திை
பரப்புவதற்காக, செயின்
தாமஸ் முதன் முதலாக கி.
52-ல் இந்தியாவுக்கு வந்தா
அவர் ஆற்றிய மறைபரப்பு
பணிக்கான நிலையான அரு
சான்றுகள் இந்தியாவின் தெ
கிழக்கு, தென் மேற்குக் கட
கரைப் பகுதிகளில் அதிக
காணப்படுகின்றன. தெ
கிழக்குக் கடற்கரை ஓரத்தி
மயிலாப்பூரில் சாந்தோ
சின்னமலை, செயின்ட் தாம
மவுண்ட் என்று வழங்கப்படு
தோமையார் மலை ஆகிய
செயின்ட் தாமஸோடு நெருங்கி
தொடர்புடையன.

பொதுவாக மயிலாப்பூ
குப் பல வரலாற்றுச் சிறப
கள் உண்டு. அவற்றுள் ஒன்
ஆண்டாண்டுக் காலமாகப் பா
காக்கப்பட்டு வரும் கிறித்துவ
தூதுவரான செயின்ட் தாமஸ்

## அட்டை சொல்லும் செய்தி

கல்லறை இங்கு உள்ளது என்பது. அவருடைய உடல், அவரால் மயிலேயில் எழுப்பப் பட்ட சிறு மாதா கோயிலில் அவரது சீடர்களாலேயே அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப் படுகிறது. பின்னர் 3-ஆம் நூற்ருண்டில், இங்கிருந்து செயின்ட் தாமஸின் உடல் யூப்ரெடிஸ் நதிக்கரையிலுள்ள எடேசாவிற்கு எடுத்துச் செல்லப் பட்டுப் பின்னர், எடேசாவிலிருந்து மத்திய தரைக்கடலிலுள்ள கியோஸ் தீவிற்கும் அங்கிருந்து ஓர்தோனுவிற்கும் மாற்றப்பட்டது என்றும் பல்வேறு செய்திகள் நிலவியபோதும், லிஸ்பன் நகரில் அண்மையில் காணப் பெற்ற சில தகவல்களின் மூலம் அவர் உடல் மயிலாப்பூரிலிருந்து வேறு எங்கும் எடுத்துச் செல்லப்படவில்லே என்று உறுதி செய்யப்படுகிறது.

மயிலாப்பூரிலுள்ள பேராலயத்தில், செயின்ட் தாமஸ் வைத்திருந்ததாகக்கருதப்பெறும் ஈட்டி முனையை இன்னும் திருப் பண்டமாக வைத்துப் போற்றி வருகின்றனர்.

அடுத்து, செயின்ட் தாமஸின் வரலாற்ருேடு தொடர்புடைய தாகக் கருதப்படுகிற ஏன்? செயின்ட் தாமஸின் பெயராலேயே இந்த நாளில் 'செயின்ட் தாமஸ் மவுண்ட்' என்று அழைக்கப்படும் 'புனித தோமையார் மலேயில் உள்ள மேரிமாதா தேவாலயத்தில் இரண்டு புனிதமான கிறித்துவச் சின்னங்கள் பாதுகாக்கப் பட்டுவருகின்றன. ஒன்று, செயின்ட் லூகாஸ் வரைந்த தாகக் கருதப்படும் அந்த ஓவியத்தை செயிண்ட் தாமஸ் இந்தியாவுக்கு வரும்போது கொண்டுவந்ததாக நம்பப்படுகிறது.

குழந்தை ஏசுநாதரை அன்னே மேரி அணைத்துக் கொண்டிருக்கும் மாட்சியை இந்த ஓவியம் சித்திரிக்கின்றது. ஒரு பலகையில் சிவப்பு, மஞ்சள், நீல வர்ணங்களில் சிறப்பாக வரையப் பட்டுள்ள இந்த ஓவியம், மிகவும் பழைமை வாய்ந்தது. 'இந்தியாவில் உள்ள எல்லாக் கிறித்துவச் சின்னங்களேக் காட்டிலும் இது மிக மிகப் பழைமையானது' என்று ஹாஸ்டன் பாதிரியார் கூறுகிருர்.

இன்னென்று அவரது செங் குருதி கசிந்ததாகக் கருதப்படும் சிலுவை.

செயின்ட் தாமஸ், தாம் பிரச் சாரம் செய்த இடங்களிலெல்லாம் சிலுவைச் சின்னத்தைச் செதுக்கி வைத்தாராம். அவ்வாறு அவரால் செதுக்கப்பட்ட தாகக் கருதப்படும் இரண்டு சிலுவைகள் இங்கு உள்ளன. ஒன்று சின்னமலேயிலும், மற்ருென்று தோமையார் மலேயில் உள்ள மேரி மாதா தேவாலயத்திலும் உள்ளன. மேரிமாதா தேவாலயத்திலுள்ள இந்தச் சிலுவையின் முன்னுலேதான் செயின்ட் தாமஸ் கி.பி. 72-ல் கொல்லப்பட்டதாகவும் அச் சிலுவையை அணேத்துக் கொண்டே அவர் உயிர்துறந்தார் என்றும் கூறப்படுகிறது.

அடுத்து, சாந்தோமிற்கும் செயின்ட் தாமஸ் மலேக்கும் இடையில் சைதையில் உள்ள ஒரு சிறு குன்றே சின்ன மலே என்று அழைக்கப்பட்டு வருகிறது. இதில், சிறப்பான ஒரு குகை உள்ளது. செயின்ட் தாமஸ், இந்தக் குகையில் தான் இரவு நேரங்களில் நீண்ட நேரம் செபித்ததாகவும், பகல் வேளேகளில் குன்றின் மீதமர்ந்து ஏசுவின் தெள்ளமுதை மக்கட்குப் போதித்ததாகவும் சொல்லப்படுகிறது. 16-ஆம் நூற்ருண்டில் எழுப்பப்பட்டதாகக் கருதப் படும் ஒருசிற்ருலயத்தையும்நாம் இங்குக் காணலாம். சிற்ருலயத்தின் பின்புறமுள்ள சமதளத்தில் கல்லில் அரை குறையாகச் செதுக்கப்பட்ட சிலுவை ஒன்று இன்றும் காணப்படுகிறது. அங்குதான் செயின்ட் தாமஸ் திருப்பலி நிறைவேற்றியதாகவும், செபத்திலும், தியானத்திலும், பலமணி நேரங்களேச் செலவழித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவில் கிறித்துவ சமய பாரம்பரியம் ஏற்பட வழி வகுத்தவர் செயின்ட் தாமஸ். இந்தியாவில் அவர் தொண்டாற்றிய காலத்தில் பெரும் பகுதியையும் செலவழித்தது சென்னேயில் தான். அவருக்கு 1972—ஆம் ஆண்டில் சிறப்பாக விழா எடுக்க வேண்டும் என்று இந்திய கத்தோலிக்க மறை ஆயர்கள் பேரவை 1970—ஆம் ஆண்டு ஜனவரியில் எர்ணுகுளத்தில் கூடிய மாநாட்டில் முடிவு செய்தது. அந்த முடிவின்படி, சென்னேத் தீவுத் திடலில் இம் மாதம் 14, 15, 16 நாட்களில் செயின்ட் தாமஸின் 19-வது நூற்ருண்டு விழா மிகச் சிறப் பாகக் கொண்டாடப்படுகிறது. 'பெற்ற பெருவாழ்வைப் பகிர்ந்து வாழ்வோம்!' என்னும் இலட்சிய முழக்கத்தோடு தொண்டாற்றிய, திருத்தொண்டர் புனித தோமையாரின் புகழ் சிறப்பதாக!




தமிழ்நாடு அரசு எந்தத் துறைக்கும் தராத அளவிற்குக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை அதன் விகிதாச்சாரத்திலிருந்து காணலாம். ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கப்படுகிற தொகையில், எந்தத் துறைக்கும் ஒதுக்கப்படாத அளவிற்கு 23 சதவீதம் பொதுக் கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும் மட்டும் ஒதுக்குகிறோம். அந்த அளவிற்கு அரசு கல்வித்துறை முன்னேற்றத்தில் அக்கறை காட்டுகிறது. 23 சதவீதம் என்றால் இவ்வளவு சதவிகிதம் என்பதல்ல; அந்தந்த ஆண்டில் வேறு பல துறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது கல்வித் துறைக்கு ஒதுக்கப்படுவது எவ்வளவு சதவிகிதம் என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

அரசின் மொத்த வரவு செலவில், 397 கோடி ரூபாயில் 23 சதவீதம் 91 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது என்றால் முன்பு 200 கோடி ரூபாய் மொத்த வரவு செலவு இருந்து அதில் 23 சதவீதம் என்று போடுவதும், 397 கோடி ரூபாயில் 23 சதவீதம் என்று செலவு செய்வதிலும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். ஆகவே, அப்போதும் 23 சதவீதம் இப்போதும் 23 சதவீதம் என்று கொண்டு பார்க்கக்கூடாது. ஆண்டுக்கு ஆண்டு ஏற்படுகிற செலவில் மற்றத் துறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இத்துறைக்கு நாம் அதிகமாகத்தான் செலவு செய்கிறோம். 1966-67-ல் 23 சதவீதம் என்பது 44 கோடியாக இருந்தது. இப்போது 23 சதவீதம் என்பது 91 கோடியாக வளர்ந்திருக்கிறது. நான்கைந்து ஆண்டுக்காலத்தில் 44 கோடி ரூபாய் அளவில் நடைபெற்று வந்த இந்தக் கல்வித் துறை இப்போது 91 கோடி ரூபாய் அளவில் நடைபெறுகிற அளவிற்குப் பல்வேறு வகைகளில் விரிவடைந்தும், பல்வேறு வகைகளில் முன்னேற்றம் பெற்றும் வருகிறது என்பதைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொதுக்கல்வி என்ற தலைப்பின் கீழ் 91 கோடி என்று ஒதுக்கியிருந்தாலும், அதிலே தொழில் நுட்பக்கல்வி, தொல்பொருள் ஆராய்ச்சித்துறை, அரும்பொருள் காட்சித்துறையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. கல்வி மானியம் என்று மாநில முழுவதற்கும் எடுத்துக்கொண்டால் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, அதன் மூலம் அவர்கள் நடத்தும் பள்ளிகள், அவர்களுக்குத் தரும் பள்ளிப்படிப்பு உதவித் தொகை, சமுதாய வளர்ச்சித் திட்டம் ஆகிய பணிகளின் கீழ் என்று பார்த்தால் — அது ரூ. 107.50 இலட்சமாக இருக்கிறது. மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் ரூ. 112.75 இலட்சமாக இருக்கிறது. இதைத் தவிர, தமிழகம் முழுவதும் எடுத்துக் கொண்டால் 169 கல்லூரிகள் இருக்கின்றன; அவற்றில் 46 அரசுக் கல்லூரிகள் என்றும், 123 மானியம் பெறும் கல்லூரிகள் என்றும் இருக்கின்றன. இதைத் தவிர மத இயக்கங்களைச் சார்ந்தவர்கள் கல்லூரிகள், உயர்நிலைக் கல்லூரிகள் என்று நடத்துகிறார்கள். கிறித்துவர்கள், முகமதியர்கள், இந்து அறக்கட்டளைகள், இராமகிருஷ்ண மடம் போன்றவற்றின் சார்பாகவும் பல்வேறு வகையில் செலவழிக்கப்பட்டு, அவைகள் எல்லாம் சேர்த்துக் கிட்டத்தட்ட ரூ. $4\frac{1}{2}$ கோடி அளவில் மாநிலம் முழுவதற்கும் செலவழிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியம், மாநகராட்சி மன்றம் ஆகியவைகளுக்கு அளிக்கப்படும் தொகையையும் சேர்த்துக் கொண்டால் கல்விக்காக மட்டும் இந்த 1972–73–ல் எல்லாத் துறைகளிலும் சேர்த்து 121 கோடி ரூபாய் செலவழிக்கிறோம்.

நம்முடைய கல்வியின் வளர்ச்சி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே போகிறது. 1966-67-ல் தொடக்கப் பள்ளிக்கு வந்த மாணவர்கள் எண்ணிக்கை, 57·67 இலட்சமாகும். ஆனால், 1971-72-ல் பார்க்கிறபோது 65·77 இலட்சம் மாணவர்கள் பள்ளியில் கொண்டு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஏற்கெனவே 88 சதம், 6 வயது முதல் 11 வயதுள்ள மாணவர்கள் பள்ளியில் வந்து சேர்ந்தார்கள் என்று சொன்னால், இந்தக் கட்டாயக்



16-4—2

## கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர்



கல்வித் திட்டத்தின் மூலமாக 94·5 சதம் 6 முதல் 11 வயது வரை உள்ள மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் இருக்கிற ·5 சதவிகித மாணவர்கள் நம் கண்ணுக்கும் அகப்படாமல், பெற்றோர்கள் கண்ணுக்கும் அகப்படாமல், ஆசிரியர்கள் கண்ணுக்கும் அகப்படாமல், எங்கேயோ திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

அதே போன்று உயர்நிலைப் பள்ளிகளிலும் 1966-67 வரை 6 முதல் 11 வகுப்புகளில் 6·08 இலட்சம் மாணவர்கள்தான் இருந்தார்கள். 1971-72-ல் ·14 இலட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். இது போல் கல்லூரியை எடுத்துக் கொண்டாலும், 1966-67 வரையில் 94,000 மாணவர்கள்தான் இருந்தார்கள். 1971-72-ல் 93,000 மாணவர்களாக அந்த எண்ணிக்கை வளர்ந்து வந்திருப்பதைப் பார்க்கிறோம்.

கட்டாயக்கல்வி அமல் நடத்தப்பட்டுப் பல்வேறு வசதிகள் வாய்ப்புகள் செய்து இருக்கிறோம். 1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவு, இலவசப் புத்தக விநியோகம், சீருடை வழங்குதல், போன்ற திட்டக் கல்வி மூலம் ஏழைக் குழந்தைகளையும் பள்ளிகளுக்கு ஈர்க்க முயற்சி செய்யப்படுகிறது. இன்று மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக 8 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகிறார்கள்.

இரு மொழித் திறனை எல்லாரும் பெறவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, தமிழ்மொழி அறிவு, ஆங்கில மொழி அறிவு ஆக இரண்டு மொழிகளிலும் வல்லுநர்களாக இருக்கவேண்டும். மொழி உதவி கொண்டு தான் தமிழ்த் துறையிலும் வளரவேண்டும். ஆங்கிலத் துறையிலும் வளர வேண்டும். மற்றவைகளிலும் வளரவேண்டும். ஆங்கில அறிவு வளர்ந்தால்தான் உலகத் தொடர்பு கொள்ளமுடியும். உலக அறிவியல் தொடர்பு கொள்ளமுடியும். சென்ற ஆண்டு வரை மூன்றாம் வகுப்பில் ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தால் போதும்; எழுத வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை இருந்தது. இந்த ஆண்டு முதல் மூன்றாவது வகுப்பில் எழுத-படிக்க, இரண்டு ஆற்றலும் பெறவேண்டும் என்ற ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறோம்.

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குக் கீழ் மட்டத்தில் ஆங்கில அறிவு வளரவேண்டும் என்பதற்காக 19,500 ஆசிரியர்கள், ஹையர்கிரேடு ஆசிரியர்கள் இருக்கவேண்டிய இடங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமித்து, 19,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறோம். அது ஹையர் கிரேடு வேலைதான். ஆனால், அதை செகண்டரி கிரேடு வேலையாக மாற்றி, மாணவர்களுக்கு முறையாகக் கல்வி பயிற்றுவிக்க—அவர்களுடைய ஆங்கில அறிவை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே உயர் துவக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் சாதாரண ஆசிரியர்களாகத்தான் இருந்தார்கள். இப்பொழுது பி.டி. ஆசிரியர்களே துவக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக இருந்தால் நலமாக இருக்கும், கல்வியின் தரம் உயரும் என்று கருதி 900 பி.டி. ஆசிரியர்களை நியமிப்பதற்கு வழிவகைகள் செய்திருக்கிறோம் உயர் தகுதி பெற்றவர்களுக்குக் கூடுதல் சம்பளம் கொடுப்பதற்கு வசதி, வாய்ப்புகள் செய்து வைத்திருக்கிறோம். ஆராய்ச்சித் தேர்வு பெறுவதற்கு பி.எச்.டி. கல்லூரிகளில் வசதி வாய்ப்புச் செய்துதர வேண்டுமென்று கேட்டார்கள். அதுபற்றிய முயற்சிகளையும் இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிறோம். பி.எச்.டி. பட்டம், பெற்றவர்கள் கல்லூரிகளில், பயிற்றுவிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தித் தந்து, ஊக்கம் தருவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். ட்யூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்களைப் பொறுத்தவரையில் பி.ஏ., பி.எஸ்சி.,—எம்.ஏ., எம். எஸ்சியாக மாற்றவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. அந்த மாற்றத்தையும் செய்திருக்கிறோம். பி. ஏ., பி. எஸ்சி., படித்து இரண்டு மூன்று ஆண்டுகள் வேலை பார்த்தால் கூடுமானவரையில் அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகளைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் மேற்கொண்டிருக்கிறார்.

பள்ளிச் சீரமைப்புக் குழு, டாக்டர் பால் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்தக்குழு பல்வேறு கருத்துக்களை எடுத்து உரைத்திருக்கிறது. அவற்றின் மீது ஓரளவிற்கு முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவை பரிசீலனையில் இருக்கின்றன.

சென்ற ஆண்டு பி.யு.சியில் மொத்தம் ஒதுக்கப்பட்டிருந்த இடங்கள் 72,160. அதில் ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு 52,113 இடங்களும், தமிழ்ப் பயிற்சி, மொழிக்கு 20,047 இடங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. அப்படி இருந்தும் மாணவர்களைச் சேர்ப்பதில் இடநெருக்கடி ஏற்பட்டது. அதற்குக் காரணம், சில மாணவர்கள் இந்த ஊரில் இந்தக் கல்லூரியில்தான் இடம் வேண்டும்; அதுவும் இந்தப் பாடம்தான் வேண்டுமென்று கேட்டதால் தான் சில குறிப்பிட்ட கல்லூரிகளில் இட நெருக்கடி ஏற்படுகிறது. வேறு சில கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டதில் பல இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அப்படி இடம் இருக்கக் கூடிய கல்லூரிகளில், மாணவர்கள் போய்ச் சேர விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள். தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தின் கீழ் 20,074 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 2,364 இடங்கள் நிரப்பப்படவில்லை. ஆங்கிலப்

பயிற்சி மொழித்திட்டத்தின் கீழ் 52,113 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 5,753 இடங்கள் நிரப்பப்படவில்லை.

அதே போன்று பி.ஏ., பி.எஸ்சி., போன்ற பட்டப்படிப்புத் துறையில் மொத்தம் 35,611 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 4,696 இடங்கள் நிரப்பப்படவில்லை. அதில் தமிழ்ப் பயிற்சி மொழித்திட்டத்தின் கீழ் 6,079 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 1,802 இடங்கள் நிரப்பப்படவில்லை. ஆங்கிலப் பயிற்சிமொழித் திட்டத்தின் கீழ் 29,532 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 2,894 இடங்கள் நிரப்பப்படவில்லை. சில கல்லூரிகளில் இடம் காலி இருப்பது மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். வரும் ஆண்டிலிருந்து அது பற்றி விளம்பரம் செய்யலாம் என்று அரசு கருதியுள்ளது.

தொழில் நுட்பத் துறையில் பணியாற்றி வருபவர்கள் வேலையில் இருந்துகொண்டே பட்டப் பயிற்சி பெறுவதற்கு வசதி செய்யும் பொருட்டு, இந்த ஆண்டிலிருந்து பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்புப் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களிடையே வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ஒரு முயற்சியாகப் பழகு தொழிற் பயிற்சித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 600 பேரை நியமனம் செய்ய அரசு வழிசெய்துள்ளது. இதில் 238 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் 93 பேர்கள்தாம் வேலையில் சேர்ந்துள்ளார்கள். தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு வேலை வாய்ப்பில்லாத நிலை அங்கத்தினர்கள் சொல்லுகின்ற அந்த அளவுக்கு இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இப்போது இல்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஏற்பட்டதற்குப் பின்பு தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு வேலைவாய்ப்பு வசதிகள் பெருகிவருகின்றன. முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில், தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் பல வற்றைத் தோற்றுவிப்பதிலும், அவற்றிற்கான இயந்திரச் சாதனங்களைப் பெருக்குவதிலும் ஈடுபட்டிருந்தோம். தொடர்ந்து, நான்காவது ஐந்தாவது திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதால், ரயில்வே துறை, பொதுப் பணித்துறை போன்ற துறைகளில் புதிய பணிகள் தொடங்கப்படாமையும், பொதுவாகத் தொழில் வளர்ச்சியில் மந்தநிலை ஏற்பட்டதும் அவர்கள் வேலை வாய்ப்புகுறைந்ததற்குக்காரணங்களாகும். இப்போது நான்

## அரசு ஊழியருக்கு அகவிலைப்படி அதிகரிப்பு

இரகசியக் குறிப்பேட்டு முறையை ஒழித்ததற்காக அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள், 6—4—1972 அன்று தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். அந்த விழாவில் முதல்வர் அவர்கள், அரசு ஊழியர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்றினை அறிவித்தார்கள்.

'' இதுவரை 15 ரூபாய், 30 ரூபாய் என்று அகவிலைப்படி பெறும் ஊழியர்கள், வருகின்ற ஏப்ரல் திங்கள் முதல் முறையே 25 ரூபாய், 40 ரூபாய் என்ற விகிதத்தில் அகவிலைப்படி பெறுவார்கள் '' என அறிவித்தார்கள். மறு விநாடியில் எழுந்த அரசு ஊழியர்களின் ஆரவாரமும் கையொலியும் அடங்குவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆகியது.

காவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கிய பின்னால் பொறியியல் துறையைப் பொறுத்தமட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை.

இப்போது பி.இ. பட்டம் பெற்றவர்களுக்கும் வேலைக்குச் செல்லும்போது முன் அனுபவம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அதனால் அவர்கள் ஓராண்டுப் பயிற்சி பெறவும் இப்போது வகை செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பயிற்சிக் கால உதவிப்பணமா[…] ரூ. 250 அளிக்கப்படுகிறது[…] பி. இ. பட்டதாரிகளுக்கு இந்த[…] பயிற்சித் திட்டத்தின் கீழ் 8[…] இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கி[…]றன. அதில் 30 பேர்கள்தா[…] வேலையில் சேர்ந்திருக்கிறார்கள்[…] அதேமாதிரி டிப்ளமா கோர்[…] படித்தவர்களுக்கு 108 இட[…]கள் ஒதுக்கப்பட்டதில் இதுவரை[…] 47 பேர்கள்தாம் சேர்ந்திருக்[…]றார்கள். அவர்களுக்கு உதவி[…] தொகையாக மாதம் ரூ. 15[…] வழங்கப்படும். அடுத்து 5[…] கிராஃப்ட்ஸ்மென்களுக்கு இட[…] ஒதுக்கப்பட்டதில் இதுவரை[…] ஒருவர்தான் சேர்ந்திருக்கிறார்[…] அவர்களுக்கு மாதம் 90 ரூபாய[…] உதவித் தொகை வழங்கப்படும்[…] இந்தப் புள்ளி விவரங்களை[…] பார்க்கும்போது, தொழில் நுட்[…]பப் பயிற்சி பெற்றவர்களுக்கு[…] வேலை வாய்ப்பில் தேக்க நிலை[…] இல்லை என்பதை நிச்சயமாக[…] நம்பலாம்.

மகளிர் பாலிடெக்னிக்கு[…]களில் ஸ்டெனோகிராபி, டை[…]ரைட்டிங் முதலிய பாடங்கள் கற்[…]பிக்கப்படுகின்றன. இந்த[…] பயிற்சி பெறுகின்றவர்களுக்கு[…] நல்ல வேலை வாய்ப்பு இருக்கின்[…]றது. மற்ற இடங்களிலும் இது[…] போன்ற பாலிடெக்னிக்குகள்[…] ஏற்படுத்துவதற்கு வகை செய்[…]யப்பட இருக்கின்றன.

நூலக இயக்கங்களைப் பற்றிப்[…] பல உறுப்பினர்கள் குறிப்பிட்[…]டார்கள். நூலகங்களின் வரு[…]வாயைப் பெருக்குவதற்காக[…] இதுவரை வசூலிக்கப்பட்ட […] காசு செஸ் வரியை இப்போது […] காசாக உயர்த்தியிருக்கிறோம். அதற்குச் சமமான ஒரு[…] தொகையை அரசாங்கமும்[…] மானியமாக வழங்கும். அரசு[…] அளிக்கும் இத் தொகையில் ஒரு[…] பகுதியைப் புத்தகங்களாகவே[…] வாங்கி வழங்கலாமா என்ற[…] யோசனை அரசின் ஆய்வில்[…] உள்ளது. நூலகப் பணியாளர்[…]களுக்குச் சம்பளம் கொடுக்கப்[…]படுவது பற்றி அரசு ஆராய்ந்து[…] வருகிறது. விரைவில் தக்க ந[…]வடிக்கை எடுக்கப்படும். இப்[…]போது நூலக இயக்கத்திற்கு[…] ஊக்கம் அளிக்கும் பொருட்டுத்[…] தனியாக நூலக இயக்குநர்[…] பதவி ஒன்று ஏற்படுத்த முடிவு[…] செய்யப்பட்டுள்ளது.

(சட்டப் பேரவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)

# நல்வாழ்வுப் பாதையில் நாம்!

மக்களின் நலனைப் பாது காக்கும் முயற்சியில் நாம் நம் நிதி வசதிக் குறைவை உணர்ந்தும் மிகுந்த அக்கறை காட்டி வருகிறோம். மருத்துவ மனைகள் அமைத்தல், சுகாதாரத் திட்டங்கள், மலேரியா ஒழிப்புத் திட்டம், தொழுநோய் ஒழிப்புத் திட்டம், காச நோய் ஒழிப்புத் திட்டம், யானைக்கால் வியாதிக்கான கொசு ஒழிப்புத் திட்டம், குடிநீர்த் திட்டம், அதேபோல் கழிவுநீர் அகற்றும் திட்டம் என்று பல திட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆனால், எந்தத் திட்டமாக இருந்தாலும் 25 சதவீத அளவிற்குத்தான் அரசு பொறுப்பேற்றுப் பணியாற்ற முடியும்; மீதமுள்ள 75 சதவீதப் பொறுப்பை மக்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாயுள்ளார்கள். பல உண்மைகளை மக்கள் உணர்ந்துவிட்டால் சில பிரச்சினைகள் தீரும். பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், மக்களின் பொறுப்புகள் குறித்தும் அதற்குரிய கட்டத்தில் பொது மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்த ஏற்கெனவே இருந்த அரசாங்கம் தவறிய காரணத்தினால்தான், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நாம் அதுபற்றி விளக்க வேண்டியிருக்கிறது.

''சென்னையில் இருக்கும் பொது மருத்துவ மனையில் போதுமான சுகாதார வசதி இல்லை, அங்கே மூட்டைப் பூச்சியிருக்கிறது. அந்துப் பூச்சியிருக்கிறது. படுக்கைகள் சுத்தமாக இல்லை'' என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பெரும் அளவுக்குத் சுத்தப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முயற்சி தோல்வியடைவதற்குக் காரணம், அங்கே படுக்கைகளின் மேலும் கீழும் இருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகியிருப்பதுதான்.

நல்ல இதயம் உள்ளவர்கள் எந்தெந்த இடங்களில் வேண்டினும் இப்படிப்பட்ட மருத்துவ மனை வசதியைப் பெருக்குவதற்காக நிதி அளிக்க முன்வருகிற நேரத்தில் எல்லாம், அவர்கள் 1 இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்தால் அரசாங்கம் மேலும் 1 இலட்சம் உடனடியாக நிதி ஒதுக்கி அந்த மருத்துவ மனையைக்கட்டுவதற்கு- மருத்துவ மனையில் ஒரு பகுதி கட்டுவதற்கு ஒத்துழைப்புத் தந்து, உடனடியாக ஒப்புக் கொள்கிறது.

ஒருவர் ரூ. 10,000 நன்கொடை கொடுத்து, ஒரு 4 படுக்கை உள்ள ஒரு சிறு கட்டடம் கட்டினால் கூட, அவருடைய பெயர் உள்ள கல் பொறிக்கலாம் என்று அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஒரு வேளை அமைச்சர்கள் திறந்து வைப்பது சிலருக்குக் கோபமாக இருக்கலாம். உறுப்பினர்களும் திறந்து வைக்கலாம். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்கூடத் திறந்து வைக்கலாம். அதே போல் பெயர் வைப்பதற்கும், மருத்துவ மனையே அவர்கள் பெயரால் வைப்பதற்கும் நன்கொடை அளவிற்கேற்ப ஒப்புக் கொண்டிருக்கிறோம். சேலம் மாவட்டம் வெண்ணாத்தூர் என்னும் இடத்தில் இராமசாமி முதலியார் என்பவர் மூன்று இலட்சம் ரூபாய் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வந்து அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆண்டுக்கு 20—30 ஆயிரம் செலவில் அரசு அதனை நடத்தி வருகிறது. இரண்டு ஆண்டுகளாக அங்கே வெண்ணாத்தூர்இராமசாமிமுதலியார் மருத்துவ மனை இருக்கிறது. குமாரபாளையத்தில் ''ரூ. 4 இலட்சம் அளவில் கட்டித் தருகிறோம்; அதை அரசாங்கம் நடத்த வேண்டுமெ''ன்றார்கள். அதற்கு அறிஞர் அண்ணா அவர்களின் பெயர் வைக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

மருத்துவ மனை கட்டுவதற்கு ரூ. 50,000, ரூ. 1 இலட்சம் கொடுத்துச் சிறு சிறு மருத்துவ மனைகள் கட்டுவதற்குப் பொள்ளாச்சி, திருப்பூர், குமாரபாளையம் ஆகிய இடங்களிலிருந்து சில பேர் முன் வருவதாகச் சொன்னார்கள். அதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இப்படி எங்கெங்கே நன்கொடை தந்தாலும் ஏற்றுக் கொள்கிறோம். இன்னும் சொல்லப் போனால் சித்த வைத்தியத்தின் வளர்ச்சிக்குச் சென்னையில் உள்ள இந்திய மருத்துவ மனையை மிகப் பெரியதாகக் கட்டுவதற்கும் சித்த மருத்துவ முறையை விரிவு படுத்துவதற்கும், பழநி ஆண்டவர் கோயில் தர்ம கர்த்தாக்கள் ரூ. 5 இலட்சம் தர வேண்டுமென்று கேட்டுள்ளோம். கொடுப்பார்களானால், மேலும் 5 இலட்சம் ரூபாய் அரசாங்கம் செலவிட்டு ரூ. 10 இலட்சம் அளவில் பெரிய மருத்துவ மனை கட்டி

அந்தப் பழநி ஆண்டவர் பெயர் வைக்கவும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

இன்றைக்கு மக்களின் தேவைகளை நிறைவேறச் செய்வதற்கு, கிராமங்களிலுள்ள மக்களுக்குச் சில அடிப்படையான கருத்துக்களைப் பரப்ப வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். இன்றைக்குக் கூடத் திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டார்கள், ''மக்களின் நல்வாழ்விற்கான பிரச்சாரங்கள் மக்களிடையே அதிகமாக நடைபெறவில்லை; அப்படி நடைபெற்று இருந்தால் மக்களின் நல்வாழ்விற்கான கருத்துக்கள் விளக்கப்பட்டு இருந்தால்— இன்றைக்கு இவ்வளவுபேர் நோயாளிகளாக இருந்திருக்கமாட்டார்கள்'' என்று. கடந்த காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சாரங்கள் போதிய அளவு நடக்கவில்லை என்பதை உணர்ந்திருக்கின்றோம். எனவேதான், அண்மைக்காலத்தில் நடைபெறும் குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரச்சாரங்கள் வெறும் குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரச்சாரமாக இல்லாமல், குடும்ப நல்வாழ்வுத் திட்டப் பிரச்சாரமாக அமைய வேண்டும் என்ற முறையில், குழந்தைகளை அளவோடு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லும் அதே நேரத்தில் பெற்ற குழந்தைகளை எப்படி எப்படிப் பேணிக் காப்பது, குழந்தைகள் நோய்த் தடுப்பிற்கான தடுப்பு ஊசிகள் போடப்பட வேண்டிய தன் அவசியம், குழந்தை வளர்ச்சிக்கு மிக அவசியமான வைட்டமின் 'ஏ' குழந்தைளுக்கு எப்போதும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் 'வைட்டமின் 'ஏ' இல்லையென்றால் குழந்தைகள் 12 அல்லது 15 வயதிற்குள் பார்வைக் குறைவு ஏற்பட்டுப் பிறகு அது முற்றிப் பார்வையை இழந்துவிடக் கூடிய அபாயம் நேருவது ஆகியவை பற்றியும், கிராமங்களில் நடத்தப்படும் குடும்பநலத் திட்ட நாடகங்களில் இணைத்துச் சொல்லப்பட்டு வருகின்றது.

இதுபோன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களிலுள்ள டாக்டர்கள் குடும்ப நலத் திட்டங்களின் கிழ்ப் பணியாற்றும் செவிலியர்கள் ஆகியோர் குழந்தை பிறக்கு முன், தாயார் ஐந்து மாதமாகக் கருவுற்று இருக்கும்போது எப்படி அந்தத் தாயைக் கவனிக்க வேண்டும் என்றும் அவர்களுக்குத் தரவேண்டிய ஃபெர்ரன் மருந்துகள் பற்றியும், குழந்தை பெற்ற பிறகு குழந்தையையும், தாயையும் ஐந்து அல்லது ஆறு மாதம் வரை கவனித்து மருந்துகள் தரப்படவேண்டும் என்றும், மிகவும் ஏழ்மைப் பகுதியிலுள்ளவர்களுக்கு ஒவ்வொரு நாளும் சத்துணவு தரப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுச் செயல் படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனாலும், எல்லாவற்றையும் ஒருசேர நிறைவேற்ற முடியவில்லை. பல இலட்சக் கணக்கான மக்களுக்கு இவற்றை நிறைவேற்றித் தருகின்றோம். ஆனால், மேலும் பல இலட்சக் கணக்கான மக்கள் பாக்கி நிற்கின்றார்கள். ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் கவனிக்கின்றோம். ஆனால், பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை நெருங்க முடியவில்லை. இது மிகப் பெரியதொரு சமுதாயப் பிரச்சினை. எனவே, இப்படிப்பட்ட பிரச்சினையினைத் தீர்ப்பது என்றால், நாட்டிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் எல்லா மக்கள் பிரதிநிதிகளும் ஒரு தீவிரமான முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட தீவிர முயற்சிகளிலேயே தலையாய முயற்சி, எதிர்காலத்தில் பலன் தரத்தக்க முயற்சி, ஒரு நாட்டிலே இதைத் தவிர வேறு எந்த முயற்சியினை மேற்கொண்டாலும் பலன்பெற முடியாது என்று கருதச் செய்யும் முயற்சி-குடும்பக்கட்டுப்பாடுதான்.

இந்த இயக்கத்தின் மிக உயர்ந்த இலட்சியத்தினை நாம் இழந்துவிடக்கூடாது. எங்கோ ஒரு சிறு தவறு நடந்திருக்கக் கூடும். ஆனால், நூற்றுக் கணக்கில் செய்ததில் ஒரு தவறு நடந்துவிட்டது என்பதற்காக மிச்சமுள்ள 99 பேருக்குக் கிடைக்கும் நன்மையை நாம் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லையெனில் பிறகு இந்த நாட்டிலுள்ள பஞ்சத்தினையும், ஏழ்மையையும் இந்த அரசு மட்டும் அல்ல, வேறு எந்த அரசாலும் தடுத்திடமுடியாது. வரும் பத்தாண்டுக் காலத்தில் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம் எண்ணிப்பார்த்துச் சிறு குறையினைப் பெரிதாக எண்ணிவிடாமல், எல்லாக் கட்சித் தலைவர்களும் அருள்கூர்ந்து இதில் ஒன்றுபட்டுப் பணியாற்ற முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எல்லாரும் இந்தத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டு இதை வெற்றிகரமாகச் செயல் படுத்துவதற்கு அனைவரும் தங்கள் ஒத்துழைப்பினைத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நர்சுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரேஷன் அலவன்சை அரசாங்கம் நிறுத்திவிட்டதென்றும், அதைத் திரும்ப வழங்க வேண்டுமென்றும் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். செவிலியர்களுக்குச் சலுகைகள் கொடுக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. வேறு எந்தப் பணியாளர்களுக்கும்ரேஷன் அலவன்ஸ் என்பது கிடையாது. அதனால் செவிலியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ரேஷன் அலவன்சான ரூ. 30-ம் சம்பளத்தோடு சேர்த்துக் கொடுத்து விடுவதென்ற முறையில் முடிவெடுக்கப்பட்டிருப்பதாக இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனா



மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,

பேராசிரியர் க.அன்பழகன்

லும் அதில் இப்போது ஒருகருத்து உருவாகியுள்ளது. ஏற்கெனவே ரேஷன் அலவன்ஸ் பெற்று வந்த செவிலியர்கள் பாதிக்கப்படாத வகையில், அவர்களுக்கு ரேஷன் அலவன்சைக் கொடுத்துவிடுவதென்றும், கடந்த அக்டோபரில் இருந்து புதிதாகப் பதவிக்கு வந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்றும் கருதப்படுகின்றது. எனவே, இந்தப் பிரச்சினையை அரசாங்கம் மீண்டும் பரிசீலித்துத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மலேரியா, பைலேரியா ஒழிப்புத் துறைகளிலுள்ள சுகாதாரப் பணியாற்றும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவர்களுடைய பணிகளை நிரந்தரமாக்கிப் பணியை வரிசைப்படுத்தி, ஊதிய உயர்வும் அளிக்கப்பட வேண்டும் என்பது கடந்த ஆறு மாத காலமாக அரசாங்கத்தின் தீவிரப் பரிசீலனையில் இருந்துவருகிறது. அந்தப் பணி செய்கிற யாரும் வேலையிலிருந்து விலக்கப்படாமலிருக்க வழி செய்யப்படுகிறது. அந்த வகையில் அவர்களுக்கு மறு பயிற்சி தரப்படுகிறது. பேசிக் ஹெல்த் ஒர்க்சின் அடிப்படைச் சுகாதாரப் பணியில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, வீடுகளுக்குச் சென்று நோய்ப் தடுப்புப் பணி மேற்கொள்ளும் வகையில் அவர்கள் பணி நிரந்தரமாக்கப்படும். உடனடியாக அவர்கள் வேலையில் சேர்ந்த தேதியிலிருந்து பணியைக் கணக்கிட்டு, முறைப்படுத்தி, ஊதிய உயர்வும் அளிக்கச் சுகாதார இலாகாவில் தனியாக ஓர் அலுவலரும், அவருக்கு உதவியாக எழுத்துப் பணி செய்வோரும் நியமிக்கப்பட்டு, வேலை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த பிரச்சினை செவிலியர்களுக்கு உதவியாக இருக்கின்ற உதவிச் செவிலியர்களைப் பற்றியது. இவர்களின் பணி லாஸ்ட் கிரேடு கவர்ன்மெண்ட் சர்வன்ட்ஸ் பணியைவிடத் தாழ்வானதாக—'இன்பீரியர் சர்வீசாக' இருப்பதாகவும், அதை முறைப்படுத்தி 'சுப்பீரியர் சர்வீசாக' ஆக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களின் இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி அரசு ஊழியர்களுக்குள்ள விடுமுறை உரிமைகள், மற்றச்சலுகைகள் எல்லாம் அவர்களுக்குப் பொருந்தும், அரசு ஊழியர்கள் 55 வயதில் ஓய்வு பெறவேண்டும். அதன்படி அவர்களும் ஓய்வு பெறவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இன்னும் சில நாட்களில் இந்த அறிவிப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

**கோலாலம்பூரில் உள்ள 5 வயதுச் சிறுவனின் உயிரைக் காப்பதற்காகப் பம்பாயிலிருந்து இரத்தம் விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டது.**

**செல்வம் முனியாண்டி என்பது அந்தச் சிறுவனின் பெயர். ஒரு தொழிலாளியின் மகன் அவன்.**

**சென்ற ஆண்டு ஏற்பட்ட தீக்காயத்தினால் ஏற்பட்ட சேதத்துக்கு இப்போது ஆபரேஷன் செய்து மாற்றுத் தோல் பொருத்தினார்கள். இதனால் பெரிதும் இரத்தம் சேதமடைந்தது. இவனது உடலில் உள்ள இரத்தம் போன்ற ரகத்தைச் சேர்ந்த இரத்தம் உலகில் வேறு மூன்றே மூன்று பேருக்குத் தான் இருக்கிறது என்று கூறப்படுகிறது.**

இன்றைக்கு இருக்கின்ற இந்திய மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற—பி.ஐ.எம். படித்தவர்கள்—25 டாக்டர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. இந்த 25 பேர்களில் மாவட்டங்களிலுள்ள 6 அல்லது 7 பேர் மாவட்ட மருத்துவமனைகளில் இடம் பெற ஏற்பாடு செய்யப்படும். இதிலே கூடச் சித்த மருத்துவத்தில் ஈடுபாடு கொண்ட பெரியோர்கள் நன்கொடை தருவார்களானால் அவர்கள் கொடுக்கின்ற நன்கொடைக்குச் சமமான ஒரு தொகையை அரசாங்கம் போட்டு, அவர்கள் இருக்கின்ற வட்டத் தலைநகர் அல்லது மாவட்டத் தலைநகரில் ஒரு சித்த மருத்துவமனை தொடங்க வழி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம் சிறந்த பலனையும் நிச்சயமாகப் பெற முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் திருவகாப் அவர்கள் யுனானி முறையையும் வளர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். யுனானி முறையையும் காப்போம். ஆனால், அரசாங்கத்திடம் அந்த அளவுக்குச் சக்தி இல்லை. காரணம், நிதி வசதி இல்லாதது தான். சித்த மருத்துவத்திற்கு எப்படிப் பழநிக் கோவிலில் பணம் கேட்கிறோமோ, அதைப் போல முஸ்லீம் சங்கச் சார்பிலே 5 இலட்சம் ரூபாய் கொடுப்பார்களானால் யுனானி மருத்துவத்தையும் வளர்க்கலாம்.

ஆயுர்வேதம், சித்த வைத்தியம் யுனானி இவைகளை விரிவு படுத்த வேண்டுமானால், பல இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நமது நிதி வசதி தாராளமாக இருக்குமானால், இதற்காக நமது முதலமைச்சர் அவர்களை ஒரு கோடி ரூபாய் கேட்டு வாங்கியிருப்பேன். ஆனால், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட போர் நெருக்கடியினால் நமது நிதி ஆதாரங்கள் தடைப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் பரிசுச் சீட்டு வாயிலாக 75 இலட்சம் ரூபாய் மருத்துவ வசதிக்காகக் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு, பாதுகாப்பு நிதிக்குத் தேவைப்படுவதால், மருத்துவ வசதிக்கு அதிலிருந்து நிதி கிடைக்கும் சாத்தியக் கூறுகள் அதிகம் இல்லை.

உண்மையிலேயே அலோபதி முறையைவிடச் சித்த வைத்திய முறை பல நோய்கட்கு எவ்வளவோ நல்லது என்பதை அனுபவப் பூர்வமாக அறிந்தவர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். அலோபதி முறையில் நிபுணர்கள் என்று சொல்லக் கூடியவர்களாலே சிகிச்சை அளிக்கப்பட்டு, முடியாது என்று கைவிடப்பட்ட நோய்களைக்கூடச் சித்தவைத்தியத்தாலேதீர்த்திருக்கின்றார்கள். அலோபதி முறையில் நோயின் வகையையும், நிலையையும் சுலபமாகக் கண்டறியலாம். சித்த வைத்தியத்தில் நோயைக் கண்டு பிடிப்

பதில் சிலருக்குத்தான் நல்ல தேர்ச்சி உண்டு. ஆனால், கை கண்ட மருந்து சித்த வைத்தி யத்திலே இருக்கிறது. நோயின் கூறுகளையும் எளிதில் கண்டு பிடிக்கும் முறைகளையும் சித்த வைத்தியர்கள் எல்லாரும் அறிந்து கொண்டால், மிக நல்லமுறையில் சிகிச்சை அளிக்க முடியும். இப்பொழுதே சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி முறைகளில் பெரிய பெரிய நோய்களை யெல்லாம் தீர்த்து வருவதை நாம் கண் கூடாகக் கண்டிருக்கிறோம்.

ஆகவே, நம்முடைய நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்து காணப்பட்ட அடிப்படை உண்மைகள்—அந்த மூலிகைகள், அவற்றின் பயன்கள் எல்லாம் அலோபதி டாக்டர்களால் இன்றையத்தினம் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. சென்னையில் உள்ள பொது மருத்துவத் துறை டாக்டர் இராமச்சந்திரன் அவர்கள் அந்த மூலிகைகளின் தரத்தையும், அதில் உள்ள சிறப்பு இரசாயனப் பகுதிகளையும் தனித்தனியே பிரித்து ஆராய்ந்து அந்த மூலிகைகளில் இன்ன இன்ன தன்மைகள் இருக்கின்றன. அதனால்தான் இன்ன இன்ன நோய்களுக்கு மருந்தாகிறது என்பதைக் கண்டறிந்து வருகிறார். அந்த ஆராய்ச்சித்துறைப் பகுதி தொடர்ந்து பணியாற்றவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்து, மூலிகை உற்பத்திக்கு அரும்பாக்கத்தில் ஒரு மூலிகைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும், ஏற்ற இயல்புடன் அந்த இடம் அமையவில்லை என்பதை உணர்ந்து அதைத் திருநெல்வேலி பாளையங் கோட்டைக் கல்லூரியோடு சேர்த்து மூலிகைப் பண்ணை நல்ல முறையில் அமைய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இது ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்புத்தான் என்றாலும் அதை இன்னும் அதிக அக்கறையுடன் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இப்படி ஒவ்வொரு துறையிலும் அரசு கவனம் செலுத்திப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகையில் ஹோமியோபதிக்கு ஒரு கல்லூரிவரவில்லையே என்று எடுத்துக் காட்டினார்கள். அதை நான் அறிவேன். நம்முடைய சட்டம், கடந்த மாதம் 26 ஆம் தேதி தான் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்றது. அதன் கீழ் நாம் முதலில் ஒரு கவுன்சிலை ஏற்படுத்தியாக வேண்டும். நல்ல திறமையுள்ளவர்கள், அத்துறையினரால் மதிக்கத் தக்கவர்கள் இடம்பெற்று அந்தக் கவுன்சிலை அமைத்த பிறகுதான் ஹோமியோபதிக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றி அவர்கள் முடிவு செய்தாக வேண்டும். அவர்கள் நிச்சயமாக அதில் அக்கறை எடுத்துக் கொள்வார்கள்.

அடுத்து, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் ஒவ்வொன்றுக்கும் பதில் தெரிந்துவைத்திருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தினால் எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஆகவே, வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு அங்கத்தினர்களை வேண்டிக்கொண்டு— உறுப்பினர்களின் கருத்துக்கள் அனைத்தும் கவனிக்கப்படும் என்று உறுதியினை அளித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(தமிழகச் சட்டப்பேரவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)

---

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமல்லவா? இதற்காக அரசு பல வழிகளில் நோய் தீர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. இதற்காகத் தொடக்கச் சுகாதார நிலையம் போன்றவைகளை அரசு அமைத்து வருகிறது. தொடக்கச் சுகாதார நிலையம்—மக்களுக்குத் தடுப்பு மருத்துவப் பணியும், சிகிச்சை மருத்துவப் பணியும் அளிப்பதற்காகவும், நாளடைவில் சமுதாயத்தினரின் சுகாதாரம் மேம்படவும், வட்டார வளர்ச்சிப் பகுதி அளவில் அமைக்கப் பட்டுள்ளது. பல வகைகளில் மக்களுக்கு நன்மை பயப்பதே தொடக்கச் சுகாதார நிலையத்தின் நோக்கமாகும். மக்கள் நல்வாழ்விற்குக் கேடு விளைவிக்கக் கூடிய மலேரியா, காசநோய், பெரியம்மை, 'யாஸ்' என்னும் சருமநோய்போன்ற நோய்களைக் கட்டுப் படுத்தவும், அறவே ஒழிக்கவும் இந் நிலையம் பணிபுரிந்து வருகிறது.

ஒவ்வொரு வட்டாரத்திலும்




ஒரு தொடக்கச் சுகாதார நிலையத்தைத் திறப்பதே அரசின் கொள்கையாகும். 1971 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், 365 தொடக்கச் சுகாதார நிலையங்கள் செயல் பட்டு வந்தன. 1971 ஆம் ஆண்டில், 14 தொடக்கச் சுகாதார நிலையங்கள் திறக்கப் பட்டுள்ளன. இப்பொழுது, தொடக்கச் சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 379 ஆக உயர்ந்துள்ளது. இந்த 379 தொடக்கச் சுகாதார நிலையங்களில் 131 நிலையங்கள் அவற்றிற்கான சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 36 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

தற்போது 80,000–லிருந்து 1,00,000 வரையில் மக்கள் தொகை கொண்ட சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒன்றில், தொடக்கச் சுகாதார நிலையம் ஒன்று சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

# தமிழ்நாட்டின் முதல் தொடர் உருக்கு வார்ப்பட ஆலை உற்பத்தி தொடங்குகிறது

**14-4-72 மாலை 4 மணிக்கு**
**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO)**
**அரக்கோணத்தில் அமைத்துள்ள**

## தொடர் உருக்கு வார்ப்பட ஆலையின்

**தொடக்க விழா**

நவீன மின்சார ஆர்க் உலை உயிர்த்துடிப்புடன் இயங்க—கொதித்துக் கொப்புளிக்கும் பொன்னிறமான உலோகக் குழம்பின் 'கள கள' ஒலி கிளுகிளுக்க—வலுவே உருவான பளபளக்கும் உலோகக் கட்டைகள் உருவாகிவிட்டன.

சோவியத் ஒத்துழைப்போடு காணும் உற்பத்தி இது.

ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் வீதம் உலோகக் கட்டைகள் உருவெடுக்கக் காத்திருக்கின்றன.

தமிழ்த் திருநாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கு வேகமூட்டிட—பொருளாதாரச் செழிப்புக்குப் பெருவலு ஏற்றிட—மேற்கொண்டுள்ள தொழில்மயப் பணி இது!

தமிழ்நாடு முதலமைச்சர்
**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** அவர்கள்
துவக்க விழாவைத் தொடங்கி வைத்து உரை ஆற்றுகிறார்

தமிழ்நாடு தொழில் — சட்டத்துறை அமைச்சர்
**மாண்புமிகு திரு எஸ். மாதவன், பி.காம்., பி.எல்.,**
அவர்கள் விழாவுக்குத் தலைமை வகிக்கிறார்

தமிழ்நாடு உணவு — வருவாய்த்துறை அமைச்சர்
**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்** அவர்கள்
விழாவில் கலந்து கொள்கிறார்

அனைவரும் வருக என்று அன்போடு அழைக்கிறோம்



அரக்கோணத்திலுள்ள தொடர் உருக்கு வார்ப்பட ஆலையின் ஒரு காட்சி

TIDCO

## தொடர் உருக்கு வார்ப்பட ஆலை

அரக்கோணம்
(தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு பிரிவு)
பதிவு அலுவலகம்: 150-A, அண்ணா சாலை, சென்னை-2

CSCP-1

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் திரு. காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிபு அவர்கள், ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள், இயற்கை எய்தினார்கள் என்ற செய்தி, தமிழகத்து மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக் கிறது.

காலம் சென்ற காயிதே மில்லத் அவர்கள் தமிழக மக்களால், 'கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத்' என்று கனிவு ததும்ப அழைக்கப்பட்டவர்.

இந்திய நாட்டின் பெருந்தலைவர்கள் வரிசையில் முன்னணியில் திகழ்ந்தவர். முஸ்லீம் மக்களுக்குத் தலைவர் என்றாலும், மற்ற இனத்தவரிடமும் வேறுபாடு கருதாது பழகிய வெள்ளை உள்ளத்தவர்.

அமைதியின் உறைவிடம்; அன்பின் புகலிடம்; ஆற்றலின் இருப்பிடம் காயிதே மில்லத் அவர்கள்.

அவரைப்பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள்:

"காயிதே மில்லத், அமைதியை விரும்பும் அருமை யான தலைவர். அடக்கம், பெருந்தன்மை, விவேகம் நிறைந்தவர். அவரது பேச்சில் நாற்பதாண்டுக் கால அரசியல் வரலாறு பொதிந்து கிடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

"பாராளுமன்றத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார் கள். அவர்களில் இவர் ஒருவர்தான் எனது நெஞ்சத் தில் தனித்து நிற்கிறார்" என்று.

இந்தி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டுமென்று விவாதிக்கப்பட்டபோது, 'ஒரு மொழி ஆட்சிமொழியாக வேண்டுமானால் அம்மொழி தொன்மையானதாக இருத் தல் வேண்டும்; வளமானதாக இருத்தல் வேண்டும். இலக்கணம் உடையதாக இருத்தல் வெண்டும். இத் துணைத் தகுதிகளும் படைத்த அந்த மொழி - எனது தாய்மொழியான தமிழ் மொழிதான். ஆட்சி மொழியாக இருக்கத் தகுதியுள்ள மொழி, தமிழ் ஒன்றுதான்' என்று கூறித் தமிழைப் பெருமைப்படுத்தியவர் அவர்.

## கண்ணியமிக்க



## காயிதே மில்

1896—ஆம் ஆண்டு ஜூன் திங்களில் திருநெல்வேலியை அடுத்த பேட்டை என்ற ஊரில் பிறந்த திரு. காயிதே மில்லத் அவர்கள், பி. ஏ., படித்துக் கொண்டிருக்கும்போது, நாட்டுப் பற்றின் காரணமாகக் கல்வியை நிறுத்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியது. காந்தியடிகளின் தலைமையில் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டார்.

1946 முதல் 1952-ஆம் ஆண்டு வரை, பழைய சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்தார். 1952-ஆம் ஆண்டு முதல், 1958-ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தார்.

1962-ஆம் ஆண்டில் கேரளாவில் உள்ள மஞ்சேரித் தொகுதியிலிருந்து, நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு 1967, 1971 தேர்தல்களில் அதே தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொகுதிக்குச் செல்லாமலேயே தேர்தலில் வெற்றி பெற்றவர் காயிதே மில்லத் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 5-ஆம் நாள், தமிழ்நாடு சட்டப்
வை, காலையில் கூடியதும், காயிதே
அவர்களின் மறைவுக்கு அனுதா
ித்தது.

தீர்மானத்தைப் பேரவை
அமைச்சர் டாக்டர்
ஞ்செழியன் அவர்கள்
போது, "கண்ணி
ிய வாழ்க்கை
ட்டாக விளங்
ர் மறைவு, ஈடு செய்யமுடியாத இழப்பு" என்று குறிப்பிட்டார்.

"நிதானத்திற்கு இலக்கணம்; நட்புக்கு எடுத்துக்காட்டு; பெருந்தன்மைக்கு உதாரணம்; அடக்கம் என்றால் இவர்தான் என்பதற்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத்"—இவ்வாறு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

காயிதே மில்லத் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சட்டப் பேரவை உறுப்பினர் அனைவரும் ஒரு நிமிட நேரம் அமைதியாக எழுந்து நின்று, மரியாதை செலுத்தியபின் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

தமிழகச் சட்ட மன்ற மேலவையில் முதல்வர் கலைஞர் அவர்கள், இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து,

"இந்திய முஸ்லீம் லீக் கட்சிக்கு மட்டுமல்லாமல், இந்திய நாட்டின் பெருமைக்குரிய தலைவராகக் காயிதே மில்லத் அவர்கள் விளங்கினார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

காயிதே மில்லத் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், மேலவை உறுப்பினர்கள் அமைதியாக எழுந்து நின்றனர். மேலவை ஒத்திவைக்கப்பட்டது.

காயிதே மில்லத் அவர்களின் சடலம், ஏப்ரல் 5-ஆம் நாள் இரவு, திருவல்லிக்கேணி பெரிய மசூதியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

'தமிழரசு' இதழின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை அறிவித்துக்கொள்கிறோம்.

"இந்த நாட்டின் சுதந்தரத்தைப் பாதுகாக்க மைய அரசு வலிமையுடையதாக இருக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்புப் பொறுப்புக்குத் தேவையான அதிகாரங்கள் மைய அரசிடம் நிலை பெற்றிருக்க வேண்டும் என்று தயக்கமின்றியும், வருத்தமின்றியும் எவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இந்தியாவைப் பாகிஸ்தான் அபாயத்திலிருந்தோ, சீன-பலுசிஸ்தான் அபாயத்திலிருந்தோ பாதுகாப்பதற்கு மைய அரசு, இங்கே ஒரு சுகாதாரத் துறையை வைத்திருக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. அது எந்த வகையில் இந்தியாவின் திறமையையும் சுதந்தரத்தையும் வலியுடையதாக்கும்? அவர்கள் இங்கே ஒரு கல்வித் துறையை வைத்திருக்க வேண்டுமா? அங்கே இராணுவத்தினருடன் போராடும் திறனை இது எந்த வகையில் அதிகப்படுத்தும்?''

தமிழக முதல்வர், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஜூன் 27-ல் சட்ட மன்ற மேலவையில் நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு கேட்டிருந்தார். மைய-மாநில உறவுகளை ஆராய்ந்த டாக்டர் பி. வி. ராஜமன்னார் குழு, மேற்கண்ட குறிப்பினைத் தனது அறிக்கையில் எடுத்தாண்டு மைய மாநில உறவு பற்றிச் சிந்திக்கின்றபோது எழும் பல்வேறு சிக்கல்களை ஆராய்கையில், வலிவான மைய அரசின் அவசியத்தைக் கருத்தில் கொண்டே ஆய்வு செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

''20 ஆண்டுகளுக்கு முன்பு செயலுக்கு வந்த அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய நிபுணர்களின் படைப்பில் குறை காண்பது எங்கள் உள் நோக்கம் அன்று. இருபதாண்டுக் காலத்தில் பெற்ற அனுபவத்தையொட்டியும், மொழி வாரி மாநிலங்கள் அமைப்புப் பல மாநிலங்களில் பல்வேறு கட்சிகள் ஆளுங்கட்சியாகப் பொறுப்பேற்றல் போன்ற நிகழ்ச்சிகளை யொட்டியும், அதன் வகையுரைகளை மறு பரிசீலனை செய்வதற்கான காலம் வந்துள்ளது''.

''தவிர, நாட்டின் வளர்ச்சியில் இன்று சிறப்பிடம் வகிக்கும் திட்ட ஆணைக்குழு, அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்ட காலத்தில் சிறப்பு அம்சமாகக் கருதப்படவில்லை. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்பட்ட நிதி ஆணைக்குழுவின் முக்கியத்துவத்தை இத் திட்ட ஆணைக்குழு குறைத்துள்ளது. எனவே, மைய மாநில உறவுகளில் திட்ட ஆணைக்குழுவின் செயல் விளைவு மிக முக்கியமானதாகின்றது.''

''மாநிலங்களின் தன்னாட்சி உரிமைக்கு, நாட்டின் ஒருமைப் பாட்டுக்கு உடன்பட்ட தன்னாட்சிக்கு, ஆதரவான முறையில் தங்கள் பரிந்துரைகள் அமைந்திருப்பதாகக் கூறும் இக்குழு, இப்பரிவுரைகள் ஏற்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டால், இந்திய அரசியலமைப்புச் சட்டம், சீரிய இணைப்பாட்சி அரசு முறைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும்'' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளது.

**மாநிலங்களிடை உறவு மன்றம்**

மைய-மாநில உறவு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடத் தக்கவை வருமாறு:

''தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது மாநிலங்களைப் பாதிக்கக் கூடிய பிரச்சினைகளிலும், அவ்வகையில் நாடாளுமன்றத்தில் மசோதா வருமுன்பும் மாநிலங்கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். இதற்காக மாநிலங்களிடை உறவு மன்றம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். இதில் முதலமைச்சர்கள் அனைவரும் இருக்க வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். இந்தியாவின் தலைமை அமைச்சர் அம்மன்றத்தில் தலைவராக இருக்க வேண்டும். இம்மன்றத்தில் மைய அமைச்சர் பிறர் யாரும் இருக்கக் கூடாது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது மாநிலங்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் மாநிலங்களிடையே உறவு மன்றத்தைக் கலக்காமல் எந்த முடிவையும் மைய அரசு மேற்கொள்ளக் கூடாது.

பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு போன்றவை இதில் விதிவிலக்கு அளிக்கப்படலாம்.

மாநிலங்களிடை உறவு மன்றத்தின் பரிந்துரைகள் மைய அரசையும், மாநிலங்களையும்

# மைய-மாநில உறவு ஆய்வுக் குழுவின்

## பரிந்துரைகள் கூறுவது என்ன?

பொதுவாகக் கட்டுப்படுத்தும். யாதேனும் ஒரு காரணத்திற்காக அத்தகைய பரிந்துரை எதையேனும் மைய அரசு தள்ளுபடி செய்தால், அந்தப் பரிந்துரையுடன் அதைத் தள்ளுபடி செய்ததற்கான காரணத்தையும் நாடாளு மன்றத்திலும், மாநிலச் சட்ட மன்றங்களிலும் வைக்க வேண்டும்.

### தொழில் கட்டுப்பாடு

பொது நலனுக்காக மைய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உகந்ததென்று சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட தொழில்களின் பட்டியலும் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்தியத் தன்மை வாய்ந்த தொழில்களுக்கு, அல்லது ரூ. 100 கோடிக்கு மேற்பட்ட மூலதனம் தேவையாகும் தொழில்களுக்கு மட்டும் மைய அரசின் கட்டுப்பாடு என்று இது வரையறுக்கப்பட வேண்டும்.

### புதிய திட்டக்குழு அமைப்பு

மைய நிருவாகத்திற்கோ அரசியல் செல்வாக்கிற்கோ கட்டுப்படக்கூடியதாக இல்லாமல் திட்ட ஆணைக்குழு தன்னிச்சையான அமைப்பாகச் செயல்பட வேண்டும். இக் குறிக்கோளை அடையும் வகையில் திட்ட ஆணைக்குழு ஒன்றினை நிறுவுவதற்கு வகை செய்து நாடாளு மன்றம் சட்டம் இயற்ற வேண்டும். திட்ட ஆணைக்குழு சட்டமுறையான அடிப்படையில் அமைதல் வேண்டும்.

திட்ட ஆணைக்குழுவில் பொருளாதாரம், அறிவியல், தொழில் நுட்பம், வேளாண்மை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களும், தேசியச் செயல்முறைகளின் பிற துறைகளில் சிறந்த வல்லுநர்களும் மட்டுமே இடம் பெறவேண்டும். மைய அமைச்சர் எவரும் அதில் இடம் பெறக்கூடாது. இக் குழுவிற்கெனத் தனிச் செயலகம் இருக்க வேண்டும். இப்போதுள்ள திட்ட ஆணைக்குழு நீக்கப்பட வேண்டும். மாநிலங்கள் வகுக்கும் திட்டங்கள் குறித்து அறிவுரை கூறுவதாகத் திட்ட ஆணைக்குழுவின் கடமை இருக்க வேண்டும்.

### துப்புத் துலக்க....!

துப்புத் துலக்குவதற்குக் காவல் துறையில் நாய்ப் படையும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. தமிழ் நாட்டில் தற்போது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாகத் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் மூன்று உள்ளன. இவை சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சியிலும் துப்பறியும் நாய்ப் படை ஒன்றை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்படைக்குத் தேவையான நாய்கள் தருவிக்கப்படுகின்றன. 1971-ல் 315 வழக்குகளில் இந்தத் துப்பறியும் நாய்ப்படை பணியாற்றி இருக்கிறது. இதன் துப்பிலிருந்து குற்றவாளிகள் எவரும் தப்ப முடியாது என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது. இந்தப் படைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, குற்றம் மேலும் பெருகா வண்ணம் தடுக்கும் பணியில் இந்தப் படைக்கும் சிறப்பான இடம் உண்டு.

ஒவ்வொரு மாநிலமும் தனக்கெனத் திட்ட வாரியம் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம்.

### தொழில் உரிமங்கள்

தனியார் துறையிலோ கூட்டுறவுத் துறையிலோ மாநிலத்திற்குள் புதிய தொழில்களைத் துவக்கத்திற்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்க வேண்டும்.

அயல்நாட்டு ஒத்துழைப்புடனோ, அந்த ஒத்துழைப்பு இல்லாமலோ பொதுத்துறையில் (மைய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் இதில் அடங்கா) தொழில் நிறுவனங்களைத் துவக்கி நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டப் பிரச்சினைகள் பற்றிய அல்லது மைய அரசுச். சட்டத்தின் பொருள் விளக்கம் பற்றிய வழக்குகளில் மட்டும் உயர்நீதி மன்றத்திலிருந்து உச்சநீதி மன்றத்துக்கு (சுப்ரீம்கோர்ட்) மேல் முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மற்ற உரிமை இயல் குற்ற இயல் வழக்குகளில் உயர்நீதி மன்றத்திலிருந்து மேல் முறையீடு எதுவும் உச்சநீதி மன்றத்தில் ஏற்கத் தக்கதாக இருக்கக் கூடாது.

### நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம்

நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் பொறுத்தவரை, மாநிலங்கள் அவையில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். அதாவது மாநில மக்கள் தொகை யாதாயினும் பிரதிநிதிகள் சம எண்ணிக்கையில் இருக்க வேண்டும். மாநிலங்களவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படக்கூடாது.

மக்களவையில் மாநிலங்களுக்குப் பிரதி நிதித்துவம் பொறுத்த வரையில் 1951-ல் ஒவ்வொரு மாநிலத்துக்கும் அறுதியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை மக்கள் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தாலன்றி மற்றப்படி மாற்றம் செய்யப்படலாகாது. மக்கள் தொகை அதிகரித்திருந்தால் பெருமத்துக்கு உட்பட்டு இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம். 1951-ல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அனுமதிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை எந்நிலையிலும் குறைக்கப்படக் கூடாது.

### ஆங்கிலமே தொடர்பு மொழி

மைய-மாநில அரசுகளுக்கிடையேயும் மற்றும் மாநிலங்களுக்கிடையேயும் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும். உச்ச நீதி மன்றத்திலும் உயர்நீதி மன்றங்களிலும் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்ற அவையில் ஆங்கிலத்தில் அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 8-வது இணைப்புப் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகள் ஏதேனுமொன்றில் உரை நிகழ்த்த உறுப்பினர்களுக்கு உரிமை அளிக்கப்பட வேண்டும்.

மாநிலத்திலுள்ள மைய அரசின் அலுவலகங்கள் பொது மக்களுடன் அலுவல் தொடர்பு கொள்வதற்கு அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியையே பயன்படுத்த வேண்டும்.

### ஒழுங்கு அமைதிப் பொறுப்பு

பொது ஒழுங்கு அமைதியைப் பொறுத்தவரை மாநிலத்தின் வேண்டுகோள் அல்லது இசைவு இல்லாமல் மைய அரசு ரிசர்வு காவல்படை எந்த ஒரு மாநிலத்துக்கும் அனுப்பப்படக்கூடாது. சட்டத்தையும், ஒழுங்கமைதியையும் நிலைநாட்டுவதில் அல்லது உயிருக்கும் சுதந்தரத்துக்கும் பாதுகாப்பு அளிப்பதில் மாநிலத்துக்கு இயலாத போது மட்டுமே பாதுகாப்பளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மாநில அரசின் வேண்டுகோள் கிடைத்ததன் பேரிலன்றி மற்றப்படி ஒரு மாநிலத்தில் உள்நாட்டுக் கலவரத்தின் போது மைய அரசு தலையிடாது என்று தெளிவாக விளக்கி 355-வது பிரிவு திருத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாநிலச் சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான அமைப்பினைப் பொறுத்தவரை 1951-ல் வரையறுக்கப்பட்ட தேர்தல் தொகுதிகள் தொடர்ந்து இருந்து வர வேண்டும். 1950-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவமையச் சட்டம், 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவமையச் சட்டம் ஆகிய இரண்டும் அவற்றின் வகையுரைகளும் அவற்றின்கீழ் செய்யப்பட்ட விதிகளும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு மட்டும் உரித்தாகும் வகையில் திருத்தப்பட வேண்டும்.

மாநிலச் சட்ட மன்றத் தேர்தல் குறித்துச் சட்டமியற்றும் அதிகாரம் மாநிலச் சட்ட மன்றங்களிடையே விடப்பட வேண்டும்.

### ஆற்று நீர்த்தகராறுகள்

மாநிலங்களுக்கிடையே ஓடும் ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்துவது குறித்து எழும் எல்லாத் தகராறுகள் குறித்தும் உச்ச நீதி மன்றம் முடிவு செய்ய வேண்டும். உச்சநீதி மன்றம் எடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்தத் தகுந்த வரையுரைகள் இயற்றப்படவேண்டும்.

கடலோர மாநிலங்களில், மாநிலத்தோடு ஒட்டியுள்ள நிலவரை சார்ந்த நீர்ப்பரப்புக்குள் கடலின் கீழே உள்ள நிலங்கள், தாதுப் பொருட்கள், மதிப்புடைய பிற பொருட்கள் யாவும் அந்தந்த மாநிலங்களுக்கு உரியவனாகும் வகையில் அரசியலமைப்பு 297-வது பிரிவு திருத்தப்பட வேண்டும்.

தேசிய மட்டத்தில் மைய அரசின் அமைச்சரவை, தலைமை நிருவாக அமைப்பாக இருக்கின்றது. நாட்டின் ஒருமைப் பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் பாதுகாக்கும் கருவியாக மைய அரசின் அமைச்சரவை அமைய வேண்டும் என்று மைய-மாநில உறவு ஆய்வுக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் மைய அமைச்சரவை அமையப் பெறுவதற்கு முறையான மரபுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒரே மாநிலத்தைச் சேர்ந்த 'காபினெட்' தகுதியுடைய மைய அமைச்சர்களின் எண்ணிக்கை மொத்த அமைச்சர்கள் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்படக் கூடாது என்றும் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தமும், சம்பந்தப்பட்ட வகையுரை எதுவாயினும் நான்கில் மூன்று பங்கு அல்லது குறைந்தது மூன்றில் இரு பங்கு மாநிலங்களின் சட்ட மன்றங்களால் ஏற்கப்பட வேண்டியது அவசியமாகும்.

### சுமை குறையும்

மைய—மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படக் கூடிய அதிகாரங்கள் குறித்துப் பரிந்துரைப்பதற்கு இந்தியாவிலேயே முதல் முறையாகக் குழுவை அமைத்தது தமிழகமேயாகும். இவ்வாறு அதிகாரங்கள் மாற்றப்படுவதில் தனது அதிகாரங்கள் சரணடையப்பட்டதாக மைய அரசு கருதாமல் அதன் சுமை குறைக்கப்படுவது குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்த விளக்கம் அனைவருடைய கவனத்துக்கும் உரியதாகும்.

### தவறுக்கு வருந்துகிறோம்



1949-ல் திருவிதாங்கூரும் கொச்சியும் ஒன்றாக இணைந்தன. கன்னியாகுமரியை ஐக்கிய கேரளத்தோடு இணைப்பதை எதித்துப் போராடிய தலைவர் 'மார்ஷல்' என மக்களால் அழைக்கப்படும் திரு நேசமணி அவர்கள்.

1950-ல் நடைபெற்ற தமிழ் நாட்டு எல்லை மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக விளங்கினர்.

1954-ல் குமரி மாவட்டப் பகுதியைத் தமிழகத்துடன் இணைக்கப் பெரும் கிளர்ச்சி எழுந்தது. இதற்குத் தலைமை தாங்கிக் கேரள அரசினரால் கைது செய்யப்பட்ட மாவீரர் இவர். பின்னர் 1956-ல் குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்தது.

திரு நேசமணி, 1957-ல் சென்னை சட்டசபை உறுப்பினராகவும், 1962-முதல் 1968-ல் மறையும் வரை டெல்லி நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கினர்.

இவரதுபடத்தைத் 'தமிழரசு' மார்ச் 16-ஆம் தேதி இதழில் வெளியிடத் தவறியதற்காக வருந்துகிறோம்.

(ஆசிரியர்).







தீயின் தீமை நன்கறிவோம். இதனை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது தீயணைப்புத் துறை. இதற்காக இத்துறையில், 11 அரசுப் பதிவு பெற்ற அதிகாரிகளும், 2,817 அரசிதழ் பதிவு பெறாத நிருவாகப் பணியாளர்களும்பணியாற்றி வருகின்றனர். திறமையாக நிருவகிப்பதற்காகவும், நன்முறையில் கண்காணிப்பதற்காகவும், இத்துறையானது, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட வடக்கு வட்டாரமாகவும், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென் வட்டாரமாகவும் 1972 முதல் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தீயணைப்புத் துறை துணை இயக்குநர் பொறுப்பு வகிப்பார்.

1971-ஆம் ஆண்டின் இறுதியில், இம் மாநிலத்தில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை 58. இவ்வாண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மணலியிலும், திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்ட சோழபுரத்திலும் தீயணைப்பு நிலையங்கள் நிறுவ அரசு தீர்மானித்துள்ளது. கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள் பொருத்தப்பட்ட ஊர்திகள் சென்னை மாநகரில் மட்டுமே உள்ளன. இந்த வசதி மதுரை, திருச்சியிலும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

1971-ஆம் ஆண்டில் தீயணைப்பு நிலையங்கள் 4,935 அழைப்புகளைப் பெற்றுச் செயல்பட்டன. இவற்றில் 4,207 அழைப்புகள் உண்மையான தீவிபத்துத் தொடர்புடையவை. அந்த ஆண்டில் தீயால் இழக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பீடு ரூ. 1,37,22 இலட்சமாகும். அழிவினின்றும் மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பீடு ரூ. 4,13,56 இலட்சமாகும்.

* * *

தமிழ்நாட்டுக் காவற்படை மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு, அதன் திறமையே முழுமுதற் காரணம். பிற மாநிலத்தவரும் பாராட்டும் வகையில் இத்துறை விளங்கி வருவதைக் காணலாம். இதன்செயல் திறனுக்குச் சில எடுத்துக்காட்டுகள்:

தமிழ்நாடு காவற்படை வானொலித் தொடருடன் இணைக்கப்பட்ட நிலையான நிலையங்கள் 13, துணைக் கோட்ட நிலையங்கள் 43, மிக உயரமான பகுதிகளில் செய்தி ஏற்பு—அனுப்புகை நிலையங்களைக் கொண்ட உயர் அலைக்கோடி நிலையங்கள் 4 (வி. எச். எப். நிலையம்), மாநகரக் கட்டுப்பாடு அறைகள் 5, வெள்ள நிவாரண நிலையங்கள் 7 ஆகியவை உள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்படுகின்றன. சென்னையில் மத்தியச் சரகம், தெற்குச்சரகம், மேற்குச் சரகம், வடக்குச் சரகம் என்ற நான்கு கட்டுப்பாட்டு நிலையங்கள் உள்ளன.




இவற்றுடன், சென்னை மாநகரக் காவற்படை வானொலி தொடர், தமிழ்நாடு சிறப்புக் காவற்படை வானொலித் தொடர், படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவல்படை வானொலிப் பிரிவுகள் ஆகியவை இருக்கின்றன.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் துணைக் கோட்டத்தில் கம்பியில்லாத் தந்தி அனுப்புகை நிலையம் ஒன்றை அரசு அமைக்கவிருக்கிறது. மீதமுள்ள காவல்துறை துணைக் கோட்டத் தலைமையிடங்களிலும், ஆவடி, செய்யாறு, நிலக்கோட்டை, விருதுநகர், ஆகிய இடங்களிலும் காவல்துறை வானொலி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான திட்டம் உள்ளது.

தற்போது மதுரை, திருச்சி, கோவை, பரங்கிமலை, சென்னை ஆகியவிடங்களில் காவல்துறை கட்டுப்பாடு அறைகள் (Control Room) இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருநெல்வேலியிலும் கட்டுப்பாடு அறையொன்று 1971-ஆம் ஆண்டு முதற் கொண்டு செயல்பட்டு வருகிறது.



## அன்னைபூமி அள்ளித்தருகிறாள்!

கனிவளம் மிகுந்தது தமிழ் மண் என்பதற்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. இப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது, தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டம். இதற்கு ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டப் பிரிவிலிருந்து தொழில் நுட்ப உதவி கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பலவிடங்களில் 17,000 சதுர கி.மீ. பரப்பில் விரிவாகவும் மும்முரமாகவும் கனிப் பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கால அளவு மூன்றாண்டுகள்; அதாவது 1968-ல் தொடங்கி 1971-ல் முடிவுற்றது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 120 இலட்சம்; இத்தொகையில் ஏறத்தாழ ரூ. 80 இலட்சம், கருவிகள், தொழில் நுட்ப வல்லுநர் உதவி ஆகிய வடிவில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அதிகாரிகளிடமிருந்து கிடைக்கிறது. மாநில அரசுக்குத் தோராயமாக ரூ. 40 இலட்சம் செலவாகியுள்ளது. இத்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் அளித்து வந்த உதவி 31-12-1971-ஆம் நாளுடன் முடிவடைந்தது. இரண்டாம் நிலையில் அளிக்கும் உதவி பற்றி ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் பரிசீலித்து வருகிறது.

திருவண்ணாமலையில் அயக்காந்த (மேக்னடைட்) இரும்புப் படிவங்கள்.—1,400 இலட்சம் டன் இரும்புப் படிவம் உள்ளதெனவும், அப்படிவத்தில் 35 முதல் 44 சதவிகிதம் இரும்பு உள்ளதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. கவுதிமலைப் பகுதியில் இரும்புப் படிவங்களின் அளவைச் சரியாக மதிப்பிட்டறியும் பொருட்டும், அதன் தரத்தையறியும் பொருட்டும் அங்குத் துளையிடும் பணி 1971 மார்ச்சில் தொடங்கியது. இதுவரை நான்கு துளையிடப்பட்ட சுரங்கங்களிலிருந்து அப்பகுதியில் இரும்புப் படிவம் 10 மீட்டர் முதல் 30 மீட்டர் கனத்துக்கு இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. தொடக்கச் சோதனையிலிருந்து அங்குள்ள இரும்புத் தாதுவை, 65 சதவிகிதம் இரும்பு அடங்கிய உயர்தர அடர் இரும்பினை அளிக்கும் வண்ணம், காந்த ஈர்ப்புச் செய் முறை மூலம் எளிதில் அடர்த் தன்மை பெறச் செய்ய இயலும் எனத் தெரிய வந்துள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டம் சேவத்தூரில் சுமார் 350,000 டன் அபிரகக் கனிப்பொருள் கிடைக்குமென்று கண்டறியப் பட்டுள்ளது. இது இப்போது துறையால் சுரங்கமாக மேம்படுத்தப்படுகிறது. மேற்சொன்ன பகுதியில் 190,000 டன் அபடைட் கனி கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. பைரோகுளோர் என்பது வெப்பத்தினால் உருவாகும் பாசிக் கனிவகை. இது நியோபியம், தெம்மம் ( Tantalum ), யுரேனியம் ஆகிய உலோகங்கள் அடங்கிய ஒரு கனிப்பொருளாகும். சேவத்தூரில் இந்தக் கனிப்பொருள் சுமார் 800 டன் கிடைக்குமெனப் மதிப்பிடப்பட்டுள்ளது. துளை போடுதல், உலோகவியல் ஆய்வுகள் உட்பட பைரோகுளோர் கனிப்பொருளுக்கான மும்முர ஆய்வு ஒன்றை அணுசக்தி ஆணைக் குழு மேற்கொண்டுள்ளது.

ஆழத்தில் படிந்துள்ள மேக்னசைட் கனிகளைக் கண்டறியவும், சேலத்துக் கருகில் சீமைச் சுண்ணாம்புக் குன்றுகளில் அக் கனிப் பொருள் எவ்வளவு நிறைந்துள்ளதென்று தீர்மானிக்கவும், துளையிடும் பணி 1971, மார்ச்சுத் திங்களில் தொடங்கப் பட்டது. திட்டமிட்டுள்ள 6 துளைகளில் இது வரை நான்கு துளைகள் இடப்பட்டுள்ளன.

திட்டப் பகுதியில் முறையான நிலவியல் சார்ந்த இரசாயன மாதிரி ஆய்வு செய்யப் பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மாதிரிகள் சேகரிக்கப் பட்டு, பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளன.

தென் ஆர்க்காடு மாவட்டம், மாமந்தூர் பகுதியில் ஆழமான இடங்களில் இக் கனிப்பொருள் காணப்படுகின்றதா என்பதை முடிவு செய்யும் பொருட்டு ஐ.பி. (Induced Polarisation) சாதனங்களைக் கொண்டு நிலவியல் சார்ந்த பௌதிக முறையில் கனிகளை வெட்டியெடுக்கும் பணி அண்மையில் தொடங்கப் பட்டு, இப்பணி நடந்தேறி வருகிறது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கனிவளங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டதாலும், தமிழ்நாட்டின் பிற பாகங்களில் தூரியம் ( Graphite ), சிலிமனைட் ( Sillimanite ), உரி வெள்ளி ( Molydenuma ) போன்ற கனிகள் இருப்பதனாலும், கனிவள வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப் படுவதற்குரிய இரண்டாம் நிலைப் பணியை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களின் தற்போதைய திட்டப் பகுதியாக அமைந்துள்ள பாகங்களுக்குத் தென்-மேற்குப்பகுதியில் 14,000 சதுர கிலோ மீட்டர் பகுதியைப் புதிய பகுதியாக, புதிய முறைகளில் ஆய்வு செய்வது அவசியமாக உள்ளது. இவ் வேண்டுகோள் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.




குற்றப் புலனாய்வுகள் செய்வதில் விரைவையும், திறனையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து, அரசு குறிப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக மாநிலக் காவல் துறைத் தலைமையிடத்தில் காவல் துறை கணக்கிடு பொதுப் பிரிவு ( Police Computor Branch ) ஒன்றை ஏற்படுத்த அரசு முன் வந்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள காவல் நிலையங்கள் அனைத்திலுமிருந்தும் மற்றும், கைவிரல் பதிவு மாநிலப் பிரிவிலிருந்தும் வரும் குற்றங்கள் குற்றவாளிகள் குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும், கணக்கிடும் பதிவேட்டில் சேகரிக்கப்படும். கணக்கிடும் பிரிவானது 1973–74 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலக் காவல் துறை வானொலி நிலையங்கள் மூலம் காவல் நிலையங்கள் அனைத்திற்கும் குற்றவாளியின் அடையாளம், கைது செய்யப்பட்ட குற்றவாளி குறித்த பதிவு ஆகிய விவரங்களை அக்குற்றவாளியைக் கைது செய்ததிலிருந்து 24 மணி நேரத்திற்குள், நிரபராதியை விடுவிக்கவும் இது உதவுகிறது. தற்போதுள்ள முறையால் மேற்சொன்ன விவரங்களைச் சேகரிப்பதற்கு 5–6 நாட்கள் ஆகின்றன.

குற்றவாளிகளை விரைவில் அடையாளம்கண்டுபிடிப்பதற்குக் குற்றம் நடந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகளை அல்லது குற்றவாளிகளின் புகைப்படங்கள் கைவிரல் ரேகைப் பதிவுச் சாதனம் அனுப்பும் ஆவணங்கள் ஆகியவற்றை, இந்தப் புதிய வசதிகளின்கீழ், காவல் துறை நிலையங்கள், மாநிலக் காவல் துறை தலைமையிடங்களுக்கு அனுப்ப இயலும்.


# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

**யூரியா:** பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந் நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது–தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.





**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலென்ட் ∴ பினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி–1**

FDSNLC946TM



# காட்டினிலே வரும் செல்வம்

அடர்ந்து வளர்ந்துவரும் காடுகளால் நமக்கு அநேக நன்மைகள் உண்டு. காடுகளுக்கு அழிவு வராமல் தடுக்கவும், காடுகளை வளமுள்ளதாக்கி, வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் அரசு வனத்துறையை அமைத்துச் செயலாற்றி வருகிறது.

வனத்துறைக்காக அரசு ஆண்டு தோறும் செலவிடும் தொகைகளைப் பார்த்தால், இத்துறையின் நோக்கமும், வனவளத்தில் காட்டும் அக்கறையும் நன்கு புலப்படும். வனத்துறை ஆற்றிவரும் அரும் பணியினால் மக்கள் அடையும் நன்மைகள் பலவாகும். அவை என்னென்ன என்பதையும், இதற்கு இத்துறை எவ்வழியில் உதவுகிறது என்பதையும் தெரிந்து கொள்வது நல்லதல்லவா ?

காடுகள் துறையின் கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,072 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,264 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட காடுகளாகும். எஞ்சிய 3,808 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப் பட்ட நிலங்களாகும். ஏற்றத் தாழ்வில்லாத பொருளாதாரத்துக்குக் குறைந்த அளவு தேவையாக, தேசீயக் கொள்கையில் விதித்துள்ள அளவு 33 சதவீதமாக இருக்க இம்மாநிலத்தில் காடுகளின் கீழுள்ள நிலப்பரப்பு, மொத்த நிலப் பரப்பில் 16 சதவீதமாகும்.

காடுகள் ஆற்றல் வாய்ந்த உயிரின வாழ்க்கைச் சூழ்நிலையின் ஆக்கக் கூறு ஆகும். அவை சூழ்நிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. மிக இன்றியமையாத இயற்கை வளங்களுள் காடுகளும் ஒன்றாகும். அவை வெட்டிக் குறைக்கப் பட்டாலும், மீண்டும் வளர்ந்து பெருகும் வளங்களாகும். மண்வளப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு, தட்பவெப்ப நிலை போன்ற நுட்பமான இயல்புகளில் இவை முக்கியப் பங்கு பெறுகின்றன.

காடுகளினால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. அவை நாட்டில் மழை பெய்வதற்கான வாய்ப்புகளை உயர்த்துகின்றன. குறைந்தது, அவை மழை பெய்யும் நாட்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குகின்றன. காடுகள் நீர் வரவை முறைப் படுத்துகின்றன. வெள்ளப் பெருக்கைக் குறைக்கின்றன. மணல் அரிப்பைத் தடுக்கின்றன. எனவே, நமது காடுகளைப் பாதுகாத்து, அவற்றை முனைப்பாகக் கட்டிக்காக்க வேண்டியது உயிரின வாழ்க்கைச் சூழலுக்குரிய இன்றியமையாத தேவையாகும். அவ்வாறின்றேல், கடும் விளைவுகள் ஏற்படும் என்பது பரவலாகக் காணப்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து மோசமான விளைவுகள் ஏற்படவும் கூடும். பாசனம், மின் உற்பத்தி, வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்காக அணைகள், நீர்த் தேக்கங்கள் கட்டுவதில் பெருந்தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. நீர்கோள் பகுதியில், காடுகள் பாதுகாப்பு, மண்வளப் பாதுகாப்புக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப் பட்டாலொழிய இந்த அணைகளிலும், நீர்த்தேக்கங்களிலும், விரைவில் சேறும், வண்டலும் படிந்து அதன் வாயிலாக அவற்றின் நீட்சிக் காலம் பாதிக்கப் படுவதோடு பொருளாதாரமும் பாதிக்கப்படும்.

காடுகள் முக்கியமான நால் வகை மதிப்புகளைப் பெற்றிருக்கின்றன. காடுகளில் பல் வகைத் தாவரங்கள் மல்கியுள்ளன. எல்லா வகை விலங்குகளும் பெருகிக் காணப்படுகின்றன. காடுகள் மண்டி வளர்ந்துள்ள பகுதிகள் கண்ணுக்கு விருந்தாகும். அழகிய காட்சிகள் உடையனவாகவுள்ளன. வனவிலங்குகளின்புகலிடம் காடுகளே. நம் நாட்டு வனவிலங்கு வகைகளில் பல இன்று அழிந்து மறையும் நிலையில், உள்ளன. இவற்றை நாம் நன்கு போற்றிக் காக்கவேண்டும்.

நமது சுற்றுப்புறச் சூழலைக் கட்டிக் காப்பதில் காடுகளுக்குள்ள பங்கினைத் தவிர, அவை காடுகள் சார்ந்த முக்கியத் தொழில்களுக்கு இன்றியமையாத பல்வகை மூலப் பொருள்களையும் வழங்குகின்றன. காகிதம் காகிதக் கூழ், செய்தித்தாள் காகிதம், ரேயான், தீக்குச்சிகள், மரப் பலகைப் பொருள்கள், மரப்பிசின், கோந்து மூலிகைகள் முதலியன, காடுகள் சார்ந்த இத் தொழில்கள் பல துறைகளிலும் பரந்துபட்ட வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன. காடுகள் சார்ந்த பணிகள் யாவும் பெரும்பாலும் தொழிலாளர்கள் முழு உழைப்பினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

காடு வளர்ப்பு அல்லாத பிற பணிகளுக்காகக் காட்டு நிலங்கள் இடையறாது தேவைப்படுகின்றன. இந்நிலை காடுகளை அழித்து விடக்கூடிய பேரபாயத்தைத் தோற்றுவித்துள்ளது. இவ்வாண்டில், நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்காக, மொத்தம் 25,275·13 ஹெக்டேர்களைக் காட்டுப் பகுதிகளிலிருந்து விடுவிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதலாக, வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில், 4,000 ஹெக்டேர் காட்டு நிலம், மத்திய விதைப் பண்ணை தொடங்குவதற்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது.

1970-71-ஆம் ஆண்டில் காடுகளிலிருந்து கிடைத்த வருவாய் ரூ. 366 இலட்சம். 1971-72-ல் கிடைக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 393 இலட்சம். இந்த வருவாயில் பெரும்பகுதி, அதாவது, ஏறத்தாழ ரூ. 120 இலட்சம் சந்தன மரங்களிலிருந்து கிடைக்கின்றது. 1970-71-ல் வெட்டு மரங்களிலிருந்தும், விறகுக்குப் பயன்படும் மரங்களிலிருந்தும், முறையே ரூ. 44.80 இலட்சமும், ரூ. 83.65 இலட்சமும் வருவாய் கிடைத்துள்ளது.

காடுகள் வளர்ப்பு ஒரு நீண்ட காலத் திட்டம் ஆகும். காடுகள் வளர்ப்புக்கு முதலீடு செய்து அவற்றிலிருந்து பலனைப் பெறுவதற்கு முன்னர் நீண்ட காலம் ஆகிவிடுகிறது. அவ்வாறிருப்பினும் கூட, முந்திய திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டப் பணிகள் வருவாயளிக்கத் தொடங்கியுள்ளதோடு, அவை குறிப்பிடத்தக்க முறையில், மாநிலத் தொழில் வளர்ச்சிக்குத் தம் பங்கினை அளிக்கவும் தொடங்கியுள்ளன. முந்திரியிலிருந்து கிடைக்கும் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 15 இலட்சம் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசினர் ரப்பர்த் தோட்டங்கள் உற்பத்தியளிக்கத் தொடங்கியுள்ளன.

> **போருக்குப் பின்னே....!**
>
> சென்ற 5,557 ஆண்டுகளில் நிகழ்ந்த போர்கள் 14,513, இப்போர்களில் இறந்தவர்கள் 364 கோடியென சுவிசு நாட்டு ஜீன் ஜாக்குலின் என்னும் அறிஞர் தமது ஆராய்ச்சியில் கண்டுகூறியுள்ளார்.
>
> இரண்டாவது உலகப் பெரும் போரில் ஏற்பட்ட பொருட்சேதம் 4,00,000 கோடி டாலர்; ஐரோப்பாவில் மட்டும் 2·36 கோடி வீடுகளும், 1·45 கோடி பொதுக்கட்டடங்களும் தொழிற்சாலைகளும் அழிந்தன. இப்போரில் கொல்லப்பட்டவர்கள் 5·48 கோடி. காயமுற்றவர்கள் 9 கோடி.

1970-71-ல் ரப்பர் விற்பனை மூலம் ரூ. 11·52 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. ரப்பர் இறக்கப்படும் பகுதியின் பரப்பு வரும் ஆண்டுகளில் தொடர்ந்து அதிகமாகும். அதற்கேற்ப, வருவாயும் உயரும். தொழில்களின் பயனுக்காக வளர்க்கப்பட்ட நீலகிரித் தைல மரங்கள், கற்பூர மரங்கள் ஆகியவற்றின் தோட்டங்கள், மிலாறு, மூங்கில் காடுகள் ஆகியவை காகித ஆலைகள், ரேயான் தொழிற்சாலை, மிலாறு பட்டைகளிலிருந்து தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகிய காடுகள் சார்ந்த தொழில்களுக்குத் தொடர்ந்து மூலப் பொருள்களை வழங்கி வருகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் போது தொடங்கப்பட்ட பண்ணைக் காடு வளர்ப்புத் தோட்டங்கள் தற்போது பலன் தரும் நிலையை அடைந்துள்ளன. கிராம மக்களின் விறகு, வெட்டு மரத்தேவைகளை அவை கணிசமான அளவுக்கு நிறைவு செய்ய இயலும்.

1970-71-ஆம் ஆண்டில், காடுகளின்கீழ் ஆன மொத்தச் செலவு ரூ. 300·77 இலட்சம். 1971-72-ல் ஆகுமென எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 358·12 இலட்சம். 1970-71-ல் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 84·87 இலட்சம் செலவாகியுள்ளது. இத்தொகையில் ரூ. 74.89 இலட்சம் அரசுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகை, ஆதாயம் தருகின்ற தொழிலுக்குத் தேவைப்படுகின்ற தோட்டங்களை வளர்த்தல், பண்ணைக்காடு வளர்ப்புத் தோட்டங்கள், காடுகள் குறித்த ஆய்வு, செயல் திட்டங்கள், வன விலங்குகள் பாதுகாப்பு, வைகை அணை, மேட்டூர் அணை நீர்க்கோள்பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு ஆகியவற்றுக்குச் செலவிடப்பட்டது. மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டங்களுக்கென்று 1970-71-ல் மொத்தம் ரூ. 9·98 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் பின்வரும் திட்டங்கள் அடங்கும்: வன வள ஆய்வு, குந்தா, கீழ்பவானி நீர்க்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள், இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சித் துயர் தணிப்பிற்கான சிறப்புக் கிராமத் திட்டம், முந்திரித் தோட்டங்களில் பயிர்ப் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

இலங்கை அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிக்கும் கருத்துடன், நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களும் வளர்ப்பதற்கான திட்டங்களை காடுகள் துறை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு நீண்ட காலக் கடன் வடிவில் இந்திய அரசு நிதி உதவி அளிக்கின்றது. 1970-71-ல் அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ் ரூ. 24·96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1970–71-ல், சேலம் மாவட்டத்திலுள்ள சேஷசாயி காகித ஆலைக்கு, சுமார் 54,000 டன் மூங்கில் வழங்கப்பட்டுள்ளது. காகிதம் தயாரிப்பதற்கு நீலகிரித் தைல மரங்கள் போன்ற கடின மரங்களைப் பயன்படுத்துவதிலும், இந்த ஆலை முனைந்திருப்பதால் 8,250 டன் கற்பூர இனக்கலப்பு மரம் இந்த ஆலைக்கு வழங்கப்பட இருக்கிறது. பாபநாசம் மலைகளிலிருந்து கோரைப் புல் எடுத்துச் செல்லப்படுவதற்காகத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சன் காகித ஆலை, காடுகள் துறையுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளது.

ரயான் தயாரிப்புக்கான கூழ் தயாரிப்பதற்காகக் கோயம்புத்தூர் மாவட்டம், சிறுமுகையில் உள்ள தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்தினர் கற்பூர மரங்களையும், மிலாறு மரங்களையும் பயன்படுத்தி வருகின்றனர். 1970–71-ல் கற்பூர மரங்கள் பயிரிடுவதற்காக 800 ஏக்கரும், மிலாறு மரங்கள் பயிரிடுவதற்காக 2,339 ஏக்கரும் நீலகிரி, கோடைக்கானல் மலைகளிலிருந்து தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தோல் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மிலாறு தைலம் தயாரிப்பதற்காக மேட்டுப்பாளையத்திலுள்ள டான் இந்தியா நிறுவனத்திற்கு மிலாறுப் பட்டைகளை வழங்குவதையும் காடுகள் துறை மேற்கொண்டுள்ளது. 1970–71-ல் 6,750 டன் மிலாறுப் பட்டைத் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இவற்றிற்குக் கூடுதலாக, ராஜபாளையத்திலுள்ள ''மதராஸ் சிப்போட்ஸ்'' கம்பெனிக்குப் பெட்டிக்குரிய அட்டைத் தாள்கள் தயாரிப்பதற்காக மென் மரங்கள் வழங்கும் பணியையும் அட்டைகள் தயாரிப்பதற்காகப் பவானிசாகரிலுள்ள ''தமிழ் நாடு கார்டுபோர்ட்ஸ்'' என்னும் கம்பெனிக்கு வடக்குக் கோயம்புத்தூர் மலைகளிலிருந்து கோரைப்புல் வழங்கவும் இத்துறை முடிவுசெய்துள்ளது.

இத்துறையில் வனப்பணியாளர்கள் ( Foresters ), வனக் காப்பாளர்கள் ( Forest Guards) ஆகியோருக்கு வைகை அணையில் உள்ள காடு வளர்ப்புக் கலைப் பயிற்சிப் பள்ளியில் பணிக்காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1971–72-ல் 60 வனப் பேணுநர்களுக்கும், (Rangers), 54 வனக்காப்பாளர்களுக்கும் இப்பள்ளியில் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

காடு வளர்ப்பில் எதிர்கால முன்னேற்றத்திற்குச் செவ்வனே செயல் படும் சிறந்ததொரு ஆய்வுப் பிரிவு அமைக்கப்படுவது அடிப்படையானதாகும். காடு வளரும் ஒரு சில முக்கியமான இன மரங்களை மேம்பாடு செய்யும் நோக்குடன், வனத் துறை அண்மையில் வன மரபியல் பிரிவு ஒன்றைக் கோயம்புத்தூரில் தொடங்கியுள்ளது. இவ்வாண்டில் மண்வள ஆய்வுப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இப்பிரிவு மண்வளம் பற்றிப் பகுப்பாய்வு, எருச்சோதனை, மற்றும், பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். காட்டுப் பயிர்களைப் பற்றும் நோய்கள் ஆய்வு செய்யும் பிரிவு ஒன்றும் அமைக்கப்படும். காடு வளர்ப்புத் தொடர்பாகவும், மிக முக்கியமான இனங்களின் பிற கூறுகள் தொடர்பாகவும், பல ஆராய்ச்சிப் பணிகளைக் காடு வளர்ப்புக் கலை ஆய்வுக் கோட்டம் மேற்கொண்டுள்ளது. காட்டில் கிடைக்கும் பொருட்களை, சிறப்பாக மரங்களை அடிப்படைப் பொருளாகக் கொண்டு அமைந்துள்ள தொழிற்சாலைகளில் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக நம் மாநிலத்தில் வெளிநாட்டு இனங்களைப் பெருமளவில் பயிரிடுவது பற்றிய ஆராய்ச்சி, பல்வேறு நிலையங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

இம் மாநிலத்தில் தற்போது வனவிலங்கு உய்விடங்கள் நான்கும், நீர்ப்பறவை உய்விடம் ஒன்றும் உள்ளன. அவையாவன—முதுமலை, கோடிக்கரை, கிண்டி மான்பூங்கா, முண்டந்துறை புலி உய்விடம், வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம் ஆகியவை. இந்திய அரசால் அமைக்கப்பட்டு வரும் வன விலங்குகளுக்கு நம் நாட்டில் சிறந்த பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடனும், அவை வாழ்வதற்கேற்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் இன்னும் பல உய்விடங்களை ஏற்படுத்தப் பரிவுரை செய்துள்ளது. பல்வகை விலங்குகளைக் கொண்ட உய்விடம் ஒன்றைக் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலையில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உய்விடங்கள் முறையாக மேம்பாடு செய்யப்பட்டால், இம் மாநிலத்தில் சீருலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதில் பெரும்பங்கு வகிக்கும். எனவே, தேவையான அளவு ஓய்வு விடுதிகள், சாலைகள் அமைத்தல், போக்குவரத்து வசதிகள் முதலிய வசதிகளை இந்த உய்விடங்களுக்கு வரும் சீருலாப் பயணிகளுக்குச் செய்து தருவது அவசியமாகும். மேற்கூறிய வனவிலங்கு உய்விடங்கள், பறவைகள் உய்விடம் ஆகியவற்றைத் தவிர, சென்னை கிண்டியிலுள்ள ஒதுக்கக் காட்டில், ஒரு ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் பாம்புப் பண்ணை ஒன்றை அமைக்கத் தனியார் ஒருவருக்கு அரசு ஊக்கமளித்துள்ளது. பல்வேறு வகை ஊர்ந்து செல்லும் விலங்குகள் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள இப் பாம்புப் பண்ணை வாய்ப்பளித்திருக்கிறது.

கிராமங்களிலும், கிராமங்களைச் சுற்றிலும் அடைவாக அமைந்த, தகுந்த நிலப்பரப்புகளிலும், அரசு தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும், கிராமத் தோட்டங்களை வளர்ப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம வாசிகளுக்கு அன்றாடம் தேவைப்படும் விறகு, வெட்டு மரம், தழை, உரம், தீவனம் ஆகிய தேவைகளை இக்கிராமக் காடுகள் நிறைவு செய்யும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 40 இலட்சம் செலவில் 16,000 ஹெக்டேர் பரப்பளவில் இக்காடுகள் வளர்க்கப்படும். 1971–72-ல் 1,872 ஹெக்டேர் பரப்பளவில் கிராமக் காடுகள் வளர்க்கப்பட்டன. இதற்கான செலவு ரூ. 5 இலட்சமாகும்.



1972—73ல் ரூ. 6·48 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,230 ஹெக்டேர் பரப்பளவில் பண்ணைக் காடுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர மக்களுக்குத் தேவைப் படும் விறகு கிடைப்பதற்காக, மக்கள் பெருக்கம் மிகுந்த பகுதி களை அடுத்துள்ள காட்டுப் பகுதிகளில் விறகு மரங்களை வளர்ப்பது, காடுகள்-மாநில பணித்திட்டத்தின்நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 30 இலட்சம் செலவில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1971—72-ல் மொத்தம் 300 ஹெக்டேர் பரப்பளவில் இவ்வகை மரங் கள் வளர்க்கப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற் கான செலவு ரூ. 2·72 இலட்ச மாகும். 1972—73ல் 630 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்த்து, இதற்காக ரூ. 3·60 இலட்சம் செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சுமார் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்களையும் ஏனைய கடின மரங்களையும், மரவகை களையும் வளர்ப்பதற்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971—72-ல் ரூ. 1·96 இலட்சம் செலவில் 495 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு, செம் மரங்கள் வளர்க்கப்படும்.

1972—73-ல் 630 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்களை வளர்க்கவும், இதற்காக ரூ. 2·97 இலட்சம் ஒதுக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுர மாவட்டங் களில் தகுந்த இடங்களில் மென் மரங்கள் வளர்ப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக் குத் தேவைப்படும் மூலப் பொருள்களை அதிக அளவில் இம்மரங்கள் வழங்கும்.

மாநிலத்தின் விறகுத் தேவை யை ஈடுசெய்வதற்காக, தஞ்சாவூர், இராமநாதபுரம், தென் ஆர்க்காடு மாவட்டங் களில் கடலோரப் பகுதிகளி லும், படுகை நிலங்களிலும், திருச்சி மாவட்டத்திலும், சவுக்கு மரத்தை அதிக அளவில் வளர்ப் பதே இத்திட்டத்தின் நோக்க மாகும்.

மரங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களான கூழ் தயாரிக்கும் தொழில்களுக்கும், தோல் பதனிடும் தொழில்களுக் கும் மிலாறு மரமும், மிலாறு மரப் பட்டையும் மிக முக்கியமான மூலப் பொருள்களாக இருப்ப தால், நீலகிரியிலும், மேல் பழனியிலும் மிலாறு மரங்களை வளர்க்கவும் அரசு வழி வகுத் துள்ளது.

விரைவில் வளரும் மர வகைகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள், மரத்தை அடிப் படையாகக் கொண்ட தொழில் களான காகிதம், ரயான், பெட்டிக்குரிய அட்டைத்தாள் கள் ஆகியவற்றின் மூலப் பொருள்களை நிறைவு செய்வ தால், விரைவில் வளரும் கற் பூரத் தைலமரம், மூங்கில் மர வகைகளை வளர்க்கவும் அரசு ஆவன செய்து வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 75 இலட்சம் செலவில் 12,000 ஹெக்டேர் பரப்பளவில் விரை வில் வளரும் மர வகைகளை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

காடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு சந்தன மர விற்பனை யில் கிடைக்கிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன், கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு மாவட் டங்களில் சந்தன மரத்தைச் செயற்கை முறையில் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

நான்காவது திட்டக் கால அளவில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 10·00 இலட் சம் செலவில் சந்தன மரங்களைச் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெட்டு மரங்களைக் கூடுத லாகப் பெறுவதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும், தேக்கு மரங்களையும், பொரு ளாதார மதிப்புள்ள பிற மர வகைகளையும் ஆற்றங்கரைகளி லும், கால்வாய்க் கரைகளிலும், ஏரிக்கரைகளிலும் வளர்ப்பதற் கும் திட்டமுள்ளது. நான்கா வது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 4,000 ஹெக்டேரில் இந்த மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

ரப்பரைப் பயன்படுத்தும் மோட்டார் தொழில் போன்ற வற்றின் வளர்ச்சியை எதிர் பார்ப்பதால், ரப்பரின் தேவை யும் விரைவாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் பயிரிடு வதற்கு ஏற்றதாக உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 800 ஹெக்டேரில் ரூ. 100 இலட்சம் செலவில் ரப்பர் இங்குப் பயிரிடப்படும்.

ஏறத்தாழ 3,800 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகளை, காடுகள் துறை தன் பொறுப் பில் எடுத்துக் கொண்டது. சிறந்த பாதுகாப்பிற்காக இக் காடுகள் நில அளவை செய்யப் பட்டு, முறையாக எல்லை வகுக் கப்பட்டு, தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் இவை ஒதுக்கக் காடுகளாக அமைக்கப்படவிருக் கின்றன.

## பிழைபட எழுதேல்!

இறும்பூதெய்துதல் என்னும் சொல்லைப் பலர் தவறுகவே பயன்படுத்துகின்றனர். எடுத்துக் காட்டாக,

'தங்கள் வாழ்வின் வளம் கண்டு இறும்பூதெய்துகிறேன்' என்று குறிப்பவர்கள் பலர் இருக்கின்றனர். இங்கே, மகிழ்ச்சியடைகிறேன் என் னும் பொருளையுணர்த்த எண்ணியே இறும்பூதெய்து கிறேன் என்னும் சொல் லைப் பயன்படுத்துகின்றனர். இறும்பூதெய்துகிறேன் என் னும் சொல் ஆச்சரியப் படுகிறேன் — வியப்படைகிறேன் என்னும் பொருளையே உணர்த்துவதாகும். எனவே உண்மையிலேயே மகிழ்ச்சி யடைவதாக இருந்தால் 'தங்கள் வாழ்வின் வளம் கண்டு மகிழ்கிறேன், என்று தான் குறிப்பிட வேண்டும்.

நமது மாநிலத்திலுள்ள காடுகளில் பலவகையான விலங்குகள் உள்ளன. எனினும், விலங்குகளைக் கண்மூடித்தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் சுடுதல், பொறி வைத்துப் பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்லுதல் போன்ற காரணமாகவும், வேளாண்மை, புனல்-மின்சாரத் திட்டங்கள், பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்காக வனப் பகுதிகளை அழித்து வருவதன் காரணமாகவும், விலங்குகளின் எண்ணிக்கை வெகுவேகமாகக் குறைந்து வருகிறது. வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும், வனவிலங்கு உய்விடங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவைகள் சீருலாப் பயணிகளைக் கவர்வதாகவும் உள்ளன. மாநிலத்தின் சீருலாப் பணியை மேம்படுத்துவதற்கான நமது திட்டத்தில் வனவிலங்கு உய்விடங்களுக்கு உரிய சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டும்.

1972–73-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பலவகை வன விலங்குகள் வாழும் ஆனைமலைக் குன்றுகளில் வனவிலங்கு உய்விடம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கிறது. இதோடு, சீருலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரவும், வனவிலங்குகளுக்கு உரிய பாதுகாப்பும், ஏதுவான சூழ்நிலையும் ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஏனைய உய்விடங்களுக்கும் மேம்பாடுகள் செய்யப்படும். வனவிலங்கு உய்விடங்களின் மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது, மரம் வெட்டும் கருவிகளைப் பெறவும், வெட்டப்பட்ட மரங்களை எடுத்துச் செல்வதற்கு அதிக வசதிகளைப் பெறவும், மரம் வெட்டும் தொழில் நுட்பத்தில் வனத் தொழிலாளர்களுக்குத் தொடர்நிலைப் பயிற்சியளிக்கவும் ரூ. 10 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வன ஆராய்ச்சிக்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. 1970–71ஆம் ஆண்டில் மரங்கள் மரபியல் (Genetic Section) ஆராய்ச்சிப் பிரிவும், விதைகள் சேமிப்பு, தரம் பிரித்தல்-வழங்கல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. 1971–72-ல் மண்வள அறிவியல் பிரிவு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகும் செலவு சுமார் ரூ. 1·15 இலட்சமாகும்.

வனப் பயிர்களில் காணப்படும் பூச்சிகள், நோய் ஆகியவற்றைக் கவனிக்க வன நோய்க் குறியியல் (Forest Pathalogy) பிரிவு ஒன்றும் தொடங்கப்படும். வன ஆராய்ச்சித் திட்டத்திற்காக 1972–73-ல் ரூ. 2·35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### உங்களுக்குத் தெரியுமா?

நாளொன்றுக்கு 3,000 அரசுத்துறை பேருந்துகளில் 18 இலட்சம் மக்கள் வீதம் பயணம் செய்கிறார்கள். நாள் தோறும் சராசரி வசூல் ரூ. 3 இலட்சம்.

போக்குவரத்து வண்டிகள் கணக்கு (31-12-1971); தனியார் பேருந்துகள் 6,095; அரசு பேருந்துகள் 2,897; ஒப்பந்த பேருந்துகள் 11,313; ஏனைய வண்டிகள் 2,958; வாடகை லாரிகள் 14,468; தனியார் லாரிகள் 2,923; வாடகைக் கார்கள் 7,980; சுற்றுலா வாடகைக் கார்கள் 963; ஆட்டோ ரிக்ஷா 2,138; சொகுசுப் பேருந்துகள் 232; பல்லவா பேருந்துகள் 1,299; பாண்டியன் பேருந்துகள் 346; சேரன் பேருந்துகள் 110; சோழன் பேருந்துகள் 178.

நாட்டின் நலனைக் காக்கும் பணியில் காடுகளும், வன விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும், அவற்றைக் காப்பதன் அவசியம் குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன், காடுகள் துறையில் பிரச்சாரப் பிரிவு ஒன்றினையும் அரசு அமைக்கவிருக்கிறது.

புளி, கோக்கோ, இலவங்கம், குங்கில்யம் (Bursera) கற்பூரத் தைல மரம், எலுமிச்சை வகைச் செடிகள் (citriodora) கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதால், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள்களிலிருந்து வருவாய் அதிகரிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளதால் இத்தகைய மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரைத் தெற்குக் கோட்டத்தில் வண்ணாத்திப் பாறையில் உள்ள அரக்குப் பண்ணையில் அரக்கு உற்பத்தியைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ் அரக்கு பற்றும் மரங்கள் வளர்க்கப் படுவதற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 6·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காடுகள் அழிந்து வருவதால் உயிரின வாழ்க்கைச் சூழலின் சம நிலை பாதிக்கப்படுகிறது என்பதும், வறட்சிக்கு வழிகோலுகிறது என்பதும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். காடுகள் இருப்பதால் எத்தனை நன்மை உண்டாகின்றன! மரங்கள் மழைபெய்யச் செய்கின்றன; ஈரத் தன்மையைக் காக்கின்றன; நில அரிப்பைத் தடுப்பதற்குப் பாதுகாப்பாக வளர்க்கப்பட்ட ஏராளமான மரங்கள் இல்லையென்றால், பெருகி வரும் மழை நீரோட்டம் வளமான மேல்மண்ணை மிகக் கடுமையான அளவில் அடித்துச் சென்றுவிடும். மேல் மண் அரித்துச் செல்லப்பட்ட பின் வளமற்ற பொட்டலே எஞ்சி நிற்கும். மரங்கள், காற்றுத் தூய்மை கெடும் சூழ்நிலையிலும் ஆற்றலுடன் எதிர்த்து நின்று காற்றுத் தூய்மையைப் பாதுகாக்கின்றது. மரங்களின் இலைகள் காற்றிலிருந்து 3 டன் கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு 1 டன் பிராண வாயுவை வெளிவிடுகின்றன. அண்மைக் காலத்தில் நமது நாட்டைத் தொழில் மயமாக்குவதில் காடுகள் ஏற்றுவரும் முக்கியப் பங்கு ஆண்டுதோறும் உயர்ந்து வருகிறது. இவ்வாறு வனத்தொழில்கள் நமது நாட்டுப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளையும் பன்மடங்கு வளமாக்குகின்றன. எனவே, காடு வளர்ப்போம்; நாடு காப்போம்.

விபத்துக்குக் காரணம் என்ன?

அஜாக்கிரதை என்று சொல்லலாம். 'பிரேக்' பிடிக்காததையும் காரணம் காட்டலாம்; 'பிரேக்' கருவியைத் தக்க சமயத்தில் பயன்படுத்தினால் விபத்திலிருந்து விடுதலை அடையலாம். சாலை விபத்தென்னும் கோரப் பிடியிலிருந்து விடுபடும் வகையில் கோவை இளைஞர் ஒருவர் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். அதன் பெயர்: 'ஷ்யூர் ஸ்டாப்'.

இந்தியாவில் முதன் முதலில் இந்தக்கருவி தயாரிக்கப்படுகிறது. இதனைக்கண்டுபிடித்த திரு. இராமசாமி, கோயம்புத்தூர் மணி உயர்நிலைப் பள்ளியிலும், சி. ஐ. டி கல்லூரியிலும் பயின்றவர். பின்னர், அமெரிக்கா சென்றார். அங்கு லிங்கன் தொழில் நுட்ப நிறுவனத்தில் ஓராண்டுக்கு மேல் மோட்டார் பொறியியல் துறையில் பயிற்சி பெற்றார்.

சுகமான கார் சவாரிக்கு இந்தப் பவர் பிரேக் உதவி செய்கிறது. இதனைப் பொருத்துவதால், பிரேக் போடுவது மிகவும் சுலபமாகிறது. குறிப்பிட்ட இடத்தில் உடனே காரையும் நிறுத்துகிறது. இதே கருவியை மேலை நாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் அதன் விலை ரூ. 750 ஆகிறது. ஆனால், நம் நாட்டிலேயே தயார் செய்வதால் இதன் விலை ரூ. 400-க்குக் கிடைக்கிறது. இதனால் அந்நியச் செலாவணி பெருமளவில் மிச்சமாகிறது. மேலும், தென்கிழக்காசிய நாடுகளுக்கு இக் கருவியை ஏற்றுமதி செய்ய வாய்ப்புமுள்ளது.

இவர் கண்டுபிடித்த இன்னொரு கருவியின் பெயர்: 'நியோகூல்'. இது காரின் என்சினை வெப்பமாக்காமல் பாதுகாக்கிறது. 'ஹோஸ்' மற்றும் ரேடியேட்டரின் ஆயுளையும் நீடிக்கச் செய்கின்றது.




காரின் என்சின் எப்படி சூடாகின்றது? இதை அவரே கூறுகிறார்:

முதலில் கார் ரேடியேட்டர் முழுவதும் நிறையும்படி தண்ணீர் ஊற்ற வேண்டும். பின் காரை இயக்கிச் சிறிது தூரம் செலுத்துங்கள். ரேடியேட்டரிலுள்ள தண்ணீர் வெப்பமடைந்து, 'ஓவர் ஃப்ளோ டியூப்' வழியாக வெளியேறுகின்றது. இப்போது காரை நிறுத்தி என்சின் இயக்கத்தையும் நிறுத்துங்கள். ரேடியேட்டருக்குள் காற்று ஓட்டமில்லாத காரணத்தால் இப்போது தண்ணீரின் வெப்பத் தன்மை உடனடியாக அதிகரித்து 90 முதல் 95 டிகிரி சென்டிகிரேடு வரைக்கும் உயருகின்றது. இதன் காரணமாகத் தண்ணீர் மேலும் விரிவடைந்து (Expand) 'ஓவர் ஃப்ளோ டியூப்' வழியாக இன்னும் அதிகமான தண்ணீர் வெளியேறி விடுகின்றது.

சிறிது நேரமானதும் கார் என்ஜின் குளிர்ச்சி அடைகின்றது. தண்ணீரும் சுருங்குகிறது. இதனால் ரேடியேட்டர் டாங்கியில் ஒரு வெற்றிடம் (Vacuum) ஏற்படுகின்றது. காற்றில்லாத இந்த வெற்றிடம் ஏற்படுகின்ற காரணத்தால், அந்த இடத்தில் காற்றுப் புகுந்து கொள்கிறது. அதாவது வெளியேற்றப்பட்ட தண்ணீரின் இடத்தில் காற்றுப் புகுவதால், பிராணவாயு செயல்படுவதன் காரணமாகத் (Oxidisation) துருப்பிடிக்க ஆரம்பிக்கிறது.

மறு நாள் காலையில் ரேடியேட்டர் மூடியைத் திறந்து வெளியேறி விட்ட தண்ணீருக்குப் பதிலாகப் புதிய தண்ணீர் ஊற்றுங்கள். இப்படி மேலதிகமாக ஊற்றப் படுகின்ற தண்ணீர் சுத்தமானதாக இருக்கமுடியாது. இந்த நீரில் கேடு விளைவிக்கும் தாது உப்புக்களும், பிற அசுத்தங்களும் கலந்திருக்கும்.

மறுபடியும் கார் இயக்கப்படும் பொழுது, இந்தத் தண்ணீர் கொதித்துத் தாது உப்புக்களும் அசுத்தங்களும் தனித்

தனியாகப் பிரிந்து ரேடியேட்டர் மற்றும் என்சின் பாகங்களில் படிந்து கொள்கின்றன. இந்தப் படிகத்தைத் தான் செதிள்கள் ( Scales ) என்கிறோம். ஆக, நாள்தோறும் நீங்கள் ரேடியேட்டருக்குள் ஊற்றுகின்ற சுமார் ஒரு தம்ளர் தண்ணீர் காரணமாக ரேடியேட்டர் மற்றும் என்ஜின் பகுதிகளில் மிகவும் அதிகமான படிகங்கள் தோன்றி, வெப்பம் வெளியேற ( Radiate ) முடியாமல் செய்து விடுகின்றன. இதனால்தான் என்சின் அதிகமாகச் சூடாகி (Over Heating and Boiling Complaints) கொதிக்கின்றது.

இப்படி என்சின் அதிகச் சூடாகிக் கொதிப்பதால் எத்தனை இடையூறுகள் ஏற்படுகின்றன?

காஸ்கட் வெடிக்கும்; ரேடியேட்டர் சீக்கிரம் ஓட்டை விழுந்து நீர் கசிய ஆரம்பிக்கும்; ரேடியேட்டர் ஹோஸ் பிடுங்கிக் கொள்ளும்; தண்ணீர்ப் பம்பிலுள்ள கிரீஸ் வெப்பத்தால் உருகி, எண்ணெயின் வழவழப்புத்தன்மை குறைந்து பேரிங்குகள் பிடித்துக் கொள்ளும். இவை மட்டுமா?



அமெரிக்காவில் பயிற்சி பெற்ற தமிழ் நாட்டுப் பொறியியலர் கண்டுபிடித்த மின் சக்தியால் இயங்கும் 'ஷ்யூர் ஸ்டாப்' எனப்படும் பிரேக்கும் (இடதுபுறம் உள்ளது) இயந்திரத்தைக் குளிரவைக்கும் 'நியோகூல்' பகுதியும் (வலதுபுறம் உள்ளது) படத்தில் அமைந்திருப்பதை காணலாம்.

என்சின் எண்ணெய் வெப்பம் அதிகரிப்பதால் தன்மை குறைந்து என்சின் ஆயுளைக் குறைத்துவிடும். அதுமட்டுமல்ல; என்சின் பேரிங்குகள், பிஸ்டன்கள், பிஸ்டன் ரிங்குகள், வால்வ் கைடுகள், காம் ஷாப்ட்டு, புஷ்கள் மற்றும் பேரிங்குகளின் ஆயுளும் கூடக் குறைந்து விடுகின்றது.

இவற்றையெல்லாம் போக்க 'நியோ கூல்' உதவுகிறது. இக்கருவியினால் என்ன நன்மை?

தண்ணீர் மாற்ற வேண்டியதே இல்லை. ரேடியேட்டர் துருப்பிடிப்பதில்லை. செலவுகள் ஏற்படுவதில்லை. என்சின் ஆயுள் நீடிக்கிறது. வெள்ளம் வரும் முன் அணை கட்டுவது போலக் காரில் ஏற்படக் கூடிய என்சின் கோளாறுகளை இது தடுக்கின்றது.

## வெண்பாப் போட்டி-33

முறிப்படி : பாலே வளர்வார் பலர்.

முடிவுத் தேதி : 2—5—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

**ஆசிரியர் (வெண்பாப் போட்டி),**
" தமிழரசு " அலுவலகம்,
அரசினர் தோட்டம், அண்ணா சாலை,
சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

## முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக் கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனாமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை பேத்தங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

# ஏன் இந்தக் காதல்?

தேன்மொழியின் அந்த அலறலுக்கோ, அச்சத்திற்கோ தேவையே இல்லை என்பதைப் போல, அடுத்த நொடியே அலைகளுக்கு நடுவே மாதவனின் தலை தெரிந்தது; முகம் முழுவதும் தண்ணீர் சொட்டச் சொட்ட, 'பளீர்' என்று பற்கள் எல்லாம் மின்ன அவன் மகிழ்ச்சி பொங்கச் சிரிப்பதும் தெரிந்தது.

காலக் கடலிலேயே நீச்சல் அடித்துக் கரையேறத் தெரிந்தவனுக்கு, இந்த நீலக் கடலில் நீந்தி வருவது தானா பெரிய கடினம்?

எனினும், குளித்தது போதும் என்று தேன்மொழியை நோக்கி வந்த மாதவனின் மலர்ந்த முகம், சட்டென்று கூம்பிப் போயிற்று. காரணம், துயரமே வடிவமாகத் தாமரைக்கண்ணி, கடற்கரை மணலில் நடந்து வந்ததுதான்.

அவளுடைய வருகை தேன்மொழிக்கும் மிகுந்த அதிர்ச்சியை அளித்தது.

''ஏன், தாமரைக்கண்ணி, என்ன நடந்தது?''

—என்று பதற்றத்துடன் கேட்டாள் அவள்.

'' தஞ்சாவூரிலிருந்து தந்தி வந்திருக்கிறது. உங்கள் கணவரையும், என்னையும் காப்பாற்றிய அந்த உபதேசியார்க் கிழவர் . . . ''

—தழுதழுத்த தாமரைக்கண்ணியின் குரல் அதற்குமேல் ஒலிக்கவில்லை. 'கோ' வென்று குமுறிக் குமுறி அந்தக் கடல் அலைகளோடு போட்டியிட்டுக் கொண்டு, கதறிக் கதறி அழத் தொடங்கி விட்டாள் அவள்.'

கரைக்கு வரும்பொழுதே அந்தத் துக்கச் செய்தியைக் காதில் வாங்கிக் கொண்டுவிட்ட மாதவன், கற்சிலையாய் மாறிக் கடலையே வெறிக்கப் பார்த்த வண்ணம் நின்றுவிட்டான்; அவன் கண்கள் இப்போது கண்ணீர்க் கடலாகவே மாறிப் பொங்கின.

சிறிது நேரத்திற்கெல்லாம், தாமரைக்கண்ணியுடன் அப்படியே தஞ்சைக்குப் புறப்பட ஆயத்தமாகி விட்டான் மாதவன்.

தன்னையும் 'தஞ்சைக்கு வா' —என்று ஒரு வார்த்தை தன் கணவன் அழைக்கவில்லையே என்று தேன்மொழியின் மனத்துக்குத் தாங்கலாக இருந்தது. எனினும், அவன் அருகே சென்று,

'' நானும் வருகிறேனே.'' —என்றாள்.

## 19. கருமவினையா ?

''உன்னையும் அழைத்துப் போகலாம் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால், அரவிந்தனையும், அவர் மனைவியையும், உன்னைத் தவிர வேறு யார் பொறுப்போடு கவனித்துக் கொள்வார்கள், சென்னையில்?''

—தனக்குள்ள துயரச் சுமையிலும், தன் நண்பர்களின் மன மகிழ்ச்சிக்காக அக்கறை கொள்ளும் மாதவனின் இதயக் கனிவு, அரவிந்தனுக்கு அளவு கடந்த வியப்பை அளித்தது. அவன் அந்தச் சிக்கலுக்கு ஒரு தீர்வு காண முன்வந்தான் :

''நாம் எல்லாருமே சேர்ந்து தஞ்சாவூருக்குப் போவோமே'' —என்றான்.

''எதற்கு வீணாக—அதுவும் இந்தச் சூழ்நிலையில் . . . ''

—என்று இழுத்தான் மாதவன்.

''அதற்கில்லை மாதவன்; எங்களுக்கும் ஓர் ஆசை. நம்முடைய திராவிட இனத்தின் பெருமையைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் எல்லாம் பரவச் செய்த அந்த மாமன்னன் இராசராச சோழன் கட்டிய பெரிய கோவிலைப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் நெடுநாளாகவே கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அதை இந்தச் சமயத்திலாவது நனவாக்கிக் கொள்ளலாமே என்றுதான் நினைக்கிறோம். தஞ்சாவூர் போனதும் உங்களுக்கு எந்தவிதத் தொல்லையும் ஏற்படாத வகையில் நாங்களாகப் போய்ப் பெரிய கோவிலையும் மற்ற இடங்களையும் பார்த்து விட்டு, பிறகு வந்து உங்களோடு சேர்ந்து கொள்கிறோமே!''

—அரவிந்தனின் மனைவியே இப்படிச் சொன்னதும் மாதவனால் மறுப்புக் கூறத் தோன்றவில்லை.

இந்த ஏற்பாட்டைக் கேட்டுத் தேன்மொழியும் நிம்மதியாகப் பெருமூச்செறிந்தாள். ஆனால், தஞ்சையை நோக்கிக் காரில் பறந்தபொழுது அவளது பேதை நெஞ்சம் எப்படிப் புலம்பியது தெரியுமா?

'. . . என்னுடைய தேனிலவு இப்படித்தான் தேய்ந்து கரைந்து வெம்பி விழ வேண்டுமா? . . . '

• • •

தஞ்சையிலிருந்து திரும்பி இரண்டு மூன்று நாட்கள் கழிந்ததும், டாக்டர் பூங்கொடியோடு, மாதவன் குடியிருக்கும் வீட்டுக்குச் சென்றாள் தேன்மொழி. தன் மாமியாரைத் தங்களுடைய மாளிகை இல்லத்துக்கே வந்து விடுமாறு வருந்தி அழைத்தாள். டாக்டர் பூங்கொடியும் அங்குள்ள வசதிகளையெல்லாம் விளக்கிக் கூறி, வீணாக எதற்குக் குடியிருப்பு வீட்டுக்கு என்று வாடகை வடிவத்தில் பணத்தை இழக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னாள்.

அ. முனைமலையான்

தன்னுடைய தன்மதிப்புக்குக் கேடு வரக் கூடாதே என்கிற கவலையில், மாதவனின் தாய் முதவில் உடன்படவில்லை. ஆனால், தேன்மொழியின் இல்லத்தில் எல்லாமே வேலைக்காரர்களால் முடிந்து விடக்கூடிய எளிதான வாய்ப்புகள்—பிறந்தது முதல் வசதிக் குறைவு என்றால் என்ன என்றே தெரியாமல் வளர்ந்து விட்டு, மாதவன் குடியிருப்பது போன்ற ஒரு சாதாரண வீட்டில் வாழ முடியாமல் திண்டாடும் தேன்மொழியின் இரங்கத்தக்க நிலை—அவளுக்காகப் பரிந்து பேசிய டாக்டர் பூங்கொடி விடுத்த உருக்கமான வேண்டுகோள்—எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்த அந்த முதியவள் தன் மருமகளின் அழைப்பைப் புறக்கணிக்க முடியாமல் ஏற்றுக் கொண்டாள்.

தன் தாய் ஏதாவது நினைக்கக் கூடுமோ, மறுக்கக் கூடுமோ என்று அஞ்சித்தான் மாதவன், தன் மாமனார் இல்லத்திலேயே தங்கிவிடுவதற்குத் தயங்கினான். ஆனால், அவனுடைய அருமைத் தாயே இசைவு தந்துவிட்டதால், அவனும் தன் குடியிருப்பு வீட்டைக் காலி செய்துவிடுவதைப் பற்றிச் சிந்திக்கலானான்.

அதோடு, பேரின்பமுத்து சிங்கப்பூரிலிருந்து எழுதிய ஒரு கடிதமும் அவன் மனத்தில் பெரும் மாறுதலை உண்டுபண்ணி விட்டது.

"........என் மகளைப் பொறுத்த மட்டில் நீங்கள் எனக்கு மருமகனாக இருக்கலாம்; ஆனால், மற்ற எல்லா வகையிலும் உங்களை என் மகனாகவே வரித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன். நான் இறந்தபிறகு தான் நான் எழுதியுள்ள இந்த வார்த்தைகள், என் பேனாவிலிருந்து பிறந்த வெறும் எழுத்துக்கள் அல்ல, என் இதயச் சுனையிலிருந்து வழிந்த பாசத் துளிகள் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள். உங்கள் தந்தை உயிரோடிருந்து கட்டளையிட்டால், அதனை மதிக்கிற அளவுக்கு மதிக்கத் தேவை யில்லை யென்றாலும், என் அன்பு வேண்டுகோளுக்கும் சிறிது செவிசாய்த்தால் நான் எவ்வளவு நிம்மதியாகச் சாவேன் தெரியுமா?......"

—அந்தக் கடிதத்தைப் படித்த பிறகும் கல் நெஞ்சனாக இருக்க விரும்பவில்லை மாதவன்.

விரைவில் தன் தாயோடு மாமனார் வீட்டில் குடியேறி விட்டான் அவன்.

மாதவன் வீட்டுச் சாமான்கள் அனைத்தும் பேரின்பமுத்து மாளிகைக்கு வந்து சேர்வதைப் பார்க்கப் பார்க்க—தன்னுடைய கணவன் இனி எப்போதுமே தங்கள் மாளிகையிலேயே தங்கப் போகிறான், தனக்கு அருகிலேயே நடமாடப் போகிறான் என்று நினைக்க நினைக்கத்—தேன் மொழிக்கு எல்லையில்லாத இன்பப் பூரிப்பே உண்டாயிற்று.

ஆனால், அந்தப் பூரிப்பு, அன்று மாலை வரையாவது நீடித் திருக்கக் கூடாதா?

ஏன்?

மருத்துவ மனையிலிருந்து விடுதலை பெற்று வள்ளியம்மையும் அங்கே வந்து சேர்ந்தது தான் தேன்மொழியின் மகிழ்ச்சிப் பெருக்கில் கலங்கல் ஏற்படக் காரணம் ஆயிற்று.

அவளைச் சுமந்து வந்த கார் வாசலில்வந்து நிற்கும்பொழுதே, முன் கூடத்தில் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த தேன்மொழி கவனித்துவிட்டாள்.



காலொடிந்து வேறு முட்டுக் கால் கொடுக்கப்பட்ட வள்ளியம்மையால் தானாகக் காரை விட்டுக் கீழே இறங்க முடியவில்லை. வயது முதிர்ச்சியால் உடல் தளர்ந்துவிட்ட அவளது தாயாலும் அவளைத் தூக்க முடியவில்லை. எனவே மாதவன் தான் தன் தமக்கையைக் குண்டுக்கட்டாகத் தூக்கி வந்தான். அவளுக்கு என்று ஒரு தனி அறையில் கட்டிலைப் போடச் சொல்லி அதிலே அவளைப் படுக்க வைத்தான்.

அப்படி அவன் தூக்கி வரும் பொழுது, வள்ளியம்மையின் நகங்கள் விழுந்து விட்ட மொட்டை விரல்களும், முழங்கைப் பகுதியும், இரத்தச் சீழோடு மாதவனின் பின்கழுத்து காது, கன்னம்—இங்கெல்லாம் உராய்ந்து கொண்டிருந்ததைத் தேன்மொழி கவனிக்காமல் இல்லை.

அவளுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வாந்தியே வந்து விடும்போல் இருந்தது.

வள்ளியம்மையின் கோரமான முகத்தில்தான், வாழ்நாளெல்லாம் தான் கண் விழிக்க வேண்டுமா என்னும் நினைப்புத் தோன்றித் தேன்மொழியின் நெஞ்சை அப்படியே பாறுங்கல்லாய் அழுத்தியது.

அவளுக்கு என்று வேறு எங்காவது வீடு பார்த்து ஓர் ஒதுக்கமாகக் குடி வைப்பதை விட்டு விட்டு, இந்த அழகான மாளிகையின் நடுவிலேயே தன் அருவருப்பான அக்காளையும் கொண்டு வந்து வைத்துவிட்டானே மாதவன் என்று மனம் புழுங்கினாள் தேன்மொழி. ஆனால், அதை எப்படி அவளால் மனம்விட்டு வெளியே சொல்லமுடியும்?




* * *

அன்று இரவு.

சுவர்க் கடிகாரம் பத்துமுறை ஓங்கி ஒலித்து ஓய்ந்து விட்டது.

மாதவன், தன் அலுவலக அறையில் அமர்ந்து கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

மாடியில் தேன்மொழி ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தாள். விழிகள் தான் அவ்வெழுத்துக்களின் மீது விளையாடினவே தவிர, மனம் அவற்றில் பதியவே இல்லை.

வள்ளியம்மையின் வெடிப்பும் தடிப்பும் கொண்ட சதைக் கோளங்களே அவளைப் பீதிக்கு ஆட்படுத்திப் படாத பாடுபடுத்தின.

'அவளைப் போய் எப்படி இவர் மனம் சகித்துத் தொடுகிறார்—தூக்குகிறார்?'

—என்று அவளால் வியக்காமலும் இருக்க முடியவில்லை; வேதனைப் படாமலும் இருக்க முடியவில்லை.

இன்னுஞ் சிறிது நேரத்தில் மாதவன் தன் அறைக்கு வரலாமோ என்னும் எண்ணம் மின்னியது; அது இனிப்பையும் கொடுத்தது அவள் நெஞ்சுக்கு.

அடுத்த கணமே—

வள்ளியம்மையின் இரத்தச்சீழ் தன் கணவனின் கழுத்தையும் முகத்தையும் அப்பிக் கொண்டது அவள் நினைவில் வந்து நிழலாடியது.

என்னதான் அவன் சோப்பு நுரையிலேயே தன் மேனி முழுவதையும் தோய்த்தெடுத்தாலும் அந்த இரத்தச் சீழ்.. ... ..

தேன்மொழி விடுவிடுவென்று ஓடிப்போய்த் தன் அறைக் கதவுக்கு உள்தாழ் இட்டாள்; விளக்கை அணைத்தாள்; படுக்கையில் முடங்கிவிட்டாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் எதிர்பார்த்தவாறே 'டக் ..டக்' என்று மாதவன் வந்து கதவைத் தட்டினான்.

தேன்மொழி பொய்த் தூக்கத்திலேயே தன்னைப் புதைத்துக் கொண்டு ஆனால், விழித்திருந்தாள் இருளை ஊடுருவிக்கொண்டு.

அவள் கண் முன்னே வள்ளியம்மையின் கொடூரமான வடிவமே படமாக விரிந்து பயமுறுத்தியது.

அவள் எப்படித் திறப்பாள் கதவை?

அதற்குமேல் ஓங்கிக் கதவைத் தட்டினால், மற்றவர்கள் விழித்துக் கொண்டு விசாரிக்க, தான் வெட்கித் தலை குனிய நேருமே என்று அஞ்சிய மாதவன், வந்த வழியே திரும்பிப் போனான் கீழே.

* * *

மறுநாள் காலை.

தன் மகளைக் குளிப்பாட்டி விடலாம் என்று கருதினாள் மாதவனின் தாய். தான் மட்டும் அவளைக் குளியல் அறைக்குக் கூட்டிச் செல்ல முடியாது என்பது அவளுக்குத் தெரியும். எனவே, சமையற்காரி சண்பகத்தின் துணையை நாடிச் சென்றாள். அவளுக்கோ அன்றைக்கு என்று கடுமையான காய்ச்சல்; அவளால் படுக்கையிலிருந்து எழவே முடியவில்லை.

'சரி, தேன்மொழியைத்தான் அழைத்துப் பார்ப்போமே!' —என்று மாதவனின் தாய் நினைக்கும்பொழுதே,

மாடியிலிருந்து கீழே கூடத்துக்கு இறங்கி வந்தாள் அவள்.

''வள்ளியை இன்றைக்குக் குளிப்பாட்டி விடலாம் என்று நினைக்கிறேன். ஆனா என்னாலே மட்டும் அவளைத் தூக்க முடியாது. சண்பகத்துக்கோ கடுமையான காய்ச்சல். நீ ஒரு கை கொடுத்தா, நாம ரெண்டு பேருமே வள்ளியைத் தூக்கிக் கொண்டுபோய்க் குளியல் அறையிலே விட்டுவிடலாம்.''

—மாமியாரின் இந்த வார்த்தைகள் தேன்மொழியை ஏனோ நிதானம் இழக்கச் செய்து விட்டன.

''என்னாலே முடியாது; அந்தக் கருமவினையை யெல்லாம் தொட்டுத் தூக்கணும் என்று எனக்கென்ன தலையெழுத்தா?''

—எரிந்து விழுந்தாள் அவள்.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே மாதவனும் அப்போது அங்கே வந்து விட்டான்.

### ஊர் பிறந்த காரணம்

பாண்டிய மன்னனை இரு முறை வென்று, மதுரையைக் கைப்பற்றிய மன்னன் பெயர் பராந்தகன். இதனால் இவனுக்கு மதுராந்தகன் என்ற பட்டப் பெயர் வந்தது. இன்று செங்கற்பட்டில் உள்ள மதுராந்தகம் இவன் பெயரால் உண்டாக்கப்பட்டது. இது சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பெறும். கடப்பேரி என்னும் பழைய ஊரின் அருகே அமைந்ததே மதுராந்தகமாகும்.

தன் மனைவியையே ஏற இறங்க வெறித்து நோக்கினான்.

அவன் கண்கள் இரண்டும் நெருப்புத் துண்டங்களாகச் சிவந்து கனன்றன.

''-கொஞ்சம் முன்னாலே என்ன சொன்னே?''

—அழுத்தமான குரலில் அதட்டிக் கேட்டான் மாதவன்.

தேன்மொழி பதிலேதும் கூறவில்லை. தானும் ஆத்திரத்துடன் முறைத்துப் பார்த்தாள் அவனை.

''நான் கேட்கிற கேள்விக்கு இப்போது பதில் சொல்லித் தீரணும்; கொஞ்சம் முன்னாலே என்ன சொன்னே?''

''உண்மையைத்தான் சொன்னேன்; அந்தக் கருமவினையையெல்லாம் என்னாலே தொட முடியாதென்றுதான் சொன்னேன்''.

''இன்னொரு முறை 'கருமவினை அப்படி இப்படி'—என்று ஏதாவது சொன்னாயோ, உன்னை நான் சும்மா விடமாட்டேன்''.

—உதடுகள் துடிதுடித்தன மாதவனுக்கு.

''ஏன், என்ன செய்து கிழித்து விடுவீர்களாம்? அது கருமவினைதான் என்று ஒரு தடவை இல்லை, ஓராயிரம் தடவை சொல்வேன்''

''அடிப்பாவி! என் அக்காளைப் பார்த்தா அப்படிச் சொல்றே?''

—ஓங்கி ஓர் அறை அறைந்தான் மாதவன்.

(அடுத்த இதழில் முடியும்)




ஊர் எல்லா வகையிலும் சிறந்து விளங்குவதற்கு உழைப்பு மிக இன்றியமையாததாகும். உழைப்பை மூலதனமாக்கி ஒரு காரியத்தில் இறங்கினால் அதில் நிச்சயம் வெற்றிபெறும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது சீரணி. திருக்கழுக்குன்றத்திலுள்ள ஆனூரில் மூன்றரை மைல் தூரமுள்ள ஒரு பாசனக் கால்வாயைச் சீரணியினர் சீர்ப்படுத்தும் சீர்மிகுங் காட்சி காண முடிகிறது.

சுமார் நூறு பேர் கொளுத்தும் வெய்யிலில் கால்வாயில் இறங்கித் தூர் எடுக்கின்றனர். 415 ஏக்கருக்குப் பாசனம் தரும் இந்தக் கால்வாய் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஜனவரி மாதம் தொடங்கிய இந்தப்பணி மார்ச்சு இறுதிக்குள் முடிந்துவிடும். பாலாற்று ஊற்றுத் தண்ணீர் இந்தக் கால்வாயில் செல்கிறது.

ஊரணிக்குச் சீரணி ஆற்றும் பணியினை மக்கள் பாராட்டி மகிழ்கின்றனர். பாலாற்றங் கரையோரம் செல்லும் இந்தப் பாசனக் கால்வாய் பயிர்களுக்குப் பெருந் துணைபுரியும்.

# வெண்பாப் போட்டி

## 30. வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து

சித்தன்ன வாசலில் செந்தமிழர் தீட்டிய
சித்திரப் பாவையின் சிற்றிடை — முத்து
வளையாடும் மென்மலர்க்கை, வாள்வி ழிகுரல்
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—சு. மாரியம்மாள், முதலிப்பட்டி.

மஞ்சளொடு குங்குமமும் மாமலரும் வாள்நகையும்
பிஞ்சு மனம்பதைக்க நீக்கிவிட்ட— அஞ்சா(து)
இளையவளின் கைப்பிடித்தான் இன்புற்றுள் அக்கை
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—செம்பியன், அமராவதிநகர்.

வானம் கறுத்திருக்க வாடும் பயிர்களெல்லாம்
மோனம் கலைந்தபடி மூச்சுவிட—ஊனே
இளைக்கச்செய் யாக்குரல்காண் என்னும் சொறித்த
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—கு. நாராயணதாசு, கோவை-20.

களைகொன்று சீர்பயிரைக் காத்தற்போல், அல்லல்
கனைவென்று தம்மழலை காப்பாள் :—முளைத்தே
அழிக்கும்நோய் மாய்க்கின்ற யன்னையாந் தூது
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—பா. மாரியம்மாள், மதுரை.

'' பற்பலவாய் மூலிகைகள் பார்த்ததுண்டென் முழுமிக
அற்புதமாய் நோய்தீர்க்கும் ஆற்றலுள — பொற்பார்
கிளைதண் டிலைபூகாய் கீழ்வேர்சேர் தூது
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து ''.

—கே. எஸ். ஆறுமுகம் பிள்ளை, கோவை-1.

ஈக்காற்றுக் காற்று இடையாள் முகமென்னும்
பூக்காட்டில் மூக்கெள்ளுப் பூவாகும்—பூக்கும்
ஒளிப்பற்கள் முல்லை ; உதடாம்பல் ; கண்கு
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—குழ. அண்ணாமலை, கோவை.

நற்றவத்தாய் அஞ்சுகமும் நன்முத்து வேலருமே
பெற்றகரு ணாநிதி பேர்புகழோன்—குற்றம்
களைந்தர சாளப் பிறந்த திருக்கு
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—கே. ஏ. விசுவநாதன், பங்களாப்புதூர்.

நீலக் கழனிதனில் நித்திலங்கள் பூத்திருக்கக்
காலைப்பூங் காற்று கவிபாடப்—பாலாய்
விளைநிலத்தில் மின்னுகின்ற அல்லியிடை ஓர்கு
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—தணிகை வாலிதாசன், சென்னை-35.

நாணுற்ற நங்கை நளினத்து நெற்கதிர்பால்
மாணுற்று வீசும் வளத்தென்றல்—கேண்மைத்
தளைகண்டு சேர்ந்ததனைச் சாற்றும் கருங்கு
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

—பொன்னுராசு, வாளவாடி.

'' எங்களது செல்வமகள் ஈடில்லாப் பேரழகு
தங்கும் மகவுக்குத் தாயானள்—மங்கை
வளைகாப்புக் கென்று வரவழைத்த தங்க
வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து ''.

—இரா. இலக்குமி, கரூர்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
சு. மாரியம்மாள், ஆசிரியை
எஸ். ஏ. வி. சாலா நடுநிலைப் பள்ளி,
முதலிப்பட்டி, சங்கரலிங்கபுரம் வழி.

ண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெ
பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாபபோட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்பே
ண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெ

பட்டணத்தில் வாழ்ந்தாலும் பட்டிக்கு வந்தவுடன்
கட்டியவன் செந்நெற் கழனியிலே—சிட்டே!
களைபறிக்கச் சேரும் கலகலத்த, நின்கை
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—வே. குருநாதன், மதுரை-2.

காப்பியத்து முன்செய்யுட் காப்பபோல் இல்வாழ்வுக்
காப்பியந்தான் தீட்டிடவும் காப்புண்டு—தோப்பாய்த்
தழைக்கின்ற தாய்மைக்குத் தந்தசீரக் காப்பு
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—பெ. பூங்குன்றன், சென்னை-61.

வருக தலைவநிற்கு வாய்த்தவினை யாள்தான்
உருகி யுடல்கருகி உட்கிப்—பிரிவின்
நிலைகண் டிளைத்தாள் நெகிழும் அவள்கை
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—இரத்தின. மாணிக்கம், கொம்பேரிப்பட்டி.

" மண்கண்டின் புற்றோம் மழலைப் பருவத்தில்
புண்கண்டே இன்புற்றோம் போர்க்களத்தில்—பண்பின்
இளைபெருகும் வீட்டில் கிளத்தியர்தம் முன்கை
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து ".

—கா. முருகாண்டி, மதுரை-9.

வெங்களத்தில் என்மருகன் வீரப்போர் செய்வதிலே
பங்கெடுத்து வெற்றிகொண்டு வீடுவரப்—பொங்குங்
களிப்பினிலே என்மகன் நீருகுத்த கண்கு
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—பாக்கியசாமி, சென்னை-3.

அங்கை தமக்கே அணிவளைகள் கண்டபின்னே
மங்கையர்தம் அன்பர் மனம்சிதற—வெங்கண்
துளைகண்ட நெஞ்சத்தால் செய்தமைத்த காது
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—புலவர் கோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

கடலுப் பினிக்கும் களங்காய் சுவைக்கும்
உடலுழைக்க வாராதே ஒயும்—இடையோ
இளைத்திளைத் தேங்கும் இனியவளின் செங்கை
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—இளையவன், திருச்சி.

நாணி நடமிட்டு நாதன் கரம்பற்றக்
கோணித் தலைவனைத்துக் கோபத்தைப்—பேணி
' வளை ' யென்பாள் பெற்ற வரிக்கண்போ லுங்கு
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—ஜி. கிருட்டிணமூர்த்தி, அதிராம்பட்டினம்.

ஒருமித்த காதலர்கள் ஊடற் குரிய
மருத நிலத்தில் மலரும்—கருங்கு
வளைவாத நோய்க்கு மருந்தாகும் தூது
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

சேல்வினை யாடிவருஞ் செந்தமிழர் பொன்னாட்டில்
பால்வெள்ளை முத்தம் பயிர்சுமக்கும்—கால்தோய்
உளைக்கழனி காவிரியால் ஊட்டமுறப் பூங்கு
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—திசு. பாலசுப்பிரமணியன், உதகமண்டலம்.

நெற்கதிரில் பால்பிடிக்கும் நேரத்தில் நீரின்றி
வற்றுகின்ற வாய்க்கால் வரப்புகளில்—உற்ற
மழைநோக்கி நண்டுவளை மூடகத்தும் நீர்த்த
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—வா. அ. நத்தோடு, கடையநல்லூர்.

கொஞ்சு தமிழ்பேசும் கோமளப் பூங்கொடியென்
நெஞ்சில் நிலைத்துறையும் நேரிழை—பஞ்சில்
விளைந்தமென் பாதத்தாள் ! விந்தை விழிக்கு
வளைகண்டின் புற்றோம் மகிழ்ந்து.

—ஆ. வளமதி, திருச்சி-4.

அன்னைத்தமிழின் அடிகளுக்கு நற்சிலம்பு
மின்ன விடைக்குமணி மேகலைசெம்—பொன்னில்
இழைத்தெடுத்த குண்டல மென்னையணைக் கைக்கு
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—பெருமாள்சாமி, கொத்தயம்.

துன்பம் மறக்கத் துணையாகும் எம்வினைவே !
இன்பமெனும் சொல்லுக் கிலக்கியமே !—அன்புக்
களைசொட்டும் உன்னிரண்டு கண்களிலே பூங்கு
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—கருப்பன்செட்டி, திருச்சி-15.

'' செம்பொன்னும் வெண்முத்தும் சேர்த்துவளை சேர்த்
திட்டால்
நம்மன்புக் காரிகைகை நைந்துவிடும் ;—வம்பேன் ?
இளையாள்தோ ழீநாமும் ஈங்குமலர் நற்பூ
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—சோ. முத்துமாணிக்கம், அலங்கனூர்.

பச்சை வயலில் பரவும் மலர்கண்டு
நட்சத் திரக்கூட்டம் நாணியதோ—மொச்சை
விளையும் தரையில் வெடிக்கும் கருங்கு
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—இரா. ஜெயபால், சென்னை-26.

பையன் விளையாடும் பந்து குதித்தாற்போல்
பைய நடைபயிலும் பான்மையடா—ஐயா !
அலைபாயும் வாவி அதில்பாயும் ஓர்த
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—ஜெயராமன், மதுரை.

நிலப்பரப்பில் வேறெங்கும் நேரில்லை சிற்பச்
சிலம்புக்கே கல்தச்சன் தேர்ந்த—கலையால்
மலைக்கல்லில் தான்செய்தான் மாதவியை ; அப்பெய்
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—பூ. அண்ணுமலை, மேலச்சேரி.

அன்பர் வரக்கண்ட ஆயிழையார் தம்முள்ளம்
இன்பத்தால் துள்ளும் இயல்பேபோல்—துன்பத்
தளையகற்றுந் திங்களால் தான்மகிழும் நற்கு
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—ந. கருணாநிதி, வங்கனூர்.

திங்கள் ஒளிகாட்டத் தெள்ளருவி தாளமிடத்
தங்காதற் பெண்டுடனே தாமாடும்—தன்கைச்
சுளையைத் துணைக்கூட்டும் தொல்கடுவன் வாழ்புல்
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—எஸ். செந்தில்குமார், அமராவதி நகர்.

கண்ணும் கனிபுரையும் கண்டிதழும் காரேய்க்கும்
வண்ண வரிகுழலும் வாள்முகமும்—எண்ணும்
வளைத்தோளும் கண்டு மகிழ்ந்தோமில் கையார்
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—இரா. சிலம்புச்செல்வி, சேலம்-6.

வெண்புலியை மென்முறத்தால் வீழ்த்தித் திறல்பெற்ற
பெண்புலியோ தன்கணவன் பீடையுறக்—கண்ணுய்
வளையவரும் தன்மகன்கை வாள்கொடுத்தா ளக்கை
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—ம. திருமலைச்சாமி, பூலாம்பட்டி.

விண்ணில் கவின்விளக்க வில்லேறும் நாண்போல
வண்ணக் கலைசமைக்க வான்படிந்தே—எண்ணக்
களிப்பை மிகச்சேர்க்கும் கார்மகளாம் வானில்
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—சோ. யுவராசன், அரக்கோணம்.

பொங்கித் தினவெடுத்துப் போரிற் பகைவென்ற
தங்க மறவர் தகைகண்டோம்—வங்கத்தின்
தளையறுத்து வாவென நோற்றவர் தம்கை
வளைகண்டின் புற்றேரும் மகிழ்ந்து.

—இரா. சௌந்தரராசன், பெங்களூர்.

பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்வெண்பாபபோடடிவெண்பாப்போட்டிவெண்
பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாபபோட்டிவெண்பாப்வெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்
பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்பாப்வெண்பாப்போட்டிவெண்பாப்போட்டிவெண்

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில் -2



மலிவு விலை
நகர்ப்புற வீடு

உறுதியானது, நிலையானது ஆனாலும் மலிவானது

# சங்கர் சிமெண்ட்

IS:269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1444TM.R



# காட்டுப்பாக்கத்தில் வளரும் கால்நடைகள்!

கால்நடை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்து அருமையான திட்டங்களை உருவாக்கி வருகிறது காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை மருத்துவக் கல்வி மற்றும்ஆராய்ச்சித் துறை. இந்தப் பண்ணைக்கும், சென்னை மருத்துவக் கல்லூரிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதும், கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதும் பயனுள்ள ஒன்றாகும்.

இப்பண்ணை சென்னையிலிருந்து செங்கற்பட்டு செல்லும் நெடுஞ்சாலையில் 41 கிலோ மீட்டர், தொலைவில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கம் கிராமத்தில் 576·17 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. கால்நடை பராமரிப்புத்துறையினரால் 1957-ம் ஆண்டு இந்தப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. 1969 முதல் இப்பண்ணை கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையின் நிருவாகத்தில் செயல்பட்டு வருகிறது.

இப்பண்ணையின் நோக்கம்: முதலில் ஆடு வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்பொழுது எல்லாக் கால்நடைகளின் வளர்ச்சியும், ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படுகிறது. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்திருக்கும் இந்தப் பண்ணை, ஆராய்ச்சிக்கும், கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பயிற்சிக்கும், மேற்படிப்பு மாணவர்களின் போதனைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆடு, மாடு, பன்றி முதலிய கால்நடைகளின் சம்பந்தமான எல்லாவித ஆராய்ச்சியும் இங்குச் செய்யப்படுகிறது.

இந்தப் பண்ணையில் உற்பத்தியாகும் பாலை அலுவலர்களின் தேவை போக, பொது மக்களுக்கும், பண்ணைக் கால்நடைகளுக்கும் வழங்கப் படுகிறது. ஆடுகளும், பன்றிகளும், உணவுக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

இப்பண்ணையில் (1) ஆட்டினப்பகுதி, (2) பன்றிப்பகுதி, (3) பால்பண்ணைப்பகுதி, (4) விவசாயப் பகுதி ஆகியவைகள் உள்ளன.

ஆட்டினப் பகுதியில் மாண்டியா, சென்னைச் சிவப்பு என்று இருவகைகள் உள்ளன. இப்பகுதியின் முக்கியக் குறிக்கோள், ஆட்டினப் பொருளாதாரக் குணாதிசயங்களைக் காண்பதாகும்.

மாண்டியா, சென்னைச் சிவப்பு மற்றும் இரண்டும் கலந்த கலப்பு ஆடுகள் மொத்தம் 944 உள்ளன.

பன்றிப் பகுதியில் வெண்மை யார்க்ஷயர் பன்றிகள் உள்ளன. மரபியல்களை நிர்ணயிப்பதும், தகுந்த இனச்சேர்க்கை மூலம் விருத்தி காண்பதும் இதன் நோக்கமாகும். இங்கு மொத்தம் 223 பன்றிகள் உள்ளன. இப்பன்றிகள் இன விருத்திக்காகவும், மற்றும் இறைச்சிக்காகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பால் பண்ணைப் பிரிவில், எருமைகளும், சிந்தி மற்றும் கலப்பினங்களும், உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள நாட்டு எருமைகளின் தரத்தை உயர்த்தவும், பால் உற்பத்தித் திறன்களை ஆராயவும், இப்பகுதியின் பணியாகும். பசு எருமைகள், கன்றுகள், பொலிக் காளைகள் முதலியன 90 உள்ளன.

மேலும், விவசாயப் பகுதிக்காக உழவு எருதுகள் பதினொன்றும் உள்ளன. பண்ணையில் உள்ள பசுக்கள், எருமைகள் செயற்கை முறை மூலம் இன விருத்தி செய்யப் படுகின்றன.

இப்பண்ணையில் உற்பத்தியாகும் பால், பண்ணையாளர்களுக்கும், மற்றும் பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. விற்பனை விலை லிட்டருக்கு ரு. 1.25 வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் உள்ள 576.17 ஏக்கர் நிலப்பரப்பில் 320.40 ஏக்கர் மலைப்பாங்காக உள்ளது. ஆகையால் அவை விவசாயத்திற்குப் பயனற்றதாகவும் அமைந்துள்ளது. மேலும், 35.37 ஏக்கர் நிலப்பரப்பு கட்டடங்களும், சாலைகளுக்காகவும் உள்ளது. ஆகவே, 220.40 ஏக்கர் நிலப்பரப்புத்தான் விவசாயத்திற்குப் பயன் பெற்றவை. இப்பயனுள்ள பகுதிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (1) காட்டுப்பாக்கம் (2) மாடம்பாக்கம்.

காட்டுப் பாக்கம் பகுதியில் பாசன வசதிக்காக மூன்று கிணறுகள் உள்ளன. இவற்றின் மூலம் 12 ஏக்கர் நிலப்பரப்பில் நீர்ப்பாசனம் நடைபெற முடியும். இவற்றில் வீரிய பனிபுல், எருமைப் புல், மக்காச் சோளம், மரவள்ளி, சர்க்கரை வள்ளி, குதிரை மசால் விளைவிக்கப்படுகின்றன. மானாவரிப் பயிர்களாக இருங்குச் சோளம், சணப்பை சோளம், கொள்ளு மஞ்சள் சோளம், மற்றும் தீவிரப் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

இங்கு மர வளர்ப்பு விழாவின் பொருட்டு 24 தென்னைக் கன்றுகளும், 500 கிளிரிசிடியாகவும், 300 வேப்பங் கன்றுகள், 200 புளியங்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

மாடம்பாக்கம் பகுதியில் பாசன வசதிக்காக இரண்டு கிணறுகள் உள்ளன. இக்கிணறுகளின் மூலம் 10 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும். இவற்றின் மூலம் தீவன உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவு காணலாம். இப்பகுதியில் மானுவாரிப் பயிராகக் கொள்ளு 21.50 ஏக்கரும், ஒரு ஏக்கர் மக்காச் சோளமும், ஒரு ஏக்கர் பனிப் புல்லும் பயிரிடப்பட்டுள்ளது.

இப்பண்ணை ஓர் ஆராய்ச்சி நிலையமாகவும், சென்னைக் கால்நடைக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி நிலையமாகவும் உயர்ந்துள்ளது. ஆடு, மாடு, பன்றி, எருமை, முதலியவைகளைப் பற்றி எல்லா ஆராய்ச்சியும் செய்யப்படுகிறது. மேற்கொண்ட சூழ்நிலையில் இப்பண்ணையை மேலும் விரிவாக்கக் கீழ்க்கண்ட திட்டங்கள் உள்ளன : [பசு, கறவை மாடுகள், சீமைப்பன்றிகள்—இவைகளுக்கான கட்டடங்கள், கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சிக் கூடங்கள் ; இந்த ஆராய்ச்சிச் சாலையிலுள்ள அலுவலர்களுக்கு அலுவலகமும், ஆராய்ச்சிக் கூடமும், பண்ணையிலுள்ள ஆராய்ச்சி அலுவலகர்களுக்குக் குடியிருப்பு வசதி ; மேற்படிப்பு மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் தங்க விடுதி வசதி ; இந்த ஆராய்ச்சிப் பண்ணையிலிருக்கும் முக்கியப் பிரமுகர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் தங்கும் வசதிக்காக விருந்தினர் விடுதி ; ஆராய்ச்சிப் பண்ணையிலுள்ள விவசாயப் பகுதியை விரிவாக்கித் தீவன உற்பத்தியைத் தீவிரமாக்குதல். இப்பண்ணையிலுள்ள நிலங்களில் சுமார் 350 ஏக்கர்களில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தல் முதலியனவாகும்.

இப்பண்ணைக்காக 1971வரை ரூ. 1,54,986 செலவாகியிருக்கிறது. இப்பண்ணையில் கண்காணிப்பாளர், கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள், மற்றும் வல்லுநர்கள் பணி புரிகின்றனர்.

தமிழகத்தின் தட்ப வெப்ப நிலைப்கொப்ப, ஒரு புதிய ஆட்டினம் உற்பத்தி செய்யவும் திட்டமுள்ளது.

நம் நாட்டில் ஆடுகளை இறைச்சிக்காக விற்பனை செய்யும் பொழுது 20 முதல் 30 கிலோ எடைதான் உள்ளது. ஆனால், மேல்நாட்டு ஆடுகளோ ஒரு ஆண்டு வயதில் இறைச்சிக்காக விற்பனை செய்யும்பொழுது அதன் எடை சுமார் 60 கிலோ உள்ளன. இது நம் நாட்டு ஆட்டின் எடையைப் போலக் கிட்டத்தட்ட 3 பங்கு இருக்கிறது. இதுபோலவே குட்டி போடும் சதவிகிதமும் நம் நாட்டு ஆட்டில் குறைவு.

ஒரு பருவ காலத்தில் சுமார் 100 ஆடுகள் பலனுக்கு விட்டால் சுமார் 80 குட்டிகளே கிடைக்கின்றன. அதே நேரத்தில் மேல்நாட்டு ஆட்டினத்தைப் பார்த்தால் 100 ஆட்டிற்கு 100 முதல் 150 குட்டிகள் வரை சாதாரணமாகக் கிடைக்கின்றது.

ஆகையால் நமது நாட்டு ஆட்டை, மேல்நாட்டு ஆட்டினங்களாகிய சௌத் டவுன், டார்சேட் இனங்களோடு கலப்பினமாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இறைச்சி இன ஆடுகளிலேயே சௌத் டவுன்தான் உலகிலேயே முதல் தரமாக உள்ளது. இதிலிருந்து கிடைக்கும் இறைச்சி நல்ல தரமானதாகவும், மிருதுவானதாகவும், சீரான முறையில் கொழுப்பு கொண்டதாகவும் உள்ளது. 'டார்செட்' இனம் அதிகமாகக் குட்டிபோடும் ; அதிக எடையும் இருக்கும்.

**ஊரெல்லாம் ஒளிமயம்**

தமிழகத்திலேயே எல்லாக் கிராமங்களுக்கும், அரிசனக் குக்கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுத்த முதல் மாவட்டம் செங்கை என்ற பெருமை உள்ளது. இருள் நிறைந்த கிராமமெல்லாம் இன்று மின் இணைப்பால் ஒளி மயமாகக் காட்சியளிக்கின்றன. தொழில்கள் சிறக்க 5,564 கிராமத் தொழில்களுக்கு மின் இணைப்புகொடுக்கப்பட்டன.

ஆகையால் நமது ஆட்டினங்களை சௌத் டவுன், டார்செட் போன்ற மேல்நாட்டு ஆடுகளுடன் கலந்து சிக்கிரம் பருவத்துக்கு உயருமாறும், அதிகக் குட்டிகள் போடும் தன்மையுடனும், அதிக எடை உள்ளதாகவும், வேகமாக வளரக் கூடியதாகவும், புதிய கலப்பின ஆடு ஒன்று உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நமது நாட்டு ஆட்டின் தரத்தை மேல் நாட்டு ஆடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாமா ?

### நமது நாட்டு ஆடுகள்

குட்டிபோடும் சதவிகிதம்—80-90.

பிறந்த குட்டியின் எடை—2-3 கிலோ.

ஆட்டின் எடை கிடா—30-40 கிலோ.

பெட்டை ஆடு—25-30 கிலோ.

### மேல் நாட்டு ஆடுகள்

குட்டிபோடும் சதவிகிதம்—125–160.

பிறந்த குட்டியின் எடை—5—6 கிலோ.

ஆட்டின் எடை கிடா—80—115 கிலோ.

பெட்டை ஆடு—53-80 கிலோ.

நம் நாட்டு ஆடுகளின் பொருளாதாரக் குணதிசயங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் இங்கு நடக்கின்றன. பல்வேறு ஆடுகளை அறுத்து, அதன் இறைச்சியின் தரத்தையும், அளவையும், வெவ்வேறு பருவங்களில் ஆராய்ச்சி செய்வதால் எந்த வயதில் ஆட்டுக்குட்டியை இறைச்சிக்காக விற்கலாம் என்பதைப் பற்றி நிர்ணயம் செய்யப்படுகிறது.

சாதாரணமாக ஆடு வளர்ப்பவர்கள் ஆடுகளுக்குக் கலப்புத் தீவனச் சத்துணவுகளைக் கொடுப்பதில்லை. ஆகையால் சத்துணவு கொடுப்பதால், ஆடுகள் அதிகக் குட்டிகள் போடுகின்றனவா, அதிகமாக வளர்கின்றதா, அதிக எடை

இறைச்சி கிடைக்கிறதா, சத்துணவிற்குச் செலவாகும் பணத்தை அதிக இறைச்சி ஈடு செய்யுமா என்றெல்லாம் இங்கு ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.

இதைத் தவிர ஆடு வளர்ப்பவர்களுக்கு வளர்ப்பு முறை பற்றியும், தீனி கொடுப்பது பற்றியும், ஆடுகளுக்குக் குடற்புழு மருந்துகொடுப்பதன் அவசியமும் எடுத்துக் கூறப்படுகின்றது.

இப் பண்ணையிலுள்ள ஆடுகளைத் தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துச் சென்று அறுத்து, அதன் இறைச்சியைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் மக்களுக்கு நல்ல தரமான இறைச்சி வழங்கப்படுகிறது.

நான்காம், ஐந்தாம் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு காளைகளுக்கான பின்மரபுச் சோதனை ஆராய்ச்சியைத் துவக்கியது. இவ்வாராய்ச்சி காட்டுப் பாக்கத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில், 1971-ம் ஆண்டு முதல் செயல் பட்டு வருகிறது.

பின்மரபுச் சோதனை என்றால் என்ன? காளைகள் அவைகளின் கிடேரிக் கன்றுகளுக்கு இன விருத்தித்திறன், அல்லது குணங்களைக் கொடுக்கும் திறனை அறிவதாகும். தாய்ப் பசுக்களின் உற்பத்தித் திறனுக்குக் கழிவு கொடுக்கப்பட்டுக் கன்றுகளின் உண்மையான செயல்திறனைக் கொண்டு இது கணக்கிடப்படும்.

அருகிலுள்ள கிராமங்களில் வாழும் கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் அங்கத்தினர்க்குமாகச் சேர்ந்து "பால் மாடு உற்பத்திக் கழகம்" ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இக்கழக அங்கத்தினர்களின் எருமைகளுக்ும், இப்பண்ணையிலுள்ள எருமைகளுக்கும் மிகச் சிறந்த நான்கு முர்ரா எருமைக் கடாக்கள்தான் இனவிருத்திக்குப் பயன் படுத்தப்படுகின்றன.

நம் நாட்டின் பால் உற்பத்தியில் எருமைகளின் பங்கு மிக முக்கியமானது. கால்நடைச் சொந்தக்காரர்களுக்கு எருமையினால் கிடைக்கும் வருமானம் பெருகப் பல்வேறு பொருளாதாரக் குணங்களாகிய பருவம் எய்தும் வயது, முதல் கன்று ஈனும் வயது, ஒவ்வொரு சினைக்கும் தேவையான சேர்க்கைகள், கறக்கும் பால், பால் கறக்கும் நாட்கள், தொடர்ந்து பால் கொடுக்கும் இயல்பு, பாலில் உள்ள கொழுப்பு, பால்கொடுக்காத நாட்கள், கன்றுகள் ஈன்று அதற்குள்ள இடைவெளி நாட்கள், கன்றுகளும், எருமைகளும் உயிர் வாழும் தன்மை முதலியன மிகவும் இன்றியமையாதனவாகும்.



### பன்றி வளர்ப்பு ஆராய்ச்சி

மேலைநாடுகளில் மிகவும் அதிகமான அளவில் அறிவியலுக்கு ஒப்பப் பன்றி வளர்ப்பு நடைபெற்று வருகிறது. ஆனால், நம் நாட்டில் ஒரு சில இடங்களில் சீமைப்பன்றிகள் வளர்க்கப்பட்டாலும், அறிவியலுக்கு ஒப்ப மிக அதிகமான அளவில் ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை. ஒவ்வொரு முறையும் சராசரியாக அதிகக் குட்டிகள் போடும் எண்ணிக்கை காரணமாகவும், இந்நாட்டின் நிலைக்கு ஏற்ப மாறிவரும் திறன் பெற்றதன் காரணமாகவும், பெரிய வெண்மை யார்க்ஷயர் சீமைப் பன்றிகள் இங்கு வளர்க்கப்படுகின்றன.

இப்பன்றிகள் இனவிருத்தி செய்யப்பட்டு நாட்டுப் பன்றிகளைத் தரமுயர்த்துவதற்காகச் சுற்றுப்புறக் கிராம மக்களுக்குத் தரப்படுகின்றன. மேலும், சென்னை நகர பன்றி இறைச்சி உண்போர் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பன்றி இறைச்சியாகக் கால்நடை மருத்துவக் கல்லூரி மூலம் விநியோகம் செய்ய அனுப்பப்படுகிறது.

நம் மாநிலத்திற்கு ஏற்ற வகையில் பன்றியின் பெருக்கத்தில் சிறந்த வழிமுறைகளை வகுக்க ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சி ஓர் உதவி ஆராய்ச்சி அலுவலரின்கீழ் 1971 முதல் இப் பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.

மேலும், இப்பண்ணையைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களிடம் விஞ்ஞான ரீதியில் பன்றி வளர்ப்பதனால் ஏற்படும் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பன்றி இறைச்சி உண்போர் கழகங்கள், இவ்வாண்டில் இது வரை 109 ஆண் பன்றிக்குட்டிகளும், 78 பெண் பன்றிக்குட்டிகளும், இப்பகுதியிலுள்ள மக்களுக்குப் பன்றி இன விருத்திக்காக விநியோகிக்கப்பட்டுள்ளன. சென்னை நகர மக்களின் பன்றி இறைச்சித் தேவைக்காக இது வரை சுமார் 600 கிலோ கிராம் எடையுள்ள பன்றி இறைச்சி, கால்நடை மருத்துவக் கல்லூரி மூலம் வழங்கப் பட்டுள்ளது. இத்துடன் 35 ஆண் பன்றிக் குட்டிகளும், 25 பெண் பன்றிக் குட்டிகளும், இந்திய விவசாயக் கழக ஆராய்ச்சிக்காகவும், கால்நடை மருத்துவக்கல்லூரியிலுள்ள ஆராய்ச்சிக்காகவும் வழங்கப் பட்டுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளாகத் தமிழ் நாடு அரசு இப் பகுதிவாழ் மக்களுக்குக் குறிப்பாக ஏழை மக்களுக்கு ஆற்றிய சிறப்புப் பணிகள் பல. அவை அனைத்தும் அரசின் சாதனைகளைப் பறை சாற்றுவனவாய் அமைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும். இந்த நான்காண்டுகளில் பல தீவிரத் திட்டங்கள் அமலாக்கப்பட்டுள்ளன. அவை என்னென்ன தெரியுமா?

1. காஞ்சிபுரத்தை இம்மாவட்டத்தின் தலைநகராக்கியது.

2. வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2½ கோடி ரூபாயில் குடிநீர்த்திட்டம், இணைப்புச் சாலைகள் அமைத்தல், ஏரிகளைப் பராமரித்தல், கிணறு, குளங்கள் ஆழப் படுத்துதல், பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல் ஆகியவை குறுகிய காலத்தில், பயனளிக்கும் வகையில் நடைபெற்றன.

3. விவசாயத்தில் பின்தங்கியிருந்த மாவட்டத்தைப் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ், அமோக விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று மக்கள் மன நிறைவு பெற வழி வகுக்கப்பட்டது.

4. எல்லாக் கிராமங்களுக்கும் அரிசன மக்கள் வாழும் எல்லாக் குக்கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுத் தமிழகத்திலேயே முதலிடம் பெற்றது இம்மாவட்டம்.

5. 42,000 ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டாவும், குடிமனையற்ற ஏழைகளுக்குக் குடிமனைப் பட்டாவும் வழங்கப் பட்டன.

6. 14 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு அரிசன மக்களுக்குக் குடிமனை வழங்கத் திட்டம் தீட்டப்பட்டு அமலாக்கப்பட்டு வருகிறது.

7. காஞ்சியில் 25 இலட்சம் அரசு மானியத்துடன் ஒரு சரிகை தொழிற்சாலை அமைத்தல்.

8. மாமல்லபுரத்தை அழகிய சுற்றுலா நகரமாக்க ஒரு கோடி ரூபாய் மதிப்புக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

9. 20,000 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டுள்ளது.

10. கிராமத்திலுள்ள ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டுள்ளது.

11. செங்கற்பட்டு, திருவள்ளூர் ஆகிய இடங்களைத் துணை நகரங்களாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

விவசாயத்தில் பின்தங்கிய மாவட்டங்களுள் இம்மாவட்டமும் ஒன்று என்று கருதப்பட்டது அன்று; ஆனால், இன்று இந்நிலை மாறி, வளம் கொழிக்கும் மாவட்டமாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உன்னத நிலை அடைந்துள்ளது. தேர்ந்தெடுத்த வித்துக்கள் விநியோகமும், நவீன விவசாயக்கருவிகள் உபயோகமும், மண்ணின் வளம் கொழிக்க உரவகைகளின் உபயோகமும், சீர்கெட்ட நீர்நிலைகள் புதுப்பிக்கும் பல செயல் திட்டங்களும், விஞ்ஞானப் பயிர் பாதுகாப்பு முறைகளும், நிறைவு




கொள்ளும் வகையில் நிலையான இதர பல விவசாயத் திட்டங்களும், உணவு உற்பத்தியைப் பெருக்க உதவியது. அரிசிக்குக் கையேந்தி நின்ற காலம் அன்று; அதனைப் பலரும் கைக்கொள்ள நிறைவு பெற்ற உணவுப் பண்டங்கள் பலப்பல இன்று; ஏரிகள் செப்பனிட்டு அதன் வரவு கால்கள் வகையோடு வகுக்கப்பட்டு, மண்ணின் அடியில் புதைந்து, கிடந்த நீரை வெளியேற்றிச் சிறு நிலக்கிழார்களும் நீரேற்றம் கொண்டு, மின் வசதி பெற்றுப் பல நீர்க் குழாய்க் கிணறுகளுக்கான திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு, உற்பத்தியின் சிகரத்தை எட்டிப் பிடிக்கின்ற நிலையை இன்று கண்கூடாகக் காண்கிறோம். இத்தனைக்கும் அடிப்படை தமிழக அரசின் தனிச் சிறப்புற்று விளங்கும் பசுமைப் புரட்சி திட்டங்களன்றோ? (தோண்டப்பட்ட கிணறுகளுடன் மின் சக்தி கொண்டு இயங்கும் பம்பு செட்டுகள் 56,522.)

'கர்ணி பயிரிட்டாலும் கோணி காணவில்லை' என்கிற நிலை அன்று; அதிசய நெல் பலவகை, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5, பத்மா, ஜெயா, கருணா என்ற உருவில் அற்புத விளைச்சலைப் பெருக்கும் காலம் இன்று; சீரிய நெல் வித்துக்கள், சிறப்புமிகு புஞ்சை தானிய வித்துக்கள், உரங்களுக்குப் பலவகை பசுந்தாள் பயிரினங்கள் பல புதுமைகள் புகுத்தப்பட்டு இப்படி எல்லாரும் வியக்கும்வண்ணம் ஏழைப் பங்காளன் சோறு கொள்ளும் நிலைபெறு இன்று. உண்ண உணவு இருந்தால் போதுமா? உடுக்க உடையும் தேவை. இருக்க இடமும் தேவை. எனக்கு இருக்க இடமில்லையே என்ற ஏக்கநிலை மாறிக் குடிசை வாழ் ஏழை மக்கள் குடியேறப் பல வீட்டுமனைகளும் வழங்கப்பட்டு ஏழைகள் மறு மலர்ச்சி வாழ்க்கை எய்தி விட்டோம் என்ற பெருமித நிலைகொள்ளும் காலம் இதுவாகும். செங்கை மாவட்டத்தின் சிறப்பு நகரங்களை இணைக்க, பெரும் நெடுஞ்சாலைகளும், தாழ்வுற்றிருந்த கிராமங்களோடு தொடர்பு கொள்ளும் வகையில் பலப் பல இணைப்புச்சாலைகளும், விரைவாகச் சென்றுவரத் துரித வாகன வசதிகளும் பெற்று வரும் நிலை இன்று; வாழ்வுக்கு வழி இல்லை என்ற நிலை மாறி, தாழ்வு நிலையில் உள்ள பல பட்டங்கள் பெற்ற பட்டதாரிகளுக்குத் தொழில், கிடைத்ததோடு ஏராளமான ஏழைகள் தொழில் செய்து வருவாயைப்பெருக்கப் பலப்பல சிறு தொழிற் கூடங்களும் தோன்றிப் பெருகி வரும் காலம் இன்றாகும். எண்ணூரில் அனல் மின் நிலையமும், அம்பத்தூரில் தொழிற்பேட்டை நிறுவனங்களும், காடாயிருந்த கல்பாக்கத்தில் அணு மின் உற்பத்தி நிலையமும், அவதிக்குள்ளான இடம் ஆவடி என்ற பெயர் மாறி அமைதி காக்கும் போர்ப் படைக்குக் கருவிகள் வழங்கும் உற்பத்திக் களங்களாகவும், ஆடுகளும், மாடுகளும், கூவித் திரியும் கோழிகளும், வளர்ச்சி அடையப் பலப்பல இன வளர்ச்சி நிலையங்களும், இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இன்று, இரயில் பெட்டிகளின் உற்பத்தியோடு வண்டலூரில் வாகன வசதி தொழிற் கூடங்களும் இயங்கிப் பல்லோரும் வியக்கத் தக்க வகையில் தொழில் வளர்ச்சி கண்டு வருகிறது இம்மாவட்டம்.

"என்னங்க? காலையிலேயே கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு கவலையுடன் உட்கார்ந்திருக்கின்றீர்கள்!'' — இவ்வாறு கேட்டுக் கொண்டே வந்தார் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் அழகிரி.

"வாங்க சார், உட்காருங்க சார்,'' என்று கூறிவிட்டுக் கந்தசாமி கட்டிலை விட்டு எழுந்தார்.

"நீங்களும் உட்காருங்கள்! என்ன கவலையென்று சொல்லுங்கள்'' என்றார் அழகிரி.

"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்-என்ற பழமொழியை மறந்து விட்டதனால் இரவெல்லாம் தூக்கமில்லை சார்.''

"ஏனுங்க?''

"நான்கு ஏக்கர் ஐ. ஆர். 8 நெல் தூற்றியாகணும். நேற்று மதியம் நல்ல காற்று வீசியது. அப்பொழுது வேறு வேலை பார்த்துக் கொண்டிருந்து விட்டோம். நேற்று மாலை 3 மணியிலிருந்து 'காற்று வரும், வரும்,' என்று எதிர்பார்த்து 8 ஆட்களுடன் நெல் தூற்றுவதற்காகக் காத்திருந்தேன். இரவெல்லாம் தூங்காமல் காத்திருந்தோம். மரத்தில் உள்ள இலைகள் கூட அசையவில்லை! காற்றை வரவழைப்பதற்காகப் புகை மூட்டமும் போட்டுப் பார்த்தோம்: அப்படியும் காற்று கொஞ்சம் கூட வீசவில்லை. இன்று மாலையிலாவது காற்று வீசினால்தான், நெல் தூற்ற முடியும். அதனால்தான் கவலையுடன் இருக்கின்றேன்''— இவ்வாறு கூறிவிட்டுக் கந்தசாமி கட்டிலில் அமர்ந்தார்.

"உங்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு நெல் தூற்றும் பொறி வாங்குங்கள் என்று கூறினேன். நீங்கள் அப்போது கேட்கவில்லை. அப்பொறியிருந்திருந்தால், காற்று அடிக்காவிட்டாலும், மழை பெய்து கொண்டிருந்தாலும் கவலையின்றி நெல் தூற்றிவிடலாம். பக்கத்து ஊர் கூட்டுறவு வங்கியில் சென்ற வாரம்தான் நெல் தூற்றும் பொறி வாங்கியுள்ளார்கள். காலையில் அங்குச் சென்றுபார்த்துவிட்டுவருகிறேன். இன்று வேலையின்றி அப்பொறி சும்மாதான் இருக்கிறது. நீங்கள் வண்டி ஓட்டிக் கொண்டு போனால் அதை வாடகைக்கு எடுத்து வந்து உங்கள் நெல்லைத் தூற்றிவிடலாம். அப்பொறியில் உள்ள 'பிளக்கை' மின்சார 'ஸ்விட்ச்' போர்டில் உள்ள துளைகளில்சொருகினால் போதும். பொறி வேலை செய்யத் தொடங்கிவிடும். விரைவாகவும் சிக்கனமாகவும் நெல்லைத் தூற்றிவிடலாம்!'' என்றார் அழகிரி.

"நெல் தூற்றும் பொறியை இயக்கும் முறை எனக்குத் தெரியாது சார்!''




"அதை இயக்கும் முறையை, நான் செய்து காட்டுகிறேன். பக்கத்து ஊருக்குப் போய் நெல் தூற்றும் பொறியை 2 மணி நேரத்திற்குள் எடுத்து வந்து விடுங்கள். நான் அதற்குள் உங்கள் ஊராட்சி மன்றத் தலைவரின் ஐ. ஆர். 22 நெல் வயலில் மருந்து தெளிக்கஏற்பாடு செய்து விட்டு வந்து விடுகின்றேன்''.

"அப்ப சரி சார்! நான் இப்பவே புறப்படுகின்றேன். நீங்கள் தயவு செய்து நான் வரும் வரை இருக்கணும்'' என்றுகூறிவிட்டுக் கந்தசாமி புறப்பட்டார். அழகிரி 'சரி' என்று கூறிவிட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மாலை மணி 2; கந்தசாமியின் களத்து மேட்டில் பெருங்கூட்டம் கூடிவிட்டது. துணை வேளாண்மை அலுவலர் அழகிரி நெல் தூற்றும் பொறிக்கு மின்சார இணைப்புக் கொடுத்தார். நெல் தூற்றும் பொறி இயங்க ஆரம்பித்தது. எல்லாரும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன சார் சாப்பிடாமல் கூட இந்த வேலையில் ஈடுபட்டு விட்டீர்கள்! சாப்பிட்டு வந்து இதைத் தொடங்கலாமே'' என்று கூறிக்கொண்டு வந்தார் ஊராட்சி மன்றத் தலைவர்.

"இதோ முடிந்து விட்டதுங்க, ஆரம்பித்துக் கொடுத்துவிட்டால் பின்பு அவர்களே செய்து கொள்வார்கள்'' என்றார் அழகிரி.

"எப்படி சார் இதில் நெல் தூற்றுவது?'' என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

"வாய் போன்றுள்ள இப் பகுதியில் (Feeding Hoppe) நெல்லைக் கொட்ட வேண்டும். இங்குக் கொட்டப்பட்ட நெல் உள்ளே செல்கிறது. இப்பொறியின் உள்ளே இருக்கும் காற்றும் வீசும் அறை (Blowing chamber)யிலிருந்து வரும் காற்றினால் நெல் தூற்றப்படுகிறது. இப்பொறியில் உள்ள இம்மூன்று துவாரங்களின் வழியே முறையே பதர், முதிராத மணிகள், நன்கு தூற்றப்பட்ட முதிர்ந்த மணிகள் ஆகியவை தனித்தனியாக வெளிவருகின்றன. இத்துவாரங்கள் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் தூற்றப்பட்ட நெல் மணிகளைக்கலப்படமின்றிச்சாக்குகளில் நிரப்பி விடலாம். நெல் தூற்றும் செலவையும் நேரத்தையும் குறைக்கும் இப்பொறியைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக, வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சிப் பகுதியினர் கண்டு பிடித்துப் பல இடங்களில் சோதனை செய்து பார்த்து விட்டே, விற்பனைக்கு வழங்கியுள்ளனர். இப்பொழுது இதை இயக்கி, நெல் தூற்றிக் காட்டு

கிறேன் பாருங்கள்!'' என்று கூறினார் அழகிரி.

நெல் தூற்றும் பொறியை இயங்கச் செய்துவிட்டு, ஒரு கூடையில் கொஞ்சம் நெல்லை எடுத்து, அப்பொறியில் வாய் போன்றுள்ள பகுதியில் கொட்டி விட்டு ஒரு துவாரத்தின் அருகில் சாக்கை விரித்துப் பிடித்தார். அதில் நன்கு தூற்றப்பட்ட நெல் மணிகள் வந்து விழுந்தன. அவர் செய்ததைப் போலவே ஊராட்சி மன்றத் தலைவர் தங்கவேலுவும், கந்தசாமியும் செய்து பார்த்தனர். அவர்களுக்கு வியப்பாகவே இருந்தது.

''இரண்டு பேர் நெல்லை அள்ளி அள்ளிக் கொட்டவேண்டும். இரண்டு பேர் தூற்றப்பட்ட நெல் மணிகள் வரும் துவாரத்தின் அருகில் நின்று கொண்டு சாக்குகளில் பிடிக்க வேண்டும்'' என்றார் அழகிரி. அவர் குறிப்பிட்டது போல் 2 பேர் நெல்லை அள்ளிக் கொட்டினர். 2 பேர் சாக்கில் நெல்லை நிரப்பிக் கொண்டிருந்தனர். சற்று நேரத்திற்குள் இரண்டு சாக்குகளில் தூற்றப்பட்டநெல் நிரம்பி விட்டது கண்டு கூடியிருந்த அனைவரும் வியப்புற்றனர்

''இப்பொறியின் மூலம் ஒரு மணிக்கு எவ்வளவு நெல் தூற்றலாம் சார்?'' இது கந்தசாமியின் கேள்வி.




''ஒரு மணி நேரத்தில் 1 டன் நெல்லைத் தூற்றி விடலாம்'' என்றார் அழகிரி.

''இதன் விலை என்ன சார்?'' —இவ்வாறு கேட்டார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''நெல் தூற்றும் பொறியின் விலை ரூபாய் 750. இப்பொறியை இயக்க ஒரு குதிரை ஓட்டச் சக்தியுள்ள மோட்டார் தேவைப் படும். அதைத் தனியே வாங்கிக் கொள்ள வேண்டும்'' என்றார் அழகிரி.

''இதுபோல் ஒரு பொறி வாங்குவதென்றால் யாருக்கு எழுத வேண்டும்?'' என்று கேட்டார் தங்கவேல்.

''நெல் தூற்றும் பொறி வாங்கவேண்டுமானால், உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆராய்ச்சி), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3 என்ற முகவரிக்கு எழுத வேண்டும். இப்பொறியை எளிதில் ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லலாம். தனிப்பட்ட ஒருவரே இப்பொறியை வாங்குவதைவிடப் பல உழவர்கள்ஒன்று சேர்ந்து அல்லது கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக வாங்குவதே இலாபகரமாக இருக்கும்'' என்றார் அழகிரி.

''நம்ம கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஒரு நெல் தூற்றும் பொறி வாங்கி விடலாம்: என்ன சொல்றே கந்தசாமி?'' என்று கேட்டார் தங்கவேல்.

''அடுத்த கூட்டத்திலேயே தீர்மானம் போட்டு, நெல் தூற்றும் பொறியை வாங்கிவிடுவோம் என்றார் கந்தசாமி.

''அவசரக்கூட்டம் போடப்பா! அப்பத்தான் சீக்கிரம் வாங்க முடியும் என்றார்'' தங்கவேல்.

''உழவர்களுக்கு நன்மை பயக்கும் நெல் தூற்றும் பொறியை உடனே வாங்க வேண்டும்' என்று ஊராட்சி மன்றத்தலைவரே கூறிவிட்டபின்பு கூட்டுறவுச் சங்கத் தலைவரான நான் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்? உடனே அவசரக் கூட்டம் போடுகிறேன்.'' என்று கூறினார் கந்தசாமி.

## எலிப்பால் கறக்க இயந்திரம்

எலியிடமிருந்து பால் கறக்க மனிதனால் இதுவரை இயலவில்லை. ஆனால், மருத்துவம், பயோ கெமிக்கல் ஆராய்ச்சிகளுக்கு எலிப் பால் கறக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. கைகளால் இயக்கப்படும் கருவிகளைக் கொண்டு திறமையாக எலிகளிடம் பால் கறக்க முடியவில்லை. தற்போது எலிகளிடமிருந்து பால் கறப்பதற்காக ஒரு கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்மித், கிளேன் அன்ட் பிரஞ்சு லேபரட்டரீஸ் நிறுவனத்தைச் சார்ந்த ஆலன் டி. குக். கல்மான் டீ. சாபோ என்ற இரு அமெரிக் ஆராய்ச்சியாளர்கள் அந்தக் கருவியைக் கண்டு பிடித்துள்ளார்கள். அது தானாகவே இயங்கக்கூடியது. பசு, ஆடு ஆகியவற்றில் பால் கறப்பதற்குப் பயன்படுத்தும் இயந்திரங்களைப் போலவே எலிப்பால் கறக்கும் இயந்திரமும் காற்றில்லாத வெற்றிட அடிப்படையில் இயங்குகிறது அக் கருவி. எலிகளிடமிருந்து பாலைக் கறந்து சோதனைக் குழாயில் நிரப்பி விடுகிறது. 'கினியா பிக்' போன்ற மிருகங்களிடமிருந்து பால் கறப்பதற்கும் இப்புதிய கருவியைப் பயன்படுத்தலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரும் பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகள் நிறைந்திருந்தும், விளவங்கோடு வட்டத்தின் கிழக்குப் பாதிப் பகுதி நீண்ட நெடுங்காலமாகவே நீர்ப்பாசன வசதியின்றி வறண்ட பகுதியாக இருந்து வந்தது. இப்பகுதியில் குடிநீர்க்குக் கூடப் பற்றாக் குறை நிலவி வந்தது. இந்த வறண்ட பகுதியை வளமாக்கவே சிற்றாறு—பட்டணம்கால் திட்டம் துவக்கப்பட்டது.

சிற்றாறு — பட்டணம் கால் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தின் செழிப்பை மேலும் பெருக்க விருப்பத்துடன், திருநெல்வேலி மாவட்டத்தின் நீர்ப்பாசன வளத்தையும் கூட்டிடும். இத் திட்டத்தினால் கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு, கல்குளம் வட்டங்களில் 15,000 ஏக்கர் நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்ய வழி பிறந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், இராதாபுரம் பகுதியில் 17,000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் இத்திட்டம் வழி செய்துள்ளது.

பின்தங்கிய பகுதி மக்களின் வாழ்வை வளப்படுத்தவிருக்கும் இத்திட்டத்திற்கு 680 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பின்கண்ட பணிகள் அடங்கியுள்ளன.

1. பேச்சிப்பாறை அணையின் கீழே, கோதையாற்றில் சேரும் சிற்றாறு-1, சிற்றாறு-2 ஆகியவற்றின் குறுக்கே 2 மண் அணை அமைத்து நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்தல்.

2. இணைப்புக் கால்வாய் வெட்டிச் சிற்றாறு-1, சிற்றாறு-2 நீர்த்தேக்கங்களை இணைத்தல்.

3. கோதையாறு இடது கரைக் கால்வாய்க்கு, சிற்றாறு-1 நீர்த் தேக்கத்திலிருந்து நீரூட்டும் கால்வாய் வெட்டுதல்.

4. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் நீர்ப்பிடிப்புக் கொள்ளளவை மேலும் முறையே 840 மில்லியன் கன அடி, 590 மில்லியன் கன அடி அளவுக்கு விரிவுப்படுத்துவதற்காக




அவ்வணைகளின் முழு அளவு நீர்ப்பிடிப்பு மட்டத்தை (Full Reservoir) மேலும் 6 அடி உயர்த்துதல்.

5. கோதையாறு இடது கரைக் கால்வாய், பாண்டியன் கால்வாய், தோவாளைக் கால்வாய், நிலப்பாறை கால்வாய் ஆகியவைகளை மேம்படுத்துதல்.

6. விளவங்கோடு, கல்குளம் வட்டத்தில் 15,000 ஏக்கர் நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்வதற்காகக் கோதையாறு இடதுகரைக் கால்வாய் மைல் 6/4-ல் இருந்து 26 மைல் 6 பர்லாங்கு 240 அடி நீளத்திற்குப் 'பட்டணம்கால்' கால்வாய் வெட்டுதல் மற்றும் அதன் கிளைக் கால்வாய்கள் அமைத்தல்.

7. திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் பகுதியில் 17,000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்க நிலப்பாறைக் கால்வாய் மைல் 1/250 இல் இருந்து 'இராதாபுரம் கால்வாய்' வெட்டுதல்.

சிற்றாறு—பட்டணம்கால் திட்டத்தின் பெரும்பாலான வேலைகள் முடிந்து விட்டன. பட்டணம்கால் கால்வாய் வெட்டும் வேலை முடிந்து 1970 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் முதன்முறையாக அக்கால்வாய் வழியாகத் தண்ணீர் விடப்பட்டு, நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப் பட்டது. பட்டணம் கால் கால்வாயின் 7–6–1971 அன்று இரண்டாம் முறையாகப் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அநேக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவை :—

**சிற்றாறு அணை—1, சிற்றாறு அணை-2.**—இவ்விரு அணைகளின் மொத்த மதிப்பீடு 189·49 இலட்சம் ரூபாய். சிற்றாறு-1, கோதையாற்றுடன் சேருமிடத்திற்கு ஒரு மைல் தொலைவில் சிற்றாறு-1ன் குறுக்கே சிற்றாறு அணை-1 கட்டப் பட்டுள்ளது. சிற்றாறு அணை-1ல் 610 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்க முடியும். சிற்றாறு-2 கோதையாற்றுடன் சேருமிடத்திற்கு 2½ மைல் தொலைவில், சிற்றாறு-2-ன் குறுக்கே சிற்றாறு அணை-2

கட்டப்பட்டுள்ளது. சிற்றாறு அணை-2ல் 1009 மில்லியன் கனஅடித் தண்ணீர் தேங்க முடியும்.

**இணைப்புக் கால்வாய் வெட்டுதல்.**—சிற்றாறு அணை-1, சிற்றாறு அணை-2 ஆகியவற்றில் ஏற்படும் நீர்த்தேக்கங்களை இணைப்பதற்காக 3,300 அடி நீளமுள்ள இணைப்புக் கால்வாய் (Inter Connecting Channel) வெட்டப்பட்டுள்ளது. இக்கால்வாயின் அடிமட்ட அகலம் 30 அடி.

நீரூட்டும் கால்வாய்.—சிற்றாறு அணை-(1)ஐயும், கோதையாறு இடதுகரைக் கால்வாயையும் நீரூட்டும் கால்வாய் (Feeder Cannal) இணைக்கிறது. இது ஒரு சமமட்டப் பரப்பு வழியே செல்லும் கால்வாய். சிற்றாறு-1 நீர்த்தேக்கத்தின் வலது பக்கத்தில் உள்ள மதகு மூலம் திறந்துவிடப்படும் தண்ணீர் சமமட்டப் பரப்பு வழியே செல்லும் கால்வாய் மூலம் கோதையாறு இடது கரைக் கால்வாயுடன் மைல் 2/7-ல் சேருகிறது. இக்கால்வாய் மூலம் செல்லும் நீர், கோதையாற்றைக் கடக்கும் இடத்தில், 'கான்கிரீட்' பாலக் கால்வாய் மூலம் செல்கிறது. இக்கால்வாய் ஒரு மைல், 2 பர்லாங்கு, 550 அடி நீளமுள்ளது.

**கோதையாறு இடது கரைக் கால்வாய்.**—சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தின் கீழ், பாசனம் பெறப் போகும் பகுதிக்குத் தேவையான அதிக அளவு தண்ணீரைக் கொண்டு செல்வதற்கு வசதியாகக் கோதையாறு இடதுகரைக் கால்வாயை 3·64 இலட்சம் ரூபாய் செலவில் அகலப் படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது.

**பாண்டியன்கால்.**—இராதாபுரம் கால்வாய்த் திட்டத்தின் படி அதிக அளவு தண்ணீரைக் கொண்டு செல்வதற்கு வசதியாகப் பாண்டியன்கால் அகலப்படுத்தப்பட்டுள்ளது.

**தோவாளைக் கால்வாய்.**—இதுவும் ஒரு சமமட்டப் பரப்பு வழியே செல்லும் கால்வாயாகும். இதனுடைய நீளம் 30 மைல் 3 பர்லாங்கு. இக்கால்வாயும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

நிலப்பாறைக் கால்வாய்—இராதாபுரம் கால்வாய்க்குத் தேவையான தண்ணீரைக் கொண்டு செல்வதற்கு வசதியாக நிலப்பாறைக் கால்வாயையும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**பட்டணம்கால் முக்கியக் கால்வாய்**

கோதையாறு இடதுகரைக் கால்வாயில் மைல் 6/4—260-ல் இருந்து பட்டணம்கால் முக்கியக் கால்வாய் பிரிகிறது. இக்கால்வாய் பிரியும் இடத்தில் தலைமதகு அமைக்கப்பட்டுள்ளதுடன், அதிலிருந்து 100 அடி தூரத்தில் கோதையாறு இடது கரைக் கால்வாயில் ரெகுலேட்டர் அமைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாய் சுமார் 26½ மைல் நீளமுள்ளது. பட்டணம்கால் முக்கியக் கால்வாய் மூலம் பயனடையும் நிலங்கள் பின்கண்ட கிராமங்களில் உள்ளன.

விளவங்கோடு வட்டம்—

நட்டாளம்.
நல்லூர்.
கிள்ளியூர்.
கீழ்க்குளம்.
கீழ்மைத்தளம்.
மைத்தளம்.
பேன்குளம்.

கல்குளம் வட்டம்—

அருவிக்கரை.
பொன்மனை.
மேக்கோடு.
ஆத்தூர்.
கப்பியரை.
குளச்சல்.

இக்கால்வாய் சமமட்டப் பரப்பு வழியே செல்கிறது. ஆனால், இக்கால்வாய் 1 மைல் நீளத்திற்கு 1 அடி கீழே இறங்குகிறது. இக்கால்வாயின் முழு நீளத்திற்கும் மண்ணின் மேல் கான்கிரீட் தளமிடப்பட்டுள்ளது. பாறைப் பகுதிகளில் கல் பாவப்பட்டுள்ளது. இதிலிருந்து பிரியும் இணைக் கால்வாய்களும், அதிலிருந்து பிரியும் சிறு கால்வாய்களும் சிமெண்ட் கான்கிரீட் அல்லது கல் தளத்தினால் பாவப்பட்டுள்ளது.

**ஆசியாவிலேயே உயரமான பாலக் கால்வாய்**

பட்டணம்கால் முக்கியக் கால்வாய் செல்லும் பகுதி மேடு பள்ளம் மிகுந்தது. ஆழமான பள்ளத் தாக்குகளில் சிமெண்ட் கான்கிரீட் கால்வாய் அமைக்கப்பட்டு அதன் வழியாக நீர் செல்கிறது. இக்கால்வாய் பரளியாற்றைக் கடந்து செல்லும் இடத்தில் பரளியாற்றின் உயரத்திற்கு மேல் 104 அடி உயரத்தில் சிமெண்ட் கான்கிரீட் பாலக்கால்வாய் ( Aquduct ) அமைக்கப்பட்டுள்ளது. அதன் வழியாகவே நீர் செல்கிறது. பரளியாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலக் கால்வாய் ஆசியாவிலேயே மிக உயரமானதாகும்.

இப்பாலக் கால்வாயின் நீளம் 1,240 அடி. இதைக் கட்டி முடிக்க 12·90 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. இது போன்ற கான்கிரீட் பாலக் கால்வாய் மற்றும் நான்கு இடங்களில் அமைந்துள்ளன.

**இராதாபுரம் கால்வாய்**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் பகுதியில் 17,000 ஏக்கருக்கு பாசன வசதியளிப்பதற்காக நிலப்பாறை கால்வாய் மைல் 1/2—250 இல் இருந்து இராதாபுரம் கால்வாய் வெட்டப்பட்டது. இதன் நீளம் 18 மைல். இக்கால்வாய் முழுவதும் சிமெண்ட் கான்கிரீட்டினால் தளமிடப்பட்டுள்ளது.

ரூபாய் 55·58 இலட்சம் செலவு மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இராதாபுரம் கால்வாய் முதன் முதலாகப் பாசனத்திற்காக 20—6—1971 அன்று திறந்துவிடப்பட்டது.

**பேச்சிப்பாறை அணை**—பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை மேலும் 840 மில்லியன் கன அடி அதிகப் படுத்துவதற்கான வேலையும், முடிந்துவிட்டது.

**பெருஞ்சாணி அணை**—பெருஞ்சாணி அணையின் நீர்மட்டத்தை மேலும் 6 அடி உயர்த்தி, 590 மில்லியன் கன அடி அதிகத் தண்ணீரைத் தேக்குவதற்கான வேலையும் முடிவடைந்துள்ளன.

இவ்வாறு சிற்றாறு பட்டணம்கால் திட்டத்தில் அடங்கியுள்ள எல்லாப் பணிகளும் முழு அளவில் நிறைவேறியுள்ளதால், விரைவில் விளவங்கோடு, கல்குளம், நாங்குநேரி வட்டங்கள் செழிப்படையும். அதனால் அப்பகுதி மக்களின் வாழ்வும் வளமுறும் என்பது திண்ணம்.



மே 16
தமிழரசு
இதழில்.
சோம. மகாதேவன் எழுதும்
உண்மையின் சந்நிதி
கிராமியத் தொடர்கதை
துவங்குகிறது.






# MF புதிய காம்ப்ளெக்ஸ் 17-17-17

## பல பயிர்களுக்கும் பயன்படும் உரம்

MF காம்ப்ளெக்ஸ் 17-17-17
கரும்பு, வாழை, சோளம்,
கம்பு, கேழ்வரகு, பருத்தி,
மிளகாய் போன்ற பல வகை
பயிர்களுக்கும் ஏற்றது.
MF காம்ப்ளெக்ஸ் 17-17-17
மலை ஜாதிப் பயிர்களான
தேயிலை, காப்பி, ரப்பர்
ஆகிய வற்றிற்கும் கூட
உபயோகிக்கலாம்.

மண் செழித்து,
பொன் விளைய —
MF காம்ப்ளெக்ஸ்
17-17-17




MF காம்ப்ளெக்ஸ்
உரங்களும் யூரியாவும்
கிடைக்கும் இடங்கள்:

- ஷாவாலஸ் & கம்பெனி லிமிடெட்
- E.I.D.-பாரி லிமிடெட்
  ஆகியோரின் உர வியாபாரிகள்
- கூட்டுறவுச் சங்கங்கள்

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
மணலி, சென்னை - 68

HFL-6771




**காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணை!**

தமிழகத்திலேயே மிகப் பெரியதும், முதன்மையானது மான இது, விஞ்ஞான முறையில் கோழிகளை வளர்த்து, உலகினர் பலரைக் கவர்ந்துள்ளது. இங்குக் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்படும் கோழிகள் தான் எத்தனை! எத்தனை! சின்னஞ் சிறிய குஞ்சு முதல் பெரிய பெரிய கோழி, சேவல்கள் வரை இங்கு ஆயிரக் கணக்கில் வளர்ந்து வருகின்றன.

பார்க்கப் பரவச மூட்டும் இந்தப் பண்ணை மிக அழகாக, ஒழுங்காகப் பல மாநிலத்துக்கு ஓர் முன் மாதிரியாகத் திகழ்கிறது. 1961-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பண்ணை, முதலில் 90 பெட்டைக் கோழிகளையும், 10 சேவற் கோழிகளையும் மூலதனமாகக் கொண்டு, சிறிய முறையில் நடந்து வந்தது.

1960-ஆம் ஆண்டுத் தொடக்கக் காலத்திலிருந்தே தமிழ்நாடு கால் நடைப் பராமரிப்புத்துறை, கிராமப் புறங்களில் கோழி இன வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி வருகிறது. இத்திட்டம் வெற்றி பெற்று மேலும் மேலும் வளர உயர் ரக இனக்கோழிகளைக் கிராம மக்களுக்கு வழங்கி, கோழிப் பண்ணைகளை விஞ்ஞான முறைப்படி திறம்பட நடத்தத் தேவையான மருத்துவ உதவிகளும், தொழில் நுணுக்க அறிவுரைகளும் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

கோழி வளர்க்கும் நோக்கத்துடன், கிராமங்கள் தோறும் கோழிப் பண்ணைகளும், கோழி விரிவாக்கும் நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையின் முக்கிய நோக்கம்—

1. உயர் ரக வெளிநாட்டுக் கோழிகளை அதிக அளவில் வளர்த்தல்.

2. குறைந்த விலையில் நல்ல தரமான முட்டைகளையும், கோழிக் குஞ்சுகளையும் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்குதல்.

3. அப் பகுதியில் கோழி வளர்க்கும் கிராம மக்களுக்குத் தொழில் நுணுக்க உதவி வழங்குதல் முதலியனவாகும்.

இந்நிலையம் துவக்கக் காலத்திலேயே சீரிய முறையில் செயல்படத் தொடங்கி, கிராம மக்களுக்கு முட்டைகளையும், தரமான கோழிக் குஞ்சுகளையும் மிக அதிக அளவில் வழங்கி வந்தது. ஆனால், அதற்கு மேலும் மேலும் 'கிராக்கி' இருந்ததால், 'கோழிக் குஞ்சுகள் வளர்ப்பு நிலையம்' ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையம் மாதத்துக்கு எத்தனைக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறது தெரியுமா? 25,000! இதன் விளைவு? 'கோழி விற்பனைத் திட்டம்' செயல்படத் தொடங்கியது:



பரிசு பெற்ற கோழி

அரசின் அரிய திட்டத்துக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் இந்தப் பண்ணையில் இப்போது மொத்தம் 17,365 கோழி வகைகள் உள்ளன. ஒரு நாளைக்கு 2,400 முட்டைகளைத் தயார் செய்து சென்னை நகரத்துக்கும், சுற்றுப் புறங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

கோழி விற்பனைத் திட்டத்தின் நோக்கமென்ன?

சுமார் 300 கிராம மக்களுக்குக் கோழி வளர்ப்பதற்காக ரூபாய் ஆயிரம் முதலீடாக வட்டியின்றி வழங்குதல், இந்த ரூபாய் ஆயிரம் பணமாகவும், கோழிக் குஞ்சுகளாகவும் வழங்கப் படும்: இக்கோழிகளை வளர்ப்பவர்களுக்குத் தக்க தொழில் நுணுக்கங்களைக் கற்றுத் தருதல்; மருத்துவ உதவிகளை வழங்குதல்; இக்கோழி வளர்ப்பவர்களிடமிருந்து திரும்ப முட்டைகளையும் கோழிக்குஞ்சுகளையும் பெறுதல்; கோழி வளர்ப்பவர்களிடமிருந்துபெற்றுக்கொள்ளப்பட்ட தேவையற்ற கோழிகளை அறுத்துப் பக்குவப்படுத்தப்பட்ட கோழி இறைச்சியினைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்தல்; முட்டைகளையும்பெற்றுவிற்பனை செய்தல் முதலியனவாகும்.

11·6 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பண்ணை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன: 1: குஞ்சு பொறித்தலும் வளர்த்தலும், 2: கோழி வளர்ப்பும் முட்டை சேகரித்தலும், 3: கோழி மற்றும் முட்டைகள் விற்பனை:

இங்கு ஏறக்குறைய 12,000 குஞ்சுகளைப் பொரிக்கவும், 7,000 குஞ்சுகளை வளர்க்கவும் போதிய வசதி உள்ளது. குஞ்சு பொரித்து அவற்றை ஆளாக்குவது வரை இயந்திரம் பெரும் பங்கு வகிக்கிறது! தமிழகத்திலேயே முதன் முறையாக, ஒரு நாள் வயதுள்ள கோழிக்குக் குஞ்சுகளை இனம் பிரித்து அவற்றை விற்பனை செய்வதில் வெற்றிவாகை சூடியுள்ளது, இப்பண்ணை.

இப்பண்ணையில் வெள்ளை லெக்கான் கோழிகளைத் தவிர அண்மையில் தருவிக்கப்பட்ட ஆஸ்டர்லார்ப், ஆஸ்திரேலியன் வெள்ளை லெக்கான் இனக் கோழிகளும் நன்கு வளர்க்கப் படுகின்றன. இந்த இனக் கோழிகளைச் சேர்த்து ஆஸ்ட்ரோ வெள்ளை இனக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

குஞ்சுக் கோழி முதல் பெரிய கோழி வரை, பிறந்தது முதல் அதன் வளர்ச்சியை, தன்மையை அறிய இறகிலும், காலிலும் எண் உள்ள ஒரு மெல்லிய தகட்டினைப் பொருத்திவிடுகிறார்கள். ஒரு கோழியின் பூர்வீகம் ஆங்காங்கே உள்ள குறிப்பேட்டில் பதிக்கப்படுகின்றன.



கோழி இறைச்சி தயாராகிறது

சுருங்கச் சொன்னால் குழந்தையை வளர்ப்பது போல, இந்தக் கோழியை வளர்க்கிறார்கள்! அண்மையில் திருச்சியில் நடந்த கோழிக் கண்காட்சியில் இப்பண்ணைக் கோழிகள் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு வந்து விட்டன! இப்போட்டியில் பல மாநிலங்கள் கலந்து கொண்டனவாம்.

கோழிக் குஞ்சு ஆணா? பெண்ணா? இதை எப்படித் தெரிந்து கொள்வது? இதனைப் பரிசோதிக்க இங்கு ஒரு கால் நடை மருத்துவர் இருக்கிறார். கோழியின் ஆசன வாயின் மூலம் அவர் இதனை ஆண், பெண் என்று பிரித்து விடுகிறார்!

நூற்றுக் கணக்கில் ஒரே இடத்தில் கொத்தித் திரியும் கோழிகள் ஒன்றையொன்று மூக்கால் குத்திக் கொண்டு காயம்படாமலிருக்கவும், உயிர்ச் சேதம் ஏற்படாமலிருக்கவும் ஒரு கருவியின் மூலம் கூரிய அதன் மூக்கை முனை மழுங்கச் செய்துவிடுகிறார்கள்! முட்டையின் அளவு, எடை இவைகளைத் தரம் பிரித்து, முட்டை நல்லதா கெட்டதா என்று கண்டுபிடிக்கவும் இங்கு ஒரு நூதனக் கருவி இருக்கிறது! இது ஒரு கணத்தில் தன் வேலையைச் செய்து விடுகிறது! முட்டைகளைச் சுத்தமாகக் கழுவுவது கைகளல்ல. ஒரு கருவி!

பச்சைக் கோழி இறைச்சி ஒரு நொடியில் தயார்! இயந்திரம் மூலம் கோழியை அறுத்துச் சுத்தமாக்கி குளிர்பதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாத்து அழகான பையில் ரொட்டியைப் போலத் தருகிறார்கள்.

இந்தப் பண்ணை பாரிலுள்ளோரையும், பெருமளவில் கவர்ந்திருக்கிறது. ரஷ்யா, ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜெர்மன், எடின்பர்க், உகாண்டா, கென்யா, சோமாலியா, ஸ்காட்லாந்து, எதியோப்பியா முதலிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் இதனைப் பார்த்துப் பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

1971—72-ல் உற்பத்தி செய்யப்பட்ட கோழிகள் 73,763. இன விருத்திக்கு விற்பனை செய்யப்பட்ட கோழிகள் 50,427. முட்டைகள் உற்பத்தி 1970—71-ல் எண்ணிக்கை 7,30,470. இப்பண்ணையில் முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கையை 6,000-க்கு உயர்த்தவும், மாதத்துக்கு 20,000 கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யவும் திட்டமிருக்கிறது.

அருமையான இந்தக் கோழிப் பண்ணையை அனைவரும் பார்த்துப் பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

# சின்னான் பெற்ற பரிசு!

படகு போன்ற பெரிய கார் தன் குடிசை வீட்டின் முன்னால் வந்து நிற்பதைக் கண்ட சின்னான், படுக்கையை விட்டு எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தான். அந்தக் காரிலிருந்து சென்னை உர நிறுவனத்தின் விளம்பர அலுவலர் அழகிரி இறங்குவதைக் கண்ட சின்னான், ''வாங்க சார்! வணக்கம் சார்!'' என்று கூறிக்கொண்டே அவரை நெருங்கினான்.

''வணக்கம், உடல் நலமில்லையா? காலை மணி ஏழு ஆகப் போகிறது; இதுவரையா தூங்குவது?'' என்று அழகிரி கேட்டார்.

''உங்கள் உதவியினால் நலமாக உள்ளேன். உங்கள் அறிவுரையைக் கேட்டு, சென்னை உர நிறுவனத்தின் என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரமிட்டு, ஒரு ஏக்கரில் ஐ. ஆர். 8 பயிரிட்டதில், கிடைத்த 70 மூட்டை நெல்லில் பாதியை விற்றுக் கடன்களை அடைத்து விட்டேன். என் கடன் தொல்லையெல்லாம் தீர்ந்து விட்டது. இப்பொழுது நிம்மதியாக இருக்கிறேன். அதனால் கொஞ்சம் அதிக நேரம் தூங்கி விடுகின்றேன்'' என்றான் சின்னான்.

'' உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லவே வந்தேன். அதைச் சொன்னால் நீங்கள் மேலும் தூங்கப் போய் விடுவீர்களோ என்று பயப்படுகின்றேன்'' என்றார் அழகிரி.

'' காலையிலேயே உழவர்களைத் தேடிவரும் உங்களைக் கண்டாலே என் சோம்பலெல்லாம் ஓடிவிடும் சார்! மகிழ்ச்சியான செய்தி என்றீர்களே, அது என்ன சார்?'' என்று கேட்டான் சின்னான்.

'' மாநில நெல் விளைச்சல் போட்டியிலே உங்களுக்கு முதல் பரிசுகிடைத்துள்ளது. இன்றையச் செய்தித் தாள்களிலெல்லாம் இச் செய்தி வெளியாகியுள்ளது. உங்களுக்கு 2,000 ரூபாய் பரிசு கிடைக்கப் போகிறது. முதற் பரிசு பெற்ற உங்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க விரும்பி உங்களைக் கையோடு அழைத்து வரும்படி எங்கள் நிறுவனத் தலைவரும், வேளாண்மை இயக்குநரும் என்னை அனுப்பியுள்ளனர். உங்களை அழைத்துப் போகவே, இந்தக் கார். சீக்கிரம் தயாராகுங்கள். அதற்குள் நான் பண்ணையாரையும், ஊராட்சி மன்றத் தலைவரையும் பார்த்து விட்டு வந்து விடுகின்றேன்'' என்றார் அழகிரி.

* * * *

**கா**லை இளம் காற்றை ஊடுருவி கொண்டு படகு போன்ற அந்தக் கார் விரைந்து சென்று கொண்டிருந்தது. இதமான இளங் காற்றில் தன்னை மறந்து சின்னான் தூங்கிக் கொண்டிருந்தான். ஊராட்சி மன்றத் தலைவரும் அரைத் தூக்கத்தில் இருந்தார். பண்ணையார் பரமசிவம் அடிக்கடி தன் பக்கத்தில் இருந்த சின்னானைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அவர் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது. இவைகளையெல்லாம் தன் முன்னாடியிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்த அழகிரி, பின்னால் திரும்பிப் பண்ணையாரைப் பார்த்து, ''என்ன சார்! கவலையுடன் இருக்கின்றீர்கள்? உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா?'' என்று கேட்டார்.

''சின்னானுக்கு இருக்கும் அறிவு கூட எனக்கு இல்லையே என்று தான் கவலைப்படுகின்றேன்.''

''ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள்.''

''ஒரு ஏக்கர் நிலமே உள்ள சின்ன விவசாயியான சின்னான், உங்கள் பேச்சைக் கேட்டதால் மாநில நெல் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு பெற முடிந்துள்ளது. சின்னானுக்கு ஒரு ஏக்கரில் 70 மூட்டை நெல் கிடைத்திருக்க, எனக்கு நான்கு ஏக்கரில் 70 மூட்டை நெல்தான் கிடைத்துள்ளது. உங்கள் பேச்சைக் கேட்டிருந்தால், எனக்குப் பரிசு கிடைத்திருக்கா விட்டாலும், அதிக மகசூல் கிடைத்திருக்கும். நீங்கள் பல தடவை வற்புறுத்திக் கூறியும், உங்கள் பேச்சைக் கேட்கவில்லையே என்றுதான் கவலைப்படுகின்றேன்.''

''கவலைப்படாதீர்கள்! அடுத்த தடவை சென்னை உர நிறுவனத்தின் காம்ப்ளெக்ஸ் உரமிட்டு, நீங்களும் சின்னானைப் போல் அதிக மகசூல் பெறலாம்''!

ஒரு திருப்பத்தில் ஏற்பட்ட குலுக்கலில், ஊராட்சி மன்றத் தலைவரும், சின்னானும் விழித்துக் கொண்டனர்.

நல்ல தூக்கம் போலிருக்கிறது! என்றார் அழகிரி.

சின்னான் பதில் பேசவில்லை. ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர் '' சார்! உங்களை ஒரு சந்தேகம் கேட்கணும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். குளுகுளுவென்று அடிக்கும் காற்றினால் கண்ணயர்ந்து விட்டேன் '' என்றார்.

'' என்ன சந்தேகம்? கேளுங்களேன்'' என்றார். அழகிரி அவர்களுடைய உரையாடல் தொடர்ந்தது.

'' எம். எப். காம்ப்ளெக்ஸ் உரம் என்று கூறுகின்றீர்களே, அதன் பொருள் என்ன சார்?''

'' எம். எப். என்றால் 'மெட்ராஸ் பெர்ட்டிலைசர்' அதாவது 'சென்னை உரம்' என்று பொருள். காம்ப்ளெக்ஸ் உரம் என்றால் 'இணைப்பு உரம்' என்று பொருள்''.

'' அமோனியா, யூரியா சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களை விட இணைப்பு உரம் உயர்ந்ததா சார்?''

''அமோனியா, யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் ஆகிய உரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரே ஒரு சத்து மட்டுமே இருக்கும் ஆனால், காம்ப்ளெக்ஸ் உரத்தில் தாவரங்களின் வளர்ச்சிக்கும், வாழ்க்கைக்கும் தேவையான தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்று அடிப்படைச் சத்துக்களும் அடங்கியுள்ளன. எம்.எப். காம்ப்ளெக்ஸ் உரத்தில் உள்ள எல்லாச் சத்துக்களும் தண்ணீரில் கரையக் கூடிய வடிவில் உள்ளன. பயிர்களுக்குச் சமச்சீர் உணவு கிடைக்கத் தேவையான அளவு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்கள் எம். எப். காம்ப்ளெக்ஸ் உரத்தில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. கலப்பு உரங்களைத் தூவும் போது காற்றினால் அடித்துச் செல்லப் பட்டுச் சேதமுறலாம். எம். எப். காம்ளெக்ஸ் உரங்கள் குருணை வடிவில் இருப்பதால் அவைகளைத் தூவும் போது சேதம் ஏற்படாது. ஒவ்வொரு குருணையிலும், மூட்டையிலும் அதிக அளவு பயிர்ச் சத்துகள் அடங்கியுள்ளன. அதனால் ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் காம்ப்ளெக்ஸ் உரத்தின் அளவு குறைவாகவே இருக்கும். அதன் காரணமாக உரச் செலவும், உரமிடும் செலவும், நேரமும் குறைகிறது. எம். எப். காம்ப்ளெக்ஸ் உரங்களை வயலில் இடும்போது, எங்கும் ஒரே மாதிரியான அளவில் பயிர்ச் சத்துக்கள் கிடைக்கின்றன. அதனால் பயிர்கள் நன்கு வளர்ந்து, பெரும் மகசூல் கொடுக்கின்றன. நேரடி உரம், கலப்பு உரம் ஆகியவைகளுடன் ஒப்பிடும் போது, காம்ப்ளெக்ஸ் உரமிடுவது சிக்கனமானதாகும். காம்ப்ளெக்ஸ் உரத்தைக் கலப்படம் செய்வதும் கடினமாகும். எனவே, காம்ப்ளெக்ஸ் உரம் சிறந்ததாகும்.''

'' சென்னை உரத் தொழிற்சாலையில் என்னென்ன உரங்கள் உற்பத்தியாகின்றன ?'' என்று கேட்டார் பண்ணையார்.

'' தற்பொழுது சென்னை உரத் தொழிற்சாலையில் யூரியா உரமும், 14:28:14, 17:17:17 என்ற இருவகைக் காம்ப்ளெக்ஸ் உரங்களும் தயாரிக்கப்படுகின்றன. 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இவ்வுரத் தொழிற்சாலை துவக்கப்பட்டது. 5 திங்களிலேயே இவ்வுரத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 752 டன் யூரியாவும், 834 டன் காம்ப்ளெக்ஸ் உரமும் தயாரிக்கும் நிலையை அடைந்துள்ளது. விரைவில் இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 885 டன் யூரியா, 1,100 டன் காம்ப்ளெக்ஸ் உரம் உற்பத்தி செய்யும் நிலையை அடையும்!''



'' நீங்கள் சொல்வதை பார்த்தால் சென்னை உரத் தொழிற்சாலை ஒரு பெரிய தொழிற்சாலை தான் போலிருக்கிறது !'' ஒன்று வியப்புடன் கூறினான் சின்னான்.

'' ஆமாங்க. இந்திய—அமெரிக்கக் கூட்டுறவில் செங்கை மாவட்டம் மணலியில் அமைக்கப் பட்டுள்ள சென்னை உரத் தொழிற்சாலை உலகில் உள்ள மிகமிக நவீன உரத் தொழிற் சாலைகளில் ஒன்றாகவும், இந்தியாவில் உள்ள மிக நவீன உரத் தொழிற்சாலையாகவும், விளங்குகிறது. காம்ப்ளெக்ஸ் உரங்களைத் தென்னிந்தியாவில் உற்பத்தி செய்யும் முதல் பெரிய தொழிற்சாலை இதுவே''.

'' சென்னை உரத் தொழிற்சாலை யாருக்குச் சொந்தமானது? இதை அமைக்க எவ்வளவு செலவானது ?'' என்று கேட்டார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''சென்னை உரத் தொழிற்சாலை பொதுத் துறையைச் சார்ந்ததாகும். இத்தொழிற்சாலையில் 51 சத பங்கு இந்திய அரசுக்கும், 49 சத பங்கு அமோகோ அனைத்து நாட்டு எண்ணெய்க் கம்பெனியின் துணை நிறுவன



மான ' அமோகோ இந்தியா ' நிறுவனத்திற்கும் சொந்தமானதாகும். இத் தொழிற்சாலையை அமைக்க 65 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. இத்தொழிற்சாலைக்கு 24 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியும் தேவைப்பட்டுள்ளது. சென்னை உரத் தொழிற்சாலையைக் கட்டி முடிக்க உலக முழுவதும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் அடிப்படையில், நியூயார்க்கிலுள்ள ' கெமிகல் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்' (கெமிக்கோ) நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. ' கெமிக்கோ ' நிறுவனம் இவ்வுரத் தொழிற்சாலையை நிர்மாணித்து உற்பத்தியைத் தொடங்குவதற்குத் தயாரான நிலையில் ( Tunkes Project ) 1971 ஆம் ஆண்டு ஜூன் 7 ஆம் நாள் சென்னை உர நிறுவனத்திடம் (Madras Fertilisers Limited) ஒப்படைத்தது.''

'' சென்னை உரத்தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான பொருள்கள் எங்கிருந்து பெறப்பட்டன ?'' என்றான் சின்னன்.

'' பெரும்பாலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டே நிறுவப்பட்டுள்ளது என்பது சென்னை உரத் தொழிற்சாலைக்கே உரிய சிறப்பு அம்சமாகும். இத் தொழிற்சாலைக்குத் தேவையான நீராவி உற்பத்தி செய்யும் 2 கருவிகளை ' பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்' நிறுவனம் வழங்கியுள்ளது. அதுபோலவே ' லார்ஷன் டியூப்ரோ ', 'பின்னி என்சினீரிங் ஒர்க்ஸ் ' போன்ற முன்னேடும் இந்திய நிறுவனங்கள் சில பெரிய தளவாடங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளன. பல்வேறு முக்கியத் தளவாடங்கள் இத் தொழிற்சாலைக்காகவே, முதன் முதலாக இந்தியாவில் தயாரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது வன்றிக் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு வால்வுகள், இணைப்புகள் முதலிய பல்வேறு பாகங்கள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டுள்ளன.''

'' உரம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்கள் எங்கிருந்து கிடைக்கின்றன ?'' என்றான் உலகநாதன்.

'' சென்னை உரத் தொழிற்சாலையில் உரம் தயாரிப்பதற்கு எரிவளி (Nitrogen), நாப்தா (Naphtha) பாஸ்பாரிக் அமிலம், பொட்டாஷ் ஆகிய நான்கு மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அத்துடன் மின்சாரமும், தண்ணீரும் பெருமளவில் தேவைப்படுகின்றன. எரிவளியை வானவெளியில் உள்ள காற்றிலிருந்தே பெறப்படுகிறது. ' நாப்தா ' சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையிலிருந்து கிடைக்கிறது. பாஸ்பாரிக் அமிலமும், பொட்டாஷும் இறக்குமதி செய்யப்படுகின்றன. மின்சாரத்திற்காகத் தமிழ்நாடு மின்வாரியத்தையும், தண்ணீருக்காகத் தமிழ்நாடு நிலநீர்க் குழுவையும் முழுக்க முழுக்க இத்தொழிற்சாலை நம்பி இருக்கிறது.''

'' எம். எப். உரம் எங்கெல்லாம் விற்பனையாகிறது ? '' என்றான் சின்னன்.

'' சென்னை உரத் தொழிற்சாலையின் உரங்கள் தமிழ்நாடு கேரளா, மைசூர், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி ஆகிய 5 மாநிலங்களில், 60 மாவட்டங்களில் விற்பனையாகின்றன. சென்னை உரங்கள் தற்பொழுது 'ஷாவாலஸ் அண்டு கோ லிமிடெட்', -ஈ.ஐ.டி. பாரி லிமிடெட்', ஆகிய நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மைசூர் வேளாண்மைத் தொழிற் கழகம், மற்றும் தமிழ்நாடு, மைசூர், ஆந்திரப் பிரதேசம், கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் சென்னை உரங்களை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.'

இலவசமாக மண்ணைப் பரிசோதனை செய்து கொடுக்கின்றீர்கள் என்று சின்னன் கூறினான். ' அதைக் கூடச் செய்கிறீர்களா சார் ? ' என்றார் பண்ணையார்.

'' ஆமாங்க. மண்ணின் தரத்திற்கும், சாகுபடி செய்யப்படவிருக்கும் பயிருக்கும் ஏற்ப உரமிட்டால் தான் நல்ல விளைச்சல் கிடைக்கும். அதற்காகவே மண் பரிசோதனை செய்து பார்த்து எவ்வளவு உரமிட வேண்டும் என்று கூறுகிறோம். இதற்காக விரைவு மண்பரிசோதனைப் பணியை (Express Soil Testing Service) மேற்கொண்டுள்ளோம்.''

'' சென்னை உரத் தொழிற்சாலையில் எவ்வளவு பேர் வேலை பார்க்கிறார்கள் ? ''

'' தற்பொழுது சுமார் 807 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது போல் 10 மடங்கு பேர்களுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது '' என்று அழகிரி கூறி முடிப்பதற்கும், சென்னை உரத் தொழிற்சாலையின் விருந்தினர் இல்லத்தின் முன்னால் கார் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

பிறகு உரத்தொழிற்சாலையின் எல்லாப் பகுதிகளையும் சின்னுனுக்குக் காண்பித்து விளக்கப்பட்டது.

'' இந்த உரத் தொழிற்சாலையினுல் ஏராளமான அந்நியச் செலாவணி மீதமாகும் போலிருக்கிறதே! '' என்ருர் ஒருவர்.

'' சென்னை உர நிறுவனம் முழு அளவில் உர உற்பத்தி செய்யும் போது, இரசாயன உர இறக்குமதி குறைவதன் காரணமாக ஆண்டுதோறும் 55 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி மீதமாகும் '' என்ருர் தலைவர்.

'' இந்த உரத் தொழிற்சாலையின் மூலமாக எவ்வளவு உற்பத்தி அதிகமாகும்? '' என்ருன் சின்னுன்.

### ஆய்வகம்

திருவள்ளூரிலுள்ள காக்களூரில் 'மத்திய மின் பொருள் சோதனை ஆய்வகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மின் பொருள் சம்பந்தமான கருவிகள் — சாதனங்களை ஆய்வு செய்வதற்காகவும், முன்கூட்டியே அதன் தன்மையைத் தெரிந்து கொள்வதற்காகவும் இது பயன்படும்.

மின்சாரத் தொழிலுக்கு உற்பத்திப் பரிசோதனை வசதிகளை அளிப்பதற்கும், பகுதிப் பொருட்களுக்கும், பணி நிறைவுற்ற பொருள்களுக்கும், புதிய வடிவமைப்புகளை வகுப்பதற்கும் இந்த ஆய்வகம் அருந்துணை புரியும். இந்த ஆய்வகத்தின் மதிப்பு ரூ. 17 இலட்சமாகும்.

'' சென்னை உர நிறுவனம் வழங்கும் உரங்களை முறைப்படி பயன்படுத்தினுல், தென்னகத்தின் உணவு தானிய உற்பத்தி ஆண்டு தோறும் 2 இலட்சம் டன் அளவுக்கு அதிகமாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது '' என்ருர் வேளாண்மை இயக்குநர்.

'' சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானுல் சென்னை உரத் தொழிற்சாலை தென்னக உழவர்களை முன்னேற்றும் என்பதில் ஐயமில்லை '' என்ருன் சின்னுன்.

சின்னுன் கூறியதைக் கேட்டு எல்லாரும் வியந்தனர்.

## பாலம் அமைப்போம்!



## பாடம் சொல்லுவோம்!

வாலாசாபாத்–அவளூர் கிராமங்களின் இடையில் பாலாற்றில் ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள பாலம் கட்டப் பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்ட இப்பாலத்தின் மதிப்பு ரூ. 7,70,000. இதனுல், சுமார் நூறு கிராமங்கள் பயன் பெறும். செங்கற்பட்டு–காஞ்சிபுரம் கோட்டங்களை இணைக்கிறது இந்தப் பாலம்.

வாலாசாபாத்தில் இளைஞர் அணியினுல் நடத்தப்படும் முதியோர் கல்வியும், சிரணியினரால் கட்டப்பட்ட பள்ளிக் கூடத்தையும் குறிப்பிட வேண்டும். பாமர மக்கள்-ஏழை விவசாயிகள் பலர் இரவு நேரங்களில் வந்து கல்வி கற்கும் அருமையான காட்சியை நாம் கண்டு களிக்கலாம்.

இங்கு, நேரு நகரிலுள்ள அரிசனக் காலனியில் தனித்தியங்கும் குடிநீர்த் தொட்டி ஒன்று ரூ. 12,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ள இந்தத் தண்ணீர்த் தொட்டியால் மக்கள் பெரும் நன்மை அடைந்து வருகிருர்கள்.

வாலாசாபாத்திலுள்ள 'வானெலி மன்றம்' 1967–68-ம் ஆண்டிற்கான சிறந்த வானெலி மன்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதற் பரிசு பெற்றிருக்கிறது. இதில் முப்பது உறுப்பினர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகிருர்கள்.



# தென்னையே! உன்னைத்தான்!

அளபெடைப் புல்லே! அதிசயத் தென்னையே!
இளநிலாப் பிறைச்சி இடைபோல் உனதுடல்
முழுவதும் ஒல்லி! முகிலுக்கா டும்மயிலின்
அழகிய தோகையோ அதன்வால் புறத்தில்! உன்
பச்சையான் மாவின் கனவினைப் பாடிடும்
உச்சிமட்டை களோ உன்றன் ஓவியத் தோகை!
பதம்பாடு வார்காற்றுப் பாடகர், நீயோ
பதம்பெயர்க் காமலே பசுமணிக் கீற்று
விரல்களில் நாட்டிய முத்திரை வித்தைகள்
வரவழைத் துதிர்ப்பாய் மதுமதி மாதுபோல்!
உலகவர் தலைக்கெண்ணெய் உதவினுய்! ஏன்நீ
கலந்தவுன் தலைக்கெண்ணெய் காணுது போனுய்?
''புதுப்பிரமாக் கள்''தலையைப் பொறுக்காமல் கிள்ளி
வதைத்திடும் "ஆதிக்கச் சிவபெரு மான்களின்"
வரலாறு கண்டதால் வஞ்சினம் உரைத்துப்
பறட்டைத் தலையுடன் பதைத்துநிற் கின்ருயோ?
கட்கடை யோரத்தில் கட்கடை திறந்துபிறர்
உட்கிடை கவர்ந்திடும் காம ஒயிலிபோல்
மதுதருகின் ருயிது நியாயமா மரமே?
நதிகளென்னும் நானில நரம்புகள் தண்ணீர்
தருவது சரிதான்! திராவகம் தரலாமா?
ஒருகால்பந் தலைநீயுன் உள்ளத்து நினைத்துப்பார்!
பானைச் சிரிப்புப் படைத்திடும் நீவிடை
தானைக்குள் எனக்கு நவில்.



**கவிஞர்-ஈரோடு தமிழன்பன்**




"ஊரெனப் படுவது உறையூரே!'' என்பதுபோல, 'முட்டை எனப்படுவது கோழிமுட்டையே!' என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எல்லா வகையான பறவைகளும் முட்டையிடுகின்றன. அவைகளில் ஒரு சில பறவைகளின் முட்டைகள் மட்டுமே மனித இனத்திற்கு உணவாகப் பயன்படுகின்றன.

பறவைகள் மட்டுமல்ல; பாம்பு, பல்லி, ஓணான் முதலிய ஊர்ந்து செல்லும் இனங்களும், புழுக்கள், பூச்சிகள், மீன்கள் ஆகியவைகளும் முட்டை இடுகின்றன. எல்லாவகையான முட்டைகளும், சந்ததிகளை ஏற்படுத்துவதற்காகவே இடப்படுகின்றன. பொதுவாக விலங்குகளின் முட்டையைவிடப் பறவைகளின் முட்டை பெரிதாக இருக்கும். பறவைகள், பூச்சிகள், மீன்கள், ஓணான் ஆகியவற்றில் நன்கு வளர்ச்சியடைந்த முட்டைகள், அவைகளை உற்பத்தி செய்த தாயின் வயிற்றிலிருந்து வெளியே தள்ளப் படுகின்றன. அம்முட்டைகளைச் சரியான கால நிலையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்திருந்தால், முட்டையை இட்ட தாயினைப் போன்ற சிறு உயிர் உருவாகிறது.

### பறவைகளின் முட்டை பலவிதம்

பறவைகளின் முட்டைகள் பருமன், உருவம், நிறம் ஆகியவற்றில் வேறுபடுகின்றன. பொதுவாகப் பெரிய பறவைகள் பெரிய முட்டைகளை இடுகின்றன. எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால் ஆஸ்ட்ரிச் (Ostrich) பறவைகளின் முட்டைகள் 'ஹம்மிங்' பறவையின் (Humming bird) முட்டைகளை விடப் பெரிதாக இருக்கும். ஒவ்வொரு விதிக்கும் ஒரு விதிவிலக்கு உண்டு என்பது உலக நியதி மட்டுமல்ல; இயற்கையின் நியதியும் கூட. அதனால், இதிலும் ஒரு விதி விலக்கு இருக்கிறது. இந்திய ஓடும் வாத்து ( Indian Runner duck ), பிளிமத்ராக் Plymouth Rock) கோழியைவிடச் சிறியதுதான். ஆனால், அது 'பிளிமத்ராக்' கோழியின் முட்டைகளை விடப் பெரிய முட்டைகளை இடுகின்றன.

### உலகில் பெரிய முட்டை

சாதாரணமாக ஒரு கோழி முட்டை சுமார் 2 அவுன்சு (56 கிராம்) எடையிருக்கும். 'ஹம்மிங்' பறவையின் ஒரு முட்டை ஒரு அவுன்சு எடையில் 200-ல் ஒரு பங்கு எடையே இருக்கும். ஆஸ்ட்ரிச் பறவையின்முட்டையே உலகில் பெரிய முட்டையாகும். அதன் முட்டை ஒவ்வொன்றும் 3 பவுண்டு எடை இருக்கும்.

### எத்தனை முட்டையிடும்?

பல்வேறு பறவைகள் இடும் முட்டைகளின் எண்ணிக்கையிலும் மிகுந்த வேறுபாடு உள்ளன. 'ஹார்ன்பில்' (Hornbill) என்ற பறவை ஆண்டிற்கு ஒரு முட்டை மட்டுமே இடும். பிஜியன் பறவை ( Pigeon ) வழக்கமாக ஓர் ஆண்டுக்கு 2 முதல் 4 முட்டைகள் இடும். 'ஆஸ்ட்ரிச்' பறவை ஓர் ஆண்டில் 12 முதல் 15 முட்டைகள் இடும். கோழியும், வாத்தும் ஒரே ஆண்டில் 350 முட்டைகளுக்கு மேலும் இடக்கூடும்.



பெரும்பாலான கான் பறவைகள், நன்கு கட்டப்பட்ட கூடுகளில்தான் முட்டையிடும். சில பறவைகள் மலை இடுக்குகளிலும் முட்டையிடும். வேறு சில பறவைகள் மணலில் முட்டையிட்டு மூடிவிடும். அதுபோலவே ஒரு சில பறவைகள் காய்ந்த சருகுகளில் முட்டையிட்டு மூடிவிடும்.

### வண்ண வண்ண முட்டைகள்

மண்ணில் உள்ள துளைகள் அல்லது வேறு மறைவான இடங்களில் இடப்படும் கான் பறவைகளின் முட்டைகள் வெண்மையான ஓடுகளைக் கொண்டிருக்கும். மண்ணின் மேல் கூடுகட்டி வாழும் பறவைகளும், மரங்களின் மேல் மூடப்படாத கூடு கட்டி வாழும் பறவைகளும் வண்ண ஓடு உள்ள முட்டைகளை இடுகின்றன.

முட்டை ஓடுகளின் நிறம் சுற்றுப் புறங்களுக்கு ஏற்பப் பாதுகாப்பாக அமைகிறது. பச்சை, நீலம், சிவப்பு, சாம்பல் அல்லது பழுப்பு நிறங்களில் முட்டை ஓடுகள் அமைந்திருக்கும். சிலவகை கான் பறவைகளின் முட்டையின் ஓடுகளில் அடர்த்தியான நீலம் அல்லது பழுப்புப் புள்ளிகள் காணப்படும்.

சில வகை வாத்துகளின் முட்டைஓடு கருப்பாக இருக்கும். ஃப்ளிக்கர் ( Flicker ) பறவையின் முட்டைஓடு வெண்ணிறமாக இருக்கும்.

லெக்கார்ன் (Leghorn), மைனர்க்கா (Minorca) கோழிகளின் முட்டை ஓடு வெண்ணிறமாக இருக்கும். பிற கோழி இனங்கள் பெரும்பாலும் பழுப்பு நிற ஓடு உள்ள முட்டைகளை இடும். ஆனால், தென் அமெரிக்காவில் உள்ள அரக்கானு (Araucana) கோழி நீலநிற ஓடுகொண்ட முட்டைகளை இடுகின்றன.

**வடிவிலும் வேறுபாடு**

வண்ணத்தில் மட்டுமல்ல, வடிவிலும் வேறுபட்ட முட்டைகளைப் பறவைகள் இடுகின்றன. பெரும்பாலான கான் பறவைகளின் முட்டை, கோழி முட்டை வடிவிலேயே இருக்கும். ஆனால், 'கோல்டன் பிளோவர்' (Golden Plover) பறவையின் முட்டை 'பியர்' (Pear) வடிவிலும், ஆந்தையின் முட்டை வட்ட வடிவிலும், 'மணல் கிரௌஸ்' (Sand grouse) பறவையின் முட்டை உருளை வடிவிலும் உள்ளன.

மண் புழுவின் முட்டை ஒருவகை மூடிக்குள் அடங்கி 'கேப்சல்' (Capsule) போல் இருக்கிறது. அம்மூடிக்குள் பால் போன்ற சத்துள்ள திரவம் நிரம்பியிருக்கும். வண்ணத்துப் பூச்சி, பயிரை அழிக்கும் பூச்சிகள் ஆகியவை இடும் முட்டைகள் மிகச் சிறியனவாகவும், பல்வேறு வடிவிலும், நிறத்திலும் இருக்கும். பொதுவாகப்பூச்சிகள், மண், இலை, தண்டு, தண்ணீர் ஆகியவற்றின் மேல் கொத்துக் கொத்தாக (Clusters) முட்டையிடும்.

**உடையாத முட்டை**

பொதுவாக முட்டைகளைக் கீழே போட்டால் உடைந்து விடும். ஆனால், பாம்பின் முட்டையும், ஆமையின்



முட்டையும் எளிதில் உடையாது. ஏனெனில் அவைகளின் மேல் மிருதுவான தோல் மூடியுள்ளது. ஆமையின் முட்டையைக் கீழே போட்டால் பந்து போல் எழும் தன்மை கொண்டுள்ளது என்பது பலருக்கு வியப்புக்குரிய செய்தியேயானாலும், உண்மையேயாகும்.

பறவையின் முட்டைகள் பொதுவாகத் தாய்ப் பறவையின் உடலில் உள்ள வெப்பத்தினால் குஞ்சு பொரிக்கும் நிலையை அடைகின்றன. குஞ்சு பொரிக்கச் செய்ய முட்டைகளைச் சுமார் 9·95 டிகிரி 'பாரன்ஹீட்' வெப்பநிலையில்

1. கோல்டன் பிளோவர்.
2. கார்டினல்
3. வைப்பர்வில்.
4. ஸ்டார்லிங்.
5. மஞ்சள் வார்பளர்
6. கேட்பேர்டு.
7. மெடோலார்க்.




வைத்திருக்க வேண்டும். சில பெண் பறவைகள் முட்டைகளின் மீது ஒரே நேரத்தில் சுமார் 20 அல்லது 30 நிமிடம் உட்கார்ந்து அடைகாக்கின்றன. அதன் பின் உணவு தேடச்சென்று விடுகின்றன. அப்பொழுது ஆண் பறவைகள் சிலநேரங்களில் முட்டைகளின் மீது உட்கார்ந்து அடைகாக்கின்றன. சில ஆண் பறவைகள் முட்டைகளின் மீது உட்கார்ந்து கொண்டே, பெண் பறவைகளுக்கு இரையூட்டுகின்றன. சில பறவை இனங்களில் ஆண் பறவைகள் மட்டுமே முட்டைகளின் மீது உட்கார்ந்து அடை காக்கின்றன. கிளியின் முட்டை சுமார் 12 நாளில் குஞ்சு பொரிக்கும். கோழி முட்டை 21-வது நாளில் குஞ்சு பொரிக்கும். ஆஸ்ட்ரிச் பறவையின் முட்டை சுமார் 6 வாரத்தில் குஞ்சு பொரிக்கும். 'எம்பரர் பென்குவின்' (Emperor Penguin) பறவையின் முட்டை குஞ்சுபொரிக்கச் சுமார் 60 நாட்கள் ஆகும். அதிகமான நாட்கள் அடை காக்க வேண்டிய முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம் பறவைகள் முழு அளவு இறக்கைகளுடன் முட்டையிலிருந்து வெளியே வந்தவுடனேயே நன்கு பார்க்கவும், பறக்கவும், முடிகிறது.

பெட்டைக் கோழி முட்டை இடுவதற்குச் சேவல் சேர்ந்துதான் ஆக வேண்டும் என்ற அவசியமில்லை. சேவல் சேராமலேயே பெட்டைக் கோழி முட்டையிடும். ஆனால், அம்முட்டை குஞ்சு பொரிக்காது.



இம்மாவட்டத்தில் ஓராண்டின் சராசரி மழையளவு 46·50 அங்குலம். இம் மழை 15·84 அங்குலம் தென்மேற்குப் பருவக் காற்றாலும், 27·00 அங்குலம் வடகிழக்குப் பருவக் காற்றாலும் பெய்கிறது. இம்மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களைப் போல் ஜீவநதிகள் இல்லாவிட்டாலும் ஆரணியாறு, செய்யாறு, நந்தியாறு, பாலாறு, குஸஸ்தலையாறு ஆக ஐந்து முக்கிய ஆறுகள் பாய்கின்றன. இந்த நதிகள் பெரும்பாலும் வடகிழக்குப் பருவக் காற்றுகளினால் ஏற்படும் மழையின் மூலம்தான் தண்ணீரைக் கொண்டுவரும். அவ்வாறு ஓடும் தண்ணீரைப் பெரும்பாலும் ஏரிகளில் தேக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. மொத்தம் 4,292 ஏரிகள் 5,22,115 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றன.

...டர்கள், தமிழ்நாட்டில் ஆங்காங்கே பல விவசாயிகளுக்கு ரொக்கமாகவும், கடனாகவும், வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. டிராக்டர் பராமரிப்பில் ஏற்படும் குறைகளை நிவர்த்திக்கவும், பழுதடைந்த பாகங்களைப் புதுப்பிக்கவும் காஞ்சியை அடுத்த சிறு காவேரிப்பாக்கத்தில் 'வேளாண்மைத் தொழிற்கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கழகம் செங்கற்பட்டு வட ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் டிராக்டர் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இது குறைந்த வாடகையில் நிலங்களை உழுது கொடுப்பதற்கும் நிலத்தைச் சமப்படுத்துவதற்கும், அறுவடைக் காலத்தில் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும் உதவுகிறது.

இம்மாவட்டததில்தான் இத்திட்டம், இந்தியத் துணைக்கண்டத்திலேயே முன்னோடியாகத் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அகரம் கிராமத்தில் 1970-ல் துவக்கப்பட்டது. அகரம் கிராமத்தில் இத்திட்டத்தின் மூலம் 40 ஏக்கர் நிலத்தை இருபோகம் விளைவிக்கத் தேவையான அளவு நீர் வழங்கப் போதுமானதாகவுள்ளது.



மனுநீதித் திட்டம் தமிழகத்தில் முதன் முறையாகத் தண்டலம் கிராமத்தில் அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, முதல்வர் கலைஞர் அவர்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள மனுக்கள் ஏறத்தாழ 66,893. முடிவான உத்தரவு அளிக்கப்பட்ட மனுக்கள் 66,763.





சென்னை மாநகருக்குப் பால் வழங்க மாதவரம் பால் பண்ணை மிகவும் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகின்றது. இப்பண்ணை 630 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு நாளைக்கு 72,000 லிட்டர் பால் தயாரிக்கப்படுகிறது.

நிலம் பெற்ற சிறு விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களது நிலங்களை ஒன்று சேர்த்து, மூன்று போகமும் சாகுபடி செய்து வளம் பெறக் 'கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள்', ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பூமிக்கடியில் தேங்கிக் கிடக்கும் ஊற்று நீரை வெளிக் கொணர்ந்து நிலங்களை வளமாக்க உதவியாக இருப்பது இத்திட்டம்.

சமூகக் கல்வித் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் நான்காண்டுக் காலத்தில் ரூ. 2,23,900 செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கியது 611. குக்கிராமங்களுக்கு வழங்கப்பட்ட வானொலிப் பெட்டிகள் 104. சமூகக் கல்வி நிலையங்கள் 1,150.











செங்கற்பட்டுக்கு மற்றொரு பெருமை உண்டு. இம்மாவட்டத்தில் உள்ள, பள்ளி வயது வந்த பிள்ளைகள் எல்லோரும் ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் பள்ளியில் சேர்க்கப்பட்டு அங்கே தங்களின் எதிர்காலத்தை நல்ல முறையில் உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். கடந்த ஆண்டில் ஏறக்குறைய 65,757 பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லாமல் மாடு மேய்த்துக்கொண்டிருந்தனர். அவர்களெல்லாம் ஊராட்சியின் மூலம் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். கல்விக்காக 1967-71 ல் செய்துள்ள செலவு ரூ. 52,70,000.









இம்மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி மிகவும் வியக்கத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. அம்பத்தூரில் இந்தியாவிலேயே சிறந்த ஒன்றாகக் கருதப்பட்டு வரும் தொழிற்பேட்டையும், தமிழ்நாட்டிலேயே தோல் தொழிலுக்கெனத் தனியாக அமைக்கப்பட்ட மாதவரம் தோல் பொருள்கள் தொழிற்பேட்டையும், மின்சாரச் சாதனங்களுக்கான தொழிற்பேட்டை திருவள்ளூர் அடுத்த காக்களூரிலும் இயங்கி வருகின்றன. சிறிய தொழில் மட்டுமல்லாமல் பெரிய தொழிற்சாலைகளும் இங்கு அதிகமிருக்கின்றன. எண்ணூர், திருவொற்றியூர், வேளச்சேரி, மாதவரம், பல்லாவரம் ஆகிய இடங்களில் பெருந் தொழில்கள் வளர்ந்து வருகின்றன.

மதுராந்தகத்திலுள்ள சர்க்கரை ஆலை இம்மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்பட்ட முதல் பெரிய நிறுவனமாகும். ஒரு நாளைக்கு இங்கு ஆயிரம் மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தச் சர்க்கரை தமிழகம் முழுவதற்கும் விநியோகம் செய்யப்படுகிறது.

இம்மாவட்டத்தில் நிலப்பட்டாப் பெற்ற ஏழைகளின் எண்ணிக்கை 16,992. வீட்டு மனைப்பட்டாப் பெற்ற ஏழைகளின் எண்ணிக்கை 25,215. கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் 159. மின் வசதி பெற்ற கிராமங்கள் 3,353. மின் இணைப்புப் பெற்ற கிணறுகள் 36,433.

மாவட்டத்தில் உள்ள
பொதுச் சுகாதார நிலையங்கள்
25. தாய் சேய் நல விடுதி
206. கிராம மருத்துவ மனை
கள் 34. மருத்துவ உதவி
பெற்ற நோயாளிகள் ஏறத்
61,93,300 பேர்.
காழ



குடும்ப நலத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டம் அடைந்துள்ள முன்னேற்றம்: அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்கள் 41,063 பேர். லூப் பொருத்தப்பட்டவர்கள் 5,969 பேர். கட்டுப்பாட்டுச் சாதனங்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 36,880. அறுவைச்சிகிச்சை அதிகமாகச் செய்த வகையில் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம் முதலிடம் பெறுகின்றது. இங்கு செய்யப்பட்ட மொத்த அறுவைச் சிகிச்சைகள்: 1,750.

இம்மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் நிலப்பரப்பளவு 8,85,280 ஏக்கர். இதனை 11,28,517 ஏக்கராக அதிகரித்து விவசாய வளர்ச்சியை மேற்கொண்டது இந்த நான்காண்டுகளில் செய்த பெரும் புரட்சியாகும். ஏழை எளியோர்களுக்குக் கவனிப்பாரற்று வீணாகக் கிடந்த நிலங்கள் தமிழக அரசின் மூலம் நிலப்பட்டாக்கள் வழங்கி ஒப்படைக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை ஊக்குவித்து விளைச்சலைப் பெருக்கும் திட்டங்கள் தீட்டப்பெற்று விவசாயக் கூலிகளாக நின்ற ஏழைகள், விளைவைப் பெருக்கி வயிறார உண்டு களிக்கின்றனர்.









# சிறுவர் அரங்கம்

# அரிய ஆத்திசூடி

மருதங்குடி வெங்கடேசன்



அறிஞர் வழிசெல்.
ஆற்றல் பெருக்கு.
இமைபோல் கடமைசெய்.
ஈக்கிடங் கொடேல்.
உப்பைக் குறைத்துண்.
ஊக்கங் கொள்.
எடையை உயர்த்தேல்.
ஏக்கந் தவிர்.
ஐம்பொறி காத்தல்செய்.
ஒழுக்கம் ஓம்பு.
ஓதும் வழிநில்.
ஔவை சொல்லுணர்.
கலைஞரைப் போற்று.
காக்கைபோல் கூடிவாழ்.
கிள்ளைபோல் பேசு.
கீற்றிலைக் கேகேல்.
குளிர்புனல் குளித்தெழு.
கூகைபோல் பகைவெல்.
கெண்டைபோல் நீந்து.
கேணிபோல் அறிவுகொள்.
கைபோல் உதவு.
கொக்குப்போல் உடையணி.
கோழிபோல் விழித்தெழு.
சமநீதி வழங்கு.
சாத்திரம் பாரேல்.
சிறுமனம் கொள்ளேல்.
சீரைத் தேடு.
சுற்றம் போற்று.
சூழ்நிலை தெரிந்துகொள்.
செலவைக் குறைத்திடு.
சேர்த்துப் பயன்பெறு.
சொத்தையாய் மாறேல்.
சோடையாய்ப் போகேல்.
தக்கார் உறவுகொள்.
தாய்போல் அன்புசெய்.
திருக்குறள் படித்திடு.
தீந்தமிழ் போற்று.
துணிவைத் துணைகொள்.
தூக்கணங் குருவிபார்.
தென்னைபோல் நன்றிசெய்.
தேவையைப் பெருக்கேல்.
தையில் விழாவெடு.
தொழிலில் மேம்படு.
தோட்டம் போடு.
நகத்தை வெட்டு.
நாவை அடக்கு.
நிரம்ப நீர்குடி.
நீண்ட மூச்சிழு.
நுண்கலை பயில்.
நூற்களும் கற்றுவை.
நெல்லைப் பெருக்கு.
நேரும் இடர்வெல்.
நைந்தார்க்குத் துணைபோ.
நொய்போல் பொங்கேல்.
நோட்டம் தவறேல்.
பகலில் தூங்கேல்.
பாட்டில் மேம்படு.
பிறைபோல் நட்புசெய்.
பீர்க்குபோல் வளர்ந்திடு.
புளியைக் குறைத்திடு.
பூப்போல் மனத்தைவை.
பெற்றோரை மதி.
பேயில்லை அஞ்சேல்.
பையவே உண்ணு.
பொலிவுடன் தோன்று.
போலியைத் தெரிந்துகொள்.
மனிதனை மதித்திடு.
மான்போல் மானங்கொள்.
மிளகுநீர் பருகு.
மீள முயற்சிசெய்.
முத்துப்பல் பேண்.
மூலிகை தேடியுண்.
மெல்லிசை பழகு.
மேதையாய்ப் பயின்றுவா.
மைந்தனாய் நில்.
மொழிபோல் விழிவை.
மோர்மிக அருந்து.
வயலை வளஞ்செய்.
வாழைப் பழந்தின்.
விட்டில்போல் மாளேல்.
வீண்பொழுது போக்கேல்.
வெயிலிலும் நடந்துபோ.
வேலையைத் திருந்தச்செய்.
வையம் அறிந்துவாழ்.


ஆராய்ச்சிமணி
1
கதை
இளவல்
படம்
கோபண்ணா
என் சினேகிதி இருந்தியோட காமிராவை வாங்கி வச்சிருந்தேன் அப்பா, அதை மணி எங்கே எடுத்து வச்சிருக்கானோ?
என்ன கயல்விழி அறை முழுதும் இப்படி இருக்கு?
அவனை வளர்க்கத் தெரியாமெ வளர்த்திட்டேன். தாயில்லாப் பிள்ளை என்பதால் அளவுக்கு மீறி செல்லம் கொடுத்துக் கெடுத்திட்டேன்
சார்! சார்!!..



யாரது?
இவன் மண்டை உடைஞ்சு போச்சு... சார்!
ஐயோ பாவம்! பக்கத்து வீடுதான டாக்டர் வீடு. அங்கே அழைச்சிட்டுப் போ....
இல்லே சார் இவன் மண்டையை உடைச்சது உங்க பையன் மணி
ஐயோ! அவனா உடைச்சான்? சரி சரி வாங்க முதல்லே டாக்டர் வீட்டுக்குப் போவோம்
மிஸ்டர் திருஞானம் நல்லவேளை, பெரிய காயம் ஏதுமில்லை! எதுக்கும் நீங்க மணியைக் கண்டிச்சு வைக்கணும்
M.B.,B.S.
நாங்க வர்றோம் சார்...!
டாக்டர், உங்களுக்குத் தெரியாதா? நானும் எவ்வளவோ கண்டிச்சுப் பார்த்துட்டேன். அவன் திருந்துவதா இல்லை... எனக்கு இப்படி ஒரு மகன் வேணுமா?
திருஞானம்! ஒரு தந்தையினுடைய வேதனையை என்னாலே நல்லா உணரமுடியுது... அதனாலேதான் உங்களிடம் சில விஷயங்களை மறைச்சிருக்கேன்!
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் பொ.ப.து. இராமநாதபுரம் வட்டம், மதுரை

ந. க. எண் 3484/72 நாள் 19-3-1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நிலஉரிமை பெற்றோர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 26-4-1972ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் அரக்கு முத்திரையிட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் கொங்காரத்தி மற்றுமுள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர் வசதி அளிப்பதற்காக கல்லணை முகவாயிலிருந்து வரத்துக்கால் வெட்டி சிறுமருதூர் கால்வாயில் சேர்த்தல்.

ஒப்பந்தவகை—கே2.

கட்டுத் தொகை—3,540 (ரூபாய் மூன்றுஆயிரத்து ஐநூற்று நாற்பது மட்டும்).

ஒப்பந்தப் புள்ளி விலை (வரி உட்பட)—ரூ. 20.70.

வேலை முடிக்க வேண்டிய காலம்—12 மாதங்கள்.

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 26-4-1972 அன்று மாலை 4-30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தத்திற்கான தொகை ரூ. 20.70ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை-1 என்ற விலாசத்தில் மனு செய்தால் மேற்படி வேலைக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப் படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ பி.டபிள்யு.டி 111 ஓ.ஆர் என்ற கணக்குத் தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொதுப்பணித் துறை, தேவகோட்டை கோட்டம், தேவகோட்டை அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கான ரூ. 0.70 ஐ "12 விற்பனைவரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித் தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும் பொழுது உறையின் மேல் வேலையின் பெயரும் கருவூலத்தின் ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பத்திரத்தில் தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித் துறை) இராமநாதபுரம் பெருவட்டம் மதுரை அலுவலகத்தில் 17-4-1972 முதல் 24-4-1972 வரை விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 24-4-1972 மாலை 5 மணிக்குள் வந்து சேரவேண்டும். இதற்குப்பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத் துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இது போன்ற செயல் இத் துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச்செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிட மிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள் தமிழ்நாடு மின்சார வாரியத் கடன் பத்திரங்கள், அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு இவற்றில் எது குறைவாகவோ உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச்செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமான வரி விற்பனை வரி முதலியவைகளை செலுத்தியதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதாரர்கள் பங்கு எடுத்துக்கொண்டால் டிபுடி தாசில் தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து, சொத்து உரிமை சர்டிபிகேட்டும் இத்திட்டத்தில் பயன் பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். கட்டுத்தொகை செலுத்தாமலோ அல்லது இவ் வலுவகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டு கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

கே. எஸ். இராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித்துறை.

(த. 42)

## ஸ்ரீரங்கம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 28-4-1972-ம் தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விவரம். | மதிப்பீடு. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. புளி மண்டபம் வீரேஸ்வரம் ரோடுக்குத் தார் போடுவது. | 8,000 | 200 |
| 2. அம்மாமண்டபம் புதுத் தெருவிற்குத் தார் போடுவது. | 4,700 | 125 |
| 3. மேலூர் பள்ளிக்கூடத்தின் கூரைப் பகுதியை எடுத்துவிட்டு ஓடு போட. | 3,000 | 75 |
| 4. திருவானைக்காவல் தெற்கு உள் வீதி பிரம்ம தீர்த்தங்கரை சாக்கடை கட்டுதல். | 4,500 | 115 |
| 5. சன்னதி வீதியின் தென்புறம் புது சாக்கடை கட்டி பழைய சாக்கடையை மராமத்து செய்தல். | 3,600 | 100 |
| 6. மேல விபூதி பிரகாரத்தில் பழைய பெண் கல் கக்கூசிற்கருகில் மண்தரை கக்கூஸ் கட்டுதல். | 2,700 | 75 |

எம். ஜி. நம்பியார்,
ஆணையர்.

(த.13)

16-4—9

## வனத்துறை

நீலகிரி வடக்கு வனக் கோட்டம், முதுமலை வனச்சரகத்தைச் சார்ந்த தெப்பக் காட்டில் உள்ள இலாகா யானைகள் மற்றும் எருதுகளுக்குத் தேவையான கீழ்க்கண்ட உணவுப் பொருட்களை 1972—1973-ம் ஆண்டில் விநியோகம் செய்வதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கைகள் மாவட்ட வன அலுவலர், நீலகிரி வடக்குக் கோட்டம், உதகமண்டலம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண்ணும், பொருட்களின் விவரமும். | | தேவையான தோராயமான அளவு. | விலை கொடுக்கப்பட வேண்டிய யூனிட் விவரம். |
|---|---|---|---|
| 1 | அரிசி | 10,000 கிலோ | 100 கிலோவிற்கு |
| 2 | ராகி | 1,25,000 கிலோ | 100 கிலோ |
| 3 | கொள்ளு | 28,000 கிலோ | 100 கிலோ |
| 4 | உப்பு | 1,200 கிலோ | 1 கிலோ |
| 5 | வெல்லம் | 600 கிலோ | 1 கிலோ |
| 6 | தேங்காய் | 18,000 | ஒரு தேங்காய்க்கு |
| 7 | கரும்பு | 3,000 | 100 கரும்பிற்கு |
| 8 | வேப்பெண்ணெய் | 400 லிட்டர் | ஒரு லிட்டருக்கு |
| 9 | விளக்கெண்ணெய் | 400 லிட்டர் | ஒரு லிட்டருக்கு |
| 10 | மண்ணெண்ணெய் | 400 லிட்டர் | ஒரு லிட்டருக்கு |
| 11 | கற்பூரம் | 30 கிலோ | ஒரு கிலோவிற்கு |
| 12 | பூண்டு | 30 கிலோ | ஒரு கிலோவிற்கு |
| 13 | யானைப்பிசின் (Diccamalli) | 30 கிலோ | ஒரு கிலோவிற்கு |
| 14 | பருத்தி விதை | 1,200 கிலோ | ஒரு கிலோவிற்கு |
| 15 | வைக்கோல் | 6,000 கிலோ | 100 கிலோவிற்கு |

ஒப்பந்தப் புள்ளி அனுப்ப வேண்டிய முகவரி: மாவட்ட வன அலுவலர், நீலகிரி வடக்குக் கோட்டம், உதகமண்டலம்.

ஒப்பந்தப் புள்ளி விவரம் கிடைக்க வேண்டிய கடைசி தேதியும், நேரமும்: 22—4—1972-ம் தேதி மாலை 3 மணிக்கு முன்னதாக.

ஒப்பந்தப் புள்ளி திறக்கப்படும் நேரமும், இடமும்: மேற்படியாருடைய அலுவலகத்தில் 22—4—1972 மாலை 3-15 மணிக்கு.

ஒப்பந்தப் புள்ளி குறிப்பிட்ட பாரத்தில் அனுப்பப்படல் வேண்டும். ரூபாய் 1 செலுத்திப் பாரம் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்கள் நீலகிரி வடக்குக் கோட்ட வன அலுவலரிடமிருந்தோ அல்லது கார்குடியிலுள்ள முதுமலை வனச்சரக அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். சுப்பராயலு நாயுடு,**
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம்.

(த. 8)

## சங்கரன்கோவில் நகராட்சி

ரேடியோக்களும், ஹாரன் ஸ்பீக்கர்களும் சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் அவர்களால் 2-5-1972-ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பாரம் நகராட்சியில் ரூ. 1.03 செலுத்தி பெற்றுக்கொள்வதுடன் அனுப்பும்போது ரூ. 50 வைப்புத் தொகையுடன் அனுப்ப வேண்டும். மற்ற விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம் .

| எண். | விவரம். | எண்ணம். |
|---|---|---|
| 1 | ரேடியோக்கள் .. .. .. .. .. <br> 6 வால்வு, 4 பேண்ட், பியூர் ஏ.சி. வால்வுகள் 81 சீரியல், உட்டன் கேபினட், பிக்கப், எக்ஸ்ரா ஸ்பீக்கர் ஜாக்கட்ஸ். <br> பல மேக்குகளின் விவரம் குறிப்பிடவும். | 6 |
| 2 | ஹாரன் .. .. .. .. .. .. <br> 8 ஓம்ஸுடன் கூடிய பால்கர் யூனிட். | 6 |
| 3. | ஸ்பீக்கர் .. .. .. .. .. .. <br> 3 ஓம்ஸ் மரப்பெட்டியுடன் கூடியது 10½" எலிப்டிக்கல் பெர்மனெட் மாக்னெட். | 1 |

**வெ. ஜானகிராமன்,**
ஆணையர்.

(த. 4)

## கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28-4-1972-ம் தேதி மாலை 3 மணிவரை நகராட்சி பொதுப்பணி பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேல் உறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்கவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 28-4-1972-ம் தேதி மாலை 3-30 மணிக்கு நகராட்சி பொதுப்பணி பொறியார் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கு ஆன நிபந்தனைகள், ஷெடியூல் பாரங்கள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணி பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். (1) | பட்டியல் தொகை. (2) | கட்டுத் தொகை. (3) | ஷெட்யூல் பாரங்கள் விலை. (4) | முடிக்கவேண்டிய காலம். (5) |
|---|---|---|---|---|
| 1 சிரியன் சர்ச் ரோடு எண் 1-க்கும் ரோடு எண் 2-க்கும் தார் தளமிடும் வேலை. | 28,000 | 700 | 5.20 | 4 மாதங்கள். |
| 2 தெப்பக்குளம் வீதி எண் 1, வீதி எண் 2, வீதி எண் 3, வீதி எண் 4-க்குத் தார் தளமிடும் வேலை. | 33,000 | 825 | 7.18 | ,, |
| 3 6-வது வார்டில் சொசைட்டி ஆபீஸிலிருந்து வட பக்கமாக கிருஷ்ணசாமி நகர் ரோடிற்குத் தார் தளமிடும் வேலை. | 25,400 | 635 | 5.20 | ,, |
| 4 நஞ்சுண்டாபுரம் ரோட்டிலுள்ள சுடுகாட்டைச் சுற்றிலும் (மேற்கு பகுதி தவிர) மதில் சுவர் கட்டுதல். | 39,900 | 998 | 8.32 | ,, |

**ஆணையர்.**

(த. 2)

## சென்னை மின்சாரத் திட்டம் (விநியோகம்)

கீழ்க்கண்ட பொருள்கள் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட சாற்றுக் குறிப்பெண்ணும், தேதியும் குறியிட்ட விலை ஒப்பந்தங்கள் (Sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் எதிரே குறிப்பிட்ட தேதியில் பகல் 12 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், பொருளும். | | சாற்றுக்குறிப் பெண். | பண்டகசாலை. | சாற்றுக் குறிப்பெண் விலை (வரி உட்பட). ரூபாய். | தவணைத் தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | 33 கே. வி. 225 ச. மிலிமீட்டர் கேபிளின் மேல் மூடுவதற்கான 1 மீட்டர் நீளமுள்ள உறுதிப்படுத்தப்பட்ட (RCC) காங்கிரீட் "V" வகை டிரப்கள். | பி. 141/71 | CSK/ குக்ஸ்ரோடு | 10 | பகல் 12 மணி. 3-5-1972. |
| 2 | 33 கே. வி. 225 ச. மிலிமீட்டர் கேபிளின் மேல் மூடுவதற்கான 1 மீட்டர் நீளமுள்ள உறுதிப்படுத்தப்பட்ட (RCC) காங்கிரீட் "V" வகை டிரப்கள். | பி. 142/71 | CSK/ தண்டையார்பேட்டை. | 10 | பகல் 12 மணி 3—5—1972. |
| 3 | 33 கே. வி. 400 ச. மிலிமீட்டர் கேபிளின் மேல் மூடுவதற்கான 0.790 மீட்டர் நீளமுள்ள உறுதிப்படுத்தப்பட்ட (RCC) காங்கிரீட் "V" வகை டிரப்கள். | பி. 143/71 | CSK/ குக்ஸ்ரோடு | 10 | பகல் 12 மணி 4—5 – 1972. |
| 4 | 33 கே. வி. 400 ச. மிலிமீட்டர் கேபிளின்மேல் மூடுவதற்கான 0.790 மீட்டர் நீளமுள்ள உறுதிப்படுத்தப்பட்ட (RCC) காங்கரீட் "V" டிரப்கள். | பி. 144/71 | CSK/ தண்டையார்ப் பேட்டை. | 10 | பகல் 12 மணி 4—5—1972. |
| 5 | 33 கே. வி. 400 ச. மிலிமீட்டர் கேபிளின்மேல் மூடுவதற்கான 0.790 மீட்டர் நீளமுள்ள உறுதிப்படுத்தப்பட்ட (RCC) காங்கிரீட் "V" வகை டிரப்கள். | பி. 145/71 | CSK/ மைலாப்பூர் | 10 | பகல் 12 மணி 4—5—1972. |
| 6 | வார்ப்பு இரும்பு குழாய் 228.6 மிலிமீட்டர் (9") விட்டமும் நீளம் 1.8288 மீட்டர் (6'). | பி. 146/71 | CSK/ குக்ஸ்ரோடு | 10 | பகல் 12 மணி 5—5—1972. |
| 7 | வார்ப்பு இரும்புக் குழாய் 228.6 மிலிமீட்டர் (9") விட்டமும் நீளம் 1.8288 மீட்டர் (6'). | பி. 147/71 | CSK/ மைலாப்பூர் | 10 | பகல் 12 மணி 5—5—1972. |
| 8 | போர்விலினால் செய்யப்பட்ட 200 ஆம்பியர்/500 வோல்ட் தாங்கும் சக்தியுள்ள ப்யூஸ் யூனிட்டுகள். | பி. 148/71 | CSK/ மைலாப்பூர் | 10 | பகல் 12 மணி 6—5—1972. |
| 9 | போர்விலினால் செய்யப்பட்ட 300 ஆம்பியர்/500 வோல்ட் தாங்கும் சக்தியுள்ள ப்யூஸ் யூனிட்டுகள். | பி. 149/71 | CSK/ மைலாப்பூர் | 10 | பகல் 12 மணி 6—5—1972. |
| 10 | போர்விலினால் செய்யப்பட்ட 500 ஆம்பியர்/500 வோல்ட் தாங்கும் சக்தியுள்ள ப்யூஸ் யூனிட்டுகள். | பி. 150/71 | CSK/ மைலாப்பூர் | 10 | பகல் 12 மணி 6—5—1972. |

ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலம் தவறி வரும் விலையொப்பங்கள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்படி பொருள்களைப் பற்றி விவரங்களும் விலைப்புள்ளிகள் குறித்து அனுப்புவதற்கு குறிப்புத்தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Copies of Specification) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு மேலே குறித்த விலைக்கு பிரதி ஒன்று ரூ. 10·00 (விற்பனை வரி உட்பட) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின் அமைப்பு, 157, அண்ணா சாலை, சென்னை-2 ( Accounts Officer, Madras Elecy. System, 157, Anna Salai, Madras-2.) என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் அவை தவற நேரிட்டால் அதற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பங்களையோ, எவ்விதக்காரணம் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பதாரர்களுக்கிடையோ ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட விலையொப்பத் தாள்களும், ஒப்புச் சாற்றுக் குறிப்பும் பிரதிகளும் மற்றொருவர் பயன்படுத்துவது செல்லாது. அரசாங்கக் கடன் பத்திரங்களையோ அல்லது மின்சார வாரிய பாண்டு (Board Bonds) களையோ கட்டுத் தொகைக்கு ஈடாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கடடுத் தொகை ( Earnest Money Deposit ) இல்லாமல் அனுப்பப்படும் விலை ஒப்பந்தங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு ஒப்புச் சாற்றுக் குறிப்புக்கும் கட்டுத் தொகை ரூ. 1,000 (Rs. one thousand only) கட்ட வேண்டும்.

பணச் செக்குகள் (Cheques) கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆங்கிலத்திலுள்ள ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள்தான் (Copies of Specification-only) விற்கப்படும்.

ச. சபாபதி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை மின்சாரத் திட்டம், சென்னை-2.

(த. 25)



16-4—9எ

## வேலே மற்றும் பயிற்சித் துறை, சென்னை—5

1972-ம் ஆண்டு ஜூலை மாதம் கீழ்க்கண்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் மற்றும் தொழில்களில், பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழில்களில் நடைபெறும் அகில இந்தியத் தேர்வுக்காகச் சேர்க்கை விண்ணப்பங்கள் தனிப்பட்ட மாணவர்களிடமிருந்து ( Private candidates ; வரவேற்கப்படுகின்றன. தொழில் தேர்வு நடைபெறவிருக்கும் தொழில் பயிற்சி நிலையம் மற்றும் எந்த எந்தத் தொழில்களில் தேர்வு நடத்தப் படும் என்னும் விவரங்கள் ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்தின் எதிரில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயரும். | தொழில். |
|---|---|
| 1 வட சென்னை, சென்னை-21 .. .. .. .. | 1, 3, 6, 8, 10, 11, 12, 14, 16, 17, 19, 23, 24மற்றும் 25. |
| 2 கிண்டி, சென்னை-32 .. .. .. .. .. | 10, 12, 18, மற்றும் 22. |
| 3 செங்கல்பட்டு .. .. .. .. .. | 4, 9, 10, 11, 12, 14, 15, 16, மற்றும் 17. |
| 4 கடலூர் .. .. .. .. .. .. | 1, 6, 10, 11, 12, 16, மற்றும் 17. |
| 5 வேலூர் .. .. .. .. .. .. | 3, 4, 9, 10, 11, 12, 16, 17, 21 மற்றும் 23. |
| 6 நாகப்பட்டினம் .. .. .. .. .. .. | 6, 10, 11, 12, 16, மற்றும் 17. |
| 7 தஞ்சாவூர் .. .. .. .. .. .. | 1, 3, 4, 10, 12, 14, மற்றும் 16. |
| 8 திருச்சி .. .. .. .. .. .. | 4, 6, 9, 10, 12, 16, 17, மற்றும் 21. |
| 9 திண்டுக்கல் .. .. .. .. .. .. | 5, 10, 11, 12, 16, மற்றும் 17. |
| 10 மதுரை .. .. .. .. .. .. | 1, 3, 4, 6, 9, 10, 11, 12, 16, 17, 20, 21, 25, 28, 29, மற்றும் [illegible] |
| 11 பேட்டை, திருநெல்வேலி-4 .. .. .. .. | 4, 6, 10, 11, 12, 15 மற்றும் 16. |
| 12 நாகர்கோவில் .. .. .. .. .. .. | 4, 10, 11, 12, 19, மற்றும் 23. |
| 13 கோயம்புத்தூர் .. .. .. .. .. .. | 3, 4, 6, 9, 10, 11, 12, 13, 14, 16, 21 மற்றும் 26. |
| 14 சேலம் .. .. .. .. .. .. .. | 1, 4, 6, 10, 11, 12, 13, 14, 16, 17, மற்றும் 21. |
| 15 அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்(மகளிர், ஸ்ரீ சேவா மந்திர்) சென்னை-17. ... | 28, 30, 31, 32 மற்றும் 33. |
| 16 அம்பத்தூர், சென்னை-53 .. .. .. .. | 2, 4, 9, 10, 12, 20, 21 மற்றும் 26. |
| 17 தூத்துக்குடி .. .. .. .. .. .. | 7, 8, 10, 12, 16, 17 மற்றும் 21. |
| 18 அரியலூர் .. .. .. .. .. .. | 11, 24, மற்றும் 27. |
| 19 காரைக்குடி .. .. .. .. .. .. | 10, 11, 12 மற்றும் 16. |
| 20 ஹோசூர் .. .. .. .. .. .. | 4, 10, 11, 12, 16 மற்றும் 17. |

### பொறியியல் தொழில்

1 கருமான் (Blacksmith).
2 கட்டட நிர்மாணம் செய்பவர் (Building Constructor).
3 தச்சர் (Carpenter).
4 கம்மியர் (மோட்டார் வண்டி) Mechanic (Motor Vehicle).
5 கம்மியர் (டீசல்) Mechanic (Diesel).
6 அச்சு வார்ப்பவர் (Moulder).
7 வர்ணம் அடிப்பவர் (Painter).
8 குழாய் பொருத்துபவர் (Plumber).
9 உலோகத் தகடு வேலேயாள் (Sheet Metal Worker).
10 பற்றவைப்பவர் (காற்றைச் செலுத்திப் பற்றவைத்தல் , மின் சக்தியினுல் பற்றவைத்தல் Welder (Gas and Electric).
11 கம்பியாள் (Wireman).
12 பொறிப் பகுதி பொருத்துபவர் (Fitter).
13 இயந்திர வேலேயாள் (அரைக்கும் இயந்திரம்) Machinist (Grinder).
14 இயந்திர வேலேயாள் (மில்லர்) Machinist (Miller).
15 இயந்திர வேலேயாள் (உருவாக்கும் இயந்திரம், துவாரம் போடும் இயந்திரம், ப்ளேவர்) Machinist (Shapper, Slotter and Planner).
16 கடைசல் பிடிப்பவர் (Turner).
17 இயந்திர வேலேயாள் Machinist (Composite).
18 கைக்கடியாரம், சுவர்க்கடியாரம் செய்பவர் (Watch and clock Maker).
19 மின் முலாம் பூசுபவர் (Electro-plater).
20 கம்மியர் (கருவிகள்) Mechanic (Instrument).
21 மின்சாரப் பணியாளர் (Electrician).
22 கம்மியர் (குளிர்ப்பதனம், தட்பவெப்ப நிலேயைக் கட்டுப்படுத்துதல்) Mechanic (Refrigeranation and Air-conditioning).
23 கட்டடப் பட வரைவாளர் Draughtsman (Civil).
24 இயந்திரப் பட வரைவாளர் Draugtsman (Mechanical).
25 மாதிரியமைப்புச் செய்பவர் (Pattern Maker).
26 கம்மியர் (வானொலி, டெலிவிஷன்) Mechanic (Radio and Television).
27 கம்மியர் (இயந்திரக் கலப்பை) Mechanic (Tractor)

### பொறியியல் அல்லாத தொழில்

28 புத்தகம் கட்டுதல் (Book-Binding).
29 கையால் அச்சுக் கோர்த்தல், படி திருத்துதல் (Hand Composing and Proof Reading)
30 நேர்த்தியான வேலேப்பாடுகள் கொண்ட துணிகளின் நெசவு வேலே (மகளிர்) Handweaving of fancy and furnishing fabrics.
31 பூத்தையல், தையல் வேலே (மகளிர்) Embroidery and Needle Work.
32 துணி வெட்டுதல், தையல் வேலே செய்தல் (மகளிர்) Cutting and Tailoring.
33 சுருக்கெழுத்து, தட்டச்சுமுறை (ஆங்கிலம்) Stenography (English).

எ. தகுதி—1.

தொழில் வரிசை எண் 1 முதல் 17 மற்றும் 27 முதல் 32 ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்க உள்ளவர்கள் பள்ளி இறுதித் தேர்வு வகுப்புக்கு அல்லது அதற்குச் சமமான படிப்புக்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் வரையில் படித்திருக்க வேண்டும். வரிசை எண் 18-க்குப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு அல்லது அதற்குச் சமமான படிப்பு வரையில் படித்திருக்க வேண்டும். வரிசை எண் 19 மற்றும் 33-க்குப் பள்ளி இறுதித் தேர்வு அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும். வரிசை 20 முதல் 22-க்கு விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும். மற்றும் வரிசை எண் 23 முதல் 26-க்கு விருப்பப் பாடங்களாக விஞ்ஞானத்துடன் கணிதத்தையும் எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமானதொரு தேர்வில் தேறியிருக்க வேண்டும்.

2. விண்ணப்பதாரர்கள் எந்தத் தொழிலில் அவர்கள் தேர்வு எழுத விரும்புகிறார்களோ அந்தத் தொழிலில், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலையில் அல்லது தொழில் நிறுவனத்தில் குறைந்த பட்சம் மூன்று வருடம் நிரந்தர ஊழியராகப் பணி புரிந்த செய்முறை அனுபவம் இருத்தல்வேண்டும். எல்லா விண்ணப்பதாரர்களும் பணியின் விவரம் மற்றும் அவர்கள் பணி புரிந்த காலம் ஆகியவற்றிற்கு வேலை கொடுப்பவரால் (**Employer**) உறுதி கையொப்பமிடப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். தவறினால், அவர்களுடைய மனு நிராகரிக்கப்படும். உதவியாளர்கள் (**Helpers, mates**) மற்றும் அப்ரெண்டிஸ்கள் (**Apprentices**) இந்தத் தேர்வு எழுதத் தகுதியாகமாட்டார்கள். தேவையான கல்வித் தகுதி, தொழில் மற்றும் தொழிலில் போதனை இவைகளில் குறைந்தது மூன்று வருட அனுபவம் உள்ள நபர்கள் சம்பந்தப்பட்ட தொழிலில் தனிப்பட்ட மாணவர்களாகத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்பில் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்து அவர்கள் தொழில் தேர்வு பெறவிருக்கும் சம்பந்தப்பட்ட தொழிலில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழிற் கூடத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகள் செய்முறை அனுபவம் பெற்றிருந்தால் அவர்கள் தகுதியைப் பொருட்படுத்தாது தனிப்பட்ட மாணவர்களாக அனுமதிக்கப்படுவார்கள். கைவினைஞர்களுக்கான பயிற்சித் திட்டத்தின் படி (18 மாதப் பயிற்சி) தேர்ச்சியடையாத விண்ணப்பதாரர்கள் தொழிற்சாலையில் செய்முறை அனுபவம் பெற்றிருந்தால் இவர்கள் தேர்விற்குத் தனிப்பட்ட மாணவர்களாக அனுமதிக்கப்படுவர். 1961-ஆம் ஆண்டு அப்ரெண்டிஸ் சட்டத்தின்படி தேசியத் தொழில் பயிற்சிச் சான்றிதழ்கான தொழில் தேர்வில் மூன்று முறையும் தேர்ச்சி பெறாத அப்ரெண்டிஸ்கள் (நேஷனல் கவுன்ஸில் பார் டிரெயினிங் இன்வொக்கேஷனல் டிரேட்) ( **National Council for Training invocational trades** அளிக்கப்பட்ட நேஷனல் டிரேட்டினல் சர்டிபிகேட் தேர்விற்கு முன்னால் தேர்ச்சி பெறாத அப்ரெண்டிஸ்களுக்கு மட்டுமே இது பொருந்தும்) தேர்விற்குத் தனிப்பட்ட மாணவர்களாக அனுமதிக்கப்படுவார்கள்.

3. 1—7—1972 அன்று விண்ணப்பதாரர்களுக்கு வயது 21 வருடங்களுக்குக் குறைவாக இருக்கக்கூடாது. மாலை நேர வகுப்புச் சர்டிபிகேட்டுகளுடன் கூடிய தொழிலாளர்கள் தேர்ச்சி பெறாத அப்ரெண்டிஸ்கள்,தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பழைய பயிற்சியாளர்கள் ஆகியவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது.

(பி) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பப்பாரத்துடன் தேர்வுக் கட்டணமாக ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) செலுத்த வேண்டும். இது சம்பந்தப்பட்ட விவரங்களைபெற 20 காசு, 5 காசு (அகதிகளுக்காக) தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட தபால் உரையை அனுப்பி சம்பந்தப்பட்ட முதல்வரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மாலை நேர வகுப்புச் சான்றிதழ் உள்ளவர்கள் தேர்வுக் கட்டணமாக ரூ. 5 (ஐந்து) செலுத்த வேண்டும்.

(சி) புது டெல்லி தொழில்கள் சம்பந்தப்பட்ட பயிற்சிக்கான தேசிய மன்றம் சார்பாகத் தொழில் தேர்விற்கான பகுதிகள் வெளியிடப்படும். இதனை அருகிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய முதல்வரிடமிருந்து பார்வைக்குப் பெற்றுக் கொள்ளலாம். எந்தவிதக் காரணமின்றி விண்ணப்பப் பாரங்களை நிராகரிக்கவும் அல்லது தான்தேர்ந்தெடுத்துள்ள நபரைத் தவிர வேறு ஒரு விண்ணப்பதாரரைத் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொழில் தேர்விற்கு அனுமதிக்கவும் சென்னை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

தேவையான விவரங்கள் குறிப்பிடப்படாத அல்லது சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. மேற்சொன்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் செலுத்திய தேர்வுக் கட்டணம் திருப்பித்தரப்படமாட்டாது.

தொழில் தேர்விற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு தேர்விற்குரிய சரியான நேரம், தேதி போன்றவைகளைச் சம்பந்தப்பட்ட முதல்வர்கள் பிறகு தெரிவிப்பார்கள்.

தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, புது டெல்லி தொழில்கள் சம்பந்தப்பட்ட பயிற்சிக்கான தேசிய மன்றம் சார்பாகத் தொழில் தேர்வில் அளிக்கப்படும் சான்றிதழ்கள் அளிக்கப்படும். தேவையான விவரங்களுடன், பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களிடம் வந்து சேருவதற்கான கடைசித் தேதி 5—5—1972.

**இயக்குநர்,**
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
சேப்பாக்கம், சென்னை-5.

(த. 32)

---

## மறு ஒப்பந்தப் புள்ளி

## தென்காசி நகராட்சி

டெ. எண். 1./71–72.

1972–73–ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்டவிவரப்படி அயிட்டம் வாரியாக சாமான்களை சப்ளை செய்ய தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களால் 28–4–1972–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட கவர்களில் ஒப்பந்தங்கள் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4–30 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பகிரங்கமாய் உடைக்கப்படும். அவ்வமயம் ஒப்பந்ததாரர்களோ அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளோ நேரில் ஆஜராகலாம். மேற்படி ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளையும் மற்ற விவரங்களையும் தெரிந்துகொள்ள விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் தெரிந்துகொள்ளலாம்.

### விவரம்

| அயிட்டம் எண். | சப்ளை இனம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | லைப்பாய், நஹான் சோப்பு சப்ளை செய்தல் .. | 10 |
| 2 | பாரங்கள், பதிவேடுகள், நோட்டீஸ்கள் அச்சடித்தல் | 150 |
| 3 | பொதுப்பணி, தண்ணீர் வினியோகப்பிரிவிற்குத் தேவையான பிரம்புக் கூடைகள், பிரஷ் & டேப் சப்ளை செய்தல். | 15 |

**ம. சண்முகம்,**
ஆணையர்.

(த. 11)

## நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை
## திருநெல்வேலி வட்டம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெடியூல் ஒப்பந்தங்களை கண்காணிப்புப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) திருநெல்வேலி, அவர்கள் இலக்கம் 18, திருச்செந்தூர் சாலை, திருநெல்வேலி-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 3—5—1972 அன்று பிற்பகல் 3.00 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தினத்தன்று பிற்பகல் 3.15 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை டெபாசிட் ரூபாய். | ஷெடியூல் கிடைக்குமிடம். |
|---|---|---|---|
| 1 | பரமக்குடி கீரந்தை சாலை அபிவிருத்தி வேலை கி.மீ. 0.0 முதல் 5.00 வரை .. .. .. | 4,150 | கோட்டப்பொறியாளர் (நெ.ஊ.ப.) சிவகங்கை |
| 2 | ஷை கி.மீ. 5.00 முதல் 9.20 வரை .. .. .. .. | 4,190 | ஷை |
| 3 | ஷை கி.மீ. 9.20 முதல் 13.00 வரை .. .. .. .. | 4,450 | ஷை |
| 4 | ஷை கி.மீ. 13.00 முதல் 18.00 வரை .. .. .. .. .. | 5,730 | ஷை |
| 5 | ஷை கி.மீ. 18.00 முதல் 22.00 வரை .. .. .. .. .. | 4,685 | ஷை |
| 6 | ஷை கி.மீ. 22.00 முதல் 25.60 வரை .. .. .. .. .. | 5,345 | ஷை |
| 7 | தென்காசி மதுரைச் சாலை கி.மி. 3.8 முதல் 16.00 வரை சாலையை அகலப்படுத்தும் வேலை .. | 6,650 | கோட்டப் பொறியாளர், (நெ. ஊ. ப.) திருநெல்வேலி தெற்கு. |
| 8 | ஷை கி.மீ. 16.00 முதல் 23.05 வரை சாலையை அகலப்படுத்தும் வேலை | 5,625 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் 20.75 வீதம் தொகை செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் மேலே குறிப்பிட்டுள்ள கோட்டப் பொறியாளர் அலுவலகங்களின் மேலாளர்களிடமிருந்து 20—4—1972 முதல் 2—5—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், பிளான்கள் முதலியனவற்றைப் பெறலாம். இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட் மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெ. ஊ. ப. து.) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்தியதற்கான கருவூலச் சீட்டுகளை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெடியூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு கியாரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகள் சமர்ப்பிக்கும்போது ரிசர்வ் பேங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப் படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

(த. 31)

**தி. ப. கந்தசுவாமி,**
கண்காணிப்புப் பொறியாளர்,
நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை,
திருநெல்வேலி-2.

---

## சேலம் வீட்டு வசதிப் பிரிவு
(தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கிளை)
எண். 1/71–72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21—4—1972-ம் நாள் பிற்பகல் 3–00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப்புள்ளி நமூனாக்களைக் கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் 13—3—1972-ம் நாளி லிருந்து 20—4—1972-ம் நாள் வரை காலை 10-30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பிணைப்புத் தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 21—4—1972-ம் நாள் பிற்பகல் 1-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். வந்து சேரும் ஒப்பந்தப்புள்ளிகளை 21—4—1972-ம் நாள் பிற்பகல் 3.30 மணியளவில் ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் நிருவாகப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

### தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் நீதிபதி மாளிகைப் பகுதி—சேலம்

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | வேலையின் சுமார் மதிப்பு. ரூபாய். | பிணைப்புத் தொகை ரூபாய். | நமூனாக்களின் விலை ரூபாய். |
|---|---|---|---|
| 1 இருபது குடியிருப்புக்களுக்கான இரண்டு அறை கொண்ட இரண்டு அடுக்குக் கட்டடங்கள் ஐந்தும், இருபது குடியிருப்புகளுக்கான சிறிய இரண்டு அறை கொண்ட இரண்டு அடுக்குக் கட்டடங்கள் ஐந்தும், மற்றும் எழுபத்தாறு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட இரண்டு அடுக்குக் கட்டடங்கள் பத்தொன்பதும் உள்ளிருப்பு வசதிகளுடன் கட்டுவது. | 6,27,500 | 9,420 | 20 மற்றும் விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதம் |

அலுவலகம் :
11/22, திவான்பகதூர் சாலை,
இரத்தினச் சபாபதிபுரம் (அஞ்சல்),
கோயம்புத்தூர்-2.

**பி. செங்கோடன்,**
நிருவாகப் பொறியாளர்,
சேலம் வீட்டு வசதிப் பிரிவு.

(த. 18)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக்கழகம் சார்பில் கட்டடப் பொறியாளரால் வரும் மூன்று வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துக்கழகம் தியாகராயநகர் பேருந்து நிலயத்திலுள்ள கடை நம்பர் 2-ஐ புத்தகங்கள் விற்பதற்கு ''குத்தகைக்கு'' விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில் கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக்கழகம் அண்ணாசாலை, சென்னை-2 அவர்களால், ஒப்பந்தங்கள் 28-4-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாள் 28-4-1972 மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக்கழகம் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தர மாட்டாது.

மானேஜிங் டைரக்டர்.

(த.39)

## ஏல விற்பனை

"பெட்ரோலினால் இயங்கக் கூடிய—சவர்லெட்—நோயாளியை ஏற்றிச் செல்லும் வண்டி—1950-ம் வருடத்திய மாடல்—125¼"—பதிவு எண். எம். எஸ். இஸட். 6658."

மேற்கண்ட வண்டி 24-4-1972 காலை 11·30 மணியளவில் தற்போது உள்ள நிலையில் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஏலம் விடப்படும். விருப்பமுள்ள ஏலம் கோருபவர்கள் மேற்கண்ட முகவரியில் அலுவலக நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம். மற்ற விற்பனை விதிமுறைகளை நேர் முகமாகவோ எழுத்து மூலமாக மேற்கண்ட அலுவலகத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எழுத்து மூலமாக கேட்டால், அத்துடன் அவர்கள் முகவரி எழுதிய உறை ஒன்று சேர்த்து அனுப்பப்படவேண்டும்.

கண்காணிப்பாளர்,
தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
தஞ்சாவூர்-4.

(த.21)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் மூன்று வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், அய்யனாவரம் பணிமனையில், கடை நம்பர் 3-ஐ வெற்றிலைப் பாக்கு வியாபாரம் செய்வதற்காக, குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2, ஒப்பந்தங்கள் 29-4-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாள் 29-4-1972 மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில், எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தர மாட்டாது.

மானேஜிங் டைரக்டர்.

(த.30)

## ஏல விளம்பரம்

### வனத்துறை

மதுரை தெற்கு வனக்கோட்டம்,
மதுரை-20.

மதுரை தெற்கு வனக்கோட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட விற்கப்படாத மற்றும், ரத்துச் செய்யப்பட்ட ஏலமுச்சலிக்கா காடுகள், மதுரை தெற்குக் கோட்ட, மாவட்ட வன அலுவலர் அவர்களால் 15-5-1972-ம் தேதி காலை 11 மணிக்கு மதுரை தெற்குக் கோட்ட வன அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு இவ்வலுவலகத்திற்கு அல்லது கம்பம் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

இரா. செல்லையா,
மாவட்ட வன அலுவலர்.

மதுரை-20,

(த.28)

## ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தள்ளுபடி செய்யப்பட்ட போலீஸ் மோட்டார் சைக்கிள் 22-5-1972 அன்று காலை 11 மணிக்குத் தென்னார்க்காடு மாவட்ட போலீஸ் அலுவலகம், கடலூர்புதுநகரில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

2. மோட்டார் சைக்கிள்—சோலோ ராயல் என்பீல்டு—1965 மாடல் உடையது.

இவ்வண்டியைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 10-30 மணி முதல், மாலை 5 மணி வரை இவ்வலுவலகக் கட்டடத்தில் ஆயுதப்படை கூடுதல் ஆய்வாளர் முன்னிலையில் பார்வையிடலாம்.

இதர விவரங்கள் வேண்டுமானால் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. வெ. சுப்ரமணியம்,
காவல் கண்காணிப்பாளர்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

(த.27)

## ஏல விற்பனை

செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் தாலுகா ஈக்காடு ஊராட்சி ஒன்றியம் வெள்ளியூர் கிராமம் ஏரிக்கரையிலிருக்கும் (ச. எண்: 274) சுமார் 270 டன் எடையுள்ள கருவேல மரங்களை மேற்படி கிராமத்தில் திருவள்ளூர் உதவி ஆட்சித் தலைவர் அவர்களால் அல்லது உதவி ஆட்சித் தலைவர் திருவள்ளூர் அவர்களால் நியமிக்கப்பட்ட நபரால் 24-4-1972 காலை 10 மணிக்கு ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளையும் மற்றத் தகவல்களையும் திருவள்ளூர் உதவி ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் நேரிடையாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

அ. கு. ரஸ்தோகி,
உதவி ஆட்சித் தலைவர், திருவள்ளூர்

(த.17)

## ஒப்பந்தப் புள்ளி

### மாவட்ட நூலக ஆணைக்குழு

திருச்சிராப்பள்ளி-2.

திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக ஆணைக்குழுவின்கீழ் இயங்கி வரும் மாவட்ட மத்திய நூலகத்தில் (காமராஜ் மன்றம், மேலப் புலிவார்டு ரோடு, திருச்சி-2) 12,951 கிலோகிராம் எடையுள்ள பழைய பத்திரிகைகளும், 2,807 கிலோ கிராம் எடையுள்ள பழைய சஞ்சிகைகளும் விற்பனைக்காக உள்ளது. இந்த பழைய பத்திரிகை சஞ்சிகைகளை விற்பனைக்கு எடுத்துக்கொள்ள விரும்புபவர்கள் ரூ. 250-ஐ கட்டுத்தொகையாக நூலகநிதியில் P II District Library Fund அரசுக் கருவூலத்தில், லோக்கல் பண்ட் சலான் மூலம் கட்டிவிட்டுச் சலானுடன் தங்களுடைய ஒப்பந்தப் புள்ளியையும் சேர்த்து மூடிமுத்திரையிட்ட உறையில் "தலைவர், மாவட்ட நூலக ஆணைக்குழு, திருச்சி-2" என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சல் அத்தாட்சி மூலம் 29-4-1972-ம் தேதி மாலை 5.00 மணிக்குள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவரின் சரியான முகவரி இருக்கவேண்டும். மேலும் 100 கிலோ பழைய பத்திரிகையை என்ன விலைக்கும், 100 கிலோ பழைய சஞ்சிகைகளை என்ன விலைக்கும் எடுத்துக் கொள்ளப்படும் என்ற தகவலையும் தெரிவிக்கவேண்டும்.

பழைய பத்திரிகை சஞ்சிகைகளைப் பார்க்க விரும்புகின்றவர்கள் திருச்சி மாவட்ட மத்திய நூலகத்தில் பணி நேரத்தில் பார்த்துக் கொள்ளலாம். மற்ற நிபந்தனைகளையும் அங்கேயே தெரிந்துகொள்ளலாம்.

பி. முருகையன்,
தலைவர்,
மாவட்ட நூலக ஆணைக்குழு, திருச்சி-2.

(த.6)

## ஒப்பந்தப் புள்ளி

## பொள்ளாட்சி நகராட்சி

ந.மு.க. இ1/15116/70.

கீழ்க்காணும் வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 29–4–1972 மாலை 4–00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4–30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் ஆணையர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் வரைபடங்கள் விதி முறைகள் வேண்டுவோர் ரூபாய் 30–ம் விற்பனை வரி ரூபாய் 3½ சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 26–4–1972 தேதி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு நகராட்சி மராமத்துத் பொறியர் அவர்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

கட்டின் நடப்பு எண்.—இ1/15116/70.

வேலை விவரம்.— காட்டூர் ரோடிலுள்ள தெப்பக்குளம் வழி ஆரம்பப்பள்ளிக்கு புதிய பள்ளிக் கட்டடம் கட்டுதல்.

மதிப்பீட்டுத் தொகை.—ரூ. 1,15,586.

முன்வைப்புத் தொகை.—ரூ. 2,890.

வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.—6 மாதம்.

ஆணையர்.

(த.15)

## ஒப்பந்தப் புள்ளி

## இராசிபுரம் நகராட்சி

இந்த நகராட்சிக்கு இரண்டு 18" பெடஸ்டல்காற்றுடிகள் சப்ளை செய்ய 29–4–1972-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். விவரங்கள் அலுவலகத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

(த. 9)

## ஒப்பந்தப் புள்ளி

## திருவண்ணாமலை நகராட்சி

கீழ்க்கண்ட இனங்களுக்குத்தேவையான பொருள்கள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் ஆணையரால் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் 29–4–1972 ஆம் தேதி மாலை 4–00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் நகராட்சி அலுவலகத்தில் 29–4–1972 தேதியன்று மாலை 4–30-க்கு திறக்கப்படும். மேற்கொண்டு விவரங் களுக்கு ஆணையருக்கு எழுதி அல்லது நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

(1) நகராட்சி லாரிக்கு 6 வோல்ட் 19 பிளேட் பேட்டரிகள்—4 எண்கள் சப்ளை செய்ய.

(2) மின்சார சாமான்கள் சப்ளை செய்தல் மதிப்பீடு ரூ. 3,000.

டி. எ. பி. இராமகிருஷ்ணன்,
ஆணையர்.

(த.10)

## ஒப்பந்தப் புள்ளி

## நாகர்கோவில் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு தாழையூத்து சிமிண்ட் தொழிற்சாலை அல்லது ஆலங்குளம் சிமிண்ட் தொழிற்சாலையிலிருந்து நாகர்கோவில், கிருஷ்ணன் கோவிலிலுள்ள நகராட்சி பொருள் சேமிப்புக் கிடங்கிற்கு சிமிண்ட் மூட்டைகள் கொண்டு வந்து சேர்ப்பதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 28–4–1972 மாலை 4–00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஏனைய விவரங்கள் நகராட்சிப் பொறியர் அவர்களிடம் நேரில் தெரிந்துகொள்ளலாம்.

பொறுப்புத் தொகை.—ரூ. 100.

தாழையூத்திற்கும் ஆலங்குளத்திற்கும் தனித்தனியே பொறுப்புத் தொகை ரூ. 100 கட்டி நிரக்கும் தனியாக கொடுக்க வேண்டும்.

பி. தங்கவேலு,
ஆணையர்.

(த. 14)

## மர ஏல விற்பனை

## வனத் துறை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கீழ்க்கண்ட மரக் கிடங்குகளில் நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

| இடம். | நாள். |
|---|---|
| மத்திய மரக்கிடங்கு, கார்குடி, பாதை ஓரமுள்ள மரக்கிடங்கு, தொரப்பள்ளி. | 19–4–1972 காலை 9 மணிக்கு. |

மரங்களின் அளவு (தோராயமாக)

| | | |
|---|---|---|
| 1 | தேக்கு .. .. .. .. | 250 கன மீட்டர். |
| 2 | மத்தி .. .. .. .. | 200 ,, |
| 3 | தடசு .. .. .. .. | 10 ,, |
| 4 | ஹொன்னே .. .. .. | 40 ,, |
| 5 | நந்தி .. .. .. .. | 15 ,, |
| 6 | ஈட்டி .. .. .. .. | 10 ,, |

| இடம். | நாள். |
|---|---|
| மத்திய மரக்கிடங்கு, சேரம்பாடி .. | 25–4–1972 காலை 9 மணிக்கு. |

மரங்களின் அளவு (தோராயமாக)

| | | |
|---|---|---|
| 1 | அயினி .. .. .. .. | 200 கன மீட்டர். |
| 2 | வெண் தேக்கு .. .. | 150 ,, |
| 3 | நாவல் .. .. .. | 40 ,, |
| 4 | வேங்கை .. .. .. .. | 40 ,, |
| 5 | பில்லு மருது .. .. .. | 40 ,, |
| 6 | வாகை .. .. .. .. | 20 ,, |
| 7 | ரெட்சிடர் .. .. .. .. | 20 ,, |
| 8 | ஈட்டி .. .. .. .. | 10 ,, |

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலருக்கோ அல்லது வனச்சரக அலுவலர், முதுமலை சரகம், கார்குடி அவர்களுக்கோ அல்லது வனச்சரக அலுவலர், சேரம்பாடி வனச்சரகம், சேரம்பாடி அவர்களுக்கோ எழுதிப் பெறவும்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குப் பிரிவு, உதகை.

(த. 12)

## அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தூத்துக்குடி-3

திருநெல்வேலி மாவட்டம்

1–5–1972 முதல் 31–7–1972 முடிய இம் மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகள் விநியோகம் செய்ய, விலைவாசி விவரங்கள் கேட்கப்படுகிறது.

விலைவாசி விவரங்கள் இவ்வலுவலகத்தில் 30–4–1972 பகல் 12–00 மணிக்கு முன்னதாக வந்து சேரவேண்டும்.

இம்மருத்துவமனைக்குத் தேவையான மருந்துப் பட்டியலை அதைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகளுடன் கண்காணிப்பாளர், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

கண்காணிப்பாளர்,
அரசு தலைமை மருத்துவ மனை,
தூத்துக்குடி.

(த. 3)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர்-வடிகால் வாரியம்

எண் : 735/எஸ்.டி. 1/71-2, தேதி : 23-3-1972

பொருள் : பொள்ளாச்சி குடிநீர் முன்னேற்றத் திட்டம் 2-வது திட்டம் —மணிக்கு 3,50,000 லிட்டர் (மணிக்குச் சுமார் 80,000 காலன்) அளவுள்ள 8 M.L.D. (சுமார் 1.80 M. G. D.) கொள்ளளவுள்ள குடிநீர் சுத்திகரிப்புக் கூடத்தினை ஆரம்பக் கட்டத்தில் நிர்மாணிப்பதும்-கவனிப்பதும், முழு சிவில் பணிகளை மேற்கொள்ளுவதும்.

பார்வை : 1. இவ்வலுவலகத்தின் ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண் : 735- S.D.I./71, தேதி 16-12-1971.

2. இவ் வலுவலக அறிவிப்பு எண்: 735/71-S.D.I. தேதி 24-1-1972.

3. இவ்வலுவலக அறிவிப்பு எண்: .735/ S.D.I./71-2, தேதி 18-2-1972.

மேற்கண்ட பணிக்காக ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசித் தேதி 21-4-1972 மாலை 3 மணி வரை, மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4 மணிக்குப் பிரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிக்கான பிற நிபந்தனைகளில் மாற்றமெதுவும் கிடையாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
கோவை-12.

(த. 40)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்டின் அலகு, தமிழ்நாடு அரசின் நிறுவனம்.)

எண் : 770-சி.டபிள்யூ-71, தேதி 20-3-1972.

மாநில-மத்திய அரசுத் துறைகளில் பதிவு செய்துள்ள 1-வது அல்லது 2-வது வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து “சாலைகளுக்குக் காங்கிரீட் போடுதல்—முதல் பகுதி” பணிக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும்.

உத்தேசத் திட்டச் செலவு மதிப்பீடு—ரூ. 2.65 இலட்சம்.
ஒப்பந்த விவரம்—முழுத் தொகை.
கட்டுத் தொகை—ஒப்பந்தப் புள்ளித் தொகையில் 2½ சத விதம்.
வேலை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல் நிலையம், ராசபாளையம் (வழி), இராமநாதபுர மாவட்டம் என்ற முகவரியில் 1-4-1972 முதல் 28-4-1972 வரை எல்லா அலுவலக நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 4-00 மணி வரை ஒவ்வொன்றிற்கும் ரூ. 10.35 (ரூபாய் பத்தும், காசு 35 மட்டும், திருப்பித் தரப்படமாட்டாது) கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

நிருவாக மேலாளர்.

(த. 19)

## தேர்வு

### அரசு அலுவலர் தேர்வுக் கழகம்

தமிழில் திறன் ஆய்வு

ஜூலை 1972

தமிழ்நாடு மாநில மட்டப் பதவிகளிலுள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ். அலுவலர்களாகவுள்ளவர்களும், தாய் மொழியாக தமிழில்லாதவர்களும், எஸ்.எஸ்.எல்.சி. அல்லது பட்டப் படிப்பில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிக்காமலும், அதில் தேர்ச்சியடையாமலிருப்பவர்களுக்கான தமிழில் திறன் ஆய்வுத் தேர்வு, 1972 ஜூலைத் திங்கள் 14, 15 தேதிகளில் தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தினால் அதன் அலுவலகத்தில் நடத்தப்படும். அதில் தேர்ச்சி அடைபவர்களுக்கு ரொக்கப் பரிசு ரூ. 1,000 கிடைக்கும். இந்தத் தேர்வுக்கு மனுப் பெறக்கூடிய கடைசித் தேதி 1972 மே 19 ஆகும். செயலாளர், தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம், அரசினர் தோட்டம், சென்னை-2 என்ற முகவரிக்கு எழுதி இதற்கான மனுவைப் பெறலாம். மேல் விவரங்களுக்கு 29 மார்ச்சு 1972 தமிழ்நாடு அரசு அரசிதழில் பாகம் 2, பிரிவு 3-ல் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினைக் காண்க.

(த. 20)

## ஒப்பந்தப் புள்ளி

### பால் வளர்ச்சித் துறை

1-5-1972 முதல் 31-3-1973 வரையுள்ள காலத்திற்கு இந்தத் திட்டத்தில் கீழ்க்கண்ட போக்கு வரத்துப் பணிக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி 1—

1. சென்னை நகரிலுள்ள மாவு ஆலைகளிலிருந்து சென்னை-51லுள்ள மாதவரம் பால் பண்ணைக்குக் கோதுமைத் தவிடு பொருட்கள் முதலியவற்றை எடுத்து வருதல்.

2. மாதவரம் பால் பண்ணையிலிருந்து மாட்டுத் தீனி, பால் பவுடர் மற்றும் பிற பொருட்களைப் பாலு செட்டிச் சத்திரம், வாலாஜாபாத், சதுவச் சேரி (வேலூருக்கருகே) பண்ணுருட்டி, மதுரை, ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லுதல்.

3. செங்கற்பட்டுக்கு அருகேயுள்ள படாளத்திலுள்ள கரும்பு ஆலைகளிலிருந்து, சென்னை-51 லுள்ள மாதவரம் பால் பண்ணைக்குக் கரும்புச் சக்கைகளைக் கொண்டு வருதல்.

4. இவை தவிர, பிற பொருட்களை (அவை சிறிதாயினும், பெரிதாயினும்) சென்னை பார்சல் அலுவலகம், மற்றும் சால்ட் கோட்டர்சிலிருந்து சென்னை-51 மாதவரம் பால் பண்ணைக்கு எடுத்து வருதல்.

ஒப்பந்தத்திற்கான முழு விவரங்கள், நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களை இந்த அலுவலகத்திலிருந்து எல்லா அலுவலக நாட்களிலும், காலை 10-30 மணியிலிருந்து மாலை 4-00 மணி வரை ரூ. 2 (இரண்டு ரூபாய் மட்டும்) மற்றும் விற்பனை வரி—சர்சார்ஜ் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் 27-4-1972 காலை 11.00 மணி வரை பெறப்படும். அதே நாள் காலை 11-15 மணிக்குப் பரிசீலிக்கப்படும்.

எம். கே. கோமேதகவேலு,
பால் தயாரிப்பு-பால் வளர்ச்சி ஆணையர்,
சென்னை-51.

(த. 35)

## ஒப்பந்தப் புள்ளி

### பால் வளர்ச்சித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், 16 எம்.டி. நெய் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் இதன் மூலம் வரவேற்கப்படுகின்றன.

2. முழு விவரங்களுடனும், நிபந்தனைகளுடனும் கூடிய ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, சென்னை-51 லுள்ள பால் தயாரிப்பு-பால் வளர்ச்சி ஆணையாளர், அலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை ரூ. 10+3½ சத விகித விற்பனை வரி மற்றும் 5 சத விகித சர்சார்ஜ் ரொக்கமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். 28-4-1972 காலை 11-30 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். அதே நாள் காலை 11-45 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை பிரிக்கப்படும்.

எம். கே. கோமேதகவேலு,
ஆணையர்.

(த.34)

## மறு ஒப்பந்தப் புள்ளி

### மாதவரம் நகரியம், சென்னை-60.

ந. எண் : 967/சி 2/72

நாள் : 3—4—1972

மாதவரம் நகரியத்திற்காகவும் மாதவரம் நகரியத்தின் சார்பாகவும் அடியிற்கண்ட வேலைகளுக்கான 28—4—1972-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே ஆஜராகி இருக்கும் ஒப்பந்த தாரர்கள் முன்னிலையில் 4–15 மணிக்குப் பிரிக்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதற்குரிய கட்டுத் தொகையை நகரிய அலுவலகக் கருவூலத்தில் கட்டி அதற்குரிய ரசீதையும் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பாரங்களை நகரிய அலுவலகத்தில் அதற்குரிய தொகையைக் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி எந்த வேலைக்கு என மேல் உறையில் தெளிவாக எழுதவேண்டும். பிற நிபந்தனைகள் வழக்கம்போல்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீடு தொகை. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. மாதவரம் கண்ணபிரான் கோயில் தெருவுக்குத் தார்த்தளம் போடுதல் (ஜி.எஸ்.டி. ரோடுமுதல் ரைபோஸ்டு கெமிகல்ஸ் கேட் வரை). | 5,000 | 250 |
| 2. மாதவரம் தட்டான் குளம் ரோட்டிற்குத் தார் போட்டுப் பழுது பார்த்தல். | 1,900 | 95 |
| 3. மாதவரம் பாரதியார் 2-வது தெருவுக்கு மெட்டல் பொடுதல். | 1,300 | 65 |
| 4. மாதவரம் நகரிய சுகாதாரச் சிப்பந்திகளுக்குக் குடியிருப்புகள் கட்டுதல். எண்ணிக்கை-10. | குடியிருப்பு ஒன்றுக்கு மதிப்பீடு 4,900 | குடியிருப்பு ஒன்றுக்குக் கட்டுத் தொகை. 245 |

குறிப்பு :—குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஒப்பந்தப் புள்ளி கொடுக்க வேண்டும்.

எஸ். ரெங்கநாதன்,
நிருவாக அதிகாரி.

(த. 64)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

சென்னை செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்:—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் முப்பது படுக்கைகள் கொண்ட மகப்பேறு விடுதி ( **Maternity Block** ) ஒன்று அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 5–5–1972 மாலை 3–00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சென்னை, செங்கை வட்டம், சென்னை–5 அவர்களால் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3–15 மணிக்கு அங்கே வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 24–4–1972 முதல் 4–5–1972 முடிய எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1. ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை:—ரூ. 11,000.
3. வேலையை முடிப்பதற்கு வேண்டிய காலம்:—12 மாதங்கள்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை:—ரூ. 20 மற்றும் விற்பனை வரி 3½ சதவிகிதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித்தரப்படமாட்டாது.

**"P. W. D. Remittances III other Remittances"** என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொதுப் பணித்துறை கட்டடக் கோட்டம் எண். 2, சென்னை–5 அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கியிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி 3½ சதவிகிதம் அதே சலானில் **"XII Sales tax (b) Receipts, Under State Sales tax act, General Sales tax** என்ற தலைப்பில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கியிலோ கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான மனுக்கள், மேற்கண்ட சலான்களில் அசலுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கை வட்டம் அவர்கள் எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ (அல்லது) எதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கை வட்டம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்துகொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த- 80)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசீய நெடுஞ்சாலை இரண்டாவது வட்டம் (மதுரை மாவட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2 நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 19–4–1972-ம் தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் 3–30 மணிக்கு (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3–35-க்குத் திறக்கப்படும்.

1. வேலையின் பெயர்—தேசீய நெடுஞ்சாலை எண் 45–ல் கி.மீ. 392 முதல் கி.மீ. 403 வரை சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்தும் வேலை.

கட்டுத் தொகை—26,450.

2. வேலையின் பெயர்—தேசீய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ. 278·6 முதல் கி.மீ. 345/2 வரை சாலை வளைவுகளைச் சீராக்கும் வேலை.

கட்டுத் தொகை—44,650.

3. வேலையின் பெயர்—தேசீய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ. 355 முதல் கி.மீ. 375 வரை சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்தும் வேலை.

கட்டுத் தொகை—48,000.

ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம்—கோட்டப் பொறியாளர், தேசீய நெடுஞ்சாலை கோட்டம்–2, திருச்சி–1.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை) கோட்டம்–2, திருச்சி–1 விலாசத்திலிருந்து 10–4–1972 முதல் 18–4–1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவர நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம்.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிக்கும் 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிக்கும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப்பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிக்கும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ப. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை-2.

(த. 78)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிக்கால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைகட்கென மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) 27, பி. டி. இராசன் சாலை, மதுரை–2 அவர்களால் 3–5–1972 புதன் கிழமை பிற்பகல் 3–00 மணி வரை வரவேற்கப் படுகின்றன. அவை அன்று பிற்பகல் 3–00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண். 1

வேலையின் பெயர்.—பள்ளப்பட்டி குடிநீர் திட்டம்—மூன்றும் நிலை ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள உயர்மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த்தாங்கி ஒன்றினை பகுதி ஒன்றில் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 800 (ரூபாய் எண்ணூறு மட்டும்).

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

வரிசை எண். 2

வேலையின் பெயர்.—பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை—நான்கு இலட்சம் லிட்டர் கொள்ளலவுள்ள உயர் மட்ட உறுதிபெறு கற்காரை நீர்த்தாங்கியினை பகுதி இரண்டில் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்).

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை.—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

வரிசை எண். 3.

வேலையின் பெயர்.—பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை—ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதிபெறு கற்காரை நீர்த்தாங்கி ஒன்றினை பகுதி மூன்றில் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 800 (ரூபாய் எண்ணூறு மட்டும்).

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

முன்வைப்புத் தொகை, கருவூலச் செலான் அல்லது பண உத்தரவுச் சீட்டு அல்லது ஏதாவது ஒரு தேசிய வங்கியின் உத்தரவாதம் மூலம் திருச்சி (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உறையின் மீது வேலையின் பெயர் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி–3 எனும் முகவரியில் உள்ள அவர் தம் அலுவலகத்தில் படிவங்கட்குரிய விலையினைச் செலுத்தி 29–4–1972 சனிக்கிழமை மாலை 5–00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
மதுரை–2.

(த. 71)

## ஏல விற்பனை

### மாவட்டக் கால்நடைப் பண்ணை

1957–ஆம் வருட மாடல் பார்கோ லாரி எம்.டி.ஜ. 2422 பெட்ரோலில் இயக்கப்படுவதும் 153 பேஸ் வீல் உடையதும் மூன்று நபர் அமர வசதியுள்ளதும், பின்புறம் திறந்த அமைப்பு உள்ளதுமான ஒரு லாரி கீழ்க்கண்ட அலுவரின் அலுவலகத்தில் 25–5–1972 அன்று காலை 11–00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்கொண்டு தகவல்கள் மற்றும் நிபந்தனைகளை கீழ்க்கண்ட அலுவலரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## ஏல விதிகள்

1. ஏலம் கேட்ட விரும்புவோர் ரூ. 500 முன் பணமாக கட்ட வேண்டும்.

2. ஏலத்தில் அதிக தொகை கேட்டு எடுப்பவர் மேற்படி தொகையில் ¼ பாகத்தை உடனடியாக செலுத்த வேண்டும். மற்றும் ஏலம் ஒத்துக்கொள்ளப்பட்ட இவ்வலுவலக ஆணை கிடைத்த 15 நாட்களுக்குள் மீதித்தொகையை விற்பனை வரியுடன் கட்ட வேண்டும். தவறினால் மேற்படி ஏலம் கேட்டவர் தாம் கட்டிய தொகை அனைத்தையும் இழப்பதுடன்அவரிடமிருந்து மறு ஏலத்தால் அரசுக்கு ஏற்படும் செலவு நட்டம் ஆகியவையும் ரெவின்யூ ரெகவரிச் சட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும்.

3. ஏலம் எடுத்தவர் ஏலத்தொகையில் ¼ பாகத்தை உடன் செலுத்தாவிடில் அவர் தாம் கட்டிய முன் பணம் அனைத்தையும் இழக்நேரிடும்.

4. மேலும் ஏலத்தைத் தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் அவர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் மேற்படி ஏலதாருக்கு அவர் கட்டிய தொகை திருப்பித் தரப்படும். மேலும் மறு ஏலத்தில் விடப்படும்.

5. ஒரத்த நாடு மாவட்டக் கால் நடைப்பண்ணைக் கண்காணிப்பாளர் தாம் விரும்பும் எந்த நிபந்தனைகளையும் ஏல விற்பனையின் போது இந்த நிபந்தனைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

6. எவ்வித முடிவையும் செய்யும் உரிமை ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைக் கண்காணிப்பாளருக்கு உரியது.

கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப்பண்ணை,
ஒரத்த நாடு.

(த. 58)

## ஒப்பந்தப் புள்ளி

சென்னை நகர காவல் பிரிவு—குதிரை உணவு—1972–73 க்கான ஒப்பந்தப் புள்ளிகள்—வரவேற்கப்படுதல்.

1. சென்னை நகர காவல் பிரிவினைச் சேர்ந்த குதிரைகளுக்கு 1–4–1972 முதல் 31–3–1973 வரை, உணவு வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையொப்பமிட்டவருக்கு 25–4–1972 அன்று மாலை 4–00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக வந்து சேர வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் அதற்குத் தேவையான ஒப்பந்த விதிமுறைகள் ஆகியவற்றை ‘சென்னை–8 லுள்ள காவல்துறை ஆணையார் அலுவலகத்தில் (பொருட்கள் பிரிவு) ரூ. 2.07 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எந்த சூழ்நிலையிலும் திருப்பித் தரப் படமாட்டாது.

காவல் துறை துணை ஆணையர்,
தலைமை அலுவலகம்.

(த. 79)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

பயன்படாது என்று ஒதுக்கப்பட்ட பாஸ்பரஸ் பிரான்ஸ் புஸ்ஸஸ் ( Phosphor Bronze bushes ) எடுத்துச் செல்தவற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையொப்பமிட்டவரால் 25—4—1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளியின் நிபந்தனைகளும், பிற விவரங்களும் பல்லவா போக்குவரத்துக் கழக, பொருட்கள் மேலாளரிடமிருந்து இலவசமாக எல்லா அலுவலக நாட்களிலும் பெறலாம்.

நிருவாக இயக்குநர்.

(த-75)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப் பணித்துறை

பரம்பிக்குளம் ஆளியார் திட்டம்—(கால்வாய் வட்டம்)

எண். வ 1/3024/72. 11 நாள் 30-3-1972

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக, 3-5-1972 அன்று மாலை 3-00 மணிவரை, கண்காணிப்புப் பொறியாளர், பரம்பிக்குளம் ஆளியார் திட்டம் கால்வாய் வட்டம், மாக்கினாம்பட்டி (அஞ்சல்) (வழி) பொள்ளாச்சி அவர்களால், அவர் தம் அலுவலகத்திற்கு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், வரவேற்கப்படுகின்றன.

| எண்ணும், வேலை விவரமும். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 36/0-லிருந்து 37/0 வரை லைனிங் ( Lining ) செய்தல். | 1,760 |
| 2 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 37/0-லிருந்து 38/0 வரை லைனிங்(Lining) செய்தல். | 1,580 |
| 3 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 38/0-ல் இருந்து 39/2 வரை லைனிங் ( Lining ) செய்தல். | 1,920 |

மேற்கண்ட வேலையின் ஒப்பந்த வடிவம்.—கே. 2

மேற்கண்ட வேலையின் ஒப்பந்தப் பத்திரங்களின் விலை-விற்பனை வரி உட்பட ரூ. 5.18.

2. ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே (3-5-1972) உடனடியாக மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில், ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்தம் ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

3. ஒப்பந்தம் குறித்த நிபந்தனைகளும், ஒப்பந்தப் பத்திரங்களும், மேலாளர், செயற்பொறியாளர் அலுவலகம், உடுமலைக்கோட்டம், உடுமலை, அவர்களிடமிருந்து நேரிலேயோ, அல்லது தபால் மூலமாகவோ, வேலை நாட்களில் அலுவலக நேரத்திற்குள், 20-4-1972 முதல் 2-5-1972 வரை எழுத்து மூலமாக விண்ணப்பித்து, அதனுடன் ஒப்பந்தப் புள்ளிகளின் விலைக்காக, ஒவ்வொரு வேலைக்கும், ரூ. 5 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ, அல்லது ரிசர்வ் பாங்கியிலோ "P.W. Remittances III Other Remitances" என்ற தலைப்பில், செயற்பொறியாளர், உடுமலைக்கோட்டம், உடுமலை அவர்கள் கணக்கிலும், ஒவ்வொரு வேலைக்கான, ஒப்பந்தப் பத்திரங்களுக்கும் விற்பனை வரி சர்சார்ஜ் உட்பட ரூ. 0.18-ஐ "XII Sales tax (b) Receipts, Under State sales-tax act, General Sales tax" என்ற தலைப்பிலும் செலுத்திச் சலான்கள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். 2-5-1972-க்குப் பின் வரப்பெற்ற ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம், பொதுவாகக் கவனிக்கப்படமாட்டாது.

4. கூடுதலான தகவல்கள், ஏதேனும் தேவையெனில் இவ்வலுவலகத்தில், வேலை நாட்களில், வேலை நேரத்தில், தெரிந்துகொள்ளலாம்.

த. செ. கண்ணன்
கண்காணிப்புப் பொறியாளர்,
கால்வாய் வட்டம்.

(த.82)

## ஒப்பந்தப் புள்ளி

## பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர்:—சென்னை நந்தனம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப் பணித் துறை) சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் 29-4-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 3-15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்கண்ட ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கை வட்டம் அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த முறை:—மொத்தத் தொகை.

2. முன்வைப்புத் தொகை:—ரூ. 23,500.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை:—ரூ. 30 மற்றும் விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம்.

4. வேலை முடிக்க வேண்டிய காலம்:—18 மாதங்கள்.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை, செங்கை வட்ட அலுவலகத்தில் விற்பனைக்குக் கிடைக்கும் காலம்:—17-4-1972 முதல் 28-4-1972 வரை.

6. ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்:—29-4-1972.

7. ஒப்பந்தப்பத்திரங்களின் விலை "P.W.D. Remittances& III other Remittances" என்ற தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கிலும் விற்பனை வரி "XII Sales tax (b) Receipts under State Sales-tax Act. General Sales tax" என்ற தலைப்பிலும் ஒரே சலானில் அரசாங்கக் கருவூலங்களிலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்கண்ட சலானைக் கொடுத்த பின்னர் தான் வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களின் விலை எக் காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

8. மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கை வட்டம், சேப்பாக்கம் சென்னை-5 அவர்கள் ஒப்பந்தப் பத்திரங்களை எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையைத் தனக்குத் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

9. மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கை வட்டம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கை வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த.81)

## ஜீப் ஏல விற்பனை

பள்ளிப்பட்டு சப் தாலுக்கா, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஜீப் எம்.எச்.டி. 2646 வில்லீஸ் திருவள்ளூர் உதவி ஆட்சியர் அவர்களால் பள்ளிப்பட்டு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் 10-5-1972-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏல ஷரத்துக்களைத் திருவள்ளூர் உதவிஆட்சியர் அலுவலகத்திலாவது பள்ளிப்பட்டில் இருக்கும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலாவது தெரிந்து கொள்ளலாம்.

ஏலம் விட இருக்கும் வண்டியை அரசாங்க விடுமுறை அல்லாத நாட்களில், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

உதவி ஆட்சியர்,
திருவள்ளூர்.

(த. 84)

## ஏல விளம்பரம்

## காவல் துறை

கீழ்க்கண்ட காவல்துறை லாரி 22-5-1972 அன்று காலை 11 மணிக்கு வேலூர் ஆயுதப்படை அலுவலகத்தின் எதிரில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வண்டி எண் :—எம். டி. ஜே. 3790.
வகையும் தயாரிப்பும் :—பெட்போர்டு ஓபன் பைப் லாரி.

2. மேற்கண்ட வண்டியை வேலூர் ஆயுதப்படை அலுவலகத்தில் பார்வையிடலாம். விற்பனை விதிகளை வேலூர் ஆயுதப்படை வாகனப் பிரிவு ஆய்வாளரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.

காவல் கண்காணிப்பாளர்,
வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

(த.38)

## தேக்கு, மருது வேங்கை வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம்: அரசாங்கத் தடி விற்பனை மண்டி,
நாகர்கோவில்.

தேதியும் நேரமும்: 25 & 26—4—1972.

அளவு : ஏறத்தாழ 1,000 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தெற்கு கோட்டம்.

(த.67)

ஒப்பந்தப் புள்ளி

## ஸ்ரீ கலியுக வரதராஜ பெருமாள் கோயில் கல்லங்குறிச்சி (வழி) அரியலூர் வட்டம், திருச்சி மாவட்டம்

மேற்படி கோயில் ஆதீன பரம்பரை தருமகர்த்தா அவர்களால் கீழ்க்காணும் வேலையைச் செய்ய 26—4—1972—ஆம் தேதி மாலை 4 மணி வரை மூத்திரையிட்ட ஷெட்டியூல்டு ஒப்பந்தங்கள் பொதுப்பணித் துறை, ஹைவேஸ், மற்றும் இதர இலாக்காக்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையுடன் கோரப்படுகிறது.

| வேலையின் விவரம். | ஒப்பந்த கட்டுத் தொகை | ஒப்பந்தப் பாரத்தின் விலை. | வேலையை முடிக்கும் காலம். |
|---|---|---|---|
| கல்லங்குறிச்சி ஸ்ரீ கலியுகவாதரா ஜப்பெருமாள் கோயிலின் வட புறம் 3 சேவார்த்திகள் குவார்ட்டர்ஸ் கட்டுதல். | (2½%) ரூ. 900 | ரூ. 10-ம் தமிழக அரசின் விற்பனை வரி 3½ சத விகிதம். | ஆறு மாதங்கள். |

மேற்படி ஒப்பந்தம் 26—4—1972-ஆம் தேதியன்று மாலை 4–15-க்கு திறக்கப்படும்.

ஒப்பந்தப் பாரம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தத்தின் ஷெட்டியூல்டு பாரம் ஒப்பந்தத்தின் விதிகள் முதலியன 10—4—1972-ஆம் தேதி முதல் 25—4—1972-ஆம் தேதி வரை கோயில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு ரூ. 10 பத்து மட்டும்அதற்குண்டான விற்பனை வரி 3½ சதவீதம் உடன் (திருப்பிக் கொடுக்க முடியாதது) எழுத்து மூலமாக விண்ணப்பித்து ஒப்பந்தப் பாரம் வாங்கிக் கொள்ள வேண்டும். ஷ கட்டடத்தின் வரைபடத்தை மேற்கண்ட நாட்களில் அலுவலக நேரங்களில் பார்த்துக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை கோயில் அலுவலக நேரத்தில் ரொக்கமாகக் கட்டி ரசீதை ஒப்பந்தத்துடன் அனுப்ப வேண்டும்

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகைக்கான ரசீதை இணைக்காமல் அனுப்பும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது ஆதீன பரம்பரை தருமகர்த்தா அவர்களின் முடிவைப் பொறுத்தது.

கோ. கோவிந்தசாமி படையாச்சி,
ஆதீன பரம்பரை தருமகர்த்தா.

(த. 68)



## உணவுப் பொருள் வழங்கும் துறை

## காலி சாக்குப் பைகள் விற்பனை

3/22741/1972 தேதி 3-4-1972.

சென்னை நகரத்திலும், ஆவடியிலும் உள்ள அரசாங்கக் கிடங்குகளில் தமிழக அரசுக்குச் சொந்தமான கீழ்க்காணும் விவரப்படி உள்ள உபயோகத்திற்குத் தகுதியற்ற காலி சாக்குப் பைகளை உணவுப் பொருள் வழங்கு துறை, ஆணையர் அவர்களிடமிருந்து ஒப்பந்தம் மூலமாக விலைக்கு வாங்குவதற்காக அரசுக்கு முத்திரைட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்த நிபந்தனைகள் அடங்கிய விவரங்களை சென்னை-7ல் டெமல்லஸ் ரோடு 2 வது எண்ணுள்ள ஈ. டி. மில்ஸ் கட்டடத்திலுள்ள சேமிப்புஉதவி ஆணையர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டியது.

2. ஒப்பந்தப் பாரங்களும் மேலே கூறிய அலுவலகத்தில் கிடைக்கும். ஒப்பந்தப் பாரத்தின் விலை ரூ. 5ம் 3½ சதவிகித விற்பனை வரியும் ஆக ரூ. 5·18 ரிசர்வ் பாங்கில் "Personal Deposit Account of the Commissioner of Civil Supplies" என்ற தலைப்பில செலுத்தி செலானை மேலே குறிப்பிட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகத்தில் கொடுத்து ஒப்பந்தப் பாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டியது. ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் கட்டுக் காப்புத் தொகைக்காக ரூ. 2000க்கு டிமாண்டு டிராப் வாங்கி அனுப்ப வேண்டியது.

3. அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சேப்பாக்கம் (சென்னை-5) எழிலகம் கட்டிடத்திலுள்ள உணவு பொருள் வழங்குதுறை துணை ஆணையர் (விநியோகம்) அவர்களால் 28-4-1972 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அவர்களால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

4 மேற்படி ஒப்பந்தங்கள் உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையர் அவர்களால் ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்படும்.

விவரம்.

| எண்ணும் கிடங்கின் பெயர். | உபயோகத்திற்கு தகுதியற்றவை. 100 கி. கி. | 75 கி. கி. |
|---|---|---|
| 1. ஈ. டி. எல். கிடங்கு .. .. .. | 2,000 | 1,500 |
| 2. ஈ. டி. 23 கிடங்கு .. .. .. | 2,142 | 5,361 |
| 3. மின்ட் கிடங்கு .. .. .. .. | 368 | 1,702 |
| 4. நந்தனம் கிடங்கு .. .. .. | 2,523 | 3,904 |
| 5. அண்ணா நகர் கிடங்கு (யூனிட் 1) .. | 1,127 | 8,689 |
| 6. அண்ணா நகர் கிடங்கு (யூனிட் 2) .. | 309 | 2,323 |
| 7. ஆவடி கிடங்கு .. .. .. | 650 | 23,449 |
| மொத்தம் .. .. | 9,119 | 46,928 |

ஆணையர்,
உணவுப் பொருள் வழங்குதுறை,
சென்னை-5.

(த. 69)

ஒப்பந்தப் புள்ளி

## வேலூர் நகராட்சி

20-4-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை 60 சிமெண்ட் கான்கிரிட் சதுர குப்பைத் தொட்டிகள் சப்ளை செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள் வரைபடம் அளவுகள் முதலியன ரூ. 2 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

அ. ஜோசப், பி.ஏ.,
ஆணையர்.

(த. 70)

## வனத்துறை

அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக கீழ்க்காணும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வனப் பாதுகாவலர், அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2, அவர்களால் 28—4—1972 காலை 11 மணிவரையில் வரவேற்கப்படுகின்றன.

| வேலை விவரம். (1) | குன்னூர் தேயிலைத் தோட்டம். (2) | கோத்தகிரி தேயிலைத் தோட்டம். (3) | சேரம்பாடி தேயிலைத் தோட்டம். (4) | சேரங்கோடு தேயிலைத் தோட்டம். (5) | நெல்லியாளம் தேயிலைத் தோட்டம். (6) | வேலையின் உத்தேச மதிப்பு. (7) | வேலைக்கான உடன் வைப்புத் தொகை. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்களுக்கான ஒவ்வொன்றும் 5 வீடுகள் கொண்ட குடியிருப்பு லைன்கள் கட்டுதல் (1வது முதல் 10-வது பிளாக்கு வரை). | 10 பிளாக்குகள். | 10 பிளாக்குகள். | 10 பிளாக்குகள். | 10 பிளாக்குகள். | 10 பிளாக்குகள். | ரூ. 24,500 பிளாக்கு ஒன்றுக்கு. | ரூ. 750 பிளாக் ஒன்றுக்கு. |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்களையும் முழு நிபந்தனைகளையும் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 4·14 செலுத்தி கீழ்க்காணும் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குன்னூர்-2,

த. அச்சையா, I.F.S.,
வனப் பாதுகாவலர், அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2.

(த-59)

---

## மின்சார வாரியம்

பொது நிர்மாண வட்டம்.

கீழ்க் காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட விலை ஒப்பந்தம் (Seperate Sealed Tender) அடியில் கையொப்பம் இட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பந்தம் கீழே குறிப்பிட்டுள்ள முடிவு தேதியில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண். (1) | ஒப்பந்த நெம்பர். (2) | சாமான்களின் விவரம். (3) | | | வழங்க வேண்டிய இடம். (4) | தேவையான எண்ணிக்கை. (5) | முடிவு தேதி. (6) |
|---|---|---|---|---|---|---|---|
| | P/C2/TLC—Con OT/14/72-73. | ஜி. ஐ. போல்ட் மற்றும் நட்டுகள் (பலதரப்பட்ட சைஸ்களில்). | | | | | |
| 1 | | 1¼"×5/8" | 36×16 | .. | தமிழ் நாட்டில் | 250 Kg. | |
| 2 | | 1½"×5/8" | 38×16 | .. | எந்த இடத் | 3650 Kg. | |
| 3 | | 1¾"×5/8" | 44×16 | | திற்காவது. | 750 Kg. | 2—5—1972. |
| 4 | | 2"×5/8" | 50×16 | .. | | 2170 Kg. | |
| 5 | | 2¼"×5/8" | 56×16 | .. | | 50 Kg. | |

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதி (Tender Specification Forms) ஒன்றுக்கு ரூபாய் 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித் தரத்தக்கதல்ல) தலைமைக் கணக்காயர், பொது நிர்மாண வட்டம், திருச்சி, அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனின் சாற்றுக் குறிப்பெண்ணை குறிப்பிட்டு) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கூப்பனில் தேவையான சாற்றுக் குறிப்பெண் தெளிவாகவ முகவரியோடு குறிப்பிடப்படாமல் இருப்பின் மணியாடர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தபாலில் வரும்பொழுது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்த அலுவலகம் பொருப்பேற்காது மேற்படி பொருட்களைப்பற்றிய குறிப்புகள் முடிவு தேதிக் குறைந்தது நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும். விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் பிரதிகளின் குறித்த காலத்திற்குப் பின்னர் வந்துசேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மேற்கண்ட பொருள்களை வழங்குவதற்கான உத்திரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கவும், எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ காரணம் கூறாமல் நிராகரிக்கவும் அடியில் கையொப்பம் இட்டவருக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொது நிர்மாண வட்டம், திருச்சி.

(த.56)

---

## கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சி ஆணையர் அவர்களால் கீழ்க்கண்டுள்ள இரண்டு சாலை வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-4-1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப் படும்.

(1) வேலையின் பெயர்—கீழகடலங்குடித்தெரு, மகாமகக்குளம் மேலத் தெரு, தஞ்சை நாயகிபுர அக்ரகாரம் ஆகிய சாலைகளை ஆஸ்பால்ட் காங்கிரீட் சாலைகளாக்க.

மதிப்பீட்டுத் தொகை—ரூ. 1,11,000.

பொறுப்புத் தொகை—ரூ. 2,775.

(2) வேலையின் பெயர்—அனுமார் கோவில் ரோடு, மகாமகக்குளம் வடக்குத்தெரு ஆகிய சாலைகளை ஆஸ்பால்ட் காங்கிரீட் சாலைகளாக்க.

மதிப்பீட்டுத் தொகை—ரூ. 88,000.
பொறுப்புத் தொகை—ரூ. 2,200.

ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–15 மணிக்குத் திறக்கப்படும். ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்த அட்டவணைக்கும் ரூ. 5-ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளருக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,
கும்பகோணம் நகராட்சி.

(த.47)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழேகுறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டைரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—4—1972 அன்று பிற்பகல் 3.30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3.35 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—கோடைமலைசாலை கி.மீ.1-ல் மஞ்சளாற்றின்குறுக்கே உள்ள பாலத்தைக் கட்டும் வேலை.

கட்டுத் தொகை டெபாசிட்—ரூ. 3,500.

ஒப்பந்தம் ஷெட்யூல் கிடைக்கும் முகவரி—கோட்டப் பொறியாளர்' (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திண்டுக்கல்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20.75 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), திண்டுக்கல் விலாசத்திலிருந்து 10—4—1972—25—4—1972 வரையிலான வேலைநாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணயபாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலிய வற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்பு கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமக் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 ஆண்டுத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசியத்தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டி களும், டிமாண்ட் டிராப்டுகளும், பொசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிக்காக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
கண்காணிப்புப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை கிராமப்பணி பொறியியல் பணித்துறை),
திருச்சிராப்பள்ளி-1.

(த. 50)

---

## மின்சார வாரியம்
### கே 2 ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சாரவாரியம்—சுருளியாறு நீர் மின்திட்டம். குறிப்பீடுகை எண். SUR 2B, SUR 5B, சுருளியாறு கீழ் முகாமில் தற்காலிக கட்டிடங்கள் கட்டுவது.

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும் வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன். ஒப்பந்ததாரரின் பெயரும் மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களைக் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதிகளில் பிற்பகல் 3–00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4–00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்த தாரர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

வரிசை எண். —1.
குறிப்பிடுகை எண். SUR 2 B.

வேலையின் பெயர்—சுருளியாறு கீழ் முகாமில் தற்காலிக 8G (Type) கட்டடம் கட்டுவது (இரண்டு பிளாக்குகள் No. 1 and 2).

ஒப்பந்தப் பிரதியின் விலை விற்பனை வரி உட்பட—ரூ. 10·35.
கட்டுத் தொகை—ரூ. 2,500.
ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி தேதி—5-5-1972

வரிசை எண். 2.
குறிப்பிடுகை எண். SUR 5 B.

வேலையின் பெயர்—சுருளியாறு கீழ் முகாமில் தற்காலிக 6F (Type) கட்டடம் கட்டுவது (முதல் பிளாக்).

ஒப்பந்தப் பிரதியின் விலை விற்பனை வரி உட்பட—ரூ. 10·35.
கட்டுத் தொகை—ரூ. 1,400.
ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் கடைசித் தேதி—12-5-1972.

(2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ.10·35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்துஐந்து மட்டும் விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாகப் பொறியாளர் சிவில், சுருளியாறு மின் திட்டம், கூடலூர், மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதி பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

(3) மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கட்டுத் தொகை (EMD) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற் கான செலுத்தச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்படவேண்டும். எக் காரணத்தை முன்னிட்டும் காசோலைகள் (Cheques) ஏற்கப்படமாட்டா. கட்டுத்தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிரா கரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் ( Demand drafts ) அனுப்புவ தானால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்படவேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத்தொகையை ஒப்பந்தத்துடன் செலுத் தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டுப்பட்ட தொகை யையோ வேறு தொகையையோ, ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுகொள்ளப்படமாட்டாது.

(4) ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ் வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணை வைப்புத் தொகை ( Security deposit ) செலுத்தவேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5 (ஐந்து) சதவீதம் இருக்கும். இந்தப் பிணை வைப்புத் தொகைக்கும், கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்படமாட்டாது. இந்த மொத்த தொகை யும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி திருப்திகரமாக வேலை முடித்தபின் திருப்பித் தரப்படும். ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணைவைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினும், ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி வேலை செய்வதி லிருந்து பின் வாங்கினும் கட்டுத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

(5) இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலே குறிப்பிட்ட வேலையை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமை உண்டு.

(6) ஒப்பந்தப் பிரதிகளை சாதாரண அஞ்சலிலேயே அனுப்பப்படும். அஞ்சல் போக்குவரத்தில் கால தாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்று வதற்கு உரியதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்மின் திட்டம்,
34. ஏ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

(த.51)

---

## சென்னை வைத்தியக் கல்லூரி

சென்னை வைத்தியக் கல்லூரி மகளிர் விடுதியிலுள்ள உணவுப் பிரிவிற்கு 1—6—1972 முதல் அல்லது கல்லூரி முதல்வரால் குறிப்பிடப்படும் மற்றொரு தேதியிலிருந்து 30—4—1973 வரை உணவு ஏற்பாடு செய்ய 21—4—1972 மாலை 4 மணி வரை அடியில் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், படிவங்கள் பிற விதிகளின் நகல்களை சென்னை-3 லுள்ள வைத்தியக் கல்லூரி முதல்வரின் அலுவலகத்தில் கருவூலக் காப்பாளரிடம் (காசியர்) அதன் விலையான ரூ. 5-யும் , விற்பனை வரி 0·15 காசும் கட்டிப் பொறுக் கொள்ளலாம்.

முதல்வர்,
சென்னை வைத்தியக் கல்லூரி,
சென்னை-5.

(த.83)

## மறு ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

### வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப் பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிருர்.

"சிவகிரி—சிவகிரி சாப்ட் உட் பிளான்டேசன் சாலை அமைத்தல் 6·1 கி.மீ. சங்கரன் கோயில் வனச்சரகம், திருநெல்வேலி, வடக்கு வனக்கோட்டம்".

அச்சாரம் (இ.எம்.டி) ரூ. 1,025.

ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 24-4-1972 நேரம் முறையே மாலை 3-00 மணி; 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப் பொறியாளர்", 1-எ, ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி,1 என்ற முகவரியிலிருந்து ரூபாய் 1·04 செலுத்தி விண்ணப்பத்தின் பேரில் 10-4-1972 முதல் 22-4-1972 வரை அலுவலக வேலை நேரங்களில் எல்லா வேலைநாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப் பொறியாளர்.

(த. 88)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1972-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம்நாள் புதன்கிழமை மாலை 3 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம், வெங்கட்ரமண சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. மதுக்கரை செட்டிபாளையம் சாலையில் மைல் 5/1-ல் ஒரு பாலம் கட்டுதல். | கோயம்புத்தூர். | 2,975 |
| 2. எட்டிமடை ரயில்வே பீடர் சாலை மைல் 0/2-ல் ஒரு பாலம் கட்டுதல். | கோயம்புத்தூர். | 3,485 |
| 3. கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் சேலம் கொச்சி சாலையில் (தே. நெ. 47) அவனுசி சாலை, மைல் 328/7-ல் தற்போதைய ரயில் சந்திக்குப் பதிலாகக் கட்டும் மேம் பாலத்திற்கு, சாக்கடை, நடை பாதை மற்றும் சர்வீஸ் சாலை கட்டும் வேலைகள். | கோயம்புத்தூர். | 6,530 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரை படங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை மேற்கண்ட கோட்டங்களின் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் 20 உடன் விற்பனை வரியும் செலுத்தி 18-4-1972 முதல் 25-4-1972 தேதி வரை பெற்றுக்கொள்ளலாம். அப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையைக் குறித்துத்துள்ள கோட்டங்களின் கோட்டப்பொறியாளர்களின் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி, செல்லுசீட்டை (செலானை) ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானல், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். தவறினல் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

பா. சேக்உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ. கி. ப.)
கோவை-2.

இரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.

(த. 87)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

18 (பதினெட்டு) லிட்டர் கொள்ளளவுள்ள உலோகப் பாத்திரங்கள் (Metal Containers) வழங்குவது சம்பந்தமாக முத்திரையிட்ட ஒப்பந்த அறிவிப்புகள் நிருவாகப் பொறியாளர், மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்களால் 2-5-1972 பிற்பகல் மூன்று மணிக்குள் அல்லது அதற்கு முன்போ ஏற்கப்படும். ஒப்பந்த அறிவிப்பு செய்ய விரும்புபவர்கள் எழுத்து மூலமாகக் கேட்டுக்கொண்டால் சாமான்கள் வழங்க வேண்டிய அளவு நிபந்தனைகள் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்படும்.

P. W. Other Remittances
Executive Engineer, P.W.D.
Soil Machanics and Res. Divn., Madras-5.

என்ற கணக்குத் தலைப்பில் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்திற்கான கட்டணம் ரூபாய் ஒன்றும் "XII Sales tax under State Sales Act" என்ற கணக்கின்கீழ் விற்பனை வரி காசு மூன்றும் செலுத்தியதற்கான வங்கி சலான் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்த அறிவிப்புப் பத்திரங்களின் தேவைக்கான விண்ணப்பங்கள் 25-4-1972 பிற்பகலுக்குப் பிறகு கவனிக்கப்படமாட்டா.

ல. வெங்கடநரசிம்மன்,
நிருவாகப் பொறியாளர்,
மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம்

(த. 86)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் வேலையின் பெயர்உறை மீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளரால் எண் 34, பத்தாவது தெரு, தூவைபுரம், தூத்துக்குடி-3 உள்ள அவரது அலுவலகத்தில் 6—5—1972 அன்று அவரது அலுவலக நேரப்படி மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் அன்று மாலை 3-30 மணிக்குப் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்.—தூத்துக்குடி தொழில் கூட்ட மையத்திற்கு (Complex) நீர் வழங்கும் திட்டம்—(20 M. G. D. நீர் வழங்கு திட்டம்) 60 எம்.எம். (24") விட்டமுள்ள ரிப்ஃப்ளெக்ஸ் வால்வுகள், தூத்துக்குடி ஐ.எஸ்.எஸ்., எப்.ஓ.ஆர்., தரத்திற்கு ஒத்ததாக "பைபாசு" டன் கூடியவை.

ஒப்பந்தமுறை.—மொத்தத் தொகை.

கட்டுத்தொகை.—ரூ. 10 விற்பனை வரி 0·35 (விற்பனை வரியுடன் சேர்த்து) திருப்பித் தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோட்டம்-1, 34, பத்தாவது தெரு, தூவைபுரம், தூத்துக்குடி-3 என்ற முகவரியில் 10-4-1972 முதல் 3-5-1972 மாலை 5-00 மணி வரை கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தூத்துக்குடி-3.

(த.73)

## ஒப்பந்தப் புள்ளி

### கிங் நிலேயம்

1972-ஆம் ஆண்டு ஜூலே 1-ம் தேதியிலிருந்து அல்லது ஒப்பந்த அறிவிப்பு ஒப்புதல் கொள்ளும் அதிகாரியால் ஒவ்வொரு விஷயத்திலும் நிர்ணயிக்கப்படும் வேறு தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு ஜூன மாதம் முடிய அட்டைப் பெட்டிகள், ஹரியாளிப்புல் (**Hariyali Hay**), பொடித்த ஓட்ஸ் (**Crusked Oats**) லுஸிஸரைன் (**Lucerine**) பசும்பால் கோதுமைத் தவிடு முதலியனவும், வாழைப்பழமும் (**Plantains**) மற்றும் இதரக் காய்கறிகளும் முத்திரை இடப்பட்ட ஒப்பந்தங்கள் தமிழ்நாடு ஆளுநர் உத்திரவின் படியும் அவர்களுக்குப் பதிலாகவும் இயக்குநர், கிங் நிலேயம், கிண்டி அவர்களால் 1972 எப்ரல் மாதம் 26-ஆம் தேதி மாலே 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். சுமார் இரண்டு வயது அடைந்ததாகவும் நல்ல ஆரோக்கிய முடையதாகவும் சேலம் அல்லது கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாகவும் கால் நடை உதவிமருத்துவரால் அத்தாட்சி பெற்றதாகவும் உடைய பெண் எருமைக் கன்றுகள் அம்மைப் பாலிலிருந்து அம்மை குத்தும் மருந்து தயாரிக்கத் தேவைப்படுகின்றன. அவற்றின் விலே விவரங்கள் கிண்டியிலுள்ள கிங் நிலேயத்திற்குச் சரக்கு ரயில் மூலம் கொண்டு வரும் போக்குவரத்துச் செலவும் அடங்கியதாகவும் இருக்க வேண்டும்.

அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது வங்கியிலோ ரூ. 5. (ரூபாய் ஐந்து மட்டும்) **"XXIV-Public Health—Bacteriological Laboratories-e Miscellaneous—King Institute, Guindy, Madras-32."** என்ற தலேப்பில் செலுத்தியும், காசு பத்தொன்பது மட்டும் **"XII-A.Sales (b)Taxes under Tamilnadu Govt. Sales Tax Act(1)Commercial Tax"** என்றதலேப்பில் செலுத்தியும் அவற்றுக்கான கருவூலம் அல்லது வங்கி ரசீதை மேற்படி இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்து 1972-ம் ஆண்டு எப்ரல் மாதம் 10-ந் தேதியிலோ அல்லது அதற்குப் பின்பு அரசாங்க அலுவலக நாட்களிலோ அதற்கான நமூனு விவரங்களேப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், மேற்படி கட்டிய பணம் திருப்பித்தர மாட்டாது.

**இயக்குநர்.**

கிங் நிலேயம்,
கிண்டி, சென்னே-32.
(த. 74)

## ஏல விற்பனே

எம்.டி.எப். 1716 எண்ணுள்ள ஒரு பழைய ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிள், பெரம்பூர் டான்சி தோல் தொழிற்சாலேயில் 5—5—1972 அன்று மாலே 3 மணிக்கு ஏலம் விடப்படும்.

மேற்கண்ட மோட்டார் சைக்கிள் டான்சி தொழிற்சாலே பெரம்பூரில் பார்வைக்காகக் காலே 10-30 மணி முதல் மாலே 4-30 மணி வரை எல்லா வேலே நாட்களிலும் வைக்கப்படும்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,
சென்னே-2.

(த. 72)

## ஏல விற்பனே

### காஞ்சிபுரம் நகராட்சி

7—3—1972 தேதிய ஏல அறிக்கையில் கண்டுள்ள நிபந்தனேகட்கு உட்பட்டு நடக்கவிருக்கும் ஸ்ரீ தேவராஜஸ்வாமி பெருவிழாக் காலத்தில் 18—5—1972 முதல் 10—6—1972 வரை சுங்கச் சாவடிகளில் சுங்கம் தண்டும் உரிமை,சாலே ஓரங்களில் வைக்கப்படும் தற்காலிகக் கடைகளுக்கு கட்டணங்கள் தண்டும் உரிமை ஆகிய உரிமைகளே 3—5—1972-ம் தேதி புதன் கிழமை மாலே 2-30 மணிக்குக் காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனேவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும் ஏலக் கட்டுப்பாடுகளுக்கும் நகராட்சி ஆணேயருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்து கொள்ளலாம்.

**ஆணேயர்.**

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்.
(த. 65)

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி நகராட்சி

1972–73-ம் வருடத்திற்கு இந்நகராட்சிக்கு அச்சடிப்புப் புத்தகம் கட்டுதல் போன்ற வேலேகள் செய்ய ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஆணேயர் அவர்களுக்குக் குறிப்பிட்ட அச்சிட்ட நமூனுவில் மூன்று பிரதிகள் 29—4—72 சனிக்கிழமை மாலே 4 மணிக்குள் வந்து சேரும்படியாக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்படுகின்றன நமூனுக்களும் இதர விவரங்களும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**ஆணேயர்.**

(த. 66)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

வேலேயின் பெயர்—திருவொற்றியூரில் 26 காவலர் குடியிருப்புகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் முத்திரையிடப்ப ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்கண்ட வேலேக்கு மேற்பார்வைப் பொறியாள சென்னே—செங்கை வட்டம், சென்னே-5 அவர்களால் 28—4—19 மாலே மணி 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலே 3-1 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலேயில் மேற்பார்வைப் பொறியாளர் சென்னே—செங்கற்பட்டு வட்டம் அவர்களால் ஒப்பந்தப்பத்திரங்கள் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப்படிவம் .. .. .. மொத்தத் தொகை.
2. முன் வைப்புத் தொகை .. .. ரூ. 7,150.
3. ஒப்பந்தப்பத்திரங்களின் விலே .. .. ரூ. 20-ம் விற்பனே வரி 3½ சத விகிதம்.
4. வேலே முடிக்க வேண்டிய காலம் .. 3 மாதங்கள்.
5. ஒப்பந்தப்பத்திரங்களின் மேற்பார்வைப் பொறியாளர் சென்னே—செங்கற்பட்டு அலுவலகத்தில் கிடைக்கும் காலம். 17—4—1972 முதல் 26—4—1972வரை.
6. ஒப்பந்தப்பத்திரங்கள் பெறப்படும் கடைசிநாள். 28—4—1972 மாலே 3-00 மணிவரை.
7. ஒப்பந்தப்பத்திரங்களின் விலே **"P.W.D. Remittances III—Other Remittances"** என்ற தலேப்பிலும், விற்பனேவரி **"XII Sales Tax b. Receipts under the State Sales Tax"** என்ற தலேப்பிலும் ஒரே சலானில் "கோட்டப் பொறியாளர், கட்டடக் கோட்டம்2, சேப்பாக்கம், சென்னே-5" அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலகங்களிலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ கட்டப்பட வேண்டும். மேற்கண்ட சலானேக் கொடுத்த பின்னர்தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களின் விலே எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.
8. மேற்பார்வைப் பொறியாளர் சென்னே செங்கற்பட்டு வட்டம் சேப்பாக்கம், சென்னே-5 அவர்கள் எவ்விதக் காரணமும் காட்டாமல் ஒப்பந்தப் பத்திரங்களே தனியாகவோ (அல்லது) மொத்தமாகவோ நிராகரிக்கும் உரிமையைத் தனக்கு தக்க வைத்துக்கொண்டுள்ளார்.
9. மற்ற விவரங்கள் சென்னே செங்கற்பட்டு வட்ட அலுவலகம், சென்னே-5-ல் தெரிந்து கொள்ளலாம்.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர் வட்டம்,
சென்னே—செங்கற்பட்டு,
சென்னே-5.

சேப்பாக்கம்,
(த. 53)

## தூத்துக்குடி துறைமுக வாரியம்

"தெற்குப் பாகத்தில் சிமெண்ட் காங்கிரிட் ரோடு போடும்" வேலேக்கு (காண்டிராக்டின் மதிப்பு—ரூ. 21,000) ஒப்பந்தங்கள் 6–5–1972 மாலே 4 மணி வரை தூத்துக்குடி துறைமுக வாரியம் தலேவரால் வரவேற்கப் படுகின்றன. தூத்துக்குடி துறைமுக வாரியத்தில் பதிவு செய்யப்படாத வருடைய ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டால், அவர் வேலே உத்தரவு கிடைத்த 30 தினங்களுக்குள் துறைமுக வாரிய விதிகளின்படி தூத்துக்குடி துறைமுக வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரராக வேண்டும். அப்படிச் செய்யத்தவறினுல், அவருக்குப் போடப்பட்ட ஒப்பந்த வேலே உத்தரவு ரத்துச் செய்யப்படும். அத்துடன் அவர் கட்டிய கட்டுத் தொகையும் திருப்பித் தர மாட்டாது. ஒப்பந்தக் குறிப்புகள் வேண்டுவோர் 1972-ம் வருடம், மே மாதம் 3-ந் தேதி வரை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்)செலுத்திக் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**காப்டன் D. T. ராமச்சந்திரன்,**
துறைமுக அதிகாரி-செயலாளர்.

துறைமுக காரியாலயம்,
தூத்துக்குடி.
(த.57)

## மறு ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

வனப் பொறியாளர் கோட்டம்.

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப் பொறியாளர்", திருச்சி, தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"கோனலார்—கவுஞ்சிசாலை இரண்டாம் மூன்றும் பிரிவுகளின் மேம்பாட்டு வேலை—கொடைக்கானல் சரகம், மதுரை வடக்கு வனக்கோட்டம்".

முன்பணம் (இ. எம். டி.) ரூபாய். 688.

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள், 24—4—1972. நேரம் முறையே மாலை 3.00 மணி, 3.05 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர்" 1-எ, ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1, என்ற முகவரியிலிருந்து ரூ. 1·04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தியபின் விண்ணப்பத்தின் பேரில் 10—4—72 முதல் 22—4—72 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப்பொறியாளர்.

திருச்சி.
(த. 77)

## மறு ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப்பொறியாளர்" திருச்சி, தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"களக்காடு—செங்கல்தேரி சாலை அமைத்தல் 2·481 கி.மீ.—நாங்குனேரி வனச்சரகம்—திருநெல்வேலி தெற்கு கோட்டம்."

அச்சாரம் (இ. எம். டி.) ரூபாய். 3,475.

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள்—24-4-72 நேரம் முறையே—மாலை 3·00 மணி, 3·05 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர்", 1-எ, ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1·04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தியபின் விண்ணப்பத்தின்பேரில் 10—4—72 முதல் 22—4—72 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப் பொறியாளர்.

திருச்சி.
(த. 76)

## ஒப்பந்தப் புள்ளி

### கும்பகோணம் நகராட்சி

1972–73-ம் ஆண்டிற்கு நகராட்சிக்குத் தேவையான சுமார் ரூ. 11,300 மதிப்புள்ள எழுதுபொருள்களை (Stationery Articles) வழங்க முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை மாலை மணி 4-00 வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களிடம் வந்து சேரும்படி அனுப்பி வைக்கக் கோரப்படுகிறது. அன்று மாலை 4-30 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

கட்டவேண்டிய பொறுப்புத் தொகை விவரத்திற்கும், மற்றும் இதர விவரங்களுக்கும், அலுவலகத்திற்கு எழுதியோ, அல்லது அலுவலக நேரத்தில் நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

ஜே. தனராஜ் டேனியல்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
கும்பகோணம்,
(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

இ. 3. இஎஸ்டி 426/பி/70-71.

சேலம் நகராட்சியின் அடியில் குறிப்பிட்டுள்ள வேலையைச் செய்வதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி பொறியாளர் அவர்களால் 29—4—1972-ம் தேதி மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலையே 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

குறிப்பு.—வைப்புத் தொகையையும், ஒப்பந்த ஷெட்யூல் கட்டணம் ரூ. 2-ம், 28—4—1972 தேதிக்குள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி ஷெட்யூல் பெற்றுக் கொள்ள வேண்டும். ஷெட்யூலில் மொத்த தொகையைக் குறிக்கும் பகுதியுட்பட அனைத்து பகுதிகளையும் பூர்த்தி செய்யவேண்டும். அப்படிப் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

வேலை விவரம்.—வார்டு 26-ல் பாவடி நகராட்சித் துவக்கப் பள்ளியின் மேற்குப் பகுதி வகுப்பறைகளுக்கு ஆர்.சி.சி. கூரை அமைத்தல்.
மதிப்பீட்டுத் தொகை—ரூ. 39,000.
வைப்புத் தொகை—ரூ. 975.
வேலையை முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதங்கள்.

பெ. அரங்கசாமி,
ஆணையர்,
சேலம் நகராட்சி.

(த. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### தீயணைப்புத் துறை

1972, ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1973 மார்ச்சு 31-ம் நாள் வரையிலுள்ள காலத்துக்கு தீயணைப்புத் துறைக்குத் தேவைப்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி தளவாடங்கள், சீருடைகள் உபயோகித்துச் செலவாகும் பண்டங்கள் மற்றும் பலவகைப் பொருள்கள் வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Tenders) கோரப்படுகின்றன.

3. ஒப்பந்தப் புள்ளிப் படிவம், ஒப்பந்த நிபந்தனைகள், பண்டங்கள் தேவைப் பட்டியல் ஆகியவற்றை, சென்னை எழும்பூர், 17-அ இலக்கமிட்ட, மார்ஷல் சாலையிலுள்ள தீயணைப்புத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கட்டணம் ரூ. 2.08 (ரூபாய் இரண்டும் மற்றும் எட்டு காசு) ஆகும். இந்தக் கட்டணத்தை அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கி, இவற்றில் ஏதேனும் ஒன்றில் அரசின் கணக்கில் "XXI. Miscellaneous Depts.—E/ Fire Service" என்ற வரவுத் தலைப்பில் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டுக்கு வெளியிலிருப்போர் இக்கட்டணத்தை தீயணைப்பு இயக்குநர் அலுவலகத்திற்கு அஞ்சல் பண ஆணை மூலம் செலுத்தலாம். ஒப்பந்தப் புள்ளியை கீழ்க்கண்டபடி இயக்குநரின் பெயரும், முகவரியும் கொண்ட உறையினுள் வைத்து அரக்கு முத்திரையிட்டு 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் நாள் திங்கட்கிழமையன்று மாலை 3 மணிக்குள் இவ்வலுவலகத்தில் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். அன்றைக்கு மாலை 3 மணி அளவில் அவ்வலுவலகத்தில் வருகை தந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளி அனுப்புவோர் முன்னிலையில் பெறப்பட்ட ஒப்பந்த உறைகள் திறக்கப்படும்.

3. கூடுமானவரை இந்திய தர நிருவாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பண்டங்களுக்கு சலுகை அளிக்கப்படும்.

எம்.ஏ.எஸ். மொஹாஜிர்,
இயக்குநர்,
தீயணைப்புத் துறை,

சென்னை-8.
(த. 48)

## ஒப்பந்தப் புள்ளி

### திருவண்ணாமலை நகராட்சி

திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் கீழ்க்கண்டுள்ள வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29—4—1972-ம் தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.—செம்படத் தெரு சந்துக்கு சிமெண்ட் காங்கிரீட் தளம் போட.
மதிப்பீட்டுத் தொகை.—ரூ. 15,000.
பொறுப்புத் தொகை.—ரூ. 250.

ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். ஷ வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களை ரூ. 5-20-ஐ 28—4—1972-ம் தேதிக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

டி.ஏ.பி. இராமகிருஷ்ணன்,
ஆணையர்.

(த. 63)

## பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

(தமிழ் நாடு அரசின் நிறுவனம்)

எண். 2197/பி4/71.

நிர்ணயிக்கப்படாத ( Non-standard ) படிவங்கள் அச்சடிக்கவும் விநியோகிக்கவும் கீழே கையெழுத்திட்டிருப்பவரால் 28-4-1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி பற்றிய முழு நிபந்தனைகளையும் பிற விவரங்களையும் பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட் செயலாளரிடமிருந்து எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை இலவசமாகப் பெறலாம்.

நிருவாக இயக்குநர்.

"போக்குவரத்து இல்லம்"
அண்ணா சாலை, சென்னை-2.

(த.16)

---

## செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

பல துறைமுகங்களிலிருந்தும், பாக்ட் (F.A.C.T.) உத்தியோக மண்டல், கேரளாவிலிருந்தும் செங்கற்பட்டு மாவட்டத்திற்குச் சாலையின் மூலம் 31-3-1973வரை இரசாயன உரங்கள் ஏற்றிச் செல்ல முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. நல்ல பொருளாதார நிலையில் மற்றும் பல ஆண்டுகளாக இத்துறையில் பணியாற்றுகின்ற டிரான்ஸ்போர்ட் காண்டிராக்டர்கள் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு கட்டணம் என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

இதனைப்பற்றிய முழு விவரங்களைச் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி அலுவலர் (வடக்கு), ஆட்சியர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்-1 அவர்களிடமிருந்துபெற்றுக் கொள்ளலாம். முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் காஞ்சிபுரத்தில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளருக்கு 24-4-1972 அன்று மாலை 3 மணிக்கு அல்லது அதற்கு முன்பு வந்து சேர வேண்டும். முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் உறையின் மேல் "Tenders Road Movement Of Chemical Fertilisers" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

என். கிருஷ்ணமூர்த்தி, (ஐ.ஏ.எஸ்.)
செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.60)

---

## கரூர் நகராட்சி

நகராட்சி தலைமைக் குடிநீர் நிலைய 30 குதிரை சக்தியுள்ள டர்பைன் பம்ப் செட்டுக்குத் தேவையான பேரிங்குகள் சப்ளை செய்ய ஆணையர் அவர்களால் 26-4-1972-ம் தேதி மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தம் கொடுப்பவர்கள் கட்டுத்தொகை ரூ. 50 செலுத்தி ஒப்பந்தம் கொடுக்க வேண்டும். மற்ற முழு விவரங்களுக்கு பொறியருக்கு எழுதித் தெரிவித்துக் கொள்ளலாம்.

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த. 7)

---

## கோவை நகராட்சி

கோவை மத்திய பேருந்து நிலையத்திற்குத் தேவையான 19 ரோலிங் ஷட்டர்ஸ் ( Rolling Shutters ) சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரால் 26-4-1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அதே தினம் மாலை 3-30 மணிக்கு நகராட்சிப் பொறியாளரால் திறக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், மற்ற விவரங்கள் ரூ. 4.15 நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி பொறியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 1)

---

## மின்சார வாரியம்

மின்சார வாரியம் கீழ்க்கண்ட மின் நிலையத்தில் குடியிருப்புக் கட்டடங்கள் "லம்சம்" ஒப்பந்த முறையில் கட்டுவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் கோரப்படுகிறது.

| வரிசை எண்ணும், துணை நிலையத்தின் பெயரும் வேலையும். | செலுத்த வேண்டிய முன்பணம் (திருப்பித்தரத்தக்கது.) | தரவிவர எண். | ஒப்பந்த விவரங்கள் வரை படங்களுடன் ஒன்றின் விலை (திருப்பித் தரத் தக்கது அல்ல). | ஒப்பந்த விவர அறிக்கை, அட்டவணை மட்டும் ஒன்றின் விலை. (திருப்பித் தரத்தக்கது அல்ல). |
|---|---|---|---|---|
| | ரூ. | | ரூ. | ரூ. |
| 1. திருச்சி மாவட்டத்தில் ஆதனக் கோட்டை 66/22/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுளும் மற்றும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல். | 2,000. (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்). | ஜிஎலிஎஸி 242 | 28.00 (ரூபாய் இருபத்தெட்டு மட்டும்). | 8.00 (ரூபாய் எட்டு மட்டும்.) |

தமிழ்நாடு மின்சார வாரியம் குடியிருப்புக் கட்டடங்களும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல் என்பதுடன் துணை நிலயத்தின் பெயர், தரவிவர எண், (ஸ்பெஷிபிகேஷன் நெம்பர்) ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி முத்திரை செய்து ஒப்பந்த விவரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 2-5-1972 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிவரை அவரது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். அன்றே பிற்பகல் 3.30 மணியளவில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்த விவரங்களும் வரைபடங்களும் வேண்டுவோர் உரிய தொகையைச் செலுத்தி கீழ்க்கண்டவர்களின் அலுவலகங்களில் 1-4-1972 தேதிக்கு மேல் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

1. கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகம்.
2. நிர்வாகப் பொறியாளர்,
   கட்டுமானம்/டிரான்ஸ்மிஷன் டிவிஷன், 83, பெருமாள்புரம்,
   திருநெல்வேலி-7.

இலாகா ஒப்பந்த பாரங்களில் எழுதாத, முன்பணம் கட்டாத, குறித்த காலத்தில் வராத, ஒப்பந்த விவரங்கள் கண்டிப்பாய் நிராகரிக்கப்படும்.

கீழ்க் கையொப்பமிட்டவர் வேலைகளைப் பிரித்துக்கொடுப்பதற்கும், குறிப்பிட்ட (அல்லது) எல்லா ஒப்பந்த விவரங்களையும் கூறாமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவர்.

எண். 86,
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி-

மேற்பார்வைப் பொறியாளர்,
பொது நிர்மாண வட்டம்.

(த. 44)

---

## தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் தருமபுரி மாவட்டத்திலுள்ள அரசினர் அலுவலகங்களில் 1-4-1972 முதல் 31-3-1973 வரை தேங்கும் கழிவுக் காகிதங்களை விலைக்கு எடுத்துக் கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளி தருமபுரி மாவட்ட 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான பிரத்யேக கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளில் கண்ட நிபந்தனைக்குட்பட்டு முத்திரையிடப்பட்ட (Sealed) ஒப்பந்தம் கொடுக்க விரும்புகிறவர்கள் 8-5-1972 தேதி பிற்பகல் 3 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு ஒப்பந்தங்கள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தங்கள் அன்றே மாலை 4 மணிக்கு பிரித்து பரிசீலிக்கப்படும். மேற்கொண்டு தகவல் தேவைப்படுகிறவர்கள் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். 1972-ம் வருடம் மே மாதம் 8-ம் தேதி மாலை 3 மணிக்குப் பிறகு வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தருமபுரி.

(த 85)

VOLTAS

சந்தேகமே வேண்டாம், இந்தியாவின் மிகப் பெருவாரியான சிபாரிசு பெற்ற டிராக்டர் இண்டர்நேஷனல் B-275 தான. உன்னதப் புகழுடன் அது திகழுவதற்கான நான்கு காரணங்கள் இதோ :

- குறைந்த செலவிலே அதிகப் பட்சமான சக்தி தரும் 4 சிலிண்டர், 35 H.P. என்ஜின்.
- 10 வித வேக நிலைகளிலே இயங்குவது. நிலைபொருத்துவது மிக எளிது!
- எந்த நோக்கத்திற்கும் உதவக்கூடியதாக, பொருத்தமான பண்ணைக கருவிகளும் உள்ளன...டிரெயிலாகள் கலப்பைகள், பரம்புச சட்டங்கள், உழவுக் கருவிகள போன்றவை.
- உபரி உறுப்புகள் எளிதில் கிடைக்கின்றன.



தயாரிப்பாளர்கள்:
**இண்டர்நேஷனல் டிராக்டர்**
கோ. ஆப் இந்தியா லிட்.,
கண்டிவ்லி (கிழக்கு), பம்பாய் 67.

ஏகபோக வினியோகஸ்தர்கள்:
**வோல்டாஸ் லிமிடெட்,**
அக்ரோ-இண்டஸ்ட்ரியல்
பிராடக்ட்ஸ் டிவிஷன்,
தலைமை அலுவலகம்: பம்பாய-1.

பம்பாய் 33 • கல்கத்தா • சென்னை
நியூ டெல்லி • பெங்களூர் • லக்னோ
அகமதாபாத் • செகந்தராபாத்
பாட்னா • கொச்சி
போபால் • சண்டிகர்
ஜெய்பூர்

INTERNATIONAL TRACTOR

**பூமியை உழுது பொன்**
**விளைக்க எனக்கு உதவுகிறது**
**இண்டர்நேஷனல் B-275.**
**நீங்களும் வாங்கிக்கொள்ளலாமே!**
**அதற்காக அதிக நாள் காத்திருக்க**
**வேண்டியதில்லை நீங்கள்.**



PRESYN/IT/1/72/TAM

**இண்டர்நேஷனல் டிராக்டர் B-275. இந்தியாவின் உன்னத விற்பனையுள்ள டிராக்டர்**

## மின்சார வாரியம்

## கோதையாறு நீர்மின் திட்டம்

1. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அதன் முகஉறையின்மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7 என்று முக உரை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாட்களில் மாலை 4.00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததரார்கள் அல்லது அவர்கள் அதிகாரம பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

| எண். | குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்த செட்டின் விலை. (விற்பனைவரி உட்பட) ரூபாய். | கட்டுத் தொகை. ரூபாய். | ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி. தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 | KC. 309 | கோதையாறு மேல் தங்கலில் உள்ள சின்னக்குட்டியாறு அணையில் 2-வது பிளாக்கு ch.92' முதல் ch.204' முடிய அணைக்கட்டு மேல்தளம் வரை கட்டுமான வேலை செய்தல். (Building masonry up to top of Dam). | 10.35 | 10,000 | 5—5—1972 |
| 2 | KC. 310 | கோதையாறு மேல்தங்கலில் உள்ள சின்னக்குட்டியாறு அணையில் 3-வது பிளாக்கு ch.204' முதல் ch.304' முடிய RL.—4120·00 மட்டம் முடிய கட்டுமான வேலை செய்தல். (Building Masonry up to RL.—4120·00). | 10.35 | 15,000 | 12—5—1972 |
| 3 | KC. 311 | கோதையாறு மேல்தங்கலில் உள்ள சின்னக்குட்டியாறு அணையில் 4-வது பிளாக்கு ch.304' முதல் ch.404' முடிய RL.—4120·00 மட்டம் முடிய கட்டுமான வேலை செய்தல். (Building masonry up to RL.—4,12,000). | 10.35 | 15,000 | 19—5—1972 |

2. ஒப்பந்த செட்டுகளின் நகல்கள் (மற்றுத் தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையைக் கீழேக் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தி செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகையைத் திருப்பித்தரப்படப்படமாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தங்களையும் கட்டுத்தொகை ( **Earnest Money Deposit** ) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத்தொகையைக் கீழே கையொப்ப மிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைக் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் ( **Cheques** ) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்ட் (**Demand Draft**) முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தங்களுடன் அனுப்பக்கூடாது.

4. தாமதமாக அனுப்பபடும் ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி அல்லது ஒப்பந்தங்கள் முழுமைபெறாத ஒப்பந்தங்கள், கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தங்கள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுக்குக் கட்டிய கட்டுத் தொகை இந்த ஒப்பந்தத்துடன் இணைத்துக் கொள்ளும்படி கூறப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7

(த. 37)

## ஒப்பந்தப் புள்ளி

### மீன் துறை

மீன் துறையின் படகு கட்டும் தளத்துக்கு, இரும்புப் பொருட்கள், இரும்புக் கலப்பு அல்லாத பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மீன் துறை இயக்குநரால் 20-4-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனை விவரங்களை, சென்னை-6, தேனாம்பேட்டை, மீன் துறை நிருவாக அலுவலகக் கட்டடத்தில் மீன் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

எம். ஏ. கே. தயாப்,
மீன் துறை இயக்குநர்.

(த. 54)

## ஒப்பந்தப் புள்ளி

### விருதுநகர் நகராட்சி

விருதுநகர் நகராட்சிக்குத் தேவையான தளவாடச் சாமான்களை சப்ளை செய்வதற்கு முத்திரை வைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28-4-1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

அது சம்பந்தமான விவரங்களை நகர் நல அலுவலரது அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளவும். கட்டுத்தொகை ரூ. 100. செலுத்த வேண்டும்.

டாக்டர் ஆர். எம். துலாராம், எம்.பி.,பி.எஸ்.,
ஆணையர் (பொறுப்பு).

(த. 89)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை பாம்பன் வட்டம்

ந.க. எண்: 25989/71/வ3 இ. தேதி 25-3-1972.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அலுவலகத்தில் 26-4-1972 மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் விவரமும். | முன்வைப்புத் தொகை. | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம். |
|---|---|---|
| | ரூ. | |
| 1. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 63/4-8 (மைல் 39/7)ல் பாலம் கட்டுதல். | 14,900 | தனிக்கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர். |
| 2. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 65/8 (மைல் 41—1)ல் பாலம் கட்டுதல். | 7,300 | மேற்படி |

ஒப்பந்தங்கள் 26-4-1972 அன்றே மாலை 3.30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள் வரைபடங்கள் முதலியவற்றைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் 25.90 செலுத்தி 18-4-1972 முதல் 25-4-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அவர்கள் பெயரில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பு தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

சென்னை-15

(த. 26)

---

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

### தேசிய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை மாவட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை நெ. 11, ஔவையார் தெரு நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அலுவலகத்தில 19-4-1972-ஆம் தேதி (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3.30 (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3.35 க்குத் திறக்கப்படும்.

| எண்ணும், வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப்புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| | ரூ. | |
| 1. காவிரி ஆற்றின் குறுக்கே முசிரியையும் குளித்தலையையும் இணைக்கக் கட்டப்படும் பாலத்தின் குளித்தலைப் பக்கம் நுழைவுச் சாலை அமைத்தல். | 5,450 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), கோட்டம்-2 திருச்சி-1. |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை) கோட்டம்-2, திருச்சி-1 விலாசத்திலிருந்து 10-4-1972 முதல் 18-4-1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவா நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம்.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்ந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநிலட் அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2.

(த. 33)

---

## திருத்தம்

### சேலம் வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை)

வேலையின் விவரம்:—தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் —ஏற்காடு மலைப்பகுதி—சேலம்.

பார்வை: எண் 2/71.72.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தேதி 21-4-1972 அன்று மாலை 3 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 14-4-1972ஆம் தேதி முதல் விற்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கட்டுத் தொகை 21-4-1972ஆம் தேதி மாலை 1.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

பி. செங்கோடன்,
நிருவாகப் பொறியாளர்,
சேலம் வீட்டு வசதிப் பிரிவு.

(த.24)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், த.கு.வ. வாரியம் அவர்களால் எண் 34, 10-வது தெரு, தூவேபுரம், தூத்துக்குடி-3 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 5-5-1972 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—தூத்துக்குடி தொழில் மையத்துக்காக குடிநீர் வழங்கு திட்டம் (20 எம்.ஜி.டி. நீர் வழங்கு திட்டம்) 48" (1,200 எம்.எம்.) உள்நடுவிட்டமுள்ள சி.ஐ.எஸ். எஸ். பைப்புகள் பி.எஸ்.எஸ். வகையில் பி தரம் எப்.ஓ.ஆர். சால்ட் கொட்டர்கள், சென்னை.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூபாய் 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூபாய் 10.35 (விற்பனை வரி உட்பட இது திருப்பித் தரப்படமாட்டாது.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் காலம்—3-5-1972 மாலை 5 மணி வரை எல்லா அலுவலக நாட்களிலும், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர், (ம.ந.வா.பொ.) மக்கள் நல்வாழ்வுப் பொறியியல், த.நா.கு.வ. வாரியம், டிவிஷன் 1, 34. 10-வது தெரு, தூவேபுரம், தூத்துக்குடி-3 அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகளை வழங்க, கால நீட்டிப்புத் தரப்பட மாட்டாது.

கட்டுத் தொகை, கருவூலச்சலான் வடிவிலோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியிலிருந்து பெறப்பட்ட டிமாண்ட் டிராப்டு வடிவிலோ அல்லது பாங்கு காரண்டி வகையிலோ நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) கோட்டம், த.கு.வ. வாரியம், டிவிஷன் 1, தூத்துக்குடி அவர்கள் கணக்கில் கட்டப்பட வேண்டும்.

**வி. வரதராஜன்,**
மேற்பார்வைப் பொறியாளர், (ம.ந.வா.பொ.),
தூத்துக்குடி.

(த. 61)

## பயிற்சி

### லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி

திருவல்லிக்கேணி,
சென்னை-5-ல் பெண்களுக்கான பண்டிதர் பயிற்சி
வகுப்புக்குச் சேர்க்க மனுக்கள் கோரல்.

லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை-5ல் தமிழ்ப் பண்டிதர்கள் பயிற்சிக்குச் சேர்க்க, தமிழ் வித்துவான் (புலவர்) (மகளிர்) மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

மனுக்கள், முதல்வர், லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, சென்னை-5 அவர்களுக்கு 1972 ஏப்ரல் 20-க்குள் வந்து சேர வேண்டும். மேற்கொண்டு விவரங்களுக்கு, சுய விலாசமிட்ட உறையை வைத்து முதல்வருக்கு எழுதலாம்.

**முதல்வர்,**
லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி,
சென்னை-5.

(த. 49)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்
### வீராணம் திட்டம்

எண். சி. இ. 22.

வேலையின் பெயர்.—செங்கற்பட்டு மாவட்டத்தில் வலுவேற்றப்பட்ட கான்கிரீட் பைப் லைனை ஏற்கவல்ல வலுவேற்றப்பட்ட கான்கிரீட் லாபத்தை பாலாற்றுக்குக் குறுக்கே கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தில் பதிவு செய்யப்பட்ட, பொதுப் பணித் துறை ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் அல்லது இதர நிறுவனங்களை சார்ந்த இத்தகைய ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர்த்திட்டம்—கூவம் அபிவிருத்தித்திட்டம், சென்னை-5 அவர்களால் அவரது அலுவலகத்தில் 3—5—1972 மாலை 3 மணி வரை ஏற்கப்பட்டு, அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிரிக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—ரூ. 20,000.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.—ரூ. 10 இத்துடன் விற்பனை வரி 37 காசு.

வேலையை முடிக்கவேண்டிய காலம்.—12 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசாங்கக் கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "III Suspence G. Remittance (iii) other Remittance T.W.A.D. Board funds" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், வீராணம் திட்ட வட்டம் செங்கற்பட்டு அவர்கள் கணக்கில்செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை தனித் தலைமைப் பொறியாளர் அலுவலகம், வீராணம் குடிநீர்த் திட்டம், சென்னை-5-ல் தொகை செலுத்தியதற்கான சலானைத் தந்து 15—4—1972-லிருந்து 28—4—1972 வரை பெறலாம்.

**தனித் தலைமைப் பொறியாளர்,**
T. W. A. D. போர்டு.

(த. 52)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்.—கிண்டி, கிங் இன்ஸ்டிடியூட், கூடுதல் நீர் வசதிக்காக 2,27,300 லிட்டர் திறனுள்ள சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) சர்க்கிள் சென்னை அவர்களால் 52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னையில் உள்ள அவரது அலுவலகத்தில், துறையில் உள்ள பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் இது போன்ற அரசு நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—4—1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்பட்டு, அதே நாள் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத்தொகை.

கட்டுத்தொகை.—ரூ. 1,700 (கருவூலச் சலான் வடிவில் அல்லது ஒப்பந்த நிபந்தனைகளில் சொல்லப்பட்ட ஏற்கத் தக்க வேறு வடிவில்) செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 10.35.

இப் பத்திரங்களின் விலை நிருவாகப் பொறியாளர் (பொ.சு.பொ.) டிவிஷன், சென்னை P.W. III O.R. கணக்கிலும் விற்பனை வரி XII Sales Tax D. Misc.-General Sales Tax என்ற கணக்கிலும் தனித் தனி சலான்களில் கட்டப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற, நிருவாகப் பொறியாளர், பொ.சு.பொ. டிவிஷன் 1/14, எட்வர்டு எலியட்ஸ் சாலை, சென்னை-4, அவர்களுக்கு மனுச் செய்ய வேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
வட்டம், சென்னை-8.

(த. 22)

## ஒப்பந்தப் புள்ளி

எண் 4846 டி-4 72, நாள் : 25-3-1972.

### குடிநீர் வடிகால் வாரியம்

செங்கற்பட்டு ரயில் நிலையத்திலிருந்து செங்கற்பட்டு மாவட்டம், திருக் கழுக்குன்றம் பாக்டரி பகுதிக்கு சிமெண்ட் கொண்டுபோகும் பணிக்காக மேற்பார்வைப் பொறியாளர், த.கு.நீ.வ. வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் நிர்ணமிக்கப்பட்ட படிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

ஒப்பந்த வடிவம்——கே. 2.

கட்டுத் தொகை—ரூ. 3,500.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள்—விலை ரூ. 5. **(Funds—T.W.A.D. Board G. Remittance III O.R.** என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்ட டிவிஷன், செங்கற் பட்டு அவர்களின் கணக்கில் அரசாங்கக் கருவூலச் சலான் மூலம் செலுத் தப்பட வேண்டும்.

18 காசு விற்பனை வரி **XII b. Sales Tax—miscellaneous** என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—12 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்—15-4-1972 லிருந்து 25-4-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதியும், நேரமும்—3-5-1972.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனை விவரங்கள் மற்றும் இதர விவரங்களை கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
த.நா.கு.நீ. வ. வாரியம்,
வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த. 41)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

குடிநீர், வடிகால் வாரியம்.

எண்: 13940-எஸ்.டி. 2-72. நாள் : 19-3-1972.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாக வும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறி யாளர், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், கோயம்புத்தூர் அவர்களால் 25-1, 3-வது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்-12 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 25-4-1972 அன்று மாலை 3-00 மணி வரை, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏதேனும் ஒரு அலுவலர் அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஆத்தூர் நீர்வழங்கு திட்டம்— 3-வது கட்டம், **H. L. L. L.** பிராந்தியத்திற்கு சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்— பல்வேறு அளவுகளில் ஐ.எஸ்.எஸ். 226-1962 படியும், பின்னர் செய்த திருத்தங்களின்படியும், தரப் பரிசோதனை செய்த எம்.எஸ். சாலை சப்ளை, டெலிவரி.

ஒப்பந்த வடிவம்—ரூ. 3,500 (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்).

சப்ளையை முடிக்க வேண்டிய காலம்—ஒரு மாதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூபாய் 5.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், டிவிஷன் 28, அவ்வையார் தெரு, சுப்பிரமணியம் நகர், சேலம்-5 அவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலம் அனுப்பியோ 22-4-1972 வரை பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியி லிருந்து பெறப்பட்ட டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது நிருவாகப் பொறியாளர், சேலம் அவர்கள் கணக்கில் செலுத்தப்பட்ட கருவூலச் சலான் வடிவிலோ இருக்க வேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி காரண்டியும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுத் தொகை செலுத்தாமல் வரப்பெறும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படக் கூடும்.

எந்தவிதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும், அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், கோயம்புத்தூர் அவர்களுக்கு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

(த. 23)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்—திருச்செந்தூர் தொழில் பயிற்சி நிறுவனத்தில் கூடுதல் வகுப்பு அறைக் பட்டறை கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்ளுவதற்காக தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்த தாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் 21-4-1972 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வர வேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35-2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூபாய் 3,600.

3. மாதிரி வரைப் படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து—ரூபாய் 10.40.

4. வேலையை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மதுரை, தொழில் பேட்டையில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), தெற்கு டிவிஷன் அவர்களது அலுவலகத்தில் 11-4-1972 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி, உட்பட்டத் தொகையான ரூ. 10.40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கி யிலோ **XXIX Industries—other receipts** என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), தெற்குக்கோட்டம், மதுரை தொழில் பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, கால் டிபாசிட் ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), தெற்கு கோட்டம், மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப் பில் 5 சத விகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப் படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும், சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள் ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப் படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
கட்டுமானப் பகுதி.

(த. 29)

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்

# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழரசு

தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.

## உத்திரமேரூர் பேரூராட்சி

செங்கற்பட்டு மாவட்டம்

உத்தரமேரூர் பேரூராட்சி தனது தீர்மான எண். 152, நாள் 30—12—1971-ல் உத்திரமேரூர் பேரூராட்சி எல்லேயிலுள்ள எல்லா வீடுகளுக்கும் 1—4—1972 முதல் அரையாண்டு ஒன்றுக்குக் கீழ்க்கண்ட விகிதப்படி வீட்டுவரி விதிக்க தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாகப் பொது மக்களின் ஆட்சேபனைகள் ஒருமாத காலத்திற்குள் பேரூராட்சி நிருவாக அதிகாரிக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

| ஆண்டு வாடகை மதிப்பு. | | அரையாண்டு வரி. |
|---|---|---|
| ரூ. 1 முதல் | ரூ.12 வரை .. | ரூ. 1-50 |
| ரூ. 13 முதல் | ரூ. 24 வரை .. | ரூ. 2-50 |
| ரூ. 25 முதல் | ரூ. 48 வரை .. | ரூ. 4-00 |
| ரூ. 49 முதல் | ரூ. 72 வரை .. | ரூ. 7-00 |
| ரூ. 73 முதல் | ரூ. 96 வரை .. | ரூ. 10-00 |
| ரூ. 97 முதல் | ரூ. 120 வரை .. | ரூ. 13-00 |
| ரூ. 121 முதல் | ரூ. 150 வரை .. | ரூ. 16-00 |
| ரூ. 150 மேல் | .. | 12½ சதவீதம் |

**சையத்நூருதீன்உசைன்,**
நிருவாக அதிகாரி,
உத்திரமேரூர் பேரூராட்சி.

(த. 90)

### ஒப்பந்தப் புள்ளி

## குடிசைப் பகுதி மாற்று வாரியம்

நிருவாகப் பொறியாளர் அலுவலகம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம்-2.

35/37 ஜிஹாங்கீர் தெரு, செகண்ட் லேன் பீச், சென்னை-1.

எண். ஆர். சி. 1171/டி1/72. 29—3—1972.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிருவாகப் பொறியாளர் அவர்களால் மேலே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 24-4-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்பட்டு அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அனுமதி பெற்று ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப் படும்.

வேலையின் பெயர்.—

நகராட்சி கோட்டம் 45-ல் குக்ஸ் ரோடு—(குதிரை லாட வடிவு) வஜய் மாநகரில் ஒரு தளத்தில் 7 உள்ளதாக நான்கு தள ஓரறைக் குடியிருப்புக்கள் கட்டுதல்.

வேலையை முடிக்கவேண்டிய காலம்.—9 மாதங்கள்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை

கட்டுத் தொகை.— ரூ. 3,00.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.—ரூ. 20+ வி. வ. (இது திருப்பித் தரப்பட மாட்டாது.)

ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கண்ட முகவரியில் 10—4—1972-லிருந்து எல்லா அலுவல் நாட்களினும் காலை 11 மணியிலிருந்து மாலை 3 மணிவரை, பத்திரத் திற்கான தொகையும் விற்பனை வரியும் செலுத்தியதற்கான செலான் ரசீதைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை சென்னை, சைதாப்பேட்டை, இந்தியா ஸ்டேட் பாங்கில் **"Personal deposit Account (P.D.A/c) of the Executive Engineer, Slum Clearance Board, Division 2 and the sales tax under head XII sales tax b. Receipt under State Sales Tax Act General Sales Tax"** என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். துறை வழங்கும், இதற்குரிய வடிவத்தில் மட்டுமே ஒப்பந்தப் புள்ளிகள் தரப்படவேண்டும். அனுப்புவதால் ஏற்படும் தாமதங்கள் இழப்புகளுக்குத் துறை பொறுப்பல்ல.

எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரித்துவிட உரிமை உண்டு.

கட்டுத்தொகை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் சொல்லப்பட்ட முறைப் படி மட்டுமே கட்டப்படவேண்டும். கட்டுத்தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

**எம். ஆத்மநாதன்,**
நிருவாகப் பொறியாளர், கோட்டம்-2.

(த. 43)

### ஒப்பந்தப் புள்ளி

## பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சிக்கு 6 குதிரை வேகமுள்ள ஆயில் இன்ஜின் விநியோகம் செய்வதோடு அதை அலுவலகத்தில் உள்ள கான்கிரீட் மிக்சர் பிளேன்டோடு பொருத்தும் வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் 29—4—1972-ம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 150.

(த. 91)

**ஆணையர்,**
பொள்ளாச்சி நகராட்சி.

### ஒப்பந்தப் புள்ளி.

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாக வும், கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், த.கு.வ. வாரியம், சென்னை-8 அவர்களால் 5-2, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 5—5—1972 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில், அரசுத் துறைகளில் அல்லது அது போன்ற நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்களிட மிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குப்பின் அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர் களால் திறக்கப்படும்.

வேலையின் விவரம்—

1. காஞ்சிபுரம் கழிவு நீர்த்திட்டம் 3-வது கட்டம். மேற்குப் பிராந்தியத்தில் மெயின் சூயர் 3-ல் வீடு சர்வீஸ் இணைப்பு கொடுத்தல். இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 3,110.

2. காஞ்சிபுரம் கழிவு நீர்த்திட்டம் 3-வது கட்டம்—மேற்குப் பிராந்தியத் தில் மெயின் சூயர் 2-ல் வீடு சர்வீஸ் இணைப்பு கொடுத்தல். இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 2,670

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்த வடிவம்.— கே-2.
இந்த வேலைகள் ஒவ்வொன்றையும் முடிக்கவேண்டிய காலம்.— 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ஒவ்வொன்றிற்கும். ரூ. 10-35.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர், மக்கள் நல் வாழ்வுப் பொறியியல் கோட்டம், த. கு. வ. வா., 24, பெரிய மணிகார தெரு, செங்கற்பட்டு அவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்குக் கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ் சல் மூலம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
த. கு. வ. வாரியம்,
சென்னை-8.

(த. 55)

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள்:
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256
பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி: 'CEMENT' போன்: 144.

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்


Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப்பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்
டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.S., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி, S.I.
போன்: 16 தந்தி: சித்தர்
சென்னை கிளை ஆபீஸ்:
41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1
போன்: 21448

# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19

FDSEI-1513TM

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்காக மனுக்கள் 4—5—1972 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழில் சபார்டினேட் சர்வீஸ், கிண்டி தொழில் நுட்ப தகவல் பிரிவில் காடலாகில் கிளாசிபையிங் தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் நூலகர் கிரேடு-2 ஒவ்வொரு வகையிலும் ஒரு நியமனம்.

சம்பளம்.—மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—475—20—575—25—650
வயது.—1—7—1972-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்கவேண்டும்.
தகுதி.—(1) அறிவியல் அல்லது தொழில் நுட்ப இயல் படிப்புப் பட்டம், (2) நூலகர் டிப்ளமா, (3) நூலகம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம்.

தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத அவர்களின் புதல்விகள் மற்றும் தேசீய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசீய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றிலிருந்து படை கலைக்கப்பட்டதால்திரும்பியவர்கள் 1-7-1972-ல் 40வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானாலும் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களாக இருப்பினும், வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23சென்டி மீட்டர் நீளமுள்ள உறையில் அஞ்சல் தலையும் 5 காசு அகதி உதவி அஞ்சல் தலையும் ஒட்டிய "நூல் அஞ்சல்" என்று குறிக்கப்பட்ட உறையை உடன்வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த.5)

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக 1972 மே 11 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாடு கல்விப் பணியில் வணிக இயல் செயல் முறை நிறுவனத்தில் தற்காலிக விரிவுரையாளர் பதவிகள் (அரசிதழ் பதிவு).

| பதவிகள். | நியமனங்கள் எண்ணிக்கை. |
|---|---|
| வணிக இயல் விரிவுரையாளர் (அரசிதழ் பதிவு) .. .. | 1 |
| ஆங்கில விரிவுரையாளர் (அரசிதழ் பதிவு) .. .. | 1 |
| பொருளாதார விரிவுரையாளர் (அரசிதழ் பதிவு) .. | 1 |

சம்பளம்.—மாதம் ஒன்றுக்கு ரூ. 800–40–1,000.

தகுதி.—

வணிக இயல் விரிவுரையாளர் (அரசிதழ் பதிவு).

வணிக இயலில் இரண்டாம் வகுப்பு எம்.ஏ. அத்துடன் கணக்கிடுதல், தணிக்கை ஆகியவற்றில் நிபுணத்துவம், வணிக இயல் செயல் முறை நிறுவனம் அல்லது அதற்குச் சமமான மற்ற நிறுவனங்களில் 4 ஆண்டுகளுக்குக் குறையாமல் அசோசியேட் விரிவுரையாளர் நிலைக்குக் குறையாமல் அந்தப் பாடத்தில் போதித்த அனுபவம்

அல்லது

சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் தகுதி, ஐந்தாண்டு செயல் முறை அல்லது போதனை அனுபவத்துடன்.

ஆங்கிலம், பொருளாதாரம் விரிவுரையாளர் (அரசிதழ் பதிவு).

சம்பந்தப்பட்ட பாடத்தில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு எம். ஏ. பட்டம் வணிக இயல் செயல் முறை நிறுவனத்தில் அல்லது இதர நிறுவனங்களில் அசோசியேட் விரிவுரையாளர் நிலைக்குக் குறையாமல் 4 ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆங்கிலம் அல்லது பொருளாதாரம் போதித்த அனுபவம்.

வயது.—1—7—1972-ல் 40 வயதுக்குக் கீழே இருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு மருத்துவப் பணி, மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரையில் பையோ பிசிக்ஸ் விரிவுரையாளர் தற்காலிகப் பதவி நியமனங்கள் எண்ணிக்கை—1.

சம்பளம்.—மாதம் ஒன்றுக்கு ரூ. 525—25—600—30—690—35—900.

தகுதி.—பையோ பிசிக்ஸ் அல்லது பிசிக்சில் எம். ஏ., எம்.எஸ்.ஸி., பி.எஸ்.ஸி (ஹானர்ஸ்)., அல்லது பி.ஏ. ஹானர்ஸ், இத்துடன் பம்பாய் டிராம்பே அணுசக்திக் குழுவில் அடாமிக் ரேடியேஷனில் ஓராண்டுக்குக் குறையாமல் செயல் முறை அனுபவம்.

குறிப்பு.—முழுத் தகுதி பெற்ற மனுதார் கிடைக்காவிட்டால் செயல் முறை அனுபவம் இல்லாத ஆனால், வேறு வகையில் தகுதி பெற்ற பொருத்தமான நபர் தெரிந்தெடுக்கப்படுவார். அப்படி வேலைக்கு எடுக்கப்படுபவர், பயிற்சி பெற்ற பின்பு குறைந்த பட்சம் 5 ஆண்டுக் காலம் அரசுப் பணியில் இருக்கும் நிபந்தனையின் பேரில் டிராம்பே அணுசக்திக் குழுவில் பயிற்சிக்குச் செல்லுமாறுக் கோரப்படுவார்.

வயது.—1—7—1972-ல் 30 வயதுக்குக் கீழே இருக்கவேண்டும்.

3. தமிழ்நாடு ஜெனரல் சர்விசில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள். நியமனங்கள் எண்ணிக்கை 3.
சம்பளம்.—மாதம் ஒன்றுக்கு ரூ. 525–25–600–30–690–35–900.
தகுதி.—கலை இயல், அறிவியல் அல்லது வணிக இயல் பட்டம்.
வயது.—1—7—1972-ல் 30 வயதுக்குக் கீழ்.

4. தமிழ்நாடு துறைமுக சர்விசில் துறைமுக அலுவலர் நியமனங்கள் எண்ணிக்கை—1.

சம்பளம்.—மாதம் ஒன்றுக்கு ரூ. 1,100—50—1,300.

தகுதி.—1. அயல்நாடுகள் செல்லும் நீராவிக் கப்பல்கள் மாஸ்டராக காமன்வெல்த் முழுவதற்கும் செல்லுபடியாகக்கூடிய தகுதிச் சான்றிதழ் வைத்திருப்பதோடு தலைமை அலுவலகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

2. இந்திய அரசாங்க வணிக நாவாய்த் துறை வழங்கும், பார்வை அளவுச் சோதனைச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

வயது.—தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் விஷயத்தில் 1—7—1972-ல் 45 வயதுக்குள் இருக்க வேண்டும். மற்றவர்கள் விஷயத்தில் 1—7—1972-ல் 40 வயதுக்குக் கீழ் இருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித்தகுதி பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. பயோ பிசிக்ஸ், விரிவுரையாளர் பதவிக்கு அங்கஹீனமுற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டு வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லதுஅதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளிலிருந்து கலைப்பினால் அனுப்பப்பட்டவர்கள் 1—7—1972-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பின், பையோபிசிக்ஸ் விரிவுரையாளர். மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் பதவிகள் விஷயத்தில் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும். 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப் பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், இவர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முக்வரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0.35 காசு நூல் அஞ்சல் விலையும் 0.05 காசு அகதிகள் நிவாரண வில்லையும் (0.35+0.05) காசு ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 62)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு, அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.